# கல்கி

KALKI 12.4.98 ரூ. 4.50

புத்தாண்டு ஸ்பெஷல்!



கலர் உலகம்
இலவச இணைப்பைக் கேட்டு வாங்குங்கள்!

செவ்வந்தி

பக்கம் – 12ல் பூக்கிறது!

# வெகுதான்ய வருட புத்தாண்டு வாழ்த்துக்கள்

வெகுதான்ய வருடம் மேலும் வெகுவாக சிறக்க இதோ எங்கள் கவர்ச்சிமிகு வட்டி திட்டங்கள் :

| | |
|---|---|
| 30 முதல் 45 நாட்கள் வரை | : 13.5% |
| 46 முதல் 90 நாட்கள் வரை | : 13% |
| 91 முதல் 179 நாட்கள் வரை | : 12% |
| 180 நாட்களுக்கு மேல் | : 12.5% |

புதிய வட்டி விகிதங்கள் 9 மார்ச் 98 முதல் அமுலுக்கு வந்துள்ளது.

தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம் : 57, வி.இ. ரோடு, தூத்துக்குடி - 628 002.

விரைவான வளர்ச்சிப் பாதையில்

# வேட்டிய மடிச்சுக் கட்டு



**பா**க்யராஜ் பயந்தாங்கொள்ளி. ஆனால் தான் சகலவித சண்டைப் பயிற்சிகளிலும் சாம்பியன் என்று புளுகுகிறார் தன் மகனிடம். எப்படியோ பாக்யராஜின் சுயரூபம் வெளிப்படாமலேயே சந்தர்ப்பங்கள் அவரைக் காப்பாற்றுகின்றன. ஆனால் பெரும் கிரிமினல் ஒருவன், தனக்கெதிராக சாட்சி கூறியதற்காக, பாக்யராஜைத் தீர்த்துக் கட்ட முன்வர, மகனின் முன் தம் இமேஜ் குறையாமல் இருக்கவும், அவனது நம்பிக்கையைக் காக்கவும், அந்த கிரிமினலுடன் மோதி வெல்கிறார்!

வழக்கம் போலத் திரைக்கதையை கவனமாக நெய்திருக்கிறார் இயக்குனர். சம்பவங்கள் நடக்கக்கூடியவைதான் என்பதால் லாஜிக் பாதுகாக்கப்படுகிறது. ஆனால் அடர்த்தியான, அடுத்தடுத்து கதைக்கு அதிக சுவாரஸ்யமும் அழுத்தமும் அளிக்கக்கூடிய சம்பவப் பின்னல்கள் மிகக் குறைவு என்பதால் பாக்யராஜ் டச் பாதியாகக் குறைந்து விட்ட உணர்வு.

திருடனைப் பிடித்து வைத்து ராஜமுழி முழி என்றால் என்ன செய்வான் பாவம்! நக்மாவுக்கு குடும்பத்தனமான வேடம். ஒப்பேற்றுவதே பெரும்பாடு என்கிற அளவில் ஈடுகொடுக்கிறார்!

வேலை மெனக்கெட்டு கனடாவில் இரண்டு டூயட்களை, டப்பாங்குத்துப் பாடல்களுக்காகப் படம்பிடித்திருக்கிறார்கள். பாப்கார்ன் ஆசையோ, சிகரெட் மோகமோ இல்லாதவர்களுக்குக் கூட அப்போது வெளியே போகும் வெறி உண்டாகிறது.

ஜூனியர் பாக்யராஜைப் பயன்படுத்திய விதத்திற்காக சீனியருக்கு சபாஷ். தான்தான் சகலகலா வல்லவன் என்பது போல் சாந்தனுவை ஒரேயடியாக அதிகப் பிரசங்கித்தனம் செய்யவிடாமல், அதே சமயம் போதிய ஸ்கோப்பும் கொடுத்திருக்கிறார். பையனும் கட்டியாக நடித்திருக்கிறான்.

மும்பையில் அகப்பட்டுக் கொண்ட அப்பாவித்தமிழனாக வரும் எஸ். எஸ். சந்திரனுக்கு அருமையான பாத்திரம்! நன்றாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்.

தொடக்கத்தில் மகனிடம் பாக்யராஜ் அவிழ்த்து விடும் சுயபிரதாப கற்பனைக் காட்சியும், தொடை நடுங்கித்தனமாக சில கேடிகளுக்கு பயந்து கொண்டு பாதி சினிமாவில் வீட்டுக்கு வந்து விட்டாலும், தான் வீரமாக அவர்களை புறமுதுகிடச் செய்ததாக விடும் ரீலும் சுவையாக, ரசிக்கக்கூடிய சூழ்நிலைத்தனத்துடன் காட்டப்பட்டிருக்கின்றன. ●

— ஜி.

கல்கி இன்டர்நெட் முகவரி: www.kalkiweekly.com ஈ மெயில்: kalki@md2.vsnl.net.in

# 'மேய்ப்பர்' மேயர் ஆகிறார்!

'அம்மா பால்'... என்று உங்கள் வீட்டு வாசலில் குரல் கொடுப்பவரை நீங்கள் எப்படி வரவேற்பீர்களோ?... ஆனால் 'தாணா'க்காரர்கள் மாலை மரியாதையோடு, ஆரத்தி சுற்றி, வெற்றித் திலகமிட்டு வரவேற்றிருக்கிறார்கள்!

மும்பைக்கடுத்துள்ள தாணா முனிசிபல் கார்ப்பொரேஷனின் பதின்மூன்றாவது மேயராகப் பதவி ஏற்றிருக்கும் ப்ரேம்ஜித் ராஜ்புத், எழுபதுகளில், சைக்கிள் காரியரில் கட்டிய பால் 'கேன்'கள் குலுங்க, தாணா வீதிகளை வலம் வந்து, வீடு வீடாகச் சென்று பால் சப்ளை செய்தவர்.

அரசியலில் நுழைவதற்கு வேண்டிய எல்லா தகுதிகளும் இவரிடம் இருந்திருக்கிறது - வறுமை, அதிகப் படிப்பின்மை (பள்ளி இறுதிவரை), நடிப்பில் தேர்ச்சி (மேடை நாடகங்களில் காமெடி ரோல் செய்திருக்கிறாராம்; 'லாவணி' கூடப் பாடுவாராம்), தலைவரிடம் கண்மூடித்தனமான பக்தி, வயதான தாய் (95), இத்யாதிகள்...

ஆனால் தேவையில்லாத சில குவாலிஃபிகேஷன்களும் - குன்றாத நேர்மை, குறைவில்லாத உழைப்பு, நன்னடத்தை... வகையறா - இவருடன் கெட்டியாக ஒட்டிக் கொண்டிருந்ததால், 'பதவி' கிடைக்க இத்தனை காலம் (60 வயது) ஆகியிருக்கிறது!

'ஸீனியாரிட்டி' அடிப்படையில் நாற்காலியில் வலுக்கட்டாயமாகத் தன்னைத் திணித்துக் கொள்ளாமல், கௌரவமான முறையில், நாற்காலியே தன்னைத் தேடி வரும்வரை காத்திருந்தவரை வாழ்த்த, அவரது 'ராஜ்புத் ஹவுஸி'ன் வரவேற்பறையில், 'எங்களோடு படித்தவர்' என சொல்லிக் கொண்டு, ஒற்றை ரோஜாவுடன் எளிமையானவர்கள் சிலரும், 'எங்களுக்குப் பால் சப்ளை செய்தவர்' என்று 'பொக்கே'வுடன் மிடுக்காகப் பலரும் காத்திருந்தனர்.

இவரது கதை, பாலிவுட் பாக்ஸ் ஆபீஸ் மசாலா அளவுக்கு இல்லாவிட்டாலும், டி.வி. ஸீரியல்களில் 'டாப் டென்னில்' வரக் கூடிய அளவு சுவையானதுதான்.

ஒரு தபாலாபீஸ் ப்யூனாக வேலை செய்து கொண்டிருந்த பிரேம்ஜித்துக்கு, 'பாலா சாஹேப்'பின் 'ஹிந்துத்வ' கொள்கைகளில் பிடிப்பு ஏற்பட, அறுபதுகளில் சிவசேனையில் அடிமட்டத் தொண்டராகத் தன்னை இணைத்துக் கொண்டார். தாக்கரேவின் ஆணைப்படி '67ல் தாணா முனிசிபல் கவுன்சில் தேர்தலில் போட்டியிட்டு, ஒரே ஒரு வோட்டால் தோல்வியடைந்து, ஓட்டாண்டியுமானார். பரிதாபப்பட்ட தலைவர் தலையசைக்க, குறிப்பறிந்த கவுன்சிலர்கள், ஒரே நிமிடத்தில் துண்டேந்தி 'அனுதாப நிதி' வசூலித்து, முழுசாக முன்னூறு ரூபாயை ராஜ்புத் கையில் கொடுத்தனர்.

அந்தப் பணத்தில்தான் பிரேம்ஜித்,



• பிரேம்ஜித்

சாலிஸ்காவிலிருந்து தம் முதல் பால் கேனை வாங்கினார். அவர் மேற்கொண்ட கடின மான உழைப்பால், அவர் வீட்டிலும் பால் பொங்க ஆரம்பித்தது. பால் விற்ற நேரம் போக, தாயுடன் ரோட்டோரத்தில் இலந் தைப் பழம் விற்றார். பிறகு, மராத்தியர் விரும்பிச் சாப்பிடும் 'வடா-பாவ்' ஸ்டால் வைத்தார். இவர் கைராசியோ, இவர் அன்னையின் கைப்பக்குவமோ, சிறிதாக ஆரம்பித்த ஸ்டால், விரைவிலேயே 'ராஜ் மாதா' ஹோட்டலாயிற்று.

மீண்டும் 1974 தேர்தலில் போட்டியிட்டு, தமது ஜனசங்க எதிராளியை, இம்முறை ஒரே ஒரு வோட்டு வித்தியாசத்தில் வென் றார். இவர் கதையைப் படமாக்கினால், "அந்த ஒரே ஒரு வோட்டு" என்ற தலைப்பு ஒரேயடியாகப் பொருந்தும்.

இதை ஒட்டி, அரசியலுக்கு அதிக நேரம் செலவிட வேண்டியிருந்ததால், உணவு விடு தியை மூடி விட்டார். ஆனால் பால் பிஸி னஸை இன்றளவும் விடாமல் தொடர்கிறார்.

தாணாவில், பெரிய தொழிற்சாலை யிலிருந்து சிறிய டீஸ்டால் வரை இவர் பால் சப்ளை செய்யாத இடமே கிடையாதாம். வளர்ந்து, மணமாகி விட்ட இவரது இரண்டு மகன்களும், பால் பிஸினஸை கவனித்துக் கொள்கிறார்கள். பிள்ளைகள், பெண்கள் யாருக்கும் அரசியலில் ஈடுபாடு இல்லை!

"எனக்கு இந்தப் பதவியை அளித்ததன் மூலம், சிவசேனையின் அடிமட்டத் தொண் டர்களுக்குத் தார்மீக ரீதியில் மலர்க்கிரீடத் தைச் சூட்டியிருக்கிறார் பாலா சாஹேப்" என உணர்ச்சி வசப்படும் பிரேம்ஜித், "மேயர் பதவி ஓராண்டு காலத்தியது; இதில் பெரிய அற்புதங்கள் எதுவும் புரிய முடியா தெனினும் இயன்ற வரையில், ஏழைகளுக்கு உதவ முயல்வேன்; கல்வி, மருத்துவம் போன்ற துறைகளில் ஏட்டளவில் இருக்கும் எண்ணற்ற சலுகைகள், அவை சென்று சேர வேண்டியவர்களை அடையும்படிச் செய் வேன். பாதைகளை அகலப்படுத்தவென சட்ட விரோதமான கட்டடங்களை இடித்து, மேன்மையான பணியைச் செய்து வரும் தாணாவின் கமிஷனர் சந்திரசேக ருக்குக் கை கொடுப்பேன்; நகராட்சி எனும் ரதத்துக்கு, கமிஷனர், மேயர் இருவரும் இரு சக்கரங்கள் போன்றவர்கள். ரதத்தின் தடை யற்ற வேக ஓட் டத்துக்கு, இரு வரும் இணைந்து செயல்படுவது இன்றியமை யாதது" என் கிறார்.



• மேயரின் மனைவி, தாய், சகோதரி

ராஜ்புத் அல் லவா? மரங்களின் மீது அளவற்ற பாசம் வைத்திருக் கிறார். சந்திர சேகர் வெட்டி வீழ்த்திய மரங் களுக்குப் பதிலாக, புதிய மரங்களை நட இருக்கிறாராம்.

'ஏழைமையை உணர்ந்து அனு பவித்தவன் நீ; அதனால், மேயரானதும், ஏழைகளை மறவாதே' - இதுதான், இவர் வாயில் பேடாவை (இனிப்பு) ஊட்டிய கையோடு, இவர் தாய் இவருக்கு வழங்கிய அறிவுரை.

"இந்தக் காலத்து இளைஞர்கள் குறுக்கு வழியில் பணம் சம்பாதித்து, நொடிப் பொழுதில் குபேரர்களாக ஆசைப்படுகிறார் கள்; அவர்களுக்கு நான் சொல்வது இதுதான் - 'கடுமையான உழைப்பை மேற் கொள்ளுங்கள்; பணமும் பதவியும் நீங்கள் தேடிப் போகாமலேயே உங்களை நாடி வரும்!'"

- ஜெயஸ்ரீராஜ்

**EXCLUSIVE**

**சென்னையிலும் கல்கத்தாவிலும் சொதப்பி விட்டாலும் பெங்களூர் டெஸ்டில் தன் சுயரூபத்தைக் காட்டி விட்டார் ஷேன் வார்னே. சுழற்பந்து வீச்சாளர்களிலேயே சூப்பர் ஸ்டார் என்று சொல்லத்தக்க இந்த இளைஞருடன், அவர் மும்பைக்கு வந்திருந்தபோதே சந்தித்து, பேட்டி கண்டிருந்தாலும், பெங்களூர் டெஸ்டுக்கு வந்திருந்தபோது ஒரு முழு நாள் அவருடன் தங்கி, பேச வாய்ப்புக் கிடைத்தது. அவரது மனைவி, மகளுக்கே கூட எப்போதும் கிடைக்காத வாய்ப்பு இது!**

**உறங்கிய நேரம் தவிர மிச்சப் பொழுதில் நம்முடன் வார்னே உரையாடியதைத் தொகுத்து, கட்டுரை வடிவில் அவரே பேசுவது போல் இங்கே தருகிறோம்.**

**ஒரு போனஸ் : கல்கிக்கு வார்னே, தம் புகைப்படத்தில் போட்டுத் தந்த ஸ்பெஷல் ஆட்டோகிராஃப் எதிர்ப்பக்கத்தில்!**

# "அன்பு, அன்பு, அன்புதான்!"

ரொம்ப நாளாகவே இந்தியாவுக்கு வந்து ஆட வேண்டும் என்பது என் ஆசை. இந்தியர்கள் ரொம்ப ஸ்போர்டிவ் டைப் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். இங்கே அதை நேரிலும் பார்த்து விட்டதில் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.

இந்தியாவின் தேசிய விளையாட்டு ஹாக்கி என்றார்கள். ஆனால், அதைவிட கிரிக்கெட்டுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பது உண்மையில் வெகு சந்தோஷமாக இருக்கிறது.

உண்மையில், இருமுறை வெற்றிகரமாக உலகக் கோப்பைப் போட்டியை நடத்திய இந்தியர்கள் முன்னால் நான் என் திறமையைக் காட்டி, கைதட்டல் பெறவேண்டும் என்கிற ஆசைதான் எனக்கு மேலோங்கி இருந்தது.




விசாகப்பட்டினத்தில் நடந்த மேட்சில் நான் ஆடவே இல்லை. ஆனால், இரவுண்டில் எங்கள் அணி வீரர்களுக்குத் தண்ணீர் கொண்டு போனேன். அப்போது என்னைப் பார்த்ததும் உற்சாகம் பிறந்து கைதட்டினார்களே, அந்த ஒலி மெல்போர்னில் என் வீட்டுக்கே கேட்டிருக்கும்! இத்தனை அன்பா என்று வியந்து போனேன்.

இந்த மாதிரி பாராட்டுகள்தாம் எனக்கு டானிக். ஒவ்வொரு பந்தை வீசும் போதும் இந்தக் கைதட்டலுக்காக மனம் ஏங்கி, அதன் காரணமாகவே மேலும் சிறப்பாக வீசத் தோன்றும்.

இந்த முறை என் பந்து வீச்சை இந்தியர்கள் விளாசி விட்டார்கள். பாராட்டித்தான் ஆக வேண்டும். என் இயல்பே 'அட்டாக்கிங்'காகப் பந்து' வீசுவதுதான். First attack is the best weapon என்று கருதுபவன் நான்.

நான் ஒரு போராளி. ஆகவே என் போன்ற

போராடும் இயல்புள்ள பாட்ஸ்மன்களுக்குப் பந்து வீசுவதையே விரும்புகிறேன். அப்போதுதான் ஒரு சவால் இருக்கும். சச்சின், அஸார், லாரா போன்ற பாட்ஸ்மன்களை வீழ்த்தினால்தான் எனக்குப் பெருமை. Tail endersஐ வீழ்த்தி விக்கெட்களின் எண்ணிக்கையைக் கூட்டிக் கொள்வதில் பெருமையே இல்லை என்று கருதுபவன் நான்.




சென்னை டெஸ்டில், மூன்றாம் நாள் வரை ஆட்டம் எங்களுக்குச் சாதகமாகத்தான் இருந்தது. சித்து, என் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் திணறியது உண்மை. (சென்ற இதழ் பேட்டியில் சித்துவே இதை ஒப்புக் கொண்டிருப்பது வாசகர்களுக்கு நினைவிருக்கும்) எந்த நேரத்திலும் அவர் அவுட் ஆகக்கூடும் என்ற நிலைமை இருந்தது.

ஆனால் திடீரென்று அவர் ஆவேசம் வந்தாற்போல அடிக்க ஆரம்பித்து விட்டார். அவரைத் தொடர்ந்து சச்சின், அஸார், திராவிட் எல்லாருமே வாங்கு வாங்கென்று வாங்கி விட்டார்கள்.

என் வாழ்நாளில் இத்தனை மோசமாக நான் பந்து வீசியதே இல்லை.

இதற்கு இன்னொரு காரணமும் உண்டு. கல்கத்தா மேட்சில் நான் பந்து வீசிய முதல் நாள் காலை ஊரிலிருந்து என் மனைவி ஸைமோன் போன் செய்திருந்தாள். என் ஒன்றரை வயது மகள் ப்ரூக்கிற்கு உடம்பு சரியில்லை என்று அவள் சொன்ன தகவல் என்னைச் சோர்வடையச் செய்திருந்தது. ஒரு வாரமாகக் குழந்தைக்கு ஜுரம் என்று கேள்விப்பட்டதும் என்னால் எப்படி சுறுசுறுப்பாக ஆட முடியும்?

மனத்தளவில் சோர்ந்து விட்டதால், என்னால் உற்சாகமாக ஆட முடியவில்லை.

நான் மட்டுமா? அன்று எங்கள் அணியில் எல்லாருமே ஏனோ சொதப்பி விட்டார்கள். கேப்டன் டைலர் எத்தனையோ ஃபீல்டிங் உத்திகளைக் கையாண்டும் எதுவுமே பயனற்றுப் போனது. இந்தியர்கள் எல்லாருமே அடித்தார்கள். எப்படி ரன் குவிப்பைக் கட்டுப்படுத்துவது என்று



# 30 வருஷ ரெக்கார்ட் பிரேக்!

**த**மது அதிரடி ஆட்டத்தால், பெங்களூரில் இந்தியாவை வென்ற ஆஸி. அணியின் கேப்டன் மார்க் டெய்லர், அந்த இடத்திலேயே தமது கேப்டன் பதவியையும் துறப்பதாக அறிவித்தார். வென்ற களிப்பில் டெய்லர், கல்கிக்கு அளித்த பிரத்தியேகப் பேட்டி இது :

**கல்கி :** இரண்டு அடுத்தடுத்த தோல்விகளுக்குப் பிறகு வென்றிருக்கிறீர்கள். இந்த வெற்றிக்காகப் போராடினீர்கள் என்று சொல்லலாமா?

**டெய்லர் :** முதல் நாள் ஆடுகளத்தைப் பார்வையிட்டபோதே, இங்கு வெல்ல முடியும் என்று தோன்றியது. என் நினைப்புக்குத் தோதாக அன்று ஸ்ரீநாத் ஆட மாட்டார் என்று தெரிய வந்தது. ஏனெனில் ஆட்டத்தின் துவக்கத்திலேயே அவர் ஓரிரு விக்கெட்கள் எடுத்து விடுவது, எதிரணிக்குப் பெரிய மைனஸ் பாயின்ட்! அவர் இல்லாத நிலையில், எங்கள் வெற்றி கிட்டத்தட்ட உறுதியாகிவிட்டது! சித்துவையும் சச்சினையும் ஆரம்பத்திலேயே அவுட் ஆக்கிவிட மிகவும் விரும்பினேன். முதல் இன்னிங்ஸில் அது முடியாவிட்டாலும் இரண்டாவது இன்னிங்ஸில் சாத்தியமாயிற்று. சச்சின் விக்கெட் விழுந்த உடனேயே எங்கள் வெற்றி உறுதியாகிவிட்டது!

**கல்கி :** இந்த மேட்சில் சதமடித்தது - வென்றது - எதில் மகிழ்ச்சி அதிகம்?

**டெய்லர் :** 30 வருஷ ரெக்கார்ட் பிரேக் இந்த வெற்றி! இந்தியாவை, அதன் சொந்த மண்ணில் வெல்வது இது முதல் முறை. அது என் தலைமையில் விளையாடியபோது கிடைத்திருக்கிறது என்னும்போது இதை விட வேறென்ன பெருமை வேண்டும்? அதுவும் முந்தைய இரு டெஸ்ட்களில் தோல்வி; அவமானம்! இந்த வெற்றிக்கு என் சதமும் உதவியதில் இரட்டிப்பு மகிழ்ச்சி.

**கல்கி :** முதல் இரு டெஸ்ட்களின் மோசமான தோல்விக்குக் காரணம் என்ன?

கடைசி வரை புரியாத சூழலில், 'எப்போது அஸார் டிக்ளேர் செய்வார் எனக் காத்துக் கொண்டிருந்தோம்! (சிரிக்கிறார்.)

**அ**ன்று மாலை என் மனைவியுடன் மறுபடி பேசினேன். குழந்தையின் உடல் நிலை முன்னேறியிருப்பதாகச் சொன்னதும் தான், கொஞ்சம் நிம்மதியானேன்.

குழந்தையும் போனில் பேசினாள். ''அப்பா, எனக்கு வரும்போது என்ன வாங்கிட்டு வரப் போறீங்க?'' என்று கேட்டாள்.

எனக்கு அவள் பேசியதில் எக்கச்சக்க சந்தோஷம். காரணம், ப்ருக்குடன் நான் பேசி, பத்து நாட்களுக்கு மேல் ஆகிவிட்டது!

குழந்தைக்கு ... வாங்கு ...து? மும்பையிலோ, சென்னை, கல்கத்தாவிலோ நான் எதுவுமே வாங்கவில்லை. இங்கே, பெங்களூரில்தான் ஷாப்பிங் போக வேண்டும்.

**அ**ப்புறம் ஒரு விஷயம். உங்கள் ஊர் பத்திரிகையாளர்கள் என்னைப் பற்றி என்னென்னவோ எழுதுகிறார்கள் என்று கேள்விப்பட்டேன். எனக்கு இந்திய உணவு பிடிக்கவில்லை; ஆஸ்திரேலியாவிலிருந்து உணவு வருகிறது என்றெல்லாம் எழுது

றார்களாமே? சுத்தப் பொய்! இங்கே நான் சாப்பிடுவதை நீங்கள் பார்க்கிறீர்கள் அல்லவா?

(இதைப் பேசும்போது வார்னே மசாலா தோசை சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.)

இங்கே சமையலில் எண்ணெயும் காரமும் அதிகமாக இருக்கிறது. சூப் (ரசம்) பிரமாதமாக இருக்கிறது. விரும்பித்தான் சாப்பிடுகிறேன். தினம் ஆஸ்திரேலியாவிலிருந்து சாப்பாடு வந்தால், நான் விளையாடிச் சம்பாதிப்பதெல்லாம் அதற்கே போய்விடுமே!

இந்தியாவில் மைசூர், தாஜ்மஹால், மகாபலிபுரம் எல்லாம் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறேன். ஆனால் இந்த டூரில் சாத்தியமில்லை.

இதெல்லாம் முடிந்து சாவகாசமாக ஒரு மாதம் தங்கி, சுற்றிப் பார்ப்பது போல, குடும்பத்துடன் வரலாம் என்று இருக்கிறேன்.

இந்தியாவை, மக்களை மிகவும் பிடித்து விட்டது எனக்கு. அன்பு, அன்பு, அன்புதான் இங்கே! இந்த டூர் மிக மகிழ்ச்சி அளிக்கிறது எனக்கு. என்ன, மிஞ்சிப் போனால் இன்னும் ஐந்து வருஷங்கள் கிரிக்கெட் ஆடுவேனோ என்னமோ? எப்போது என்னால் நன்கு பந்து வீச முடியவில்லையோ, அப்போதே ரிடையர் ஆகிவிடுவேன். அதன் பின் மறுபடி ஒரு டூரிஸ்டாக வந்து இந்தியாவை முழுக்க சுற்றிப் பார்க்க விரும்புகிறேன்.

டூர் அடிப்பது எனக்குப் பிடித்த விஷயம். ரொம்பப் பிடித்தது - மேட்ச் இல்லாத சமயங்களில் தூங்குவது! டீவி பார்ப்பதிலோ, நியூஸ் பேப்பர் படிப்பதிலோ துளியும் ஆர்வம் கிடையாது! மனைவி, மகளுடன் கூட இருந்தால் போதும் - அதுவே சொர்க்கம்!

உடனிருந்து உரையாடியவர் : **நந்தினி**

**டெய்லர்** : இந்த மேட்சில் எப்படி ஸ்ரீநாத் இல்லாததால் இந்தியா தோற்றதோ, அதே போல எங்கள் அணியின் முக்கிய வேகப்பந்து வீச்சாளர்களான மெக்ரத்தும் ரீஃபிலும் இல்லாததால் நாங்கள் முன்பு தோற்றோம்! வார்னேவை இந்தியர்கள் நன்கு புரிந்து கொண்டு விளாசி விட்டார்கள்.

**கல்கி** : முதல் இரண்டு டெஸ்ட்களில் அம்பயர்கள் சரியாக நடந்து கொள்ளவில்லை என்று நீங்கள் குறைபட்டுக் கொண்டதாகப் பத்திரிகைச் செய்திகள் வந்தனவே?

**டெய்லர்** : Sorry. இதுபற்றி நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. எங்கள் பேட்ஸ்மன்கள் நன்றாக ஆடாத பட்சத்தில் அம்பயரைக் குறைசொல்லிப் பயனில்லை. மேலும் அப்படி ஏதும் அம்பயர் மேல் புகார் இருந்தால் அதை எங்கள் மானேஜர், உலக கிரிக்கெட் சங்கத்திடம் தெரிவிப்பாரே தவிர, கேப்டன் ஒன்றும் சொல்லக் கூடாது!

**கல்கி** : வார்னேவின் வழக்கமான மாயாஜாலம் இப்போது எடுபடவில்லையே?

**டெய்லர்** : வார்னேயைக் குறைத்து மதிப்பிடாதீர்கள். அவர் வழக்கம் போலச் சிறப்பாகத்தான் பந்து வீசினார். அவரது பந்து வீச்சு எடுபட வேண்டுமானால் குறைந்தது 300 - 350 ரன்கள் தேவை. அதை, முன்னிலை ஆட்டக்காரர்களான நாங்கள் அடிக்கத் தவறி விட்டபோது, அவரைக் குறை சொல்வது தவறு.


பேட்டி : சிம்மம்.



டெய்லர்


# உராங் உடான் குரங்குடன் டிபன் சாப்பிட ஆசையா?













- உராங் உடான் குரங்குடன், ஜாலியாய் டைனிங் டேபிளில் அமர்ந்து காலை டிபன், மாலை டீ சாப்பிட ஆசையா?
- எட்டாயிரம் விதமான பறவைகளை ஒரே இடத்தில் பார்க்க விருப்பமா?
- பெங்குவின்கள் லெஃப்ட், ரைட் போட்ட படி மார்ச் ஃபாஸ்ட் செய்வதைக் காண வேண்டுமா?
- மிக உயரமான செயற்கை நீர்வீழ்ச்சியில் ஆசை தீரக் குளிக்க வேண்டுமா?
- ஒரு சொட்டு நீர் உங்கள் மீது படாமல், தண்ணீருக்குள்ளே போய், பலவித கடல் வாழ் இனங்களைப் பார்க்க விருப்பமா?

ஒரே கல்லில் இதுபோல் பல வித மாங்காய்களை அடிக்கலாம்! எங்கே?

சிங்கப்பூரில்!

ஆண்டுக்கு ஆண்டு, சிங்கப்பூருக்கு வருகிற சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே போகிறது. சிங்கப்பூரின் மொத்த ஜனத்தொகையே முப்பது லட்சம்தான். ஆனால், சென்ற ஆண்டில் மட்டும் சிங்கப்பூருக்கு வந்து சென்ற சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? ஏழரைக் கோடி!

இந்த ஏழரைக் கோடியில், முதல் தடவையாக சிங்கப்பூர் வந்தவர்கள், மீண்டும் மீண்டும் வந்து போகிறவர்கள், தனியாய் வந்தவர்கள், குடும்பத்துடன்









வந்தவர்கள், சுற்றிப் பார்க்க வந்தவர்கள், பிசினஸ் விஷயமாய் வந்தவர்கள் என்று பலதரப்பட்டவர்களும் அடக்கம்.


சிங்கப்பூரில் மட்டும் இது எப்படி சாத்தியமானது?

இந்தக் கேள்வியை, சிங்கப்பூர் டூரிசம் போர்டின் டைரக்டர் விமல் ஹெர்னால் அண்மையில் சென்னை வந்திருந்தபோது கேட்டோம். உற்சாகமாக பதிலளித்தார்:

"முதல் பாயிண்ட், சிங்கப்பூரின் சுற்றுலா மேம்பாட்டைப் பொறுத்தவரை, அரசாங்கம், தனியார் துறை இரண்டிற்கு மானபங்கு என்ன என்பது பற்றி திட்ட வட்டமான வரையறை உண்டு. தனியார் துறை இதில் முதலீடு செய்ய, வளமாக இருக்க உதவுவதும், உலகளாவிய விளம்பரங்கள் மூலமாகப் பயணிகளைக் கவருவதும்தான் அரசாங்கத்தின் பணி. மற்றபடி ஹோட்டல், உணவகங்கள், டூரிஸம் போக்குவரத்து, பொழுதுபோக்கு அம்சங்கள், பார்க்க வேண்டிய இடங்களை ஏற்படுத்துவது மற்றும் பராமரிப்பது,



பாக்கேஜ் டூர்கள் நடத்துவது என்று டூரிசம் சம்மந்தப்பட்ட இதர விஷயங்கள் அனைத்தும் தனியார் துறையிடம் விடப்பட்டுள்ளது.

''விளக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால், இந்தியா போல, மத்திய அரசு, மாநில அரசுகள், தனியார் துறை மூன்று தரப்பினரும் ஓட்டல், பாக்கேஜ் டூர்கள் போன்றவற்றில் ஈடுபட்டு, ஆரோக்கியமற்ற போட்டியை உருவாக்கியுள்ளதுபோல அங்கே இல்லை!

''இன்னொரு முக்கியமான விஷயம், வரும் சுற்றுலாப் பயணிகள், சிங்கப்பூரிலிருந்து திரும்பிச் செல்கிறபோது, 'தாம் செலவழித்த பணம், வீண் அல்ல!' என்று முழுக்க முழுக்கத் திருப்தியடைய வேண்டும்.

''விலைவாசி உயர்வு என்பது காலத்தின் கட்டாயம். எனவே ஒருமுறை வந்தவர் மறுமுறை வருகிறபோது, முதல் தடவை செலவழித்த பணத்தைவிட அதிகமாய் செலவழிக்க வேண்டியிருக்கும். உதாரணமாக, மிருகக்காட்சி சாலையில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நாலு டாலர் நுழைவுக்கட்டணம் என்றால் இப்போது ஆறு டாலர் என உயர்ந்திருக்கும். அதே சமயம், முதல் தடவை பார்த்தபோது இல்லாத பல புதுமைகள் இரண்டு ஆண்டுகளில் அங்கு செய்யப்பட்டிருக்கும். இதனால், அதிகக் கட்டணம் செலுத்தினாலும், பழையதையே காட்டி ஏமாற்றிவிட்டார்கள் என்கிற நினைப்பு துளியும் வராது.

''பூங்காக்கள், மியூஸியங்கள், பறவை மற்றும் அனிமல் ஷோக்களைப் பார்த்த அனுபவம் என்றைக்கும் மறக்காமல் நினைவில் நிற்கும்படிச் சிறப்பாக அமைக்கப்பட்டிருக்கும். இது அந்த டூரிஸ்ட்களை, மறுபடி சிங்கப்பூர் வருவதற்குத் தூண்டும்.

''டூரிஸ்ட்டுகளை மிக முக்கியமாக உணவு விஷயத்தில் திருப்திப்படுத்த வேண்டும். அவர்கள் விரும்பும் உணவு கிடைக்கவில்லையெனில், அது ஒருவித நெகடிவ் பப்ளிசிடி ஆகிவிடும். எனவே, டூரிஸ்ட்டுகளுக்கு சிங்கப்பூரில் சைனீஸ், மலாய், இந்திய, இந்தோனேஷிய, ஆசிய, மேற்கத்திய உணவு வகைகள் என்று வெரைட்டிக்குக் குறைச்சலே கிடையாது. கடல் (உயிரின) உணவகங்களும் உண்டு. சுத்த சைவக்காரர்களுக்கும் விரும்பியது கிடைக்கும்!

''இன்னொரு முக்கியமான கோணம், குடும்பமாக வந்து பார்க்கத்தக்க ஒரு இடம் சிங்கப்பூர் என்று விளம்பரப்படுத்துவது. வெறும் டூரிஸம் என்று மட்டுமின்றி ஆசியாவின் மிக உயர்வான 'கருத்தரங்கு மையம்' என்றும் நாங்கள் சிங்கப்பூரை முன்னிறுத்தி வருகிறோம். பிசினஸ் கருத்தரங்கங்கள் நடத்துவதற்கு அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பதன் மூலம், சிங்கப்பூர் வருகிறவர்கள் எண்ணிக்கை கணிசமாய் உயர்கிறது!'' என்றார்.



• விமல் ஹெர்னால்

இப்படியே போனால், சிங்கப்பூர் கவர்ந்திழுக்கும் டூரிஸ்ட்டுகள் எண்ணிக்கை இந்திய ஜனத் தொகையை எட்டிப் பிடித்துவிடும்!

— எஸ். சந்திரமௌலி

படங்கள்- நன்றி: சிங்கப்பூர் டூரிஸம் போர்டு.

# பில்ராத்

## மருத்துவமனை

கத்தியின்றி...
ரத்தமின்றி...
**வயிறு**
சம்பந்தப்பட்ட அனைத்து
நோய்களுக்கும்
ஓர் முழுமையான
**தீர்வு**



- அல்சர்
- அபண்டிஸைடிஸ்
- கர்ப்பப்பை நோய்
- பித்தப்பை கற்கள்
  (Gall Bladder Stones)
- குடல் இறக்கம்(Hernia)
- ஓவரியில் கட்டி எடுத்தல்
  (Ovarian Cyst Removal)
- குடும்பக் கட்டுப்பாடு சிகிச்சை

**முதன்முதலில்**
அல்ட்ராசானிக் முறையுடன்
**லேப்ராஸ் கோப்பி**
சிகிச்சை

### சிறப்பு அம்சங்கள்

- ரத்த இழப்பு இல்லை
- தழும்பு ஏற்படாது
- உடனே பழைய நிலைக்குத்
  திரும்பலாம்

அறுவை இல்லா
**மூல வியாதி**
சிகிச்சை

**சிறப்பு நிபுணர்:**
**டாக்டர் வெ. ஜெகநாதன்**
M.S., M.A.M.S., FRSH (LON) MACG (USA)
FAGE, FAMS-Gastro. (Vienna), FICS-Gastro
வயிறு மற்றும் குடல் சம்பந்தமான
நோய் சிகிச்சை நிபுணர்

**BILLROTH HOSPITAL**
(24 மணி நேர சேவை)

43, லட்சுமி திரையரங்க சாலை, செனாய் நகர், சென்னை-600030.
போன் : 6440020/6441777.

# செவ்வந்தி

பளபளவென்று விடிந்து விட்டது. சட்டென்று மையிருட்டு மறைந்து சாம்பல் பூத்து விட்டது. இந்தச் சாம்பல் நிறமும் கூட அடுத்தக் கணத்திற்காகத்தான் காத்திருக்கிறது. சாம்பல் நிறம் கரைந்து, சிவப்பு பூக்கும். சிவப்பு என்றால் ரத்தச் சிவப்பில்லை. கரைத்து விட்ட சிவப்பு. இளஞ்சிவப்பு. சிதறிவிட்டாற் போல சிவப்பு. இங்கொன்றும் அங்கொன்றுமாய் சிதறிக் கிடக்கும் சிவப்பு. சட்டென்று சிவப்பு மஞ்சளாய் மாறும். இறுதியில் மஞ்சள் வெளுத்து நரைவெள்ளையாய் ஓடும். விடிகின்ற பொழுதை அணு அணுவாய்ப் பார்த்து, ரசிப்பது ஆனந்தம்தான். அந்தக் கணம் மெல்லியதாய் - சலித்தெடுத்தாற்போல் ஒரு காற்று வந்து தொடும். அது அந்தத் தருணத்திற்கென்றே அலாதியானது. 'அம்மா.... அம்மா...' என்று வாய் பிளந்து ஆனந்தப்படவைக்கும்.

சக்திவேல் அதை அனுபவித்தான். எத்தனை பேருக்கு இதையெல்லாம் அனுபவிக்கத் தோன்றும்? எத்தனை பேர் விடிகின்ற காலைப் பொழுதை இத்தனை விவரமாகப் பார்த்திருக்கின்றார்கள்? ஒரு பிறப்பைப் பார்க்கின்ற பரவசமும் படபடப்பும் எத்தனை பேருக்கு வாய்க்கும்? சக்திவேலுக்கு அது தினம் தினம் வாய்த்தது. எல்லா நாளும் ஒன்றாய் இல்லை. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அனுபவம். சக்திவேல் சட்டென்று எழுந்தான். கதவை அகலத் திறந்தான். வியப்போடு வானம் பார்த்தான்.

அது மொட்டை மாடி. மாடியில் இடது ஓரத்தில் சின்ன அறை. அப்பா அவனுக்காகக் கட்டியது. காலேஜில் அவனைச் சேர்த்து விட்ட உடனே கல்லும் மண்ணும் தேடத் தொடங்கி விட்டார். நாலு சுவரும் ஒரு கதவும்தான் அந்த அறை. அப்பா அந்த அறைக்கு எந்த அலங்காரமும் செய்யவில்லை. மண்ணும் கல்லும்தான் மதிலாய் நின்றது. புத்தகங்கள் வைப்பதற்கு ஒரு ஷெல்ப். இரண்டு அகலமான ஜன்னல்கள். ஒரு கழுதைக் கால் கட்டில். மற்றபடி அவர் எதற்கும் மெருகூட்டவில்லை. ஆனால் ஜன்னல் திறந்தால் பச்சை தெரியும். கதவு திறந்தால் தென்னந்தோப்பும், அமைதியாய் ஓடும் வாய்க்காலும் கண்ணில் விரியும்.

ஊரின் கடைசித் தெரு அது. தெருவின் முதுகுக்குப் பின்னால் வாய்க்கால். வாய்க்கால் என்றால் கோவணம் மாதிரி ஓடுகின்ற வாய்க்கால் இல்லை. அகண்ட வாய்க்கால். கால் மைல் அகலத்திற்குப் பரந்து நகர்கிறது. இக்கரையிலும் அக்கரையிலும் தென்னந்தோப்புகள். அக்கரையில் தென்னந்தோப்பு தாண்டினதும் வயல் வெளிகள். தளிரா தரையா என்று தெரியாதபடிக்கு ஒரே



பச்சை. இதைவிட அந்த அறைக்கு வேறு என்ன மெருகூட்டி விட முடியும்? சக்திவேல் சிறிது நேரம் அப்படியே நின்றான். பின்பு அறைக்குள் சென்று சட்டையை மாட்டிக் கொண்டு கீழே இறங்கினான்.

**வீ**ட்டை ஒட்டினாற்போல இடதுபுறம் மாட்டுத் தொழுவம். அருகில் ஒரு கொடுக்காப் புளிமரம். நான்கு பசுக்கள். மூன்று கன்றுகள். அம்மா, மாட்டுச் சாணம் அள்ளிக் கொண்டிருந்தாள். அவளுக்குச் சாமத்திலே விடிந்து விடும். அடுப்புச் சாம்பலை அள்ளிப் போடுகிறேன், மாடுகளுக்குத் தண்ணீர் காட்டுகிறேன், தொழுவம் சுத்தம் செய்கிறேன் என்று அவள் பொழுது சாமத்திலே விடிந்து விடும். சக்திவேலைப் பார்த்ததும்,

''குளிக்க கிளம்பியாச் சாப்பா?''

''ஆமாம்.''

''நீச்ச தண்ணி தரட்டுமா?''

''வேண்டாம்.''



# 1 பாரதிபாலன்

''ஒரு மடக்கு குடிச்சுட்டுப் போய்யா. ஒடம்புக்கு நல்லது.''

''வேண்டாம்!''

''காப்பித் தண்ணி போட்டுத் தரட்டுமா?''

''வேண்டாம்மா.''

''குளிக்கப் போனா போனோம் வந்தோம்னு வாப்பா. உம்பாட்டுக்கு வாய்க்கால் மேட்டுலே இருந்தி



ராதே. இப்பப் போயிட்டு உச்சிப் பொழுதுக்குத் திரும்புறே.... காலாகாலத்துலெ சாப்பிட வேண்டாமா?...."

"சரி..."

''உம் மனசுலெ என்ன நினைப் போய்யா... இப்படி மனசுக்குள்ளே வெச்சிருந்தா யாருக்குத் தெரியும்?"

அம்மா இழுத்து ஒரு பெருமூச்சு விட்டாள். ஒருகணம் மௌனம். ''வேலை வெட்டி இல்லையேனு மருகாதப்பா. கெடைக்கிறப்ப கிடைக்கட்டும். ஏங்களுக்கு உன் சந்தோஷம்தான்யா உசத்தி...."

சக்திவேல் அம்மாவின் முகத்தைப் பார்த்தான். அவள் சட்டென்று பார்வையைத் திருப்பிக் கொண்டாள். இவன் பார்க்காதபோது சேலைத் தலைப்பால் கண்ணைத் துடைத்துக் கொண்டாள். சக்திவேல் திண்ணையில் வந்து நின்றான். தெரு இன்னும் விழிக்கவில்லை. பக்கத்துத் தெருவில் மாடு ஓட்டிக் கொண்டு போகும் சப்தம். எங்கோ தூரத்தில் 'சலக்... சலக்' என்று வாசல் தெளிக்கின்ற சப்தம். படபடவென்று இறக்கையை வயிற்றில் அடித்துக் கொண்டு கோழிகள் தாவுகின்ற சப்தம். சக்திவேல் தெருவையே பார்த்துக் கொண்டு நின்றிருந்தான்.

"சக்தி..."

சட்டென்று திரும்பினான். அப்பா. திண்ணைக்கு வந்து விட்டார்.

"அப்பா...."

"ராசு வாத்தியார் பார்க்கணும்னார்யா."

"பார்க்குறேம்பா."

"ரெண்டு நாளாத் தேடிட்டு இருந்தார்."

"சரிப்பா."

அப்பா ஒரு நிமிஷம் தயங்கினார். இரண்டடி முன்னே போனார். உடனே திரும்பினார்.

"பணம். செலவுக்குப் பணம்?"

"வேண்டாம்."

"ஏன்?"

"எனக்கென்ன செலவு?"

அப்பாவின் முகம் சுளுக்கிற்று. முதுகுத் தண்டில் விண்ணென்று ஒரு தெறிப்பு. அவரால் அவனை நேராகப் பார்க்க முடியவில்லை. எங்கோ பார்த்தார். இது அவர் பாஷை. மனசு பொறுக்காவிட்டால், ஏதாவது நழுவி விட்டால், அவர் பார்வை எங்கோ தாவி விடும். அவருக்குப் பாயவோ, பதுங்கவோ தெரியாது. அவருக்குத் தெரிந்த பாஷை எல்லாம் மௌனம்தான். சிறிது நேரம் மௌனம். பிற்பாடு பரபரவென்று வீட்டிற்குள் சென்றார். ஒரு குட்டிச் சாக்குப்பை நிறைய நெல்லை அளந்து எடுத்தார். "இதுலெ ஐஞ்சு மரக்கா நெல்லு இருக்கு. நாடார் கடையிலே போட்டு தம்பிகிட்டக் காசைக் கொடு...'' என்று அம்மாவைப் பார்த்துச் சொன்னார். சக்திவேலுக்கு சாட்டை நுனி முதுகில் சொடுக்கிற்று.

''காதலிக்கும் போது சந்தோஷமா இருந்தே? இப்ப கல்யாணம் செய்துக்கிட்டப்புறம் ஏன் இப்படி சோகமா இருக்கிறே?''

''காதலிக்கும் போது மாமியார், நாத்தனார்னு யாரும் கிடையாதே!''


– வி. எஸ். கணேசன்

சக்திவேல் வாய்க்கால் கரையில் வந்து உட்கார்ந்தான். வாய்க்கால் நீர் மந்தமாக நகர்ந்து கொண்டிருந்தது. பார்க்கப் பார்க்கப் பரவசம் கூடிற்று. எல்லா ஊரிலும் தான் வாய்க்கால் ஓடுகிறது. ஆடு மாடுகளைக் குளிப்பாட்டுவதற்கும், அழுக்குத் துணிகளை அலசுவதற்கும் ஓடுகிறது. வாண்டுகள் தொமேர்... தொமேர் என்று குதிபோடுவதற்கும், 'உஸ்... உஸ்....' என்று துவைப்பதற்கும்தான் ஓடுகிறது. இங்கு அப்படியல்ல. இந்த வாய்க்கால் அவனுக்காக ஓடுகிறது. அவன் என்றால் செவ்வந்தி! அவள் காலைத் தொட்டுச் சுத்தம் பண்ணுவதற்காக ஓடுகிறது. அவள் குடத்தில் அள்ளிக் கொண்டு போவதற்காகவே ஓடுகிறது.

கல்லூரியில் படிக்கின்ற போது இப்படி வந்து உட்காருவது வழக்கம். ஆனால் அப்போதெல்லாம் அவளை இவ்வளவு விவரமாகப் பார்க்கவில்லை. கல்லூரியை விட்டு வெளியே வந்ததும் உலகம் வேறு விதமாக இருந்தது. இந்த மண்ணில் வேர் பிடிப்பது அத்தனை சுலபமில்லை என்று உறைத்தது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அனுபவம். புதுப்புது அனுபவம். அந்த அனுபவங்கள் தருகின்ற பாடம் தொண்டைக் குழி முழுவதும் கசப்பாய் மிதந்தது.

வேலை தேடுவதும், தேடுவதற்காக அலைகின்ற அலைச்சலும், அலைச்சலில் மிஞ்சுகின்ற வெறுப்பும் ஒருநாளா இரண்டு நாளா? மூன்று வருடங்கள். இப்போதுதான் எம்.ஏ. முடித்தாற்போல் இருக்கிறது. அதற்குள் மூன்று வருடங்கள் விசுக்கென்று காலம் கழண்டு விடுகிறது. அவள் மட்டும் அவனுக்குள் மலராமல் இருந்தால் எப்போதோ முறிந்து போயிருப்பான்.

சக்திவேல் ஓடும் நீரையே பார்த்துக் கொண்டிருந்தான். அலையலையாய்



அவளின் நினைவு. ஜில்லென்று காற்றுப் பட்டாலும் அவளின் நினைவு. ஓடுகின்ற நீரைப் பார்த்தாலும், ஒதுங்குகிற நுரையைப் பார்த்தாலும் அவளின் நினைவு. மழை பெய்தாலும் அவளின் நினைவு. புஸ்புஸ் வென்று ஈசல் பறந்தாலும் அவளின் நினைவு. பிடுங்கி எறிந்து விட முடியாத படிக்கு அவளின் நினைவு.

எதில் இருந்தும் அவளைப் பிரிக்க முடியவில்லை. இங்கு வந்து உட்கார்ந்த வுடனே உலகமே அழிஞ்சு போகிறது. அவளின் நினைவு மட்டுமே நிற்கின்றது. அப்படி அதைப் பிடித்துக் கொண்டு நிற்பது தான் ஆறுதலாக இருக்கிறது. அந்த ஆறுதல் தான் சில நேரம் ஆனந்தமாகிவிடுகிறது. சக்திவேல் அந்த ஆனந்தத்தில் சிறிது நேரம் திளைத்தான்.

தூரத்தில் ஒரு சப்தம்.

சரக் சரக் என்று காய்ந்த இலைச் சருகுகள் நொறுங்குகிற சப்தம். யாரோ நடந்து வருகிறார்கள். சக்திவேலுக்கு ஆவலும் குறுகுறுப்பும் கூடிற்று. சட்டென்று திரும்பினான். வெடவெடவென்று ஒரு உருவம். வாழைத் தோட்டத்து வரப்பு வழியே நடந்து வந்தது. சக்திவேல் பார்வையைத் தீட்டினான். சட்டென்று ஒரு வாழை இலை அசைந்து விலக, அந்த உருவம் தெளிவானது. செவ்வந்தி!

செவ்வந்திக்குத்தான் இந்த உசரம். இந்தப் பசுமை. இத்தனை இலை தழைக்கும் இல்லாத பசுமை. மாறாத பசுமை. கோடையோ, கொட்டும் குளிரோ, அவளிடம் இந்தப் பசுமை மட்டும் மாறாது.

காலையில் பார்த்தாலும் அதே மலர்ச்சி, மதியம் பார்த்தாலும் அதே மலர்ச்சி. இரவு பார்த்தாலும் அதே மலர்ச்சி. எப்போது பார்த்தாலும் மலர்ச்சியும் தளதளப்பும்தான். இதுதான் அவளின் விசேஷம். இந்த ஊர் புழுதிக்கே இல்லாத விசேஷம்.

சக்திவேல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

செவ்வந்தி வாய்க்கால் படித்துறைக்குப் போனாள். இடுப்பில் ஒரு குடம். அவள் இடுப்பில் இருக்கும்போது, அந்த குடத்திற்கே ஒரு களை வந்து விடுகிறது. செவ்வந்தி இடுப்புக் குடத்தை இறக்கினாள். படித்துறையில் வைத்தாள். மணலை எடுத்துக் குடத்தைத் தேய்த்தாள். சிறிது நேரத்தில் தகதகவென்று தங்க மெருகு ஏறிற்று.

சக்திவேல் மெல்ல நடந்து படித்துறைக்கு வந்தான். அவன் காலடி ஓசையில், இங்கொன்றும் அங்கொன்றுமாய் இரை தேடிக் கொண்டிருந்த குருவிகள் படபட வென்று பறந்தன. செவ்வந்தி தலையை உயர்த்திப் பார்த்தாள். ஒருகணம்தான் அந்தப் பார்வை. அதற்குப் பிற்பாடு அது சிரிப்பாய் மாறி விட்டது. கண்கள் சுருக்கி, முகம் சிறுத்துச் சிரிக்கின்ற சிரிப்பு. அவள் சிரிப்பே அலாதியானது.

சிரிக்கும் போது கண்களில் பளபள வென்று நீர் கோத்துக் கொள்ளும். ஒருகணம் கூடுதலாகச் சிரித்து விட்டால் விழியோரம் முத்துக் கோத்தது போல் ஒரு சிறு துளி திரண்டு நின்று பளபளக்கும். அதுவும் ஒரு கணம்தான். பிற்பாடு உடைந்து நீரோட்டமாகி விடும்.

சக்திவேல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவளைப் பார்த்ததும் – அதுவும் இத்தனை நெருக்கத்தில் – தனிமையில் பார்த்ததும் ஒரே பரபரப்பு. இரண்டு மூன்று வருடமாய் அடங்காத பரபரப்பு. கண்களில் விழுங்கி, மனசால் சுவைத்துக் கொண்டிருப்பதே ஒரு சுகமாயிற்று. அதற்கு மேல் தைரியமில்லை. எத்தனை தனிமை வாய்த்தாலும் தாண்டுவதற்குத் தைரியமில்லை. ஆனாலும் அவனுக்கு அவள் திரா அவசியமாகி விட்டாள். அவளும் பயந்து பயந்து நாக்கைக் கடித்துக் கொண்டிருக்கிறாள்.

இருவரும் அப்படியே – ஒருவரை ஒருவர் விழுங்கிக் கொண்டு நின்று கொண்டிருந்தனர். மௌனம். அப்போது திடீர் என்று ஒரு சப்தம். ஏதோ முனங்கல். இல்லை, அது முனங்கல் இல்லை. கீறல் குரலில் யாரோ பேசுகிறார்கள். இல்லை. உள்குரலில் யாரோ பாடுகிறார்கள். சக்திவேல் காதைத் தீட்டினான். அது மனுஷக் குரலாய் இல்லை. கண்ணை இடுக்கிக் கொண்டு காதைத் திறந்தான். முணு முணுவென்று ஓர் ஓசை.... இருவரும் திடுக்கிட்டனர்!

(தொடரும்)

| |
|---|
| நடிப்பு : பார்கவி. |
| வண்ணப்படம் : யோகா |

*அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!*

உங்கள் வாழ்வோடு இணைந்த கோபால்தாஸ் பாரம்பரிய குடும்பத்தில் உதிர்த்த புதிய மலரான

# ஸ்ரீ மோட்டாஜி கோபால்தாஸ் & கோ

தங்களின் நல்ஆதரவோடு வெற்றிகரமாக ஐந்தாவது ஆண்டை நோக்கி அடியெடுத்து வைக்கின்றது.

மற்றும்

சென்னை மக்களுக்கு ஏற்ப அவர்கள் நலம் கருதி கீழ்க்கண்ட விலாசத்தில் மாதத்தின் முதல் மூன்று சனி, ஞாயிறு கிழமையில் எங்களது சேவையை 3 ஆண்டுகளாக அளித்து வருகிறோம். தங்களுடைய முழு ஆதரவினால் வரும் ஆண்டுகளுக்கும் தொடர்கிறது என்பதைத் தெரிவிக்கிறோம்.

## *சென்ற ஆண்டைப் போல இந்த ஆண்டும் துவக்க நாளை முன்னிட்டு*

வரும் 18, 19, 20, 21 ஆகிய தேதிகளில் சிறப்பு தள்ளுபடி மொத்த விற்பனை துகையில் 2% உண்டு என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம். உங்கள் முதலீட்டுக்கு இழப்பில்லாது நம்பிக்கை நாணயத்துடன் பாரம்பரிய வழியில் இயங்கும் நிறுவனம்


தங்கள் அன்புள்ள
கமல்மேத்தா
ஷில்பா மேத்தா
பங்குதாரர்கள்

## ஸ்ரீ மோட்டாஜி கோபால்தாஸ் & கோ

வைர, தங்கம் நகைகள் மற்றும் வெள்ளிப் பாத்திரங்கள்

45, பெரிய தெரு,
(மாடியில்)
கும்பகோணம் - 612 001.
(0435)421 685, 423 169.

நெ. 3, அகல்யா பிளாட்ஸ்,
55, மாம்பலம் ஹை ரோடு,
(கோடம்பாக்கம் மார்க்கெட் அருகில்) தி. நகர்,
சென்னை - 17. 822 2470.






1998 ஏப்ரல் 12
ஈசுவர பங்குனி 29
மலர் : 56
இதழ் : 37

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




# குண்டு வெடிப்புக்கு 'குட்பை' சொல்லுங்கள்!

**கோ**வை குண்டு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாக அறுபது பேர் கைதாகியிருக்கிறார்கள். புற்றிலிருந்து ஈசல் போல் வெடிகுண்டுகளும் அவற்றைத் தயாரிப்பதற்கான பொருட்களும் காவல் துறையினரால் கைப்பற்றப்பட்டு வருகின்றன.

இத்தனை குண்டுகளும் வெடித்திருந்தால் தமிழ்நாட்டின் கதி என்னவாகியிருக்கும் என்று கற்பனை செய்ய நெஞ்சு நடுங்குகிறது!

கோவை பயங்கரங்கள் நிகழும்வரை அயர்ந்திருந்தாலும் அதற்குப் பிறகு விழிப்புடன் பணியாற்றி, கோர நிகழ்வுகளைத் தவிர்த்திருக்கும் தமிழக காவல் துறையைப் பாராட்டலாம்.

இந்த காவல்துறை நடவடிக்கைகளிலும் அரசியல் சாயம் பூசப்படுவதுதான் சிறுபிள்ளைத்தனம். கைதான தீவிரவாதி தி.மு.க.காரர் அல்லது அ.தி.மு.க.காரர் என்பதால் எழுகிற விவாதங்கள், வாக்குவாதங்கள் பைசா பெறாதவை. ஆண் - பெண் வேறுபாடின்றி, கட்சிப் பாகுபாடின்றி தீவிரவாதம் பல தனிமனிதர்களைத் தனக்கு அடிமைப்படுத்திக் கொண்டிருப்பதையே சமீபத்திய கைதுகள் உணர்த்துகின்றன. கண்டுபிடிக்கப்பட்டுள்ளதைப் போலப் பல மடங்கு குற்றவாளிகளும் ஆயுதங்களும் இன்னமும் மறைந்திருக்கக் கூடும் என்பதையும் மறுப்பதற்கில்லை.





இந்த பயங்கரவாதம், பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. உளவுப் பிரிவால் தூண்டிவிடப்படும் விஷமம். அத்தகைய ஓர் அமைப்பின் வழிகாட்டலும் பண உதவியும் இன்றி ஒரு வலைப் பின்னல் இந்த அளவுக்குத் திட்டமிட்டுப் பரவலாகவும் குறி பிசகாமலும் செயல்பட்டிருக்க முடியாது. உணர்வு ரீதியாகத் தூண்டியும் பணத்தாசை காண்பித்தும் ஐ.எஸ்.ஐ. அமைப்பு இந்தியக் குடிமகனைத் தனக்குச் சேவகம் செய்ய வைத்துக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையில், மாநில காவல் துறையினரின் முயற்சிகள் தாற்காலிக நிவாரணத்தைத் தான் அளிக்க முடியும். தமிழகத்தில் தீவிரவாதம் இரும்புக் கரம் கொண்டு இன்று ஒடுக்கப்பட்டால், வேறு மாநிலத்தில் நாளை தலைதூக்கும்! மத்திய அரசு வேண்டிய ஒத்துழைப்பைத் தரும் என பிரதமர் வாக்களித்துள்ளார். இதை வரவேற்கலாம் என்றாலும் இந்த நிர்வாக ரீதியான ஒத்துழைப்பு போதாது.

தீவிரவாதத்தை வேரில் தாக்க வேண்டுமானால் பி.ஜே.பியின் கொள்கை ரீதியான ஒத்துழைப்பு அவசியம் வேண்டும். பி.ஜே.பி. ஆட்சியில் மதச்சார்பின்மைக்கு எந்த அபாயமும் இல்லை என்று பிரதமரும் அத்வானியும் பார்லிமெண்டில் அறிவித்திருக்கிறார்கள். கூடவே ஆர்.எஸ்.எஸ். உடனான தங்கள் உறவை உறுதிப்படுத்திச் சிலாகித்தும் இருக்கிறார்கள். அதே சமயம், "ஆர்.எஸ்.எஸ்.ஸின் 'ரிமோட் கன்ட்ரோலில்' நாங்கள் இல்லை" என்றும் குழப்பியிருக்கிறார்கள். இந்த வாக்கியம் 'என் அப்பன் குதிருக்குள் இல்லை' என்ற வசன வாக்கியத்துக்குச் சமம்!

தேசிய செயல் திட்டம் என்பதாக ஒன்றை தோழமை கட்சிகளின் திருப்திக்காக உருவாக்கியிருக்கிறது பி.ஜே.பி. ஆனால் தனது தேர்தல் அறிக்கையைக் கைவிட்டதாகக் கூற அக்கட்சி தயாராயில்லை. அயோத்தியில் ராமர் கோயில் அமைப்பது, ஹிந்து ராஜ்யம் ஸ்தாபிப்பது, 370வது பிரிவை நீக்குவது போன்ற பிடிவாதங்கள் குறித்து, தேசிய செயல்திட்டத்தில் எதுவும் குறிப்பிடாவிட்டாலும் அவையெல்லாம் இன்னமும் பி.ஜே.பியின் தேர்தல் அறிக்கையில் அக்கட்சியின் கொள்ளைகளாக இருந்தபடி அச்சுறுத்திக்




கொண்டிருக்கின்றன. பி.ஜே.பி. அரசின் இந்த நிலை, இந்திய முஸ்லிம்களிடையே பாதுகாப்பற்ற உணர்வை ஏற்படுத்தும். அந்த பலவீனமான நிலையில் ஐ.எஸ்.ஐ. இந்திய முஸ்லிம்களிடையே தனது செயல்களையும் வாதங்களையும் மிகச் சுலபமாக நியாயப் படுத்தி விடும். அவர்களைத் தமக்கு அடிமையாகவே கூட ஆக்கிக் கொள்ள முயலும். கோவை பயங்கரங்களின் மறுபதிப்புகள் வேறு மாநிலங்களிலும் தலையெடுக்கும்.

'இஸ்லாமியர்களின் பாதுகாப்புக்கு பி.ஜே.பி அரசு உத்தரவாதம் அளிக்கும்' என்ற அறிக்கை பிரதமரிடமிருந்து வெளிப்பட வேண்டும்; பி.ஜே.பி. தேர்தல் அறிக்கையில் உள்ள மதச்சார்பின்மைக்கு மாறான அம்சங்கள் கைவிடப்பட்டதாக பி.ஜே.பி. தலைவர்கள் பிரகடனம் செய்ய வேண்டும்.

இவற்றைச் செய்வதன் மூலம் முஸ்லிம்களின் பாதுகாப்புணர்வைக் கூட்டி, ஐ.எஸ்.ஐ யின் செயல்பாட்டையும் கடினமாக்கலாம். தொடர்ந்து அயலுறவுக் கொள்கைகளைச் சீராக்கி, பாகிஸ்தானுடன் அர்த்தமுள்ள, பயன்தரவல்ல பேச்சுவார்த்தைகள் நிகழ்த்தி, இந்தோ - பாக் உறவுகளைச் சுமுகமாக்கும் முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

பி.ஜே.பியை இந்திய மக்கள் ஆட்சியில் அமர்த்தியிருப்பது அவர்களுடைய ஹிந் துத்வப் பற்றுதலுக்காக அல்ல... அந்தக் கொள்கை மட்டும் விலை போயிருக்குமானால், பி.ஜே.பி. மிகச் சுலபமாக இதற்கு முந்தைய தேர்தலிலேயே ஆட்சியைப் பிடித்திருக்கலாம். இன்று பி.ஜே.பிக்குத் தரப்பட்டிருக்கும் வாய்ப்பு, ஸ்திரத்தன்மை வேண்டி, நிலையான ஆட்சி வேண்டித் தரப்பட்டிருக்கும் வாய்ப்பாகும். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி எல்லோ ரையும் மகிழ்விக்கும் நல்லாட்சி வழங்கினால் கட்சியை மட்டுமின்றி, நாட்டையே பி.ஜே.பி பலப் படுத்தலாம்.

பதவிக்கு வந்ததுமே அறிஞர் அண்ணா, தனித் தமிழ்நாடு (திராவிட நாடு) கோரிக்கை யைத் தாம் கைவிடுவதாக அறிவித்தார். பி.ஜே.பி. தலைவர்களுக்கு அதை இப்போது நினைவூட்டுகிறோம். ◉



• கூட்டத்தில் ஒரு பகுதி

# "நாடகம் இத்தனை பூடகமா இருக்கக் கூடாதுப்பா...!"

பெரும் பரபரப்பும் எதிர்பார்ப்புமாகத் தஞ்சையில் கூடிய த.மாகா.வின் தொண்டர்களுக்கு, இறுதியில் ஏற்பட்டது நிம்மதியா, ஏமாற்றமா என்று புரியாத ஒரு நிலைதான். மூப்பனாரின் ராஜினாமா அறிவிப்பைத் தொடர்ந்து, யார்யார் எந்தெந்தக் கட்சிகளுக்குத் தாவக்கூடும் என்று கணக்குப் போட்டுக் கொண்டிருந்தார்கள். செயற்குழு அவரது ராஜினாமாவை (எதிர் பார்த்ததுபோலவே) நிராகரித்ததும் தொண்டர்களின் பேச்சு, தேர்தல் தோல்விக்கான காரணம் பற்றித் திரும்பியது. இங்கே, நாம் தஞ்சையில் கண்ட காட்சிகள் சில:

● வியாழன் காலை பத்து மணிக்கெல்லாம் ஓரியண்டல் டவர்ஸ் ஓட்டலைச் சுற்றி எக்கச்சக்க ஒயிட் & ஒயிட்காரர்கள். சுற்றுவட்டாரத்திலிருந்து வந்திருந்த கிராமவாசிகளெல்லாம் காம்பவுண்டுக்குள் நுழையக் கூச்சப்பட்டுக் கொண்டு, ஓட்டல் வாசலில் கூடித் தவமிருந்தனர். ஏதாவதொரு கார் உள்ளே நுழைந்தால், பரபரப்படைந்து எட்டி எட்டிப் பார்த்தார்கள்.

● கூட்டம் பத்து மணிக்குத் தொடங்குவதாகத்தான் இருந்தது. மூப்பனார் வரத் தாமதமாகவே, தொண்டர்கள் பலர் கண்ணீர் மல்க, 'தலைவர் வரமாட்டாரோ' என கலங்கிப் போய் கையைப் பிசைந்து நின்றதைக் காண முடிந்தது! பதினோரு மணிக்கு அவர் வந்து இறங்கியதுதான் தாமதம். "ஐயா, எங்களைக் கைவிட்டுடாதீங்கையா" என்று ஓடிப்போய் சூழ்ந்து கதறி அழுத கூட்டத்தைக் கண்டு மூப்பனாரே சற்று ஆடித்தான் போனார்.

• விழா மேடையில்...





● தேர்தல் தோல்விக்கான காரணங்கள், செயற்குழுவில் ஆராயப்பட்டதோ இல்லையோ, வெளியே தொண்டர்கள் வெளுத்து வாங்கிக் கொண்டிருந்தார்கள். திருச்சியில் அடைக்கலராஜ் தோற்றதற்குக் காரணம், அவர் பெயரை முதல் வேட்பாளர் பட்டியலில் வெளியிடாததும் அதனால், கட்சி மேலிடம் அவர்மேல் அதிருப்தி கொண்டிருப்பதாக மக்கள் கருதி விட்டதும் தான் என்று பேசிக் கொண்டார்கள்.


● திருச்சி தொகுதியில் நாற்பதாயிரம் வோட்டுகள் செல்லாதவை என அறிவிக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டி ஒரு தொண்டர் : "ஜனங்க, தெரியாம ரெண்டு சின்னத்துல முத்திரை குத்தலை. ஒரு வெறுப்புல தான் அப்படி செஞ்சிருக்காங்க. நானே மூணு சின்னத்துல குத்தினேனில்லே?"

● கள்ள வோட்டுப் போடுவதில் பயிற்சியே தரவில்லை என்றும் சிலர் குறை பட்டுக் கொண்டார்கள். "எல்லாரும்தான் கள்ளவோட்டுப் போடறாங்க. நாமளும் போட்டா என்ன தப்பு? மேலிடம் சொல்லாட்டாலும் நானே ஒரு அம்பது பேரை திரட்டிட்டுப் போய் போட வெச்சேன். மாட்டிக்கிட்டாங்க. பெயில்ல எடுக்கக்கூட மேலிடம் முன் வரலை. கஷ்டப்பட்டு நானே சமாளிச்சேன். இப்படியெல்லாம் நேர்மை பார்த்தா, எப்படிங்க அரசியல் பண்ண முடியும்?" என்று கேட்டார், ஒரு வட்டம்!

● பிற்பகல் இரண்டு மணிவரை கட்சியின் பெரும்புள்ளிகள் யாரும் வெளியே வராததால் தினசரி பத்திரிகையாளர்கள் பாடு பெரும் திண்டாட்டமாகிவிட்டது. போகிற வருகிறவர்களிடமெல்லாம் "என்ன ஆயிற்று? என்ன பேசினார்கள்? ஏதாவது முடிவெடுத்தார்களா?" என்று பதறிக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

● மாலை ஐந்து மணிக்கு மூப்பனார் பத்திரிகையாளர்களைக் கூப்பிட்டார். "நான் ராஜினாமா கடிதம் ஏதும் தரவில்லையே!" என்று கவிழ்த்துப் போட்டதும் "சோனியா எங்கள் நண்பர்" என்று பழைய பல்லவியையே பாடியதும் "நாடகம் இவ்ளோ பூடகமா இருக்கக் கூடாதுப்பா" என்று கமெண்ட் அடித்தார் ஒரு பத்திரிகையாளர்.

● மாலை திலகர் திடலில் பொதுக் கூட்டம். மூப்பனார் மேடை ஏறியதும் படு ஆரவாரம்! ஆனால் மூப்பனாரின் கருத்து, பல தொண்டர்களுக்குப் புரியவில்லை. காங்கிரஸுடன் இணைவது இல்லை என்று ஒருபுறமும் நேரு குடும்பம் எனக்கு நீண்டகால நட்புக்குரியது என்று மறுபுறமும் சொன்னதைத் தனித்தனியே எடுத்துக் கொள்ள முடியாமல் மிகவும் சிரமப்பட்டார்கள்.


• மூப்பனார்

● என்னவோ நடக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட கூட்டம் இறுதியில் கட்சிக்காகத் தீக்குளித்த ராஜு குடும்பத்துக்கு நிதியளிக்கும் கூட்டமாக மட்டுமே சுருங்கிவிட்டது.

"இனிமே யாராவது தீக்குளிப்பு அது இதுன்னு செஞ்சீங்கன்னா ஒரு நயா பைசா தரமாட்டேன்" என்று காட்டமாக மூப்பனார் அறிவிக்க, கூட்டம் அல்லோல கல்லோலப்பட்டது.

"இவுரு என்னா அரசியல்வாதிய்யா! நம்ம கலாசாரமே தெரியலையே!" என்று முணுமுணுத்தபடியே எழுந்து போனார்கள், தொண்டர்கள். ○

— சிக்கல் சிவராமன்
படங்கள்: யோகா

# தந்தை மகனுக்காற்றும் உதவி

கௌஹாதி,
5.4.98

அன்புள்ள பெற்றோருக்கு,

உங்கள் மகனின் பணிவான வணக்கம். நலம் நலமறிய அவா. இங்கு குளிர்தான் அதிகம். அங்கே உங்கள் உடல் நலத்திற்கு அடிக்கடி கடிதம் எழுதவும். சென்னை மாநகரையும், நண்பர்களையும் விட்டுவிட்டு வந்ததில், பேச, படிக்க, பழக ஆள் துணை இல்லை என்ற வருத்தமும் இருந்தது. தமிழ்ப் பத்திரிகைகள் கிடைப்பதில்லை என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தபோது, 'அமுதசுரபி' மாத இதழும், 'கல்கி' வார இதழும் தபாலில் வந்தன. திடீரென்று தபாலில் வந்த அதிசயம் எனக்கு! தங்கள் ஏற்பாடு என்பதை அறிந்து மிக மகிழ்ந்தேன். 'ஸ்ரீராம் டிரஸ்ட்' சந்தா முதலீட்டுத் திட்டத்தில் ஐந்து வருடங்களில் பணம் இருமடங்காகும் திட்டத்தில் சேர்ந்து, அதற்கு 'ஸ்ரீராம் டிரஸ்ட்' 5 ஆண்டுகளுக்கு 'அமுதசுரபி'யும், 'கல்கி'யும் அன்பளிப்பாகத் தருவதைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை அறிந்தேன். 5 ஆண்டுகளில் இரட்டிப்பாகி ரூபாய் 20 ஆயிரமாகக் கிடைக்கும். இங்கு மாதாமாதம் 'அமுதசுரபி'யும், வாராவாரம் 'கல்கி'யும் எனக்கு நன்றாக பொழுதுபோக உதவுகிறது. பொன்விழா கண்ட நல்ல பத்திரிக்கைகள் ஆயிற்றே! என்னை நன்றாக முதல் வகுப்பில் வருமாறு படிக்க வைத்தீர்கள். இப்போது எனக்குப் படிக்க நல்ல இரு பத்திரிகைகளையும் இலவசமாக 5 வருடங்களுக்குக் கிடைக்க வழி செய்து விட்டீர்கள். அமரர் கல்கியின் பொன்னியின் செல்வனைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன் இப்போது தொடர்ந்து படிக்கக் 'கல்கி' கிடைக்கக்போகிறது என்பது மகிழ்ச்சியைத் தருகிறது. எப்படியும் எல்லைப்புறங்களில் நான் 5 வருடங்களுக்குப் பணியாற்றியே ஆக வேண்டும். உங்களுக்கு நன்றிக்கடனாக நான் செய்ய வேண்டிய திட்டத்தை அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன். எல்லோர் உடல் நலத்துக்கும் அவ்வப்போது எழுதவும்.

பி.கு: ஸ்ரீராமின் சிட்டுநிதி விவரங்களை
தெரியப்படுத்துங்களேன்.

அன்பு மகன்
**மனோகரன்**


ரூ.10,000/- (ரூ.பத்தாயிரம்) ஸ்ரீராம் டிரஸ்ட் பெயருக்கு செக்/டிராப்ட் அனுப்ப வேண்டிய முகவரி :

**ஸ்ரீராம் டிரஸ்ட்**, A-7, 2வது அவென்யூ, அண்ணாநகர் கிழக்கு, சென்னை - 600 102.

போன் : 6286869 / 6287679

- பெயர் : திரு / திருமதி / செல்வி : ..............................

முகவரி : ..............................

.............................. Pin ..........

- கூட்டாக இடப்பட்டால் அவர்கள் பெயர் : ..............................
- வாரிசுதாரர் (Nominee) : ..............................
- கல்கி மற்றும் அமுதசுரபி இதழ்கள் அனுப்ப வேண்டிய முகவரி : ..............................

..............................

இத்துடன் ரூ.10,000/- (பத்தாயிரம்) காசோலை / டிடி எண் : .................. / தேதி : ..........
வங்கியின் பெயர் .............................. இணைத்துள்ளேன். 5 ஆண்டுகளுக்குப்
பிறகு **ரூ.20,000** (இருபதாயிரம்) ஆகத் திரும்ப பெற்றுக் கொள்ளச் சம்மதிக்கிறேன்.

இடம் தேதி முதலீட்டாளர் கையொப்பம்

## இந்த வார
## இளைஞர்

புதிய பகுதி

# இன்று ஸ்டார்; நாளை சூப்பர் ஸ்டார்?




வினோத் ஸ்ரீதர்

சமீபத்தில் சென்னையில் நடந்த இந்தியன் ஆயில் - சர்வோ டென்னிஸ் போட்டி, இந்திய டென்னிஸ் வரலாற்றில் முக்கியமானது சென்னையைச் சேர்ந்த வினோத் ஸ்ரீதர், தனக்கு எதிராக ஆடிய மனோஜ் மகாதேவனை நாற்பத்து ஏழு நிமிடங்களில் வீழ்த்தி, வெற்றி பெற்றார். இந்தப் போட்டியில், இவரால் தோற்கடிக்கப்பட்டவர்கள், இந்தியாவின் இளம் முன்னணி டென்னிஸ் விளையாட்டு வீரர்கள் என்பதும், இதற்கு முன், வினோதைத் தோற்கடித்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்க அம்சம்.

வினோத் ஸ்ரீதர் பதினெட்டு வயது இளைஞர். சென்னை டி.எஸ். நாராயணசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதல் வருடம் பி.எஸ்ஸி., - கம்ப்யூட்டர் சயின்ஸ் படிக்கிறார். இஞ்சினியரிங் படிக்க வைக்க வேண்டும் என்று வினோதின் அப்பா ஸ்ரீதர் ஒரு கட்டத்தில் ஆசைப்பட்டாலும், இஞ்சினியரிங் படிப்பு, வினோதின் டென்னிஸ் பயிற்சியை பாதிக்குமோ எனக் கருதி, மகனை பி.எஸ்ஸியில் சேர்த்து விட்டார்.

பத்மா சேஷாத்ரி பள்ளியில் முதல் வகுப்பில் படித்தபோதிலிருந்தே டென்னிஸ் மட்டை பிடிக்க ஆரம்பித்து விட்டார் வினோத்.

''எனக்கு வெயிட் லிஃப்டிங்கில் ஆர்வம் உண்டு. ஆனால் என் பெற்றோர், என்னை அந்தத் துறையில் ஊக்குவிக்கவில்லை. நான் படித்து, வேலையில் சேர்ந்து, வாழ்க்கையில் செட்டில் ஆனது முதலே, என் மகன் விளையாட்டுப் பயிற்சி பெற்று, இந்தியாவின் முன்னணி விளையாட்டு வீரனாக வர வேண்டும் என்று நான் தீவிரமாய் நினைத்தேன்'' என்கிறார் இவரது அப்பா.

"எத்தனையோ விளையாட்டுகள் இருக்கும்போது டென்னிஸ் ஏன்?"

"டென்னிஸில், தனிநபர் திறமையை நன்கு வெளிப்படுத்தலாம். டென்னிஸ் இன்று உலகப் புகழ்பெற்ற விளையாட்டு. அதனால்தான்'' என்கிறார் ஸ்ரீதர்.

எட்டாம் வகுப்பு வரை சென்னையில் படிப்பு + டென்னிஸ் பயிற்சி. அதன்பின் அகில இந்திய அளவில் மிகத் திறமையான முறையில் டென்னிஸ் ஆடும் மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, தீவிர டென்னிஸ் பயிற்சியை ரெசிடென்ஷியல் முறையில் அளிக்கிற டெல்லியில் உள்ள இந்துஜா அகாடமியின் விளம்பரத்தைப் பார்த்துவிட்டு விண்ணப்பிக்க, வினோத் தேர்வு செய்யப்பட்டார். ஆனால், அங்கே படிப்புக்கு அளிக்கப்பட வேண்டிய அளவுக்கு முக்கியத்துவம் தரப்படவில்லை என்று கருதிய வினோதின் அப்பா, அவரை மறுபடி சென்னைக்கே அழைத்து வந்து விட்டார்!

இப்போது, ரமேஷ் கிருஷ்ணன் பயிற்சியளிக்கும், கிருஷ்ணன் டென்னிஸ் மையத்தில் பயிற்சி பெற்று வருகிறார் வினோத் ஸ்ரீதர்.

''வினோதின் திறமை அபாரமானது. எதிர்காலத்தில், இந்திய டென்னிஸில் முன்னணி வகிப்பார். உலக அளவில் இந்தியாவை இட்டுச் செல்லுவார். இதில் சந்தேகமில்லை'' என்று சான்றிதழ் வழங்குபவர் சாமானிய மனிதரில்லை. நேற்றைய இந்திய டென்னிஸ் ஸ்டாரான ராமனாதன் கிருஷ்ணன்.

— கௌதம் ராம்
படம் : யோகா

பெண்களுக்கு அனுமான உணர்வு அதிகம். என் மனைவிக்குத் தன் உணர்வுகளை வார்த்தைகளில் அழகாக வெளிப்படுத்தத் தெரியாது. தன் அன்பை செயலிலே காட்டுவாள். அதேபோலத்தான் என் மூத்த மகன் சித்தார்த்தனும். ஆனாலும் விஷயங்களைத் தீர்மானித்து முடிவெடுப்பதில் அவள் கூறுகின்ற முடிவுகள் சரியாக இருக்கும். இதைப் பின்னால் உணர்ந்திருக்கிறேன்.

அதேபோல மனிதர்களை எடை போடுவதிலும் அவள் மகா கெட்டிக்காரி. "நான் யாரையும் நம்பி எளிதில் ஏமாந்து போகிற ஆள்" என்பதில் அவளுக்குப் பூரண நம்பிக்கை! அது உண்மையுங்கூட! பலமுறை. நான் பலரிடம் ஏமாந்து போயிருக்கிறேன்; கஷ்டப்பட்டிருக்கிறேன். முதலில் ஏமாற்றியவரே திரும்ப வந்து என்னிடம் வளைந்து குழைந்து பேசினால் ஏமாந்து விடுவேன்!

"உங்களுக்கு நாலு வார்த்தை நல்ல விதமாகப் பேசிவிட்டால் போதும்! ஏமாந்து விடுவீர்கள்" என்று அடிக்கடி சொல்வாள். "நான் சொன்னால் கேட்க மாட்டீர்கள்!" என்று குறைபட்டுக் கொள்வாள். அவளை திருப்திப்படுத்த பலநாளாக யோசித்து ஒரு 'ஸ்டாக்' பதிலைக் கண்டுபிடித்தேன்.

"இதோ பார்! நீ சொல்கிற முடிவுகள் சரியாக இருக்கின்றன. ஆட்சேபமில்லை. உண்மைதான். ஆனால் அலுவலகத்தில் போர்டு மீட்டிங் நடத்து கொண்டிருக்கும் போது அங்கே நான் "இருங்க! இருங்க! என் மனைவியைக் கேட்டுவிட்டு வருகிறேன் என்று ஓடி வர முடியுமா? என்ன நினைப்பார்கள் என்னைப் பற்றி?" என்று சரியான பதிலைச் சொல்லி விட்ட திருப்தியில் பெருமிதமாகப் பார்த்தேன்.

முகத்தைத் திருப்பி ஒரு இடி இடித்துக் கொண்டு "இப்படி வக்கணையாப் பேசறதில் ஒண்ணும் குறைச்சல் இல்லை!" என்றாள்.

பிறகு சமாதானப்படுத்தினேன்.

"ஒவ்வொரு விஷயத்திற்கும் எப்படி நான் உன்னிடம் ஓடி வர முடியும். நான் தவறு செய்யலாம். தவறு செய்து செய்து நான் தான் திருத்திக் கொள்ள வேண்டும். நான் தவறு செய்தால்தான் நான் வளர முடியும். என்னை வளர விடு" என்றேன்.

புரிந்ததோ புரியவில்லையோ பேசாமல்




போய்விடுவாள், என் தாயும் சரி, என் மனைவியும் சரி. எங்கோ ஒரு மூலத்தைத் தொட்டு தங்கள் உள்ளுணர்வைக் கண்டார்கள். அதை உபயோகித்து வாழ்ந்தார்கள். படிப்பு, விஞ்ஞானம் என்ற தர்க்கவாத அறிவு - என் உள்ளுணர்வை மட்டுப்படுத்தி விட்டதோ என்ற சந்தேகம்.

பல ஊர்களைப் பார்க்க வேண்டும் என்பதில் என் மனைவிக்குப் பெரும் ஆசை. அவள் ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, ஜப்பான், மலேசியா, சிங்கப்பூர், கனடா என்று பல நாடுகளுக்குச் சென்றிருக்கிறாள்.

# என்னைச் செதுக்கிய எண்ணங்கள்

## 14

எங்கள் கல்லூரியில் என்னுடன் வேலை பார்த்த கன்னிமாதா ஒருவர் மேல்படிப்புக்காக பிரான்ஸ் போயிருந்தார். அவர் எங்களுக்கு மிகவும் வேண்டியவர். எனவே "பிரான்சுக்கு வாருங்கள்" என்று அழைப்பு விடுத்திருந்தார். பாரீஸ் மிகவும் அழகான நகரம். பளிங்கிலும், சலவைக் கல்லிலும் செய்யப்பட்ட சிற்பக் கலைக்கூடங்களை அங்கே பார்த்தோம். பிரான்சின் அடையாளச் சின்னமான 'ஐபிள் டவரி'ல் ஏறினோம். ஓவியர்கள் கூட்டமாக திறந்த வெளியில் நின்று கொண்டு தொழில் நடத்தும் ஓவியக்கூடம் பார்த்தோம்.

நாங்கள் மிக முக்கியமாக, பாரிசின் இரவு கேளிக்கை நடனங்களைப் பார்க்க வேண்டுமென்று எங்கள் சகோதரி கன்னிமாதா எங்களை ஒரு கேளிக்கை ஹாலுக்கு அழைத்துச் சென்று எங்களை முதல் வரிசையில் உட்கார வைத்து விட்டு, தான் வெளியே வந்து விட்டார். அரைகுறை ஆடையுடன் அழகான பெண்கள் ஆடும் நடனங்கள்! பாரீசுக்குப் போய் இதைப் பார்க்கவில்லை என்று சொன்னால் நீங்கள் பாரீசைப் பார்க்கவில்லை என்றுதான் அர்த்தம் என்பார்கள். இப்படிப்பட்ட நடனங்களை நானே இதுவரை பார்த்ததில்லை. அதைப் பார்த்தோம்; ரசித்தோம். பாரீஸ் நகரை ஒரு பின் மாலை வேளையில் சுற்றி வந்தபோது, 'ஜேஜே' என்று தெருவில் வித்தியாசமான உடையில் பெண்கள் வழி நெடுக நின்று கொண்டு பேசிக் கொண்டிருந்தார்கள். ஒரு பெண் என்னைப் பார்த்து சிரிக்கவும், எனக்கு விஷயம் தட்டுப் பட்டது. "ஓகோ! இது பாரீஸ்! இது இரவு நேரம். சுருட்டைத் தலை மயிருடன் அரைக் கால் சட்டையுடன் அங்கங்களைக் காட்டிக் கொண்டு அழகாக நெளியும் பெண்கள்! இதற்குத் தான் பாரீஸ் பெயர் போனது!" என்று என் மனைவியிடம் சொல்லி விளங்க வைத்தேன்.



அவர்களைப் பார்த்தாள் என் மனைவி மீண்டும் ஒருமுறை.

"இதோ பாருங்கள்! இன்று எனக்கு உடம்பு சரியில்லை..." என்றாள் அவள்.

"நீங்கள் வேண்டுமானால் அங்கே போய் வாருங்கள்!" என்றாள். நான் சிரித்தேன், அவள் என்னைக் கிண்டல் செய்கிறாள் என்று நினைத்து. மீண்டும் அவள் என்னைப் பார்த்து 'சீரியசாக' அதையே சொன்னபோது எனக்குத் தூக்கி வாரிப் போட்டது; "என்ன உளறுகிறாய்? என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது?" என்றேன்.

என் மனைவி யதார்த்த உலகை உணர்ந்தவள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் இப்படிப்பட்ட யதார்த்தமா? மேலும் இங்கு சுற்றுவதில் அர்த்தமில்லை என்று எண்ணி உடனடியாக ஒரு டாக்ஸியில் ஏறி ஓட்டலுக்கு வந்தோம்.

இப்படியும் பெண்கள் இருப்பார்கள் என்பதை நான் எண்ணிக்கூடப் பார்க்கவில்லை. அவள் சாதாரணப் பெண்ணல்ல என்பதை உணர்ந்தேன். அதன்பின் எங்கள் இளைஞர்களிடம் நான் கூறுவது:

"உங்கள் மனைவி ஏதோ ஒரு சுகம் கொடுக்க வந்த பெண் என்று நினைத்து

விடாதீர்கள். அது ஒரு ஆத்மா. உங்களுடன் வாழ வந்திருக்கிறது; உங்களுக்காக வாழ்கிறது. அவர்கள் நின்றால் அவர்கள் திரும்பி நிற்கும் போது அவர்கள் நின்ற இடத்தைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொள்ளுங்கள்" என்பேன்.

**வீ**ட்டில் கார் இருந்தது. டிரைவர் இல்லை எங்கள் வீட்டில். எனினும் கூப்பிட்டால் டிரைவர்கள் உடனே வந்து உதவும் தூரத்தில்தான் இருந்தார்கள். இருந்தாலும் என் மனைவி ஒருநாள்கூட "நான் காரை எடுத்துக்கொண்டு போகிறேன்'' என்று சொல்வதில்லை. ஒரு பையை எடுத்துக் கொண்டு 'விண்'ணென்று கிளம்பி விடுவாள், பஸ் ஸ்டாண்டிற்கு. தெருவில் சந்திப்பவர்கள் "என்ன இது? நீங்கள் அமெரிக்காவில் இருந்தவர்கள், வீட்டில் கார் இருக்கிறது. ஏன் இப்படி நடந்து போகிறீர்கள்?" என்று கேட்பார்கள். "நடந்தால் என்ன? உடம்புக்கு நல்லதுதானே!" என்பாள். வீட்டுக்கு பஸ் நிலையத்திலிருந்து திரும்பும் போது சாமான்கள் இருந்தால் சைக்கிள் ரிக்ஷாவில் வந்து இறங்குவாள்.

''ஏன் ஒரு ஆட்டோவை வைத்துக் கொண்டு வரக் கூடாதா?'' என்று கேட்டால் ரிக்ஷாக்காரன் பாவம், சும்மா உட்கார்ந்திருக்கிறான். அதே ஆட்டோ பணத்தை அவனிடம் கொடுத்தால் எவ்வளவு சந்தோஷப் படுகிறான்!'' என்பாள்.




**எ**ன் மனைவிக்குக் கடவுள் பக்தி அதிகம். என்னால் மறக்க முடியாத சம்பவம். நான் சீர்காழி பள்ளியில் ஆசிரியர் பணியில் இருந்தபோது எனக்குப் பெரியம்மை வார்த்து விட்டது. கல்யாணம் ஆன முதல் வருடம். நோயின் கொடுமை; வெப்பம் மிக அதிகம். என்னால் தாள முடியவில்லை. அப்போது யாரோ சொன்னார்கள் என்று ஊரின் எல்லையில் தள்ளி இருந்த மாரியம்மனுக்கு தினமும் குடம் குடமாக தண்ணீர் ஊற்றி ''வெம்மை தணிய வேண்டும்'' என்று பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள்.

"யத் பாவம் தத்பவதி" என்பது உபநிடதம். எதைப் பாவனை செய்கிறோமோ அப்படியே நடக்கிறது என்ற அந்த வாசகத்தை இன்று படிக்கும் போது அவள் வெம்மை தணியச் செய்த காரியங்களின் உண்மை புரிகிறது.

நான் விஞ்ஞான மாணவன். எனவே இந்த சாமியார்களை, யோகிகளை எல்லாம் அதிகம் அணுகுவதில்லை. ஆனால் ஒரு சமயம் எனது நண்பர்; பேராசிரியர் வெங்கடேசனுடைய வற்புறுத்தலுக்காக நான் யோகி ராம்சுரத்குமாரைப் பார்க்கச் சென்றேன். அவர் முன் உட்கார்ந்திருந்தேனே தவிர எனக்கு எந்தவிதமான ஈடுபாடும், பெரிய மரியாதையும் ஏற்படவில்லை.

ஆனால் மூன்று மாத காலத்திற்குள் என் அண்ணன் மகள் குடும்பத்தில் ஒரு பிரச்னை எழ, எனக்கு எங்கே போவதென்று தெரியவில்லை. திடீரென்று யோகி ராம் சுரத்குமார் ஒருவர் தான் உதவ முடியும் என்று அங்கே அழைத்துச் சென்றேன். அங்கே அதிசயம் நிகழ்ந்தது. அதிலிருந்து நானும் என் மனைவியும் அடிக்கடி சுவாமியைச் சென்று பார்த்து வருபவர்களானோம். அவர் பெரிய மகான். ''இந்தப் பிச்சைக்காரனுக்கு ஒன்றும் தெரியாது'' என்பார் அவர். ஆனாலும் அவர் செய்கிற சித்து வேலைகளெல்லாம் நம்மை அதிசயித்தில் ஆழ்த்துபவை. அவர் முன்னிலையில் எப்போதும் எங்களுக்கு பேரமைதி கிட்டும்.

**எ**ன் மனைவிக்கு உணவுக்குழலில் ஒரு கட்டி. புற்றுநோய் என்றார்கள் மருத்துவர்கள். அமெரிக்காவில் அறுவைச் சிகிச்சை நடந்தது. ஒரு வருடம் வரை வேறு இடங்

**போட்டி – 11 முடிவு**

**பகவத் கீதையில் வருகிற மரம் – சத்ய கீர்த்தி மரம்.**

சரியான விடை எழுதியவர்களும் குலுக்கலில் தேர்வாகி பட்டுப்புடைவை பெறுபவர்:

எஸ்.ஜி. முத்துக்குமாரவேல்,
8, மொட்டைத் தோட்டம்,
3வது சந்து,
பழைய வண்ணாரப்பேட்டை,
சென்னை – 600 021

களில் வராமல் இருக்க வேண்டும். வந்தால் ஆபத்துதான்'' என்றார்கள் மருத்துவர்கள்.

என் மனைவி பூரண குணம் பெற்று என்னுடன் இந்தியா திரும்பியபோது நேரே திருவண்ணாமலை சென்றோம். சுவாமியிடம் சொன்னாள். ''குணமாகி திரும்பி வந்தால் இங்கு ஆசிரமத்தில் ஒரு வாரம் வேலை செய்வதாக வேண்டிக் கொண்டேன். என் உடலில் முன்பு போல் சக்தி இல்லை. நான் சமையலறையில் காய்கறி நறுக்கி கொடுத்து உதவுகிறேன்'' என்றாள் அவள். அங்கே ஒரு வாரம் தங்கினோம்.




என் மனைவியின் குணங்களை – பிடிவாதம் உட்பட –நான் ரசிப்பதுண்டு; என் பிடிவாதத்தை விட்டுக் கொடுப்பதுண்டு. எங்கள் உறவினர் கூட்டத்தில் எல்லோரும் உட்கார்ந்திருக்கும்போது என் மனைவியை எதற்காகவாவது யாராவது பாராட்டும்போது நான் சொல்வதுண்டு:

''என் தந்தையிடம் நான் தெரிந்து கொண்ட மிகப் பெரிய பாடம் என்ன தெரியுமா? மனைவி சொல்வதைக் கேள் என்பதுதான். நான் இன்று வரையில் அதைத்தான் கடைப்பிடித்து வருகிறேன்!'' என்று ஜோக் அடிப்பேன். எல்லோரும் சிரிப்பார்கள். அப்படிப்பட்ட ஒரு சமயத்தில் ஒருநாள் அவளிடம் சொன்னேன். ''எனக்கு இன்னும் எத்தனை பிறவி இருக்கிறதோ தெரியாது. மீண்டும் பிறந்தால் இன்னும் ஏழேழு ஜென்மத்திற்கும் உன்னுடன்தான் வாழ விரும்புகிறேன்!'' என்று சிரித்துக் கொண்டே சொன்னேன்.

அவள் சொன்னாள். ''எனக்கு இனி ஒரு ஜன்மமும் வேண்டாம். எனக்கு இந்த வாழ்க்கையே பிடிக்கவில்லை. இது என்ன குடும்ப வாழ்க்கை, கல்யாணம் கார்த்திகை என்று. எனக்கு சுத்தமாகப் பிடிக்கவே இல்லை. எனக்கு இனி பிறவியே வேண்டாம்'' என்றாள் வேகத்துடன்.

''வேடிக்கையாகத்தான் இதைச் சொல்ல வேண்டும்'' என்று எண்ணி வேடிக்கையாகவும் ஆசையாகவும் நான் கேட்கப் போய் அவள் இப்படிச் சொன்னது என்னுள் பெருத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியது; துக்கம் ஏற்பட்டது. ஆனால் அவள் ஏதோ துறவி போலப் பேசினாள்.

பின்னால் ஒருநாள் எனது நண்பர் பிரபல ஜோதிடர் வித்வான் லட்சுமணன் அவர்களை என் வீட்டுக்கு அழைத்திருந்தேன். (ஜோதிடத்தில் எனக்கு எப்படி நம்பிக்கை ஏற்பட்டது என்கிற கதையைப் பின்னால் சொல்கிறேன்)


எனது பேரக் குழந்தைகளுக்கு ஜாதகம் குறித்துக் கொடுத்த அவர், ''எல்லாவற்றையுமே நான் சற்று பார்த்து விடுகிறேனே'' என்று சொன்னார். தற்செயலாக, முதலில், என் மனைவியின் ஜாதகத்தை எடுத்தார். எடுத்த உடன் அவர் சொன்ன முதல் வாசகம் ''அம்மாவுக்கு இனி பிறவி இல்லை!''

நான் ஒரு கணம் அசந்து போனேன். அதற்குப் பிறகு அவர் என்ன சொன்னார் என்பதே எனக்கு நினைவில்லை.

என் மனைவியின் ஆத்ம விருப்பம் எனக்கு மட்டுமே தெரியும். ஆனால் வித்வான் சொன்னபோது சிந்தனையில் ஆழ்ந்தேன்.

''ராமரும் சரி, புத்தரும் சரி, காரைக்கால் அம்மையாரும் சரி – எத்தனையோ உயர் ஆத்மாக்கள் மனித உருவில்தான் இவ்வுலகில் நம்மோடு வாழ்கிறார்கள். நாம்தான் உணர்ந்து கொள்வதில்லை. காரணம், அவர்கள் மனித உருவில் இருப்பதால்தான்!'' என்ற எண்ணம் ஓடியது.

(தொடரும்)



# நடக்குமென்பார், நடக்கும்!

**மேஷம் :** *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

இந்த வாரம் குறைங்களைப் பார்ப்பீங்கன்னாலும் அதையும் நிறைவாக்கிக்குவீங்க. ஏன்னா, குருவின் பலம் உங்களுக்கிருக்கு. கூடவே உங்களோட நிர்வாகத் திறனும் நிதானமான அணுகுமுறையும் உங்களுக்கு ரொம்பவே கைகுடுக்கும். ஒரு பக்கம் பண விஷயத்துல வளர்ச்சி இருக்கும்னாலும் மறுபக்கம் செலவும் எக்கச்சக்கமா வரும். கவனமா இருங்க. பெண்களுக்குப் பொருள் வாங்கற அதிர்ஷ்டம் இருக்கு! அட, மாப்பிள்ளையை வாங்கற அதிர்ஷ்டமும் சிலருக்கு இருக்குங்க. பொதுவா பார்த்தா நல்லவங்க நேசமும் சாதுக்கள் தரிசனமும் கிடைக்கிற வாரம் இது. இது வெயில்காலமா இருக்கறதால உஷ்ணத்தால உடம்புக்கு வரலாம்.

**ரிஷபம் :** *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

டூ-வீலரோ, காரோ வாங்கணும்னு ரொம்ப நாளா யோசிச்சுக்கிட்டிருக்கீங்களா... இந்த வாரம் கை கூடற சான்ஸ் இருக்குங்க. மதிப்பு, அந்தஸ்து, புகழ், வாழ்க்கை வசதி எல்லாமே கொஞ்சம் தூக்கலா வர்ற வாரம். வெளிநாட்டுத் தொடர்பு இருக்கா? அதனால ஆதாயம் கிடைக்கும். வீட்டு அம்மணியை இந்த வாரம் குஷியா வெச்சுக்கங்க. ஏன்னா அவங்களால ஆதாயம் கிடைக்கற சான்ஸ் ஏராளமா இருக்கு. ஸ்டூடண்ட்ஸுங்க பரீட்சைகளை நல்லா எழுதியிருப்பதால பாராட்டுப் பெறுவாங்க. பண விஷயம் திருப்தி. பசங்களால பெருமை கிடைக்கும். சிலருக்கு லாட்டரி மாதிரி திடீர் அதிர்ஷ்டம் அடிக்கும். அப்புறம் என்ன, ஜமாயுங்க!

**மிதுனம் :** *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

ஷேர், கொடுக்கல் - வாங்கல், வியாபாரம்னு எல்லாமே சக்சஸாகும் வாரம். வீட்டுல மங்களகரமான நிகழ்ச்சிகள் நடக்கலாம்னா குதூகலம் தானாவே வந்துடாதா! பணப்புழக்கம் தாராளமாவே இருக்கும். கூடவே திடீர் பணவரவுக்கும் சான்ஸ் இருக்கு. வெளிநாட்டுக்குப் போற வாய்ப்பு கூட இருக்கு. இல்லேன்னாலும் வெளிநாட்டுலேர்ந்து நல்ல சேதிங்க வரும். கேஸ் கீஸ்னு அலைஞ்சுக்கிட்டிருக்கறவங்க கவலைப்படாதீங்க. ஜெயம் உங்க பக்கம்தான். புதுசா வாகனம் வாங்கற யோகமும் இருக்கு. புதுமணத் தம்பதிகள் அப்பா-அம்மாவாகலாம். வயதான தம்பதிகள் தாத்தா-பாட்டியாகலாம். வாரக் கடைசில முக்கியஸ்தர் ஒருவர் மூலம் பேரும் புகழும் கிடைக்கலாம்!

**கடகம் :** *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

கிரக பலன்கள் இந்த வாரம் உங்களுக்குச் சாதகமா இல்லாததால சகல துறையினரும் ஜாக்கிரதையா இருக்கணும். பேச்சுல நிதானம் வேணும்; யாராச்சும் ஏதாச்சும் சொன்னாக் கூட உணர்ச்சிவசப்படாம அமைதி காக்கணும். எந்தக் காரியமானாலும் தடங்கலுக்கே சான்ஸ் இருக்குன்றதால ஒரு முறைக்குப் பலமுறை யோசிக்கணும். பண விஷயத்துல எச்சரிக்கையா இல்லேன்னா பேஜாராயிடும். இத்தனை ஏன்? ஜாக்கிரதையா இல்லேன்னா கணவன் - மனைவி உறவுல கூட சிக்கல் வந்துடும்னா பார்த்துக்கங்களேன்! இருந்தாலும் தெய்வ வழிபாட்டுல மனசைச் செலுத்தினா மன அமைதி கிடைக்கும். நல்லவங்களோட நட்பு உங்களுக்கு உதவியா இருக்கும்.

**சிம்மம் :** *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

சிறுசிறு தொல்லைங்க, அலைச்சல், காரிய தாமதம் இதெல்லாம் உங்களுக்கு இந்த வாரம் சகஜமா வரும். கூடப் பிறந்தவங்களால கூடப் பிரச்னைங்க வரலாம். கீழ விழுந்து கால்ல அடிபட்டுக்கிற மாதிரியான சின்னச் சின்ன விபத்துகளுக்கு சான்ஸ் இருக்கு. காஸ் ஸ்டவ் மற்றும் எரிபொருள்களைக் கையாளும் போது ஜாக்கிரதை தேவை. அரசுப் பணியாளர்களின் மாமூல் வாழ்க்கையில மட்டும் பிரச்னைங்க வராது. ஏன்னா அது மாமூல் வாழ்க்கையாச்சே! எது எப்படியானாலும் பொருளாதாரச் சிக்கல் வராது. வெளி நாட்டுத் தொடர்பால லாபம் கிடைக்கும். வாரக் கடைசியில குடும்பத்தில சந்தோஷம் நிலவும்.

**கன்னி :** *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

உங்க தோற்றத்துல ஒரு கெட்டப்! பேச்சுல ஒரு வசீகரம்... உங்களுக்கு இந்த வாரம் கண்டிப்பா உண்டு. நிறைவேறாத ஆசைங்க ஏதும் இருந்துன்னா - அதுவும் அம்மணிகளுக்கு இருந்துன்னா, இந்த வாரம் கண்டிப்பா நிறைவேறிடும். சில வேலைகளில் கடின உழைப்பும் அலைச்சலும் ஏற்படலாம். ஷேர் கீரெல்லாம் இந்த வாரம் வேணாம். பணப் புழக்கம் தாராளமா இருக்கற மாதிரி இருந்தாலும் வாரக் கடைசில தட்டுப்பாடு வரலாம், உஷாரா இருங்க. மாணவ - மாணவிங்க

# அக்னிசர்மா பக்கம்

## ஏப்ரல் 8 முதல் 14 வரை

எல்லாத்தையும் ஏற்கெனவே படிச்சுட்டோமேன்னு மெத்தனமா இருந்தா பரீட்சைல அம்பேலாயிடுவீங்க. படிச்சதா இருந்தாலும் திரும்பவும் படிங்க.

**துலாம் :** *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் வரை)*

கிரகங்களின் அருள் பார்வை உங்க மேல பரிபூரணமா இருக்கறதால எல்லாமே உங்க திட்டப்படியே நடக்குமுங்க. எதிரிங்க ஓடி ஒளிவாங்க. வழக்கு கிழக்கு எதுவானாலும் ஜெயிச்சிடுவீங்க. நிலுவையா இருக்கற கடன் கூட வந்திடும்கிறதால பண விஷயத்தில் கவலையில்லை. திடீர்னு லாட்டரில பரிசு வந்தாலும் ஆச்சரியப்படாதீங்க. சிலருக்குப் பதவி உயர்வு கூடக் கிடைக்கலாம். பட்டுப் புடைவை, நகைன்னு அய்யாமார்கள் கிட்ட அப்ளிகேஷன் போட்டிருக்கற அம்மணிகளுக்கு நிச்சயம் அது சாங்ஷனாயிடும். உற்சாக மூட்டும் வெளிநாட்டுச் செய்திக்கும் சான்ஸ் உண்டு.

**விருச்சிகம் :** *(விசாகம் 4- ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

வாழ்க்கைன்னா பிரச்னைங்க வரத்தானே செய்யும்! உங்ககிட்ட இருக்கற நிதானமான அணுகுமுறையால எதையும் சமாளிச்சிடுவீங்க. இருந்தாக் கூட நிர்வாகத் துறையில இருக்கறவங்களுக்கு ஐம்பது சதம்தான் சக்சஸ் கிடைக்கும். வியாபாரிங்க எச்சரிக்கையா இருக்கணும்; அகலக் கால் வெச்சு அவஸ்தைப்படாதீங்க. கூடப் பிறந்தவங்களால கூட, பிரச்னைங்க வரும்கிறபோது, கூடா நண்பர்களைக் கிட்டவே சேர்க்காதீங்க. எல்லோருமே பொதுவா அலைச்சலைத் தவிருங்க. உடல் நலத்துல அக்கறை காட்டுங்க.

**தனுசு :** *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

முக்கியமான கிரகங்கள் இந்த வாரம் உங்ககிட்டே பிகு பண்ணிக்கிட்டிருக்கறதால எல்லாமே மந்த கதியில்தான் நடக்கும். திட்டங்கள் தள்ளிப் போகும். சிலருக்கு சிறு விபத்து இல்லேன்னா சின்ன அளவுல ஒரு சர்ஜரி நடக்கற சான்ஸ் இருக்கு. பண விஷயம் தாராளமா இருக்காதுன்றதால புதிய திட்டங்களைத் தள்ளிப் போடுங்க. சிலருக்கு மாத்திரம் பயணத்தால நன்மையும் லாபமும் கிடைக்கற சான்ஸ் இருக்கு. எது நடந்தாலும் உணர்ச்சி வசப்பட்டுடாம சமாளிச்சுக்கிட்டு வாங்க. வாரக் கடைசில விடிவு கிடைச்சிடும்!

**மகரம் :** *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

நீங்க நினைச்சதெல்லாம் நடக்கற மாதிரியான பாதைங்கள்லதான் கிரக சஞ்சாரம் இருக்கு. எதிரிங்க ஜகா வாங் கிடுவாங்க. பண விஷயம், கொடுக்கல் - வாங்கல் எல்லாம் திருப்தியா நடக்கும். புதிய ஒப்பந்தங்கள், புகழ் எல்லாம் தேடி வரும்! அரசியல்வாதிங்களுக்கு இந்த வாரம் ஓஹோன்னு இருக்கும். அதனால மத்தத் துறைங்களில் இருக்கறவங்களுக்கு ஒண்ணுமில்லேன்னு அர்த்தமில்லை. சிலருக்கு வீடு மாற்றம் ஏற்படும். சிலர் வீட்டைப் புதுப்பிக்க ஆரம்பிப்பாங்க. கூடப் பிறந்தவங்க, பிரண்ட்ஸுங்க எல்லாமே உங்களுக்கு அனுசரணை யாத்தாங்க இருப்பாங்க.



மிதுன ராசிக்காரரான மோங்கியாவுக்கு இந்த வாரம் தாராளமான பணப்புழக்கம் இருக்குமாம்!


**கும்பம் :** *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

புதன், சுக்ரன் தவிர மத்தவங்க உங்களுக்குச் சாதகமா இல்லீங்க. அதனால எதிலும் எச்சரிக்கையா இருங்க. காரியங்கள்ல தடங்கல்கள் வரும். பேச்சுல நிதானம் முக்கியம். இல்லேன்னா, வீண் பழி, விரோதம்னு வந்து சேரும். புதுசா யாரோடவாச்சும் பழக நேர்ந்தா உஷாரா பழகுங்க. குடும்பத்துல கூட சிறுசிறு பிரச்னைங்க வரும். பக்குவமா நடந்துக்குங்க. வழக்குல மட்டுமில்லே, மத்தவங்களுக்கு ஜாமீன் கிமீன்னுகூட இந்த வாரம் போய் மாட்டிக்காதீங்க. கேஷ் பில் பண்ற வேலைல இருக்கறவங்க ரொம்ப ரொம்ப உஷாராயிருங்க. பொதுவா எல்லோருமே உடல் நலத்துல அக்கறை காட்டுங்க.

**மீனம் :** *(பூரட்டாதி 4 -ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

உங்களுக்கும் கூட கிரகங்கள் சாதகமா இல்லீங்க. அலைச்சல், இடமாற்றம், அசதின்னு கிளுவுல வந்து உங்களைப் பயமுறுத்தும். இருந்தாலும் கவனமா இருந்தா சமாளிச்சிடலாம். சிலருக்குப் புதிய பொருள்கள் வாங்கற சான்ஸ் இருக்கும். கலைத் துறையில உள்ளவங்களுக் குப் புகழ் கூடும். பெண்கள் நினைச்ச காரியம் நடக்கும்! அரசுப் பணியாளர்கள் சிரத்தையா வேலை பார்க்கறது அவசியம். இல்லேன்னா அதிருப்திக்கு ஆளாயிடுவீங்க. மின்சாரம், காஸ் அடுப்புகளோடு மட்டுமில்லே, கத்தி கித்தி மாதிரியான ஆயுதங்களைப் பயன்படுத்தற போது கூட எச்சரிக்கையா இருங்க. ●





மருத்துவமனை



பங்காரு அடிகளாரின் ஆன்மிக சேவையைக் காட்டிலும் மருவத்தூரில் நமக்குக் காணக் கிடைத்த சமுதாய நலத் திட்டங்கள் அதிக வியப்பையும் மகிழ்ச்சியையும் தருவதாக இருந்தன. பக்தர்கள் மூலம் சேருகிற பணத்தைப் பெரும்பாலும் கல்விப் பணிக்காகச் செலவிடுவதைக் காண முடிந்தது.

ஆதி பராசக்தி மேல்நிலைப் பள்ளி. இது, கோவிலை அடுத்து உள்ளது. முகப்பின் பசுமை, சுண்டி இழுக்கிறது. பூந்தோட்டங்களும் தென்னை மரங்களும் இதம் தருகின்றன.

பல அரசு, தனியார் பள்ளிகளில் மேசை நாற்காலிகள் ஒழுங்காக இல்லாத நிலைமையை நிறைய 'லெட்டர்ஸ் டு தி எடிட்டர்' பகுதிகளில் படித்திருப்பீர்கள். ஆனால் இங்கே ஒரு மாறுதல்.

ஆசிரியர்களுக்கு மட்டுமல்ல, மாணவர்களுக்கும் தனித்தனி மேசை, நாற்காலிகள்!

கம்ப்யூட்டர் வகுப்பில், ஒரு கம்ப்யூட்டரை நடுவில் வைத்து, ஜூவில் புலி, சிங்கம் காட்டப்படுவது போலத் தொடாமல் சுற்றிக் காட்டாமல், பையன்கள் தாமே இயக்கிப் பார்க்க அனுமதிக்கப்படுகிறார்கள்!

ஒன்றல்ல, இரண்டல்ல; நிறைய டெர்மினல்கள் வாங்கிப் போட்டிருக்கிறார்கள்.

இருநூறு பேர் அமர்ந்து படிக்க, விஸ்தாரமான, முக்கோண வடிவ நூலகம் ஒன்று இருக்கிறது. என்ஸைக்ளோபீடியா வால்யூம்கள் முதல், பையன்களுக்குத் தேவையான சகலவித நூல்களும் அங்கே உண்டு.

"மருவத்தூர் போன்ற கடைந்தெடுத்த கிராமத்தில் இப்படியொரு பள்ளி, வரப்பிரசாதம்" என்கின்றனர், அங்குள்ள மக்கள்.

கட்டணம் செலுத்திப் படிக்க முடியாத ஏழை



இலவச வைத்தியம்

மாணவர்களுக்கு என, பள்ளி நிர்வாகமே ஒரு தொகை ஒதுக்கி, அவர்கள் படிப்புக்கு வழிசெய்வது புதிய சிஸ்டம்!

பொறியியல் கல்லூரி, பாலிடெக்னிக், கலைக் கல்லூரி, பிஸியோதெரபி கல்லூரி, ஊனமுற்ற மாணவர்களுக்கும் மனவளர்ச்சி குன்றியவர்களுக்குமான தனிப் பயிலகம் என்று கல்விப் பணி ஏராளம்.

குணப்படுத்தி விடுமளவுக்கு நம்பிக்கையூட்டும்விதமான கலையழகோடு கட்டப்பட்டிருக்கிறது இந்த மருத்துவமனை!


இலவச மருந்து, மாத்திரைகள், சிரத்தையான கவனிப்பு இதன் ஸ்பெஷாலிடி.

எந்தவித நோயானாலும் உடனடியாக மருந்து கிடைக்க ஏற்பாடு செய்வதற்கென்று தனியே ஒரு கமிட்டி அமைத்திருக்கிறார்கள். சென்னை மருத்துவர்கள் சிலர், ஞாயிறுகளில் இங்கு வந்து இலவசமாகப் பணியாற்றிவிட்டுப் போகிறார்கள்.

2000 பேர் தங்கி சிகிச்சை பெறும் அளவுக்குப் பெரிதாக உருவாகி வரும் இம் மருத்துவமனையில், இப்போது 225 பேர் தங்கலாம்.

ஆதிபராசக்தி பக்தர்களின் இலவச மருத்துவ முகாம்கள், கண்சிகிச்சை முகாம்கள் எல்லாம்

• கம்ப்யூட்டர்கள் - பயில!






# மருவத்தூரில் மற்றொரு புரட்சி!

ஆதிபராசக்தி அறக்கட்டளையின் இன்னொரு சாதனை, இங்குள்ள மருத்துவமனை.

வெறும் கட்டடமாக அல்லாமல், நோயாளிகள் நுழையும்போதே பாதி

**மருவத்தூர் போன்ற கடைந்தெடுத்த கிராமத்தில் இப்படியொரு பள்ளி, வரப்பிரசாதம் என்கின்றனர், அங்குள்ள மக்கள்.**

ஏற்கெனவே வெகு பிரபலம். சமீபத்தில், ஒரே நாளில் 504 பேருக்குக் கண் அறுவைச் சிகிச்சை நடத்தி ரெக்கார்டு பண்ணியிருக்கிறார்கள்.



• பங்காரு அடிகளார்

இவையெல்லாம் தவிர, மறுபுறம் பசுமைப் புரட்சி! பெரிய தோட்டப் பண்ணை. மா, பலா, தென்னை வகைகள். லாபமெல்லாம் முன் சொன்ன பணிகளுக்குத்தான்!

மருவத்தூருக்கு லட்சக்கணக்கில் மக்கள் படையெடுக்கிறார்கள் என்றால், கோவில் மட்டும் காரணமில்லை!

— ஜம்பு

படங்கள் : ஸ்ரீஹரி

# வட்டமேஜை

✉ 'இடம் எதுவானாலும் வெற்றி தான் லட்சியம்; அதை அடை கிறோமா என்பதுதான் முக்கியம்' என்ற அஸாருதீனின் கொள்கை, அவரின் திறமையையும், இந்திய நாட்டின் மீது அவர் வைத்திருக்கும் பாசத்தையும் நன்கு வெளிக் காட்டியது. அவருடைய கிரிக் கெட் ஆட்டத்தைப் போலவே பரபரப்பாகவும், விறுவிறுப் பாகவும் இருந்தது பேட்டி. வெற்றிமேல் வெற்றி பெற வாழ்த்துக்கள்.
காயக்காடு, ப. ராமகிருஷ்ணன்

✉ சோனியா காந்தி காங்கிரஸ் தலைவர் ஆகியிருப்பதைச் சரியான கண்ணோட்டத்தில், நடுநிலையோடு, இன்றைய உண்மை நிலவரத்தையும், காங்கிரஸின் யோக்யதையையும் விமர்சித்து எழுதிய தலையங்கம் அருமை.
திருக்கருகாவூர்,
டி. மஹாலக்ஷ்மி

✉ மதவாதக் கட்சியில் இப்படியொரு மிதவாதியா? வாஜ்பேயின் மறுபக்கத்தைப் படம் பிடித்துக் காட்டிய 'பலமும், பலவீனமும்' கவர் ஸ்டோரி எங்கள் நெஞ்சில் நிலையாய்ப் பதிந்து விட்டது!
விஜயவாடா-8,
தெனாலி ராஜன்

✉ கல்கி சொன்னா கலைஞர் செய்வார். ஆண்டவனே சொன்னாலும் 'அம்மா' கேட்கமாட்டார்!
இலவங்கார்குடி, ஆரூர் அரசு

✉ போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் அபர்ணா மொஹிலேயின் பேட்டி வெகு சிறப்பு. 'கடிதங்களுக்கும் உயிர் உண்டு' என்பது வெறும் வரிகளல்ல; கவிதை வரிகள்.
மயிலாடுதுறை, டீ. எஸ். டீ. ராயன்

✉ சோடாபுட்டி கண்ணாடி மாட்டிக் கொண்டு, பரிதாபமாய் முழித்துக் கொண்டிருப்பவர்களுக்கு லேசர் சிகிச்சை ஒரு வரப்பிரசாதம். 'கண்'ணான தகவல் தொகுப்பை வழங்கிய கல்கிக்குப் பாராட்டுகள்.
கே. கே. நகர், எஸ். பால்ராஜ்

✉ ஷங்கரின் 'ஜீன்ஸ்' அனுபவம் பேட்டி சுவாரஸ்யமாக இருந்தது.
மதுரை, எஸ். ஸ்ரீதர்

✉ இளவயதின் கனவுகளும், காலங் கடந்து விட்ட பிறகு நிகழ்வனவற்றை ஏற்றுக் கொள்ளும் கட்டாயமும் நன்கு சொல்லப்பட்டிருந்தன 'கமலஹாசனும் காளிமுத்துவும்' என்கிற கதையில்.
சென்னை-83, சி. மகேஷ்

✉ 29.3.98 கல்கி கலெக்ஷனில் 'பேசும் படம் மூன்று வகை' என்ற கட்டுரையைப் பிரசுரித்தது, இன்றைய படவுலகுக்குப் பாடம் புகட்டியதைப் போல இருந்தது.
சென்னை - 14, அய்யாறு வாசுதேவன்

✉ "இன்று வாழலாம் வா'' பத்மா ரவிசங்கர் கதைக்கு 'ஜெ' வரைந்திருந்த உயிருள்ள படங்களைப் பார்க்க இரண்டு கண்கள் போதவில்லை.
தஞ்சாவூர், ம. முருகேசன்

✉ இளமை, ஆக்ஷன், த்ரில் போன்ற 'முக்கனிச்சுவை' நிறைந்த படம் பார்த்த பரம திருப்தியை 'பத்மா ரவிசங்கர்' ஏற்படுத்தி விட்டார். வெல்டன்!
மோகனூர், வி. எஸ். மனிகை

✉ 12 வாரங்கள் திகில் படம் பார்ப்பது போல இருந்தது. வாராவாரம் சஸ்பென்ஸ் வைத்து வெளியான தொடர் கதை முடிந்து விட்டதே என்று இருக்கிறது.
மைலாப்பூர், சினு. சந்திரா

# அமரர் கல்கி நூற்றாண்டு விழா சிறப்புச் சிறுகதைப் போட்டி - 1998

இனிய வாசக எழுத்தாளர்களே, கல்கி நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களின் இரண்டாவது அறிவிப்பு இது. (முதல் – பொன்னியின் செல்வன்!) பிரமாதமான சிறுகதைகள் மூலம் அசத்த அழைக்கிறோம்.

இவ்வாண்டு, ஸ்பெஷல் அல்லவா? பரிசுத் தொகை கூடியிருக்கிறது.

முதல் பரிசு – ரூ. 10,000

இரண்டாம் பரிசு – ரூ. 7,500

மூன்றாம் பரிசு – ரூ. 5,000

தவிர, பிரசுரத்துக்குத் தேர்வாகும் ஒவ்வொரு கதையும் ரூ. 1000 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர் எனில், வழக்கம் போல் போனஸ் உண்டு!

***விதிமுறைகள் :***

- சரித்திரம், சமூகம், மர்மம், நகைச்சுவை என எப்படிப்பட்ட கதையாகவும் இருக்கலாம். தழுவல், உருவல் கூடாது; அவ்வளவுதான்!
- கல்கியில் 4 பக்கங்களுக்கு மிகாமல் இருப்பது நல்லது.
- சொந்தக் கற்பனைதான் என்பதற்கு உறுதி மொழிக் கடிதம் வேண்டும். அது இல்லாத கதைகள் பரிசீலிக்கப்படமாட்டாது.
- அறிமுக எழுத்தாளர் எனில், இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லையென்றும் போட்டி முடிவு வெளியாகும் வரை எழுதுவதில்லை என்றும் உறுதி மொழி தர வேண்டும்.
- முழு வெள்ளைத் தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும்.
- தேர்வாகாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால்தலைகள் ஒட்டிய அஞ்சல் உறை இணைக்க வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- ஒருவரே எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- பரிசுக்குரிய கதைகளை நடுவர்குழு பரிசீலித்துத் தேர்ந்தெடுக்கும். சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே இறுதி.
- முடிவு வெளியாகும் வரை, எவ்வித கடிதப் போக்குவரத்தோ, தொலைபேசி விசாரிப்புகளோ கூடாது.
- 'அமரர் கல்கி நூற்றாண்டு விழா சிறப்புச் சிறுகதைப் போட்டி' என்று உறையின் மேல் தவறாமல் குறிப்பிட்டு, அனுப்ப வேண்டிய முகவரி :

**ஆசிரியர், கல்கி, 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 97.**

- கதைகள் வந்து சேரக் கடைசித் தேதி **ஜூன் 15.**
- போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் ஆகஸ்ட் 2 ஆண்டு மலரில் வெளியாகும்.

எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு சிறப்பிக்க அழைக்கிறோம்!

— **ஆசிரியர்**

# சோதனையில் கைகொடுக்கும் 'சோதனை'!


சென்ற வாரம் பார்த்த அல்ட்ரா சவுண்ட் சமாசாரத்தில் கொஞ்சம் மிச்சம் இருக்கிறது. இந்த அல்ட்ரா சோனாகிராப், கருவுற்ற பெண்களுக்குப் பலவிதங்களில் உதவுகிறது. "கடைசியாக எப்போது மாத விலக்கு ஆனோம்?" என்பதில் சந்தேகம் உள்ள கர்ப்பிணிகளுக்கு, வயிற்றில் உள்ள சிசுவின் வயதைக் கண்டுபிடிக்க உதவுவதன் மூலம், அந்த சந்தேகத்தைத் தீர்த்து வைக்கிறது! அது மட்டுமா? கர்ப்பப்பையில் வளருவது இரட்டைக் குழந்தைகளா (அல்லது அதற்கும் மேலுமா?!) என்பதை அறியவும் வகை செய்து பல முன்னெச்சரிக்கை நடிவடிக்கைகளை எடுக்க உதவுகிறது.

இதற்காக நம் உடலுக்குள் செலுத்தப்படும் ஒலியை நம்மால் உணரவோ, கேட்கவோ முடியாது. உடலில் உள்ள பல்வேறு திசுக்களில் பட்டு மீண்டு வரும் இந்த ஒலி அலைகள், எலக்ட்ரானிக் சிக்னல்களாக மாற்றப்பட்டு, திரையில் உருவங்களாகப் பதியும். அதாவது கர்ப்பிணிகளின் வயிற்றில் வளரும் கருவைத் திரையில் காண முடியும்!

கருவின் இதயம், மூளை, முதுகெலும்புப் பகுதியில் ஏதாவது குறைபாடு இருந்தாலும் அதைக் கண்டுபிடித்துவிட முடியும். சில சமயம், பிறக்கப் போகும் குழந்தை ஆணா பெண்ணா என்பதைக் கூட இந்தச் சோதனையைக் கொண்டு அறியலாம். (இந்தத் தீர்ப்பு எப்போதுமே சரியாக இருக்கும் என்று சொல்லிவிட முடியாது!)

முப்பத்தி ஐந்து வயதிற்கு மேல் கருத்தரித்தால், ஆரோக்கியமான பெண்மணிகளுக்கு நார்மலான குழந்தை பிறப்பதில் தடை ஏதும் இருப்பதாகப் பொதுவாகச் சொல்லிவிட முடியாது. ஆனால் 365 பேருக்கு ஒருவர் என்கிற விகிதத்தில், இந்த வயதில் கருவுறும் பெண்களுக்கு, டவுன் சிண்ட்ரோம் என்ற குறைபாடுள்ள குழந்தை பிறக்க வாய்ப்பு இருக்கிறது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். (நம் ஒவ்வொரு உயிரணுவிலும் 23 குரோமோசோம்கள் உண்டு. இதில் ஒன்று அதிகமாகித் தொலைத்தால் அதனால் உடல் வளர்ச்சியும் மன வளர்ச்சியும் மிகவும் வித்தியாசமானதாக இருக்கும்.) தவிர, தாயின் வயது நாற்பதைத் தாண்டி விட்டால், அவளுக்கு இப்படிப்பட்ட ஒரு குறைபாடுள்ள குழந்தை பிறக்கும் வாய்ப்பு 110க்கு ஒன்று என்கிற அளவுக்கு அதிகமாகிவிடுகிறது. இதையெல்

'மருந்தாகும் நகைச்சுவை' நூலிலிருந்து: — என். ஜெயராமச்சந்திரன்



லாம் கர்ப்பகாலத்தின் தொடக்கத்தி லேயே கண்டுபிடிக்க அல்ட்ரா சவுண்ட் சோதனை கை கொடுக்கிறது!

இந்தச் சோதனையைவிட, 'ஆம்னியோ சென்டஸிஸ்' என்ற மற்றொரு சோதனை டவுன்சிண்ட்ரோம் மற்றும் வேறு சில பிறவிக் குறைபாடுகளைக் கண்டுபிடிப்பதற்கு மேலும் துல்லியமாக உதவுகிறது.

ஆம்னியோ சென்டஸிஸ் சோதனை கர்ப்பமுற்ற பதினாறாவதிலிருந்து இருபதாவது வாரத்திற்குள் செய்யப்படுகிறது. 37 வயதுக்கு மேல் கர்ப்பமடையும் எல்லா பெண்களுமே இதைச் செய்து கொள்வது அவசியம். இந்தச் சோதனையில் ஒரு நீண்ட ஊசியை பெண்மணியின் வயிற்றுப் பகுதிக்குள், பிறப்புறுப்பு வழியாகச் செலுத்துவார்கள். இந்த ஊசி அங்குள்ள ஆம்னியாடிக் திரவத்தில் கொஞ்சம் சாம்பிளை எடுத்து வரும். கருவின் உயிரணுக்கள் இந்த திரவத்தில் கலந்திருப்பதால், டாக்டரால் கருவைப் பற்றிய பல விவரங்களை இந்தச் சோதனையின் மூலம் அறிந்து கொள்ள முடியும். ஆனால் இந்த சோதனையின் முடிவை அறிந்து கொள்ள சுமார் நான்கு வாரங்கள் காத்திருக்க வேண்டியிருக்கும்!



• அல்ட்ரா சவுண்ட் மூலம் தெரியும் கருவின் உருவம்...

சந்தேகம் பலமாக எழுந்து, உடனடியாக ரிசல்ட் தெரிந்தால் பரவாயில்லை எனும் நிலை எழும்போது 'கோரியோனிக் வில்லி சாம்ப்ளிங்' என்ற சோதனையை டாக்டர் சிபாரிசு செய்யக்கூடும். கருவைச் சுற்றி உள்ள மெல்லிய ஜவ்வுப் படலத்தில் இருந்து நீட்டிக் கொண்டிருக்கும் மெல்லிய ரோமம் போன்ற பாகங்கள்தான் 'கோரியோனிக் வில்லி!' இந்த 'வில்லி'யில் உள்ள செல்கள் கருவில் உள்ள உயிரணுக்களை கிட்டத்தட்ட அப்படியே ஒத்திருக்கும். இந்த வில்லியில் கொஞ்சம் வெளியே எடுத்து சோதனைக்கு உட்படுத்தினால் கருவில் உள்ள குறைபாடுகள் பளிச்சென்று தெரிந்துவிடும்.

கடைசியாக நாம் குறிப்பிட்ட இரண்டு சோதனைகளிலும் (மிகக் குறைவான அளவில்தான் என்றாலும்) கருச்சிதைவு ஏற்படும் வாய்ப்பும் உண்டு. இந்த வாய்ப்பு இல்லாமல் செய்ய ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

— ஜி.எஸ்.எஸ்.

அணுகுண்டு தயாரிப்பதில் பெரும் பங்கேற்றிருந்த டாக்டர் ஓப்பன் ஹீமரிடம், ''இவ்வளவு பயங்கரமான ஆயுதத்தைக் கண்டுபிடித்திருக்கிறீர்களே... இதை எதிர்த்து நிற்கக்கூடிய பாதுகாப்பான ஆயுதம் ஏதாவது இருக்கிறதா?''

''ஏன் இல்லாமல்'' என்றார் ஓப்பன் ஹீமர் சிரித்துக் கொண்டே...

''என்ன ஆயுதம் அது?''

''சமாதானம்தான்!''

– சக்தி. சரவணன்



# நான் உன்னை

## பட்டுக்கோட்டை பிரபாகர் 14

**இதுவரை :** வேலையில்லாமல், சொந்தமாக பிரெஸ் தொடங்கி நடத்த விரும்பும் அரவிந்த். அவனுக்கு ஆதரவு தராத குடும்பச் சூழல். எதிர்பாராத காதல் புயலாக பிருந்தா. தன் முயற்சியில் சற்றும் தளராமல் நண்பன் சந்துருவின் உதவியுடன் ஒரு சினிமா பைனான்ஷியரிடம் அதிக வட்டிக்குக் கடன் வாங்கி, பிரெஸ் தொடங்க ஏற்பாடுகள் செய்துவிட்டு, வீடு வருகிறான். அப்பா வெடிக்கிறார்....

**காதல் டைரிக் குறிப்பு :**

**எனக்கே எனக்கென்று ஓர் உயிர் உருகுவதை உணரும்போது, வாழ்வின் அவலங்கள் கூடப் பசுமையாக, இனிமையாகத் தெரிகிறது.**

தன்னை ஒரு குற்றவாளி போல நிற்க வைத்து அப்பாவும் அக்காவும் கேள்வி கேட்டதில் அரவிந்திற்கு அடி வயிற்றிலிருந்து ஜிவ்வென்று ஆத்திரம் பொங்கியது. பல்லைக் கடித்துக் கொண்டு அடக்க முயன்று கொண்டிருந்தான்.

“கேக்கறா இல்லே, பதில் சொல்லுடா!” என்றார் அப்பா.

“என்ன சொல்லணும்?” என்றான் மகா எரிச்சலுடன்.

“அதென்ன உலக மகா குற்றமா?”

“அதுவும் சினிமாவுக்கு ஃபைனான்ஸ் பண்ற சேட்டுக்கிட்ட வாங்கியிருக்கான். கண்டிப்பா அநியாய வட்டியாத்தான் இருக்கும். என்ன வட்டின்னு கேளுங்கப்பா” என்றாள் யாமினி.

சட்டென்று யாமினி பக்கம் திரும்பினான்.

“என்ன வட்டியா இருந்தா உனக்கென்ன? உன்னோட ஆபீஸ் மேட்டர்ல தலையிட எனக்கு உரிமை இல்லைன்னு சொன்னியா இல்லையா? இது என்னோட பிசினெஸ் மேட்டர். இதில நீ ஏன் தலையிடறே? எல்லா விபரத்தையும் உன்கிட்ட சொல்லி அப்ருவல் வாங்கணுமா நான்?”

“நான் உன் அக்காடா!”

“அதுக்காக?”

“பார்த்திங்களாப்பா இவன் பேசறதை! வீம்புக்காக எதையாச்சும் சொல்லப் போயி நாளைக்கு தெருவுல நின்னுடக் கூடாதேன்னு நான் அக்கறையோட கேட்டா, எப்படி அலட்சியமா பேசறான் பாருங்க!”

“யாமினி, திஸ் ஈஸ் தி லிமிட்! அப்படியே நீ சாபம் கொடுக்கற மாதிரி நான் தெருவுக்கு வந்துட்டாலும் உன் வாசல்ல வந்து கையேந்த மாட்டேன். அந்தக் கவலை உனக்கு வேணாம். அக்கான்ற உறவுக்கும், உன் வயசுக்கும் மரியாதை கொடுத்துட்டு இருக்கேன். அதைக் கெடுத்துக்காதே!”

யாமினி முகம் சிவந்தாள். அப்பாவைப் பார்த்தாள்.

“அப்பா, அவன் தோளுக்கு மேல வளர்த்துட்டோம்னு திமிர் பிடிச்சி பேசிட்டிருக்கான். இதுக்குமேல நான் அவன்கிட்ட எதுவும் பேசறதா இல்லை. நீங்களாச்சு, அவனாச்சு. நல்லதுக்குக் காலமில்லை. நான் வர்றேன்.”

ஸோபாவில் கிடந்த கைப்பையை எடுத்துத் தோளில் மாட்டிக் கொண்டு விருட்டென்று புறப்பட்டுச் சென்றாள் யாமினி.

உதடுகள் துடிக்க உட்கார்ந்திருந்தார் சோமசுந்தரம். சமையலறை வாசலில் இந்தக் கடுமையான சூழ்நிலையை எப்படி மாற்றுவதென்று புரியாத தவிப்புடன் அம்மா நின்றிருந்தாள். அடுத்த அறையில் கையில் புத்தகத்துடன் இங்கே காதுகளைக் கொடுத்தபடி நிர்மலா.

நிமிர்ந்து அவனை உஷ்ணமாகப் பார்த்தார் அப்பா.

“ஆக எல்லா ஏற்பாடும் முடிஞ்சதா?”

“நடந்துக்கிட்டிருக்குப்பா, வர்ற பதினெட்டாம் தேதி திறப்பு விழா.”

“என்கிட்ட ஒரு மரியாதைக்காகக் கூட கேக்கணும்னு உனக்குத் தோணலை. இல்லை?”

“என்னை மன்னிச்சிடுங்கப்பா. உங்ககிட்ட சொல்லாம இத்தனை ஏற்பாடுகளும் செஞ்சது தப்புதான். சொன்னா அனுமதிக்க மாட்டிங்கன்னு நல்லாத் தெரியும். அதனால



# சுவாசிக்கிறேன்

தான் சொல்லலை."

"அப்ப என்மேல என்னடா மரியாதை வெச்சிருக்கே?"

"அதுக்கும் இதுக்கும் எந்த சம்பந்தமும் இல்லைப்பா. என்மேல உங்களுக்கு கொஞ்சம் கூட நம்பிக்கை கிடையாது. என் கூடப் பொறந்தவளுக்கும் கிடையாது. நான் நிரூபிச்சாகணுமா இல்லையா? என்னை தயவு செஞ்சி என் கோணத்திலேர்ந்து புரிஞ்சுக்கங்க, ப்ளீஸ்...."

"நாங்க எல்லாம் நீ கெட்டுப் போகணும்னு ஆசைப்படறமா?"

"இல்லை. ஆனா நான் நல்லாருக்கணும்னு ஆசைப்படலை."

"பைத்தியக்காரன் மாதிரி பேசாதே. என் சொத்துல உனக்கு உள்ள பங்கு இல்லைன்னு ஆயிடுமா? உனக்கு பணம் தர மாட்டேன்னு எப்பவாவது சொல்லிருக்கேனா? நிர்மலா கல்யாணத்தை முடிச்சிடறேன். உனக்கும் நேரம் சரியில்லை, கொஞ்ச நாள் கழிச்சி எல்லாம் செட்டில் பண்றேன்னுதானே சொன்னேன். உனக்கு திறமை இல்லைன்னு யார் சொன்னாங்க? அதை நிரூபிக்க வேணாம்னு யார் சொன்னாங்க? எதுக்காக இப்படி அவசரப்படடே? அதிக வட்டிக்குக் கடன் வாங்கி தொழில் நடத்தினா எப்படி கட்டுப்படியாகும்? நிரூபிக்கணும்னு நீ சொல்றதே அபத்தமா இருக்கு. உன்னை யாரு சந்தேகப்பட்டா? உனக்கு நீயா ஏதாச்சும் கற்பனை பண்ணிக்கிட்டா யார் பொறுப்பு? தம்பி அவசரப்பட்டு முட்டாள் தனமா காரியம் பண்ணிட்டிருக்கான்னு கேள்விப்பட்டு பதறிப் போய் அட்வைஸ் பண்றதுக்காக வந்தவளை இப்படி அலட்சியப்படுத்தி பேசி அனுப்பிச்

சிட்டியே, அவ மனசு என்ன பாடுபடும்னு யோசிச்சியா? எனக்கு ஜாதகத்தில ரொம்ப நம்பிக்கை உண்டு. இப்ப உனக்கு நேரம் நல்லா இல்லை. எது செஞ்சாலும் சரியா வராது. வீண் விரயம் ஏற்படும். நீ என்ன பண்ணி வெச்சிருக்கேன்னு எனக்குத் தெரியாது. எல்லாத் துக்கும் சும்மா அட்வான்ஸ் மட்டும் கொடுத்து வைச்சிருந்தா, கேன்சல் பண்ணிரு. வாங்கின பணத்தைத் திருப்பிக் கொடுக்கற வழியைப் பாரு. நீ எப்ப தொழில் ஆரம்பிக்கணும்னு எனக்குத் தெரியும். அப்போ நான் உதவி பண்றேன்."

"அப்பா! நாளைக்குத் திறப்பு விழா அழைப்பிதழ் வருதுன்னு சொல்றேன். பதினெட்டாம் தேதி திறப்பு விழான்னு சொல்றேன். சரி, நல்லபடியா கவனிச்சு செய்யின்னு ஆசீர்வாதம் செய்யாம அபசகுனமா எல்லாம் கேன்சல் செஞ்சிடுன்னு சொல்றீங்களே, இது கொஞ்சமாவது நல்லாருக்கா?"

"என்கிட்ட ஒரு வார்த்தைகூடச் சொல்லாம நீ பாட்டுக்கு எல்லாம் செய்வே. நான் உனக்கு ஆசீர்வாதம் செய்யணுமா?"

"வேணாம். இப்படி கேள்வி கேக்காம இருந்தாப் போதும்" என்று தன் அறையை நோக்கி இரண்டடி நடந்தவன் அம்மாவைப் பார்த்து, "அம்மா, பசிக்குது. கை, கால் கழுவிட்டு வர்றேன். தட்டு எடுத்து வையி!" என்றான்.

"நில்லுடா!" என்றார் ஆவேசமாக. "என் வார்த்தைக்கு நீ மதிப்பு கொடுக்க மாட்டே! என் தயவும் உனக்கு வேணாம். நீயா எல்லா முடிவும் எடுப்பே. எந்த உரிமைலடா சோறு போடுன்னு சொல்றே? இதென்ன சத்திரமா? ஹோட்டலா? யாரையும் கேக்காம சம்பாரிக்கிறதுக்கு வழி ஏற்படுத்திக்கத் தெரியுதில்லே. சாப்பாட்டுக்கு மட்டும் வழி ஏற்படுத்திக்கத் தெரியலையா?"

"என்னங்க நீங்க, என்ன பேச்சுப் பேசறீங்க?" பதறினாள் அம்மா.

அரவிந்த் விருட்டென்று தன் அறைக்குள் வந்தான். ஒரு சூட்கேஸ் எடுத்து வைத்தான். கைக்குக் கிடைத்த நான்கைந்து சட்டை, பேண்ட்டுகளை அள்ளிப் போட்டு மூடினான். அதே வேகத்தில் வெளியே வந்தான்.

"டேய்! என்னடா இது!" துடித்தாள் அம்மா.

"எந்தக் கோபத்திலயும் இந்த வார்த்தை சொல்லக் கூடாதும்மா. சொல்லிட்டாரு! இதுக்கு மேல இந்த வீட்ல ஒரு டம்ளர் தண்ணி குடிச்சாலும் நான் மனுஷன் இல்லைம்மா! நான் வர்றேன்."

கல் மாதிரி அசையாமல் அமர்ந்திருந்தார் சோமசுந்தரம்.

"என்னங்க, நெருப்பு மாதிரி ஒரு வார்த்தை சொல்லிட்டு இப்படி உக்காந்திருக்கீங்க. அப்பா - பிள்ளைக்குள்ளே என்ன சண்டையா இருந்தாலும் அதை வீட்டுக்குள்ளே போட்டுக்கங்க! பசிக்குதுன்னு சொன்ன புள்ளையை இப்படி பெட்டியைத் தூக்கிட்டுப் புறப்பட வெச்சிட்டீங்களே... சொல்லுங்க!"

சோமசுந்தரத்தை உலுக்கினாள் அம்மா.

"எப்ப அவன் விஷயத்தில ஒரு அபிப்பிராயம் சொல்றதுக்கோ, ஆலோசனை சொல்றதுக்கோ எனக்கு உரிமை இல்லைன்னு ஆயிடுச்சோ, அப்புறம் அவனை இருன்னு சொல்றதுக்கோ, போன்னு சொல்றதுக்கோ எனக்கு என்ன உரிமை இருக்கு? இருந்தா இருக்கட்டும். போனா போகட்டும். யாரையும் கெஞ்சிக் கூத்தாடியோ, கட்டிப் போட்டோ வீட்ல வெச்சிக்க முடியாது. போடி!"

சுமி பேசறேன். 'என்ன நீ, பெரிய சிந்தனைச் சிற்பி மாதிரி சீரியஸான மேட்டரா எழுதித்தள்ளிட்டிருக்கே'ன்னு கேட்டு எக்கச்சக்க லெட்டர்ஸ்! ('காப்பரத்தாம்பட்டில உனக்கு ஒரு ரசிகர் மன்றம் வெச்சிருக்கோம்; அதை கன்டின்யூ பண்றதா, வேணாமா'ன்னு கேட்டு ஒரு மிரட்டல் லெட்டர் வேற!) வாழ்க்கைல அப்பப்ப சீரியஸா இருந்

சோமசுந்தரம் அவனை நிமிர்ந்து கூடப் பார்க்காமல் தன் அறைக்குள் சென்று விட, நிர்மலாவிடமிருந்து தன்னை உதறிக் கொண்டான் அரவிந்த்.

"அரவிந்த், சொல்றதைக் கேளுடா! அவரும் ஆத்திரப்பட்டு நீயும் ஆத்திரப்பட்டா எப்படிடா? உனக்கு அவர் மேல தானே கோபம்? எங்க மேல என்னடா கோபம்? எல்லாம் அப்புறம் பேசிக்கலாம். போடா உள்ளே!"

"இல்லைம்மா. என்னை மன்னிச்சிடு. இனிமே இங்க எங்களுக்குள்ளே சரியா வராதும்மா. ஒவ்வொரு விஷயத்துக்கும் வாதம் வரும், உங்க நிம்மதி போயிடும். நான் வர்றேன். வழியை விடு."

"எங்கடா போறே?"

''யாமினி வீட்டுக்குப் போக மாட்டேன்மா. நேத்து வரைக்கும் எனக்குன்னு ஒரு இடம் இல்லை. நல்ல வேளையா இன்னிக்கு இருக்கு. என் பிரஸ்ல நிறைய இடம் இருக்கு. பக்கத்தில் பத்து ஹோட்டல் இருக்கு. நான் வர்றேன்மா.''


செருப்புகளை அணிந்து கொண்டு வேகமாக வெளியேறிச் சென்றான் அரவிந்த்.

அழைப்பு மணியை அழுத்திய அரவிந்த் உள்ளே அது ஒலிக்கும் சப்தம் கேட்காததால் கரண்ட் இல்லை என்பதைப் புரிந்து கொண்டு கதவைத் தட்டினான்.

கதவைத் திறந்தாள் விமலா.

''வாங்க. உள்ளே வாங்க.''

## ஹாய், Fரெண்ட்ஸ்...



துக்கறது தப்பில்லை! (ஸ்டிரைக்குகளுக்கு நடுவுல கொஞ்சம்
கிளாஸ்களும் அட்டண்ட் பண்றது எங்க வழக்கம்.)
எனிஹவ், நான் ஜனநாயகப்ரியை! மெஜாரிட்டி கருத்துக்கு அப்பீலே இல்லை.
இந்த வாரம் விட்ருங்க. அடுத்த வாரத்துலேருந்து சும்மா ஜாலியா, தமாஷா,
கேஷுவலா, ஜோலியலா, அலியலா, பொரியலா, ரஸமா, சாம்பாரா – என்ன
வெல்லாம் முடியுமோ, அப்படியெல்லாம் பூந்து வௌயாடலாம்!
ஒரு விஷயம் – விளையாடப் போறது நான் மட்டுமில்லை! அகில
இந்திய சுமி ரசிகர் மன்ற உறுப்பினர்களும் கூட! (அட, நீங்க
தாங்க!)
கூடெடயிலா அடுத்த வாரம் சொல்றேன்.
ஓகே?

— சுமி

''சந்துரு இல்லே?''

''இன்னிக்கு நைட் ஷூட்டிங் கண்டினியூ ஆகுது. வர்றதுக்கு லேட்டாகும்னு சொன்னாரு. உக்காருங்க. ஒரு நிமிஷம்.''

விமலா சமையலறைக்குச் சென்று ஸ்டவ்வை அணைத்துவிட்டு ஈரக் கையைத் துடைத்தபடி வந்தாள்.

''எங்க ஷூட்டிங்?''

''பிரசாத்லன்னு சொன்னார். பிரஸ் ஆரம்பிக்கிற வேலைகள் தீவிரமா நடந்துட்டிருக்கிறதாச் சொன்னாரு. எப்ப ஓபனிங்?''

''பதினெட்டாம் தேதிங்க. ஒரு போன் பண்ணிக்கிறேன்.''

''இதுக்கெல்லாம் பர்மிஷன் கேக்கணுமா? ரஸ்னா தரட்டுமா? இல்லை மோர் தரட்டுமா?''

''ஒண்ணும் வேணாங்க'' என்று போனை எடுத்தான்.

''நீங்க பேசுங்க. நான் மோர் எடுத்துட்டு வர்றேன்'' என்று விமலா உள்ளே போனாள்.

சந்துருவை அவன் செல் போனில் பிடித்தான் அரவிந்த்.

''சந்துரு, நான் உன்னை உடனே பார்க்கணும். நிறைய பேசணும்.''

''எனக்கு ஷூட்டிங் முடிய ராத்திரி ரெண்டு, மூணு ஆயிடும் அரவிந்த். இங்க வர்றியா? எங்கேர்ந்து பேசறே?''

''உன் வீட்லேர்ந்துதான் பேசறேன். நான் ஸ்டுடியோவுக்கு வரலை சந்துரு. தனியா அமைதியாய் பேசணும்.''

''நாளைக்கு ஷூட்டிங் இல்லை. நாளைக்கு எப்ப வேணாலும் பேசலாம்.''

''சரி, நாளைக்கு உன் வீட்டுக்கு வர்றேன்.''

போனை வைத்தான். மறுபடி எடுத்து பிருந்தாவின் அலுவலக எண்ணை முயன்றான்.

''நான் இங்க வாட்ச்மேன் பேசறேன் சார். ஆபீஸ் மூடி நாலு நாள் ஆச்சி. அவங்க வீட்லதான் இருப்பாங்க.''

பிருந்தா இரண்டு தோழிகளோடு வீடு பிடித்துத் தங்கியிருப்பதாகச் சொன்னதும், அந்த வீட்டு விலாசம் தன்னிடம் இருப்பதும் அரவிந்திற்கு நினைவுக்கு வந்தது.

பிருந்தாவின் வீட்டிற்குச் சென்றால் என்ன?

என் மனக் குமுறல்களுக்கு ஒரு உடனடி வடிகால் தேவை.

பிருந்தாவிடம் மனம் விட்டுப் பேசினால் நிச்சயமாக ஆறுதலாக இருக்கும்.

விமலா கொடுத்த மோரைக் குடித்து விட்டு பிருந்தாவின் வீட்டிற்குப் புறப்பட்டான் அரவிந்த்.

(தொடரும்)


# விவேகானந்தாவின்

# சம்மர்

# இங்கிலீஷ்

# கோர்ஸ்.

**விவேகானந்தாவின் சம்மர் இங்கிலீஷ்**
**கோர்ஸ் பற்றி இவர்களது கருத்து!**



விவேகானந்தாவின் சம்மர் இங்கிலீஷ் கோர்ஸில் சேர்ந்து பயின்ற என் மகள் இப்பொழுது இங்கிலீஷ் பாடத்தில் நிறைய மார்க் வாங்க ஆரம்பித்து விட்டாள்.



10வது வரை தமிழ் மீடியத்துல படிச்ச நான் +1 இங்கிலீஷ் மீடியத்துல சேரனும்னு ஆசைப்பட்டேன். என்னோட ஆசையை நிறைவேற்றிவிட்டது விவேகானந்தாவின் சம்மர் இங்கிலீஷ் கோர்ஸ்.



அடிக்கடி Essays எழுதிக் கொடு. Letters எழுதிக் கொடு என்று தொந்தரவு செய்து கொண்டிருந்த என் மகன் இப்பொழுது தானே Essays எழுத ஆரம்பிச்சுட்டான்.




கான்வென்ட்ல படிக்கிற தன் தங்கைக்கு சமமா இங்கிலீஷ்ல பேச முடியலை வேண்டு வருத்தப் பட்டுக்கிட்டிருந்த என் மகள் சித்ரா விவேகானந்தாவின் சம்மர் இங்கிலீஷ் கோர்ஸ் பண்ணி இப்போ ரொம்ப நல்லா இங்கிலீஷ்ல பேசுறா.

**நேர்முகப் பயிற்சி**
**வகுப்புகளுக்கான அட்மிஷன்**
**துவங்கி விட்டது.**

**இன்றே கீழ்க்காணும் முகவரியில்**
**தொடர்பு கொள்ளுங்கள்.**
**கோடை விடுமுறை நாட்களை**
**பயனுள்ளதாக்குங்கள்.**

EXCLUSIVELY FOR SCHOOL STUDENTS



**VIVEKANANDA INSTITUTE**

**சென்னை** 9, மேட்லி ரோடு, தி.நகர், சென்னை - 17 ● 18, ராமசாமி தெரு, சண்முகம் ரோடு, மேற்கு தாம்பரம், சென்னை - 45 ● 30, மேடவாக்கம் டாங்க் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 10 ● 205, T.H. ரோடு (M.M தியேட்டர் அருகில்) தண்டையார்பேட்டை, சென்னை - 81. **மதுரை** 26-A, சுண்ணாம்புக்காரத் தெரு, (கூடலழகர் பெருமாள் கோவில் அருகில்) மதுரை - 1. **கோயம்புத்தூர்** ஸ்ரீ கிருஷ்ணா டவர்ஸ், 515, டாக்டர் நஞ்சப்பா ரோடு, காந்திபுரம், கோயம்புத்தூர் - 18. **திருச்சி** 23-C/5, சோழா டவர்ஸ், சிந்தாமணி, (E.R. ஸ்கூல் எதிரில்) திருச்சி - 2. **சேலம்** சென்ட்ரல் கமர்ஷியல் காம்ப்ளெக்ஸ், 77, ஓமலூர் மெயின் ரோடு, சேலம் - 1. **ஈரோடு** 811, பிரப் ரோடு, (டெலிபோன் பவன் அருகில்), ஈரோடு - 1. **திருப்பூர்** K.P.N. காலனி முதல் தெரு, சங்கீதா தியேட்டர் மெயின் ரோடு, திருப்பூர் - 1. **தஞ்சாவூர்** 1263 / 1, தெற்கு வீதி (பாரதமாதா புக்டெப்போ மாடியில்) தஞ்சாவூர் - 9. **வேலூர்** 9, நீலிகிடங்குத் தெரு, மம்மி ஆஸ்பத்திரி அருகில், வேலூர் - 1. **அரக்கோணம்** 107, பழனி வீதி, அரக்கோணம் - 1. **திண்டுக்கல்** 7, E.V.R சாலை, 80 அடி ரோடு, மேற்கு அசோக் நகர், திண்டுக்கல் - 1. **குன்னூர்** 30 BS.S. சேகர் காம்ப்ளெக்ஸ், மவுண்ட் ரோடு, குன்னூர் - 2. ● **பாண்டிச்சேரி** 326, அம்பலத்தாடையார் மடத்து வீதி, (அண்ணா சாலை அருகில்), பாண்டிச்சேரி - 1.

**ஆங்கில அறிவுப் போட்டிகளும் பரிசுகளும் உண்டு.**

**AN ATTRACTIVE SUMMER CAP FREE**




## பூர்வ கதை

சுமார் 980 * ஆண்டுகளுக்கு முன்னால் தென்னாட்டில் வலிமை பெற்று வளர்ந்து வந்த சோழ சாம்ராஜ்யத்தைச் சுந்தர சோழ சக்கரவர்த்தி அரசாண்டு வந்தார். அவர் உடல்நிலை திருப்திகரமாக இல்லையென்று நாடெங்கும் ஒரு வதந்தி பரவியது. சுந்தர சோழருக்குப் பிறகு தஞ்சாவூர் சிம்மாசனத்தில் யார் ஏறப் போகிறார் என்ற பேச்சும் எழுந்தது. சுந்தரசோழரின் மூத்த புதல்வரும் பட்டத்து இளவரசருமான ஆதித்த கரிகாலர் அச்சமயம் காஞ்சி நகரில் இருந்தார். அவரிடமிருந்து தஞ்சாவூருக்குச் செய்தி கொண்டு போனான் வல்லவரையன் வந்தியத்தேவன் என்னும் வாலிபன்.

பழைய வாணர் குலத்தைச் சேர்ந்த இந்த வீரன், வழியில் வீர நாராயண ஏரியை அடுத்திருந்த கடம்பூரில் செங்கண்ணர் சம்புவரையர் என்னும் பிரமுகரின் மாளிகையில் ஒரு நாள் இரவு தங்கினான். ஆதித்த கரிகாலருக்கு விரோதமாக ஒரு பெரிய சதி நடைபெறுகிறது என்பதை அங்கே தெரிந்து கொண்டான். சோழ ராஜ்யத்தின் தனாதிகாரியும், தானிய பண்டாரத் தலைவருமான பெரிய பழுவேட்டரையர் உள்படப் பல பிரமுகர்கள் அச்சதியில் ஈடுபட்டிருந்தார்கள் என்பதையும் அறிந்தான். பழுவேட்டரையர் தமது முதிய பிராயத்தில் ஓர் இளம் பெண்ணை மணந்திருந்ததுடன் அவளைத் தான் போகுமிடமெல்லாம் மூடு பல்லக்கில் அழைத்துச் செல்லுவது வழக்கம். கடம்பூர் மாளிகைக்கும் மூடுபல்லக்கு வந்திருந்தது. அதில் பழுவூர் இளையராணி வந்ததாகவே அனைவரும் எண்ணியிருந்தார்கள். ஆனால் நள்ளிரவில் நடந்த சதிக் கூட்டத்தின் முடிவில் பழுவேட்டரையர் மூடு பல்லக்கின் இரகசியத்தை அம்பலப்படுத்தினார். பட்டுத் திரையை விலக்கியதும் உள்ளேயிருந்து இளவரசர் மதுராந்தகத் தேவர் வெளிப்பட்டு வந்தார். இவர் சுந்தர சோழரின் பெரிய தந்தையான சிவஞான கண்டராதித்தரின் புதல்வர்.




கல்கி கலெக்ஷன்

**அமரர் கல்கி**

* 1950ல் எழுதப்பட்டது

அடுத்த பட்டத்துக்கு உரியவர் மதுராந்தகத் தேவர்தான் என்று அங்கு வந்திருந்த சோழ நாட்டுப் பிரமுகர்கள் ஏக மனதாக முடிவு கட்டி ஜய கோஷம் செய்தார்கள்.

இதையெல்லாம் கடம்பூர் மாளிகையில் ஒரு மறைவான இடத்திலிருந்து வந்தியத்தேவன் கவனித்தது போலவே, ஆழ்வார்க்கடியான் நம்பி என்னும் வீர வைஷ்ணவர் ஒருவரும் கவனித்தார். வந்தியத்தேவனும் ஆழ்வார்க்கடியாரும் கொள்ளிடக் கரையில் சந்தித்து ஒரே படகில் ஆற்றைக் கடந்தார்கள். ஒருவரிடம் ஒருவர் உளவு அறிய முயன்றார்கள். முடியவில்லை.

ஆழ்வார்க்கடியார் யோசனைப்படி வந்தியத்தேவன் தஞ்சை போகும் மார்க்கத்தில் பிரசித்தி பெற்ற குடந்தை ஜோதிடரிடம் சென்றான். அவருடைய வீட்டில் இரு உயர்குலப் பெண்களைச் சந்தித்தான்.

குடந்தை ஜோதிடரிடம் வந்தியத்தேவன் புதிதாக எதுவும் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆழ்வார்க்கடியாருடைய இன்னொரு பெயர் திருமலையப்பன் என்பது மட்டும் தெரிந்தது. பின்னர் அவன் அரிசிலாற்றங்கரையோடு தஞ்சாவூரை நோக்கிச் சென்றபோது, குடந்தை ஜோதிடரின் வீட்டில் அவன் பார்த்த இரு பெண்களும் இன்னும் சிலரும் நதிக்கரையில் கலங்கி நிற்பதையும் அவர்களுக்கு அருகில் பயங்கரமான ஒரு முதலை வாயைப் பிளந்து கொண்டிருப்பதையும் பார்த்தான். பாய்ந்து சென்று முதலையின் மீது தன் வேலைப் பாய்ச்சினான். அப்பெண்களின் கேலிச் சிரிப்பு அவனுடைய மனத்தில் குழப்பத்தை உண்டாக்கிற்று. பிறகு, அவன் கொல்ல முயன்ற முதலை, இறந்த பின் பதப்படுத்திப் பஞ்சு அடைத்திருந்த முதலை என்று தெரிந்து மிகவும் வெட்கினான். இதனால் ஏற்பட்ட கோபத்தைத் தான் ஏறி வந்த குதிரையின் மீது காட்டி அதை விரைந்து செலுத்தினான்.

இதற்கிடையில் ஆழ்வார்க்கடியானுக்குச் சில விசித்திரமான அனுபவங்கள் ஏற்பட்டன. சுந்தர சோழ சக்கரவர்த்திக்கும் சோழர் குலத்துக்கும் எதிராகப் பயங்கர சதித் திட்டம் உருவாகிக் கொண்டிருப்பதை அவர் யதேச்சையாக அறிந்தார். அச்சதியில் ஈடுபட்டுள்ளவர்கள் மீன் சமிக்ஞை காட்டியதால் பாண்டிய நாட்டைச் சேர்ந்தவர்களாயிருக்கக் கூடும் என்ற சந்தேகம் அவருக்கு ஏற்பட்டது.

வந்தியத்தேவன் தஞ்சை கோட்டை நோக்கிப் பிரயாணம் செய்கையில் மதுராந்தகரின் பல்லக்கு என்று எண்ணி பழுவூர் ராணி நந்தினியின் பல்லக்கை வழிமறித்தான். அவள் சகோதரன் ஆழ்வார்க்கடியான் தன்னை அனுப்பியதாகப் புனைந்துரைத்து அவளிடமிருந்து பனை இலச்சினை பதித்த மோதிரத்தைப் பெற்றான். அதன் துணையுடன் தஞ்சைக் கோட்டைக்குள் பிரவேசித்தான். அங்கே அவனுக்குச் சேந்தன் அமுதன் என்ற இளைஞனின் நட்பு கிடைத்தது. சுந்தர சோழ சக்கரவர்த்தியையும் சந்தித்தான். ஆதித்த கரிகாலர் அனுப்பிய ஓலையை அவரிடம் சேர்ப்பித்தான். குந்தவை தேவிக்குத் தான் கொண்டு வந்த ஓலையைக் காணவில்லை என்று உணர்ந்து, அவன் கவலையில் ஆழ்ந்து போகும் போதே அவன் நடவடிக்கைகளைச் சந்தேகித்த சின்னப் பழுவேட்டரையர் அவன் கையை இறுகப் பற்றிக் கொண்டார்....

## இருபத்தொன்பதாம் அத்தியாயம்

# "நம் விருந்தாளி"

புலவர்கள் சென்ற பிறகு அரண்மனை மருத்துவர் சக்கரவர்த்திக்கு மருந்து கலந்து கொண்டு வந்தார். மலையமான் மகளான பட்டத்தரசி அதைத் தன் திருக்கரத்தால் வாங்கிக் கணவருக்குக் கொடுத்தாள்.

அதுவரை பொறுமையாய்க் காத்திருந்த சின்னப் பழுவேட்டரையர், வந்தியத்தேவனைப் பிடித்தபிடி விடாமல் இழுத்துக் கொண்டே சக்கரவர்த்தியின் அருகில் போய்ச் சேர்ந்தார்.

"பிரபு! புது மருந்தினால் ஏதாவது பலன் தெரிகிறதா?" என்று கேட்டார்.


"பலன் தெரிகிறதாக மருத்துவர் சொல்லுகிறார்; தேவியும் சொல்கிறார். ஆனால் எனக்கென்னவோ நம்பிக்கை உண்டாகவில்லை. உண்மையைச் சொன்னால், தளபதி! இதெல்லாம் வீண் முயற்சி





என்றே தோன்றுகிறது. என் விதி என்னை அழைக்கிறது. யமன் என்னைத் தேடிக் கொண்டு பழையாறைக்குப் போயிருக்கிறான் என்றே நினைக்கிறேன். அங்கே நான் இல்லையென்று அறிந்ததும், இவ்விடம் என்னைத் தேடிக் கொண்டு வந்து சேருவான்!....''

"பிரபு! தாங்கள் இப்படி மனமுடைந்து பேசக் கூடாது. எங்களையெல்லாம் இப்படி மனங் கலங்கச் செய்யக் கூடாது. தங்கள் குல முன்னோர்கள்...."

"ஆ! என் குல முன்னோர்கள் யமனைக் கண்டு அஞ்சியதில்லை யென்று சொல்லுகிறீர்! எனக்கும் என் குல முன்னோர்கள் பலரைப் போல் போர்க்களத்தில் முன்னணியில் நின்று போர் செய்து உயிர் விடும் பாக்கியம் கிடைக்குமானால், அத்தகைய மரணத்துக்குச் சிறிதும் அஞ்ச மாட்டேன். சோர்வும் கொள்ள மாட்டேன். உற்சாகத்துடன் வரவேற்பேன். என்னுடைய பெரிய தகப்பனார் இராஜாத்தித்தியர் தக்கோலத்தில் யானை மேலிருந்து போர் புரிந்தபடியே உயிர்நீத்தார். சோழ குலத்தின் வீரப் புகழைத் தக்கோலம் போர்க்களத்தில் என்றென்றும் நிலை நாட்டினார். 'யானை மேல் துஞ்சிய தேவர்' என்று புகழ்பெற்றார். நான் என்ன புகழைப் பெறுவேன்? 'நோய்ப் படுக்கையில் துஞ்சிய சுந்தர சோழன்' என்றுதானே பெயர் பெறுவேன்? என்னுடைய இன்னொரு பெரிய தகப்பனார், கண்டராதித்த தேவர் சிவபக்தியில் ஈடுபட்டு மரண பயத்தை விட்டிருந்தார். ஸ்தல யாத்திரை செய்வதற்கு மேற்குக் கடற்கரை நாடுகளுக்குப் போனார். அங்கேயே காலமானார். 'மேற்கெழுந்தருளிய தேவர்' என்று அவரும் பெயர்




பெற்றார். அவரைப் போன்ற சிவபக்தனும் அல்ல நான்; ஸ்தல யாத்திரை செய்யவும் இயலாதவனாகி விட்டேன். இப்படியே எத்தனை நாள் படுத்திருப்பேன்? என்னைச் சேர்ந்தவர்கள் எல்லோருக்கும் பாரமாக?... ஆனால் என் மனத்திற்குள் ஏதோ சொல்கிறது. அதிக காலம் நான் இந்தப் பூவுலகில் இருக்க மாட்டேன் என்று...."

''சக்கரவர்த்தி! அரண்மனை வைத்தியர் தங்களுக்கு அபாயம் ஏதும் இல்லை என்று கூறுகிறார். சோதிடர்களும் அபாயம் இல்லையென்றே



• ஆதித்தசோழன்

சொல்கிறார்கள். ஆனால் இந்தச் சிறு பிள்ளை தங்களிடம் ஏதோ அபாயத்தைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தான்....''

'ஆ! இவன் காஞ்சி நகரிலிருந்து வந்த பிள்ளைதானே? ஆமாம், ஏதோ அபாயம் என்று சொன்னான். எதைப் பற்றிச் சொன்னாய், தம்பி? என்னுடைய நிலையைப் பற்றியா?''

வல்லவரையனுடைய மூளை மின்னல் வேகத்தில் வேலை செய்தது. 'அபாய'த்தைப் பற்றித் தான் எச்சரித்ததாக ஒப்புக் கொண்டால் சந்தேகங்கள் ஏற்பட்டுத் தனக்கு அபாயம் நேருவது நிச்சயம். அந்த இக்கட்டிலிருந்து தப்ப வேண்டும். நல்லது; ஓர் உபாயம் செய்து பார்க்கலாம். இலக்கணத்தைத் துணையாகக் கொண்டு நெடிலைக் குறில் ஆக்கலாம்!

"சக்கரவர்த்திப் பெருமானே! அபாயத்தைப் பற்றிச் சொல்வதற்கு நான் யார்? நம் வீர தளபதி சின்னப் பழுவேட்டரையரும், அரண்மனை வைத்தியரும், சாவித்திரி அம்மனையொத்த மகாராணியும் இருக்கும் போது என்ன அபாயம் வந்துவிடும்? 'அபயம்' 'அபயம்' என்று தங்களிடம் நான் முறையிட்டுக் கொண்டேன். பழைய வாணர் குலத்துக்கு நான் ஒரு அறியா சிறுவன்தான் இப்போது பிரதிநிதியாக மிஞ்சியிருக்கிறேன். தங்கள் திருப்புதல்வர் மனம் மகிழும்படி சோழப் பேரரசுக்குத் தொண்டு புரிந்து வருகிறேன். எங்கள் பழைய பூர்வீக ராஜ்யத்தில் ஒரு சிறு பகுதியையாவது அடியேனுக்குத் திருப்பிக் கொடுக்க அருள்புரிய வேண்டும். அரசர்க்கரசே! அபயம்! அபயம்! இந்த அறியாச் சிறுவன் தங்கள் அபயம்!'' என்று வல்லவரையன் மூச்சு விடாமல் படபடவென்று பேசி நிறுத்தினான்.

இதைக் கேட்ட பழுவேட்டரையரின் முகம் கருங்கியது. சுந்தர சோழரின் முகம் மீண்டும் மலர்ந்தது. மகாராணியின் முகத்தில் கருணை ததும்பியது.

"இந்தப் பிள்ளை பிறந்தவுடனே சரஸ்வதி தேவி இவனுடைய நாவில் எழுதி விட்டாள் போலும்! இவனுடைய வாக்குவன்மை அதிசயமாயிருக்கிறது!'' என்றாள் தேவி.

இதுதான் சமயம் என்று வந்தியத்தேவன், "தாயே! தாங்கள் எனக்காகப் பரிந்து ஒரு வார்த்தை சொல்லவேணும். நான் தாய் தந்தையற்ற அநாதை. வேறு ஆதரவு அற்றவன். என்னுடைய வேண்டுகோளை நானேதான் வெளியிட்டாக வேண்டும். பக்தனுக்குப் பரிந்து பார்வதி தேவி பரமசிவனாரிடமும், லக்ஷ்மிதேவி மகாவிஷ்ணுவிடமும் பேசுவது போல் தாங்கள் எனக்காகப் பேச வேண்டும். எங்கள் பூர்வீக அரசில் ஒரு பத்துக் கிராமத்தை திரும்பக் கொடுத்தாலும் போதும். நான் மிகவும் திருப்தி அடைவேன்!'' என்றான்.

இதையெல்லாம் கேட்கக் கேட்கச்

சுந்தர சோழருக்கு ஒரே வியப்பும் மகிழ்ச்சியுமாயிருந்தது. அவர் சின்னப் பழுவேட்டரையரைப் பார்த்து, "தளபதி! இந்த இளைஞனை எனக்கு ரொம்பவும் பிடித்திருக்கிறது. தேவியின் முகத்தைப் பார்த்தால், இவனை மூன்றாவது பிள்ளையாகச் சுவீகாரம் எடுத்துக் கொண்டு விடலாமா என்றே யோசிப்பதாகத் தெரிகிறது. இவனுடைய கோரிக்கையை நிறைவேற்றி வைக்கலாம் அல்லவா? அதில் ஒன்றும் கஷ்டம் இராதே? உமது அபிப்பிராயம் என்ன?" என்றார்.

"இதில் அடியேனுடைய அபிப்பிராயத்துக்கு இடம் என்ன இருக்கிறது? இளவரசர் கரிகாலரின் கருத்தையல்லவோ அறிய வேண்டும்?" என்றார் தஞ்சைக் கோட்டைத் தளபதி.

"சக்கரவர்த்தி! இளவரசரைக் கேட்டால், பழுவூர்த் தேவரைக் கேட்க வேண்டும் என்று சொல்கிறார். பழுவூர்த் தேவரோ இளவரசரைக் கேட்க வேண்டும் என்கிறார். இரண்டு பேருக்கும் நடுவில் என் கோரிக்கை...."

"பிள்ளாய்! நீ கவலைப்படாதே! இரண்டு பேரையும் சேர்த்து வைத்துக் கொண்டே கேட்டு விடலாம்!" என்றார் சக்கரவர்த்தி.

பிறகு சின்னப் பழுவேட்டரையரைப் பார்த்து, "தளபதி! இளவரசனிடமிருந்து இந்தப் பிள்ளை ஓலை கொண்டு வந்தான். பழையபடி காஞ்சிக்கு நான் வரவேண்டும் என்றுதான் ஆதித்தன் ஓலையில் எழுதியிருக்கிறான். அங்கே புதிதாய்ப் பொன் மாளிகை கட்டியிருக்கிறானாம். அதில் நான் சில நாளாவது தங்க வேண்டுமாம்!" என்றார்.

"தங்கள் சித்தம் எப்படியோ, அப்படியே செய்கிறது!" என்றார் கோட்டைத் தளபதி.

"ஆ! என்னுடைய சித்தம் எப்படியோ அப்படி நீர் நடத்துவீர். ஆனால் என் கால்கள் மறுக்கின்றன. காஞ்சிக்குப் பிரயாணம் செய்வது இயலாத காரியம். அரண்மனைப் பெண்டுகளைப் போல் பல்லக்கில் ஏறித் திரைபோட்டுக் கொண்டு யாத்திரை செய்வதென்பதை நினைத்தாலே எனக்கு அருவருப்பாயிருக்கிறது. ஆதித்த கரிகாலனை இங்கே வந்து விட்டுப் போகும்படிதான் மறு ஓலை எழுதிக் கொடுக்க வேண்டும்...."

"இளவரசர் இச்சமயம் காஞ்சியை விட்டு இங்கு வரலாமா? வடதிசையில் நம் பகைவர்கள் இன்னும் பலசாலிகளாக இருக்கிறார்களே!"

"பார்த்திபேந்திரனும் மலையமானும் அங்கிருந்து பார்த்துக் கொள்வார்கள். இளவரசன் இச்சமயம் இங்கே என் பக்கத்தில் இருக்க வேண்டும் என்று என் உள்ளத்தில் ஏதோ சொல்கிறது. அது மட்டுமல்ல; ஈழநாட்டுக்குச் சென்றிருக்கும் இளங்கோவையும் உடனே இங்கு வந்து சேரும்படி அழைப்பு அனுப்ப வேண்டும். இரண்டு பேரையும் வைத்துக் கொண்டு ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேசி முடிவு செய்ய விரும்புகிறேன். அருள்மொழி இங்கு வரும்போது ஈழப் படைக்கு உணவு அனுப்புவது பற்றி உங்கள் ஆட்சேபத்தையும் அவனிடம் தெரிவிக்கலாம்...."

"சக்கரவர்த்தி! மன்னிக்க வேண்டும். ஈழத்துக்கு உணவு அனுப்புவதை நான் ஆட்சேபிக்கவில்லை. தனதான்யாதிகாரியும் ஆட்சேபிக்கவில்லை. சோழ நாட்டுக் குடிமக்கள் ஆட்சேபிக்கிறார்கள். சென்ற அறுவடையில் சோழ நாட்டில் விளைவு குறைந்து விட்டது. நம்முடைய மக்களுக்கே போதாமலிருக்கும்போது, இலங்கைக்குக் கப்பல் கப்பலாக அரிசி அனுப்புவதை மக்கள் ஆட்சேபிக்கிறார்கள்! தற்போது வாய்க்குள் முணுமுணுக்கிறார்கள். கொஞ்ச நாள் போனால், மக்களின் கூச்சல் பலமாகும். தங்கள் உடல்நிலையைப் பாதிக்கும்படி இந்த அரண்மனைக்குள்ளேயும் அவர்களுடைய கூச்சல் வந்து கேட்கும்...."

"குடிமக்கள் ஆட்சேபிக்கிற காரியத்தைச் செய்ய அருள்மொழி ஒருநாளும் விரும்ப மாட்டான். எல்லாவற்றுக்கும், அவன் ஒரு தடவை இங்கு வந்து விட்டுப் போகட்டும். பெரிய பழுவேட்டரையர் வந்ததும் இலங்கைக்கு ஆள் அனுப்புவது பற்றி முடிவு செய்யலாம். அவர் எப்போது திரும்புகிறார்?"

"இன்று இரவு கட்டாயம் வந்து விடுவார்!"

"காஞ்சிக்கும் நாளைய தினம் ஓலை

எழுதி அனுப்பலாம். இந்தப் பிள்ளையி னிடமே அந்த ஓலையையும் கொடுத் தனுப்பலாம் அல்லவா?"

"இந்தச் சிறுவன் காஞ்சியிலிருந்து ஒரே மூச்சில் வந்திருக்கிறான். சில நாள் இவன் இங்கேயே தங்கி இளைப்பாறி விட்டுப் போகட்டும். வேறு ஆளிடம் ஓலையைக் கொடுத்தனுப்பலாம்."

"அப்படியே செய்க. இளவரசன் வருகிற வரையிலே கூட இவன் இங்கேயே இருக்கலாம்!"

இச்சமயம் மலையமான் மகள் எழுந்து நிற்கவே, சின்னப் பழுவேட்டரையர், "இன்று அதிக நேரம் தங்களுக்குப் பேசும் சிரமம் கொடுத்து விட்டேன். மன்னிக்க வேணும். தேவி எச்சரிக்கை செய்யும் வரையில் நீண்டு விட்டது!" என்று சொன்னார்.

"தளபதி! இந்தப் பிள்ளை நம் விருந்தாளி. இவனுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுங்கள். சக்கரவர்த்திக்கு மட்டும் உடம்பு சரியாயிருந்தால், இவனைத் தமது அரண்மனையிலேயே இருக்கச் சொல்லியிருக்கலாம்!" என்றாள் மலையமான் மகள்.

"நான் கவனித்துக் கொள்கிறேன், தாயே! தங்களுக்கு அந்தக் கவலை வேண்டாம். நன்றாய்க் கவனித்துக் கொள்கிறேன்!" என்றார் சின்னப் பழுவேட்டரையர். அப்போது அவரை அறியாமலே அவருடைய ஒரு கை மீசையைத் தொட்டு முறுக்கிற்று.

## முப்பதாம் அத்தியாயம்

# சித்திர மண்டபம்

சின்னப் பழுவேட்டரையர் வந்தியத்தேவனைத் தம்முடன் ஆஸ்தான மண்டபத்துக்கு அழைத்துப் போனார். சக்கரவர்த்தியிடம் அவன் கூறியது என்ன என்பதைப் பற்றி அவன் சொன்ன சமாதானம் அவருக்கு அவ்வளவாகப் பூரண திருப்தி அளிக்கவில்லை. சக்கரவர்த்தியைத் தனியாகப் போய்ப் பார்க்கும்படி அவனுக்கு அநுமதி அளித்தது ஒருவேளை தவறோ என்றும் தோன்றியது. ஆதித்த கரிகாலரிடமிருந்து வந்தவனாதலால், அவனைப் பற்றிச் சந்தேகிக்க வேண்டியது முறை. ஆனால் தமையனார் முத்திரை மோதிரத்துடன் அனுப்பியுள்ளபடியால் சந்தேகிக்க இடமில்லை. ஆகா! இம்மாதிரி காரியங்களில் பெரியவருக்கு வேறொருவர் ஜாக்கிரதை சொல்லித்தர வேண்டுமா, என்ன? ஆனாலும், தாம் திடீரென்று தரிசன மண்டபத்துக்குள் சென்ற பொழுது அவ்வாலிபன் தயங்கி நின்று பயந்தவன் போல் விழித்தது அவர் கண் முன்னால் தோன்றியது. "அபாயம்! அபாயம்!" என்று அவன் கூவியது நன்றாகக் காதில் விழுந்ததாக ஞாபகம் வந்தது. "அபயம்" என்று சொல்லியிருந்தால், அது தம் காதில் "அபாயம்" என்று விழுந்திருக்கக்கூடியது சாத்தியமா? எல்லாவற்றுக்கும் இவனை உடனே திருப்பி அனுப்பாமலிருப்பது நல்லது. தமையனார் வந்த பிறகு இவனைப் பற்றி நன்றாய்த் தெரிந்து கொண்டு பிறகு உசிதமானதைச் செய்யலாம். இம்மாதிரி தீரனாகிய வாலிபனை நாம் நம்முடைய அந்தரங்கக் காவற் படையில் சேர்த்துக் கொள்ளப் பார்க்க வேண்டும். சமயத்தில் உபயோகமாயிருப்பான். ஏன்? இவனுக்கு இவனுடைய முன்னோர்களின் பழைய அரசில் ஒரு பகுதியை வாங்கிக் கொடுத்தாலும் கொடுக்கலாம். இம்மாதிரி பிள்ளைகளுக்கு ஒருமுறை உதவி செய்து விட்டால், அப்புறம் என்றைக்கும் நமக்குக் கட்டுப்பட்டு நன்றியுடனிருப்பார்கள். ஒருவேளை, இவன் உறுதியான விரோதி என்று ஏற்பட்டு விட்டால், அதற்குத் தக்க ஏற்பாடு செய்ய வேண்டும். எதற்கும் தமையனார் வந்து சேரட்டும் பார்க்கலாம்.

ஆஸ்தான மண்டபம் சென்றதும் வந்தியத்தேவன் அப்புறமும் இப்புறமும்

ஆவலுடன் பார்க்கத் தொடங்கினான். தளபதியிடம் தான் ஓலையை எடுத்துக் கொடுத்த இடத்தில் உற்று உற்று நன்றாகப் பார்த்தான். தப்பித் தவறி இன்னொரு ஓலை, - அந்த முக்கியமான ஓலை - கிடக்கிறதா என்று தான். அதை மட்டும் கண்டுபிடிக்க முடியாவிட்டால், தன்னைப் போன்ற மூடன் வேறு யாரும் இருக்க முடியாது! உலகமே புகழும் சோழ குலத்து அரசிளங்குமரியைத் தான் பார்க்க முடியாமலே போய் விடும். ஆதித்த கரிகாலர் தன்னிடம் ஒப்புவித்த பணியில் சரி பாதியைச் செய்ய முடியாமலே போய்விடும்.




சின்னப் பழுவேட்டரையர் அங்கிருந்த ஏவலாளர்களில் ஒருவனைப் பார்த்து, "இந்தப் பிள்ளையை நமது அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு போ! விருந்தாளி விடுதியில் வைத்து வேண்டிய வசதிகள் செய்து கொடுத்துப் பார்த்துக் கொள்! நான் வரும்வரையில் அங்கேயே இரு!" என்றார்.

வந்தியத்தேவனும் ஏவலாளனும் வெளியே சென்ற உடன், இன்னொருவன் தளபதியிடம் பயபக்தியுடன் நெருங்கி, ஒரு ஓலைச் சுருளை நீட்டினான். "இங்கிருந்து தரிசன மண்டபத்துக்குப் போகும் வழியில் இது கிடந்தது. இப்போது சென்ற அந்தப் பையனுடைய மடியிலிருந்து விழுந்திருக்கக்கூடும்!" என்று சொன்னான்.

தளபதி அதை ஆர்வத்துடன் வாங்கிப் பிரித்துப் பார்த்தார். அவருடைய புருவங்கள் நெற்றியின் சரிபாதி வரையில் உயர்ந்து நெரிந்தன. அவருடைய முகத்தில் கொடூரமான மாறுதல் ஒன்று உண்டாயிற்று.

"ஆஹா! இளையபிராட்டிக்கு ஆதித்த கரிகாலர் எழுதிய ஓலை. 'அந்தரங்கமான காரியங்களுக்கு உண்மையான வீரன் ஒருவன், நினைத்த காரியத்தை முடிக்கக் கூடிய திறன், - வேண்டும் என்று கேட்டிருந்தாயல்லவா? அதற்காக இவனை அனுப்பியிருக்கிறேன். இவனைப் பூரணமாக நம்பி எந்த முக்கியமான காரியத்தையும் ஒப்புவிக்கலாம்' என்று இளவரசர்

தம் கைப்பட எழுதியிருக்கிறார். ஆ! இதில் ஏதோ மர்மம் இருக்கிறது. இந்த ஓலையைப் பற்றிப் பெரியவருக்குத் தெரியுமோ, என்னவோ? இவன் விஷயத்தில் இன்னும் அதிக ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்!" என்று கோட்டைத் தளபதி தமக்குள்ளே சொல்லிக் கொண்டார். ஓலையைப் பொறுக்கிக் கொண்டு வந்தவனை அழைத்துக் காதோடு சில விஷயங்களைக் கூறினார். அவனும் உடனே புறப்பட்டுச் சென்றான்.



சின்னப் பழுவேட்டரையரின் மாளிகையில் வந்தியத் தேவனுக்கு ஆசார உபசாரங்கள் பலமாக நடந்தன. அவனைக் குளிக்கச் செய்து, புதிய உடைகள் அணிந்து கொள்ளக் கொடுத்தார்கள். நல்ல உடைகள் அணிந்து கொள்வதில் பிரியமுள்ள வந்தியத்தேவனும் குதூகலத்தில் ஆழ்ந்தான். காணாமற்போன ஓலையைப் பற்றிய கவலையைக் கூட மறந்து விட்டான். புது உடை உடுத்திய பின்னர் இராஜ போகமான அறுசுவைச் சிற்றுண்டிகளை அளித்தார்கள். பசித்திருந்த வந்தியத்தேவன் அவற்றை ஒரு கை பார்த்தான். பின்னர், அவனைச் சின்னப் பழுவேட்டரையர் மாளிகையின் சித்திர மண்டபத்துக்கு அழைத்துச் சென்றார்கள். "தளபதி வருகிற வரையில் இந்த மண்டபத்திலுள்ள அபூர்வ சித்திரங்களைப் பார்த்துக் கொண்டிருக்கலாம்!" என்றார்கள். இவ்விதம் சொல்லிவிட்டு, காவலர்கள் மூன்று பேர் மண்டபத்தின் வெளியில் உட்கார்ந்து அரட்டை அடித்துக் கொண்டே சொக்கட்டான் ஆடத் தொடங்கினார்கள்.

சோழ குலத்தின் புதிய தலைநகரமான தஞ்சைபுரி அந்த நாளில் சிற்ப சித்திரக் கலைக்குப் பெயர் பெற்றதாயிருந்தது. திருவையாற்றில் இசைக் கலையும் நடனக் கலையும் வளர்ந்தது போல் தஞ்சையில் சிற்ப சித்திரக் கலைகள் வளர்ந்து வந்தன.



+ முக்கியமாக, சின்னப் பழுவேட்டரையர் மாளிகையில் இருந்த சித்திர மண்டபம் மிகப் பிரசித்தி அடைந்திருந்தது. அந்த மண்டபத்துக்குள் இப்போது வந்தியத்தேவன் பிரவேசித்தான். சுவர்களில் பல அழகிய வர்ணங்களில் தீட்டியிருந்த அற்புதமான சித்திரங்களைப் பார்த்துப் பார்த்துப் புளகாங்கிதம் அடைந்தான். அந்த ஆனந்தத்தில் தன்னை மறந்தான்; தான் வந்த முக்கியமான காரியத்தையும் கூட மறந்தான்.

சோழ வம்சத்தின் பூர்வீக அரசர்களையும் அவர்களுடைய வாழ்க்கைச் சம்பவங்களையும் சித்திரிக்கும் காட்சிகள்

அதனுடைய கவனத்தைக் கவர்ந்து பரவச மடையச் செய்தன. முக்கியமாக, சென்ற நூறு வருஷத்துச் சோழர்களின் சரித்திரம் அந்தச் சித்திர மண்டபத்தின் பெரும் பகுதியை ஆக்ரமித்துக் கொண்டிருந்தன. வந்தியத்தேவனுக்கு அதிகமான ஆர்வத்தை உண்டாக்கிய சித்திரங்களும் அவைதாம்.

இந்தக் கட்டத்தில், சென்ற நூறு வருஷமாகப் பழையாறையிலும் தஞ்சையிலும் இருந்து அரசு புரிந்த சோழ மன்னர்களின் வம்ச பரம்பரையை வாசகர்களுக்குச் சுருக்கமாக ஞாபகப்படுத்த விரும்புகிறோம். இனி இந்தக் கதையில், மேலே வரும் நிகழ்ச்சிகளை அறிந்து கொள்வதற்கு இதைத் தெரிந்து கொள்வது மிக்க உபயோகமாயிருக்கும்.

தொண்ணூற்றாறு போர்க் காயங்களைத் தன் திருமேனியில் ஆபரணங்களாகப் பூண்ட விஜயாலய சோழனைப் பற்றி முன்னமே கூறியிருக்கிறோம்.

சோழ மன்னர்கள் பரகேசரி, இராஜகேசரி என்னும் பட்டங்களை மாறி மாறிப் புனைந்து கொள்வது வழக்கம். பரகேசரி விஜயாலயனுக்குப் பிறகு அவனுடைய புதல்வன் ராஜகேசரி **ஆதித்த சோழன்** பட்டத்துக்கு வந்தான். அவன் தந்தைக்குத் தகுந்த தனயனாக விளங்கினான். முதலில் அவன் பல்லவர் கட்சியில் நின்று பாண்டியனைத் தோற்கடித்துச் சோழ ராஜ்யத்தை நிலைப்படுத்திக் கொண்டான். பிறகு, பல்லவன் அபராஜிதவர்மனோடு போர்தொடுத்தான். யானை மீது அம்பாரியில் இருந்து போர் புரிந்த அபராஜிதவர்மன் மீது ஆதித்த சோழன் தாவிப் பாய்ந்து அவனைக் கொன்று தொண்டை மண்டலத்தை வசப்படுத்தினான். பிறகு கொங்கு மண்டலமும் இவன் ஆட்சிக்குள் வந்தது. ஆதித்தன் சிறந்த சிவபக்தன். காவிரி ஆறு உற்பத்தியாகும் சஹ்ஸ்ய மலையிலிருந்து அப் புண்ணிய நதி கடலில் கலக்கும் இடம் வரையில் ஆதித்த சோழன் பல சிவாலயங்களை எடுப்பித்தான்.

இராஜகேசரி ஆதித்த சோழனுக்குப் பிறகு **பரகேசரி பராந்தகன்** பட்டத்துக்கு வந்தான். நாற்பத்தாறு ஆண்டு காலம் அரசு புரிந்தான். இமயத்தில் புலிச் சின்னம் பொறித்த கரிகால் பெருவளத்தானுக்குப் பின்னர் சோழ வம்சத்தில் மாபெரும் மன்னன் பராந்தகன்தான். வீர நாராயணன், பண்டித வத்சலன், குஞ்சர மல்லன், சூரசிகாமணி என்பன போன்ற பல பட்டப் பெயர்கள் அவனுக்கு உண்டு. "மதுரையும் ஈழமும் கொண்டவன்" என்ற பட்டமும் உண்டு. இந்த முதற் பராந்தகன் காலத்திலேயே சோழ சாம்ராஜ்யம் கன்யாகுமரியிலிருந்து கிருஷ்ணாநதி வரையில் பரவியது. ஈழநாட்டிலும் சிறிது காலம் புலிக்கொடி பறந்தது. தில்லைச் சிற்றம்பலத்துக்குப் பொன் கூரை வேய்ந்து புகழ்பெற்ற பராந்தகனும் இவனேதான். இவனுடைய ஆட்சியின் இறுதி நாட்களில் சோழ சாம்ராஜ்யத்துக்குச் சில பேரபாயங்கள் வந்தன. அந்த நாளில் வடக்கே பெருவலி படைத்திருந்த இராஷ்டிரகூடர்கள் சோழர்களுடைய பெருகி வந்த பலத்தை ஒடுக்க முனைந்தார்கள். சோழ சாம்ராஜ்யத்தின் மீது படை எடுத்து வந்து ஓரளவு வெற்றியும் அடைந்தார்கள்.

பராந்தகச் சக்கரவர்த்திக்கு மூன்று புதல்வர்கள் உண்டு. இவர்களில் வீராதி வீரனாக விளங்கியவன் மூத்த புதல்வனாகிய **இராஜாதித்யன்** என்பவன். வடநாட்டுப் படையெடுப்பை எதிர்பார்த்து இராஜாதித்யன் திருமுனைப்பாடி நாட்டில் பெரும் சைன்யத்துடன் பல காலம் தங்கியிருந்தான். தன் தந்தையின் பெயர் விளங்கும்படி வீரநாராயண ஏரி எடுத்தான்.

அரக்கோணத்துக்கு அருகில் தக்கோலம் என்னுமிடத்தில் சோழ சைன்யத்துக்கும் இராஷ்டிரகூடப் படைகளுக்கும் பயங்கரமான பெரும்போர் நடந்தது. இந்தப் போரில் எதிரிப் படைகளை அதாஹதம் செய்து தன் வீரப் புகழை நிலை நாட்டிய பிறகு, இராஜாதித்யன் போர்க்களத்தில் உயிர் துறந்து வீர சொர்க்கம் அடைந்தான். இவனும் பல்லவ அபராஜிதவர்மனைப் போல் யானை மீதிருந்து போர் புரிந்து யானை மேலிருந்தபடியே இறந்தபடியால், இவனை "ஆனைமேல்

• விஜயாலயன்



துஞ்சிய தேவன்'' என்று கல்வெட்டுச் சாஸனங்கள் போற்றிப் புகழ்கின்றன.

இராஜாதித்யன் மட்டும் இறந்திராவிட்டால், அவனே பராந்தக சக்கரவர்த்திக்குப் பிறகு சோழ சிம்மாசனம் ஏறியிருக்க வேண்டும். இவனுடைய சந்ததிகளே இவனுக்குப் பின்னர் முறையாகப் பட்டத்துக்கு வந்திருக்க வேண்டும்.

ஆனால் இளவரசன் இராஜாதித்யன் பட்டத்துக்கு வராமலும் சந்ததியில்லாமலும் இறந்துவிடவே, இவனுடைய இளைய சகோதரர் **கண்டராதித்த தேவர்** தந்தையின் விருப்பத்தின்படி இராஜகேசரி பட்டத்துடன் சிங்காதனம் ஏறினார்.

இவர் தமது தந்தையையும் பாட்டனையும் போலவே சிவபக்தி மிகுந்தவர். அத்துடன் தமிழன்பு மிக்கவர். உண்மையில் இவருக்கு இராஜ்யம் ஆளுவதில் அவ்வளவு சிரத்தையே இருக்கவில்லை. ஆலய வழிபாட்டிலும் தமிழ் இன்பத்திலும் அதிகமாக ஈடுபட்டிருந்தார். மகான்களாகிய நாயன்மார்களைப் பின்பற்றிச் சிவபெருமான் மீது துதிப்பாடல்கள் பாடினார். 'திருவிசைப்பா' என்று வழங்கும் இப்பாடல்களில் கடைசிப் பாட்டில் இவர் தம்மைப் பற்றியே பின்வருமாறு சொல்லிக் கொண்டிருக்கிறார்.

**"சீரான்மல்கு தில்லைச்**
**செம்பொன்**
**அம்பலத்தாடி தன்னைக்**
**காரார் சோலைக்கோழி வேந்தன்**
**தஞ்சையர்கோன் கலந்த**
**ஆராவின் சொற்**
**கண்டராதித்தன்**
**அருந்தமிழ் மாலை வல்லார்**
**பேரா உலகிற் பெருமை**
**யோடும்**
**பேரின்ப மெய்துவரே!"**

விஜயாலயனுக்குப் பிற்பட்ட சோழ மன்னர்கள் பழையாறையிலும் தஞ்சையிலும் வசித்தபோதிலும் பூர்விகச் சோழத் தலைநகர் உறையூர் என்னும் பாத்தியதையை விட்டு விடுவதில்லை. உறையூருக்கு இன்னொரு பெயர் கோழி என்பதாகும். ஆகையால் சோழ மன்னர்கள் தங்களைக் "கோழி வேந்தர்" என்று சொல்லிக் கொண்டார்கள்.

கண்டராதித்த தேவர் சிம்மாசனத்திலிருந்து பெயரளவில் அரசு புரிந்தபோதிலும், உண்மையில் அவருடைய இளைய சகோதரனாகிய **அரிஞ்சயன்** தான் இராஜ்ய விவகாரங்களைக் கவனித்து வந்தான். இராஜாதித்யனுக்குத் துணையாக அரிஞ்சயன் திருநாவலூர் முதலிய இடங்களில் சைன்யங்களுடன் தங்கியிருந்தான். இராஷ்டிரகூடர்களுடன் வீரப் போர் நடத்தினான். தக்கோலத்தில் சோழ சைன்யத்துக்கு நேர்ந்த பெருந் தோல்வியை விரைவிலேயே வெற்றியாக மாற்றிக் கொண்டான். இராஷ்டிரகூடர் படையெடுப்பைத் தென்பெண்ணைக்கு

அப்பாலேயே தடுத்து நிறுத்தினான்.

எனவே, இராஜகேசரி கண்டராதித்த சோழர் தம் தம்பி அரிஞ்சயனுக்கு யுவ ராஜ பட்டம் சூட்டி, அவனே தமக்குப் பின் சோழ சிங்காதனத்துக்கு உரியவன் என்றும் நாடறியத் தெரிவித்து விட்டார்.

இவ்விதம் கண்டராதித்தர் முடிவு செய்ததற்கு இன்னொரு முக்கியக் காரண மும் இருந்தது. இவருடைய மூத்த மனைவி இவர் பட்டத்துக்கு வருவதற்கு முன்பே காலமாகி விட்டாள். பிறகு வெகு காலம் கண்டராதித்தர் மணம் புரிந்து கொள்ளவில்லை.

ஆனால் இவருடைய தம்பி அரிஞ்சய னுக்கோ அழகிலும் அறிவிலும் ஆற்ற லிலும் புதல்வன் இருந்தான். பாட்ட னாரின் பராந்தகன் என்னும் பெயரையும், மக்கள் அளித்த சுந்தர சோழன் என்னும் காரணப் பெயரையும் சூட்டிக் கொண் டிருந்தான்.

எனவே, தமக்குப் பிறகு தமது சகோ தரன் அரிஞ்சயனும் அரிஞ்சயனுக்குப் பிறகு அவனுடைய புதல்வன் சுந்தர சோழனும் பட்டத்துக்கு வரவேண்டும் என்று கண்டராதித்தர் திருவுளங்கொண் டார். இந்த ஏற்பாட்டிற்குச் சாமந்த கணத்தினர், தண்டநாயகர்கள் பொது ஜனப் பிரதிநிதிகள் எல்லாருடைய சம் மதத்தையும் ஒருமனதாகப் பெற்றுப் பகிரங்கமாக உலகறியத் தெரிவித்தும் விட்டார்.

இந்த ஏற்பாடுகள் எல்லாம் நடந்து முடிந்த பிறகு கண்டராதித்தரின் வாழ்க் கையில் ஓர் அதிசய சம்பவம் நிகழ்ந்தது. மழவரையன் என்னும் சிற்றரசன் திருமகளை அவர் சந்திக்கும்படி நேர்ந் தது. அந்த மங்கையர் திலகத்தின் அழகும் அடக்கமும் சீலமும் சிவபக்தியும் அவர் உள்ளத்தைக் கவர்ந்தன. முதிர்ந்த பிராயத்தில் அந்தப் பெண்மணியை மணந்து கொண்டார். இந்தத் திருமணத் தின் விளைவாக உரிய காலத்தில் ஒரு குழந்தையும் உதித்தது. அதற்கு மதுராந் தகன் என்று பெயரிட்டுப் பாராட்டிச் சீராட்டி வளர்த்தார்கள். ஆனால் அரசர், அரசி இருவருமே இராஜ்யம் சம்பந்தமாக முன்னம் செய்திருந்த ஏற்பாட்டை மாற்ற விரும்பவில்லை. தம்பதிகள் இருவரும் சிவபக்தியிலும், விரக்தி மார்க்கத்திலும் ஈடுபட்டவர்களாதலால் தங்கள் அரு மைப் புதல்வனையும் அந்த மார்க்கத் திலேயே வளர்க்க விரும்பினார்கள். கேவ லம் இந்த உலக சாம்ராஜ்யத்தைக் காட்டிலும் சிவலோக சாம்ராஜ்யம் எவ் வளவோ மேலானது என்று நம்பியவர் களாதலால், அந்தச் சிவலோக சாம்ராஜ் யத்துக்கு உரியவனாக மதுராந்தகனை வளர்க்க ஆசைப்பட்டார்கள். ஆகையால் கண்டராதித்தர் தமக்குப் பிறகு தம் சகோதரன் அரிஞ்சயனும் அவனுடைய சந்ததிகளுமே சோழ சாம்ராஜ்யத்துக்கு உரியவர்கள் என்ற தமது விருப்பத்தைப் பகிரங்கப்படுத்தி நிலைநாட்டினார்.

எனவே, இராஜாதித்தன், கண்டராதித் தர் என்னும் இரு உரிமையாளர் வம்சத் தைத் தாண்டி அரிஞ்சயன் வம்சத்தாருக் குச் சோழ சிங்காதனம் உரிமையாயிற்று.

கண்டராதித்தருக்குப் பிறகு அதிக காலம் பரகேசரி அரிஞ்சயன் ஜீவிய வந்தனாக இருக்கவில்லை. ஒரு வருஷத் திலேயே தமையனாரைப் பின்தொடர்ந்து தம்பியும் கைலாச பதவிக்குச் சென்று விட்டான்.

பின்னர், இளவரசர் சுந்தர சோழருக்கு நாட்டாரும் சிற்றரசர்களும் பிற அரசாங்க அதிகாரிகளும் சேர்ந்து முடிசூட்டி மகிழ்ந் தார்கள். இராஜ கேசரி சுந்தர சோழரும் அதிர்ஷ்டவசத்தினால் தமக்குக் குக் கிடைத்த மகத்தான பதவியைத் திறம் படச் சிறப்பாக வகித்தார். ஆட்சியின் ஆரம்பக் காலத்தில் பல வீரப் போர்கள் புரிந்து பாண்டிய நாட்டையும் தொண்டை மண்டலத்தையும் மீண்டும் வென்றார். இராஷ்டிரகூடப் படைகளைத் தென்பெண்ணைக் கரையிலிருந்து விரட்டி அடித்தார்.

சுந்தர சோழ சக்கரவர்த்தியின் புதல் வர்களான ஆதித்த கரிகாலரும் அருள் மொழிவர்மரும் தந்தையை மிஞ்சக்கூடிய இணையற்ற வீரர்களாயிருந்தார்கள். அவர்கள் இருவரும் தந்தைக்குப் பரி பூரண உதவி செய்தார்கள். அவர்கள் மிகச் சிறுபிராயத்திலேயே போருக்குச் சென்று முன்னணியில் நின்று போர் புரிந்தார்கள்; அவர்கள் சென்ற போர் முனைகளிலெல்லாம் விஜயலக்ஷ்மி சோழர்களின் பக்கமே நிலைநின்று வந்தாள்.

முப்பத்தொன்றாம் அத்தியாயம்

# “திருடர்! திருடர்!”

விஜயாலய சோழர் முதல், இரண்டாம் பராந்தகராகிய சுந்தர சோழர் வரையில் சோழ மன்னர்களின் உயிர்ச் சித்திரங்களை நம் வீரன் வந்தியத்தேவன் பார்த்து மகிழ்ந்தான். ஆஹா! இவர்களில் ஒவ்வொருவரும் எப்பேர்ப்பட்டவர்கள்? எத்தகைய மஹாவீரர்கள்! உயிரைத் திரணமாக மதித்து எவ்வளவு அரும்பெரும் செயல்களை இயற்றியிருக்கிறார்கள்!

• கண்டராதித்தர்



கதைகளிலும் காவியங்களிலும் கூட இப்படிக் கேட்டதில்லையே? இத்தகைய மன்னர் பரம்பரையைப் பெற்ற சோழ நாடு பாக்கியம் செய்த நாடு; இன்று அவர்களுடைய ஆட்சியின் கீழ் உள்ள நாடுகள் எல்லாம் பாக்கியம் செய்த நாடுகள்தாம்.

மேற்கூறிய சோழ மன்னர்களின் சரித்திரங்களைச் சித்திரித்த காட்சிகளில் இன்னொரு முக்கியமான அம்சத்தை வந்தியத்தேவன் கவனித்தான். ஒவ்வொரு சோழ அரசருக்கும் பழுவூர்ச் சிற்றரசர் வம்சத்தினர் தலைசிறந்த உதவிகள் செய்திருக்கிறார்கள்; வீரத் தொண்டுகள் பல புரிந்து வந்திருக்கிறார்கள்.

முத்தரையர் வசத்திலிருந்த தஞ்சைக் கோட்டையை முற்றுகையிட்டு முதலில் அந்நகரில் பிரவேசித்தவர் ஒரு பழுவேட்டரையர். இரு கால்களும் இழந்த விஜயாலய சோழன் திருப்புறம்பியம் போர்க்களத்தில் புகுந்து அதிபராக்கிரமச் செயல்களைப் புரிந்தபோது அவனுக்குத் தோள் கொடுத்துத் தூக்கிச் சென்றவர் ஒரு பழுவேட்டரையர். ஆதித்த சோழன் தலையில் கிரீடத்தை வைத்துப் பட்டாபிஷேகம் செய்வித்தவர் ஒரு பழுவேட்டரையர். ஆதித்த சோழன் யானை மீது பாய்ந்து பல்லவ அபராஜிதவர்மனைக் கொன்றபோது ஆதித்தன் பாய்வதற்கு வசதியாக முதுகும் தோளும் கொடுத்தவர் ஒரு பழுவேட்டரையர். பராந்தக சக்ரவர்த்தி நடத்திய பல போர்களில் முன்னணியில் புலிக்கொடியை எடுத்துச் சென்றவர்கள் பழுவேட்டரையர்கள். இராஜாதித்யன் போர்க்களத்தில் காயம்பட்டு

விழும் போது அவனை ஒரு பழுவேட்டரையர் தன் மடியின் மீது போட்டுக் கொண்டு, "இராஷ்டிரகூடப் படைகள் தோற்று ஓடுகின்றன!" என்ற செய்தியைத் தெரிவித்தார். அவ்விதமே அரிஞ்சயருக்கும் சுந்தர சோழருக்கும் வீரத் தொண்டுகள் புரிந்து உதவியவர்கள் பழுவேட்டரையர்கள்தாம்.

இதையெல்லாம் சித்திரக் காட்சிகளில் பிரத்யட்சமாகப் பார்த்த வல்லவரையன் சொல்ல முடியாத வியப்பில் ஆழ்ந்தான். அண்ணன் தம்பிகளான பழுவேட்டரையர்கள் இன்று சோழ நாட்டில் இவ்வளவு ஆதிக்கம் வகிப்பதற்குக் காரணம் இல்லாமற் போகவில்லை. சுந்தர சோழர் எது விஷயத்திற்கும் அவர்களுடைய யோசனையைக் கேட்டு நடப்பதிலும் வியப்பில்லை.

ஆனால், தான் இப்போது பெரிய சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டிருப்பது என்னவோ நிச்சயம். சின்னப் பழுவேட்டரையருக்குத் தன் பேரில் ஏதோ சந்தேகம் ஜனித்து விட்டது. பெரியவர் வந்து விட்டால் அந்தச் சந்தேகம் ஊர்ஜிதமாகி விடும். முத்திரை மோதிரத்தின் குட்டு வெளியாகிவிடும். பிறகு தன்னுடைய கதி அதோகதிதான்! சின்னப் பழுவேட்டரையரின் நிர்வாகத்திலுள்ள தஞ்சாவூர் பாதாளச் சிறையைப் பற்றி வல்லவரையன் கேள்விப்பட்டிருந்தான். அதில் ஒருவேளை தன்னை அடைத்து விடக்கூடும். பாதாளச் சிறையில் ஒருவனை ஒரு தடவை அடைத்து விட்டால், பிறகு திரும்பி வெளியேறுவது அநேகமாக நடவாத காரியம். அப்படி வெளியேறினாலும், எலும்பும் தோலுமாய், அறிவை அடியோடு இழந்து, வெறும் பித்துக்குளியாகத்தான் வெளியேற முடியும்!

ஆகா! இத்தகைய பேரபாயத்திலிருந்து தப்புவது எப்படி? ஏதாவது யுக்தி செய்து பெரியவர் வருவதற்குள்ளே கோட்டையை விட்டு வெளியேறி விட வேண்டும். பழுவூர் இளையராணியைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை கூட நம் வீரனுக்கு இப்போது போய் விட்டது. உயிர் பிழைத்து, பாதாளச் சிறைக்குத் தப்பி, வெளியேறி விட்டால் போதும்! ஓலையில்லாவிட்டாலும் குந்தவைப் பிராட்டியை நேரில் பார்த்துச் செய்தியைச் சொல்லி விடலாம். நம்பினால் நம்பட்டும்; நம்பாவிட்டால் போகட்டும்; ஆனால் தஞ்சைக் கோட்டையை விட்டு வெளியேறுவதற்கு என்ன வழி?

தான் உடுத்தியிருந்த பழைய ஆடைகள் என்ன ஆயின என்ற சந்தேகம் திடீரென்று வந்தியத்தேவன் மனத்தில் உதயமாயிற்று. தன்னுடைய உடைகளைப் பரிசிலனை செய்து பார்ப்பதற்காகவே தனக்கு இவ்வளவு உபசாரம் செய்து புது ஆடைகளும் கொடுத்திருக்கிறார்கள்! குந்தவை தேவியின் ஓலை தளபதியிடம் அகப்பட்டிருக்க வேண்டும்; சந்தேகமில்லை. தான் புலவர்களுடன் திரும்பிப் போய்விடா வண்ணம் தன் கையை இரும்புப் பிடியாக அவர் பிடித்ததின் காரணமும் இப்போது தெரிந்தது. ஒரு ஆளுக்கு மூன்று ஆளாய்த் தன்னுடன் அனுப்பிய காரணமும் தெரிந்தது. ஆகா! ஒரு யுக்தி! உடனே ஒரு யுக்தி கண்டு பிடிக்க வேண்டும்! – இதோ தோன்றி விட்டது ஒரு யுக்தி! பார்க்க வேண்டியதுதான் ஒரு கை! வீரவேல்! வெற்றி வேல்!

வந்தியத்தேவன் சித்திர மண்டபத்தின் பலகணி வழியாக வெளியே பார்த்தான். சின்னப்பழுவேட்டரையர் பரிவாரங்கள் புடைசூழக் குதிரை மேல் வந்து கொண்டிருந்தார். ஆகா! இதுதான் சமயம்! இனி ஒரு கணமும் தாமதிக்கக் கூடாது.

வாசற்படிக்குப் பக்கத்தில் உட்கார்ந்து சொக்கட்டான் ஆடிய ஏவலாளர்கள் மூவரும் ஆட்டத்தை நிறுத்திவிட்டு எழுந்தார்கள். மாளிகை வாசலில் சின்னப் பழுவேட்டரையர் வரும் சப்தம் அவர்களுடைய காதிலும் விழுந்தது.

வந்தியத்தேவன் அவர்கள் அருகில் நெருங்கி, "அண்ணன்மார்களே! நான் தரித்திருந்த உடைகள் எங்கே?" என்று கேட்டான்.

"அந்த அழுக்குத் துணிகள் இப்போது என்னத்துக்கு? எஜமான் உத்தரவுப்படி புதிய பட்டுப் பீதாம்பரங்கள் உனக்குக் கொடுத்திருக்கிறோமே!" என்றான் ஒருவன்.



• பராந்தகன்

"எனக்குப் புதிய உடைகள் தேவையில்லை. என்னுடைய பழைய துணிகளே போதும். அவற்றைச் சீக்கிரம் கொண்டு வாருங்கள்!"

"அவை சலவைக்குப் போயிருக்கின்றன. வந்த உடனே தருகிறோம்!"

"அதெல்லாம் முடியாது! நீங்கள் திருடர்கள். என்னுடைய பழைய உடையில் பணம் வைத்திருந்தேன். அதைத் திருடிக் கொள்வதற்காக எடுத்திருக்கிறீர்கள். உடனே கொண்டு வாருங்கள். இல்லாவிட்டால்....!"

"இல்லாவிட்டால் என்ன செய்து விடுவாய், தம்பி! எங்கள் தலையை வெட்டித் தஞ்சாவூருக்கு அனுப்பி விடுவாயோ? ஆனால் இதுதான் தஞ்சாவூர்! ஞாபகம் இருக்கட்டும்!"

"அடே! என் துணிகளை உடனே கொண்டு வருகிறாயா? இல்லையா?"

"இருந்தால்தானே தம்பி கொண்டு வருவேன்! அந்த அழுக்குத் துணிகளை வெட்டாற்று முதலைகளுக்குப் போட்டு விட்டோம்! முதலை வயிற்றில் போனது திரும்பி வருமா?"

"திருட்டுப் பயல்களே! என்னுடன் விளையாடுகிறீர்களா! இதோ உங்கள் எஜமானரிடம் சென்று சொல்கிறேன், பாருங்கள்!" என்று வந்தியத் தேவன் வாசற் படியைத் தாண்டத் தொடங்கினான். மூவரில் ஒருவன் அவனைத் தடுப்பதற்காக நெருங்கினான். வந்தியத்தேவன் அவனுடைய மூக்கை நோக்கிப் பலமாக ஒரு குத்து விட்டான். அவ்வளவுதான், அந்த ஆள் மல்லாந்து கீழே விழுந்தான். அவன் மூக்கிலிருந்து இரத்தம் சொட்டத் தொடங்கியது.

இன்னொருவன் வந்தியத்தேவனுடன் மல்யுத்தம் செய்ய வருகிறவனைப் போல இரண்டு கைகளையும் முன்னால் நீட்டிக் கொண்டு வந்தான். நீட்டிய கைகளை வந்தியத்தேவன் பற்றிக் கொண்டு, தன் கால்களில் ஒன்றை எதிராளியின் கால்களின் மத்தியில் விட்டு ஒரு முறுக்கு முறுக்கினான். அவ்வளவுதான்; அந்த மனிதன் 'அம்மாடி' என்று அலறிக் கொண்டு கீழே உட்கார்ந்து விட்டான். இதற்குள் மூன்றாவது ஆளும் நெருங்கி வரவே, வந்தியத்தேவன் தன் கால்களை எடுத்துக் கொண்டு ஒரு காலால் எதிரியின் முழங்கால் முட்டைப் பார்த்து ஒரு உதை விட்டான். அவனும் அலறிக் கொண்டு கீழே விழுந்தான்.

மூன்று பேரும் சட்புட்டென்று எழுந்து மறுபடியும் வந்தியத்தேவனைத் தாக்குவதற்கு வளைத்துக் கொண்டு வந்தார்கள். வெகு ஜாக்கிரதையாகவே வந்தார்கள்.


இதற்குள் மாளிகை வாசலில் குதிரை வந்து நின்ற சத்தம் கேட்டது.


வந்தியத்தேவன் தன் குரலின் சக்தியையெல்லாம் உபயோகித்துத் "திருடர்கள்! திருடர்கள்!" என்று சத்தமிட்டுக் கொண்டே அவர்கள் மீது பாய்ந்தான். மூன்று பேரும் அவனைப் பிடித்து நிறுத்தப் பார்த்தார்கள். மறுபடியும் "திருட்டுப் பயல்கள்! திருட்டுப் பயல்கள்!" என்று பெருங்குரலில் கூச்சலிட்டான் வந்தியத் தேவன்.

அச்சமயம் சின்னப் பழுவேட்டரையர், "இங்கே என்ன ரகளை?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்தார்.

(தொடரும்)

# சோர்வு கொள்ளாதே!





சோர்வு கொள்ளாதே மனமே — உன்
ஆர்வமெல்லாம் ஒருநாள் பூரணமாகும்

காரிருள் சூழ்ந்த நீளிரவின் பின்
காலை மலர்தல் கண்டனை அன்றோ
தாரணி உயிர்க்கும் தாமரை சிலிர்க்கும்
அளிகுலம் களிக்கும் அருணனும் உதிப்பான்

அகத்திருள் நீங்கவும் அருளொளி ஓங்கவும்
அன்பு தழைக்கவும் துன்பங்கள் தீர்க்கவும்
அம்பிகை பாலன் வள்ளி மணாளன்
அன்புடன் வருவான் இன்னருள் புரிவான்


('அமரதாரா'வில் இடம்பெறும் பாடல்)







அமரர் கல்கி



# ஸ்ரீ ராம நாமம் ஸஹஸ்ர நாமங்களுக்கு ஒப்பாகும்!

## ஸ்ரீ ராமசந்த்ர பரப்ரஹ்மணே நம:
## லிப்கோவின் மகத்தான வெளியீடுகள்!

கீர்த்தனாசார்ய ஸ்ரீ உ.வே. C.R. ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்களின்

# ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

பால காண்டம் முதல் யுத்த காண்டம் முடிய இரண்டு பாகங்களில் மொத்தம் 1800 பக்கங்கள்

*ஒவ்வொரு முக்கிய கட்டத்திற்கும் முழுப் பக்கப் படங்கள்*

| | | |
|---|---|---|
| தமிழ் வசனம் | : | விலை ரூ. 250; தபாலில் ரூ. 274 |
| ஆங்கிலப் பதிப்பு | : | விலை ரூ. 250; தபாலில் ரூ. 274 |

| | |
|---|---|
| ஸுந்தர காண்டம் – ஸ்ரீ C.R.S. தமிழ் மொழிபெயர்ப்பு | ரூ. 56.00 |
| ஸுந்தர காண்டம் – மூலம் தமிழில் | ரூ. 20.00 |
| ஸுந்தர காண்டம் – மூலம் ஸம்ஸ்க்ருதத்தில் | ரூ. 30.00 |
| ஸுந்தர காண்டம் – நவரத்ந மந்த்ரமாலா – தமிழ் | ரூ. 7.00 |
| ஸுந்தர காண்டம் – நவரத்ந மந்த்ரமாலா – ஆங்கிலம் | ரூ. 6.00 |
| ஸகல கார்ய ஸித்தியும் ஸ்ரீமத் ராமாயண பாராயணமும் (ஸ்தோத்ர மாலையுடன்) | ரூ. 35.00 |
| கம்ப ராமாயணம் (கதைச் சுருக்கம்) | ரூ. 45.00 |
| ஸ்ரீமத் ராமாயண பாராயண வகைகளும், முறைகளும், ஸ்ரீ ராமபூஜா மந்த்ரானுஷ்டான க்ரமமும் | ரூ. 2.00 |
| ஸ்ரீ வீர ஆஞ்ஜநேயர் | ரூ. 6.00 |
| ஸ்ரீ ராம ஹ்ருதயம் | ரூ. 2.50 |
| தசாபுக்திகளும் ஸ்ரீமத் ராமாயண பாராயணமும் | |
| ஸூரிய, சந்திர, குஜ, ராகு, புத, கேது ஒவ்வொன்றும் | ரூ. 2.00 |
| சனி, சுக்ரன் ஒவ்வொன்றும் | ரூ. 4.00 |
| ரகுவம்ச மஹாகாவ்யம் | ரூ. 75.00 |
| ஸ்ரீ ரகுவீர கத்யம் – ஸம்ஸ்க்ருதத்திலும், தமிழிலும் | ரூ. 1.00 |
| ஸ்ரீ ராம ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் – தமிழில் | ரூ. 3.00 |
| ஸ்ரீ ஹநுமார் ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் – தமிழில் | ரூ. 4.00 |
| Chitra Ramayanam — Story of Sri Rama in words in bold types and pictures in two colours | Rs. 20.00 |
| Sri Raghava Yadaveeyam | Rs. 6.00 |

*அஞ்சல் செலவைத் தவிர்க்க உங்களூர் புத்தகக் கடையில் கேளுங்கள்.*
*இலவச முழு விலைப் பட்டியலுக்கு எழுதுக.*

## தி லிட்டில் ப்ளவர் கம்பெனி

சென்னை - 600 017.

தொலைபேசி : 4341538. மின் அஞ்சல் : varadan@lifcobooks.com


*லிப்கோ - 69 ஆண்டுகளாக ஆன்மீக உலகில் பெரும்புகழ்!*


எங்கள் இணைய முகவரி : (Wed Site Address) http://www.lifcobooks.com

**புத்தகம் பரிசளிப்பீர்! புதுமை படைப்பீர்!**

லிப்கோ விற்பனையாளர்களாக விரும்புவோர் விவரங்களுக்கு எழுதுக.

# வெளிவராத அரசியல் விளம்பரங்கள்!




காங்கிரஸ் (இ),
அக்பர் சாலை, புதுதில்லி.
காலை மடித்து அல்லது நீட்டி, திண்டில் சாய்ந்து அல்லது சுவரில் சாய்ந்து, உறங்கினாலும் உறங்காதது மாதிரியான போஸில் உட்காரக் கூடிய, எந்தக் கட்சி உறுப்பினர்களையும் வரவேற்கிறோம். வயது 80-90 ஆகியிருந்தால்கூடப் பரவாயில்லை. அவ்வப்போது பெருமூச்சு விடவோ, கொட்டாவி விடவோ அனுமதி உண்டு. தலைவர் சோனியாகாந்தியை எதிர்த்து ஒரு வார்த்தைகூடப் பேசி விடாமல், அவர் பேச ஆரம்பித்த உடனேயே பாராட்டவும், தலையாட்டவும் தெரிந்தால் நல்லது.
சீதாராம் கேசரியையோ, நரசிம்மராவையோ பார்த்து வணக்கம் சொல்லாதவர்களாக இருத்தல் அவசியம். சரத்பவார், ராஜேஷ் பைலட் பற்றி அவ்வப்போது ஏதேனும் பரபரப்புத் தகவல் அறிந்தால் வி.ஜார்ஜ், 10 ஜன்பத் சாலைக்கு உடனடியாகத் தெரிவிக்கும் தைரியம் இருக்க வேண்டும். தலைமையின் 'மூட்' மாறுவதற்கு ஏற்ப அனுசரித்து நடக்கத் தெரிந்திருக்க வேண்டும். பயந்த சுபாவம் உள்ள, கொஞ்சம் அதட்டினாலே அரண்டு போய் விடுகிற கட்சியின் உறுப்பினர்களுக்கு முன் உரிமை வழங்கப்படும்.
தமிழ்மாநில காங்கிரஸ்,
சத்தியமூர்த்தி பவன், சென்னை.
தலைவர் தேவை
தில்லி அரசியலில் சிக்காமல், தமிழ்நாட்டு அரசியலையும் கொஞ்சமாவது குழப்பமாக்கி, என்ன செய்வது என்று தெரியாமல் முழி முழியென்று முழித்துக் கொண்டிருக்கும் ஒரு கட்சிக்கு அவசரமாக ஒரு தலைவர் தேவை. வடநாட்டு மீடியாக்காரர்களைத் திணற வைக்கிற மாதிரி, பாக்கைக் கடித்துமென்று கொண்டே பத்திரிகையாளர் கூட்டத்தை நடத்தாதவராக இருக்க வேண்டும். ரஜினி புகழ் பாடாதவராக இருத்தல் இன்னும் நல்லது. தி.மு.க தலைமை கையைப் பிடித்துக் கொண்டிருக்கிறதே என்று முழுமையாக நம்பி, கண்ணை இறுக மூடிக்கொண்டு நடக்காதவராக இருப்பது அவசியம். தோழமைக் கட்சியாகச் சேர விரும்பும் தலைவர்களை அறிவாலயத்துக்குப் போ, சத்தியமூர்த்தி பவனுக்கு வா என்று பந்தா செய்து, பந்தாடாமல் இருப்பவர்களுக்குப் பிரகாசமான வாய்ப்பு உண்டு.
கற்பனை: சாருகேசி

# வண்டார்

ரதம் நின்று கொண்டிருந்தது, புறப்படத் தயாராக. உயரமும் பிரும்மாண்டமும் ஆகிருதியுமான ரதம். நாற்புறமும் சப்பரங்கள் காற்றில் ஆட, குறுக்கும் நெடுக்குமாகப் பீடத்தைப் பிணைத்திருந்த கனமான கயிறுகளின் மேலெல்லாம் பூச்சிதறல். வெயில் பட்டுப் பிரகாசிக்கும் உற்சவரின் திருமுகம். அலங்கார நேர்த்தியில் கிறங்கி நிற்க இடம் தராத கூட்ட நெரிசல். வார்த்தைகள் புரிபடாமல், ஹோஹோ என்று சப்தம் திசைகளை மோதிக் கிழிக்க, கற்பூரம் ஏற்றி, தேங்காய் உடைத்தார்கள். ரதத்தின் மேல் வியர்த்து அமர்ந்து, சாமரம் விசிக் கொண்டிருந்த பட்டாச்சாரியார் விரல் உயர்த்தினார். புவி பிளந்து புறப்பட்டது போல் சக்கரங்கள் நிலைபெயர்ந்தன.

முண்டியடிக்கிற ஜனங்களுடன் மல்லுக்கு நிற்கிற போலீஸ். ஒரு குன்று தள்ளாடி நடப்பதுபோல், வீதியை அடைத்து உருளுகிற ரதம்.

நான் குளத்தின் வடகரையில் நின்று கொண்டிருந்தேன், படார் படாரென்ற அதிர்வேட்டுத் தாக்குதலில் கதிகலங்கும் என் செவிப்பறை. ரதம் மேலும் நெருங்கி வர, என்னால் அங்கு நிற்க முடியாமல் போகக் கூடும். அனிச்சையாக என் கரங்கள், குளத்தின் கட்டைச் சுவரைப் பற்றிக் கொண்டன. உருகும் வெயிலில் என் முகம் இளகிச் சொட்டியது. துடைத்துக் கொண்டேன்.



# குழலி

கண்ணபுரத்துப் பாட்டிகள் சிலர், பேண்ட் அணிந்த என் மீது அன்னியப் பார்வை வீசியபடி, உதடுகள் பிரபந்தம் முணுமுணுக்கப் போனார்கள்.



இதே மாசித் தேரை நானும் பற்றி இழுத்திருக்கிறேன். அப்போது வெயிலோ, வியர்வையோ, அதிர்வேட்டுச் சப்தமோ, நெரிசலோ ஒரு பொருட்டாகத் தெரிந்ததில்லை. வெறும் உற்சாகப் பிழம்பாக நாளெல்லாம் பிரபந்தம் சொல்லித் திரிந்த ஞாபகங்கள். தேர் வடம் பற்றிச் சிவந்த கரங்கள், அடுத்தத் தேர் வரை சுகமாக நினைவில் எரியும்.

கோவில், பெருமாள், முனியோதரம் பொங்கல், சந்தை வகுப்பு, அரை வட்டக் குடுமி, குளத்துப் பாசி, உடையவர் சந்நிதிப் பிரசாதம் எல்லாம் வெறும் ஞாபகங்களாகிப் போய் எத்தனை வருஷங்கள்!

உத்தியோக ரீதியில் அப்பா இடம் மாறிப் போக, எட்டாங் கிளாஸுடன் என் குடுமி, கிராப் ஆகிவிட்டது. அடுத்த இரு வருடங்களில், பாடமான பாசுரமெல்லாம் நினைவை விட்டு இடம் பெயர, சந்தி பண்ணுவது கூட நின்று போய், பிளஸ் டூவின் போது சாதாரணமானவன் ஆகிப் போனேன். என் அடையாளங்கள் எதுவும் மிச்சம் இல்லை. தஞ்சை வட்டாரத்துப் பிரத்தியேக மொழி மட்டும் கொஞ்ச நாள் கூடவே வந்தது. சென்னையைத் தொட்டதும் அதுவும் விடைபெற்றுப் போனது. திருக்கண்ணபுரத் தொடர்பே அப்புறம் இல்லை.

என் மாமா, அத்தைப் பாட்டி, பெரியப்பா குடும்பம், அவரது மாமனார் வீட்டு மனிதர்கள் எல்லாரும் வருஷங்களின் இடைவெளியில் சொந்த மண்ணுக்கு அந்நியமாகிப் போய், சென்னைத் தெருக்களில் புழுதியுடன் குடித்தனம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள், என் குடும்பம் போலவே. திடீரென்று எனக்கு மட்டும் ஊர் ஞாபகமும் தேர் ஞாபகமும் வரக் காரணம் ஒரு கனவு.

கூட்டம் என்னை நெருங்கிக்

**பா. ராகவன்**




கொண்டிருந்தது. வினோதமான சப்த ஜால முடன் தடதடக்கும் தேர் எனக்குப் பத்தடி முன்னால் வந்து விட்டது.

'ஹோ ஹோ – ஹோ ஹோ' – சொற்கள் கரைந்து, சப்தமாகிற ஆச்சர்யம். சப்தத்தின் உச்சக்கட்ட வெளிப்பாட்டில் மௌனத்தின் வாசல் இருக்கும் போலும். புதையும் மண் சாலையில் கரகரத்து முன்னேறும் ரதத்தின் ராட்சஸச் சக்கரங்கள்.

ஓடிப் போய் அதைப் பிடித்து நிறுத்தி, வலது சக்கரத்தின் உட்புறம் உற்றுப் பார்க்க எழுகிற வேட்கை. எனக்குள் ஒரு சிற்பி, என்றோ ஒருநாள் எழுந்து உட்கார்ந்து உளி கொண்டு என் பெயரை அங்கே செதுக்கப் பண்ணியிருக்கிறான். என் பெயரை மட்டும் இல்லை. கூடவே –

ரதம் நெருங்கிக் கடக்கிற வேளையில் என் பார்வை அதன் வலது சக்கரத்தில் நிலைகுத்தி நின்றது. சுழலும் சக்கரத்தினடியில் ரகசியச் செதுக்கல். இருக்குமா இன்றும்?

கடகடவென்று உருண்டு விரைந்து, என் மேல் மோதிக் கவிழ்க்கிற சக்கரம். நினைவு பிசகும் வேளையில் கவிகிற கருநீல இருள். ஒரு மெழுகுச் சுடர் போல இருள் கிழித்துப் புலனாகிற வண்டார்குழலியின் முக மொட்டு.

இன்னமும் கூட்டம் சேராத வடக்குப் படித்துறை. காலைக் குளிருக்கு உடலைச் சுருக்கி, ஹூஹூ என்று மூச்சு விட்டு நடக்கிற விவசாயிகள். ஒருதரம் நிமிர்ந்து பார்த்து விட்டுப் படுத்துக் கொள்கிற தெருநாய். என் பாதங்கள், வடக்குப் படித்துறையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றன. அத்தனை சீக்கிரம் எழுந்து, வாசல் தெளிக்கிற பட்டாச்சாரியார் மனைவி, என்னை வியப்பாகப் பார்த்தபடி பக்கெட் கரைசலை விசிறிப் போகிறாள்.

படித்துறையை எட்டிப் பார்க்கிறேன். நீர்ப் பரப்பில் சலனம் இல்லை. உடையாத நிலாத்தட்டு. வருடும் காற்றில், அதன் லேசான மிதப்பு. சட்டென்று குனிந்து ஒரு கல்லை எடுத்து நிலவின் மீது வீசுகிறேன். நீர்ப்பரப்பின் சலசலப்பில் நிலா உடைந்து, படித்துறையில் ஒரு முகம் நிமிர்கிறது. வண்டார்குழலி. என் பார்வையில் பட்டு விட்ட பதற்றத்தில், அவசரமாக அள்ளிச் சுருட்டி எழுகிறாள். ஒரு கணம்தான்... அவள் கரங்கள் முகத்துக்கு அரண் ஆகின்றன. என்னமோ பேசுகிறாள். என் காதில் எதுவும் சரிவர விழுகிறதில்லை. அநேகமாகப் போய்விடச் சொல்கிறாள் என்று நினைத்துக் கொள்கிறேன். முடியுமா அது? உடனே போய் விடவா இத்தனை அதிகாலை எழுந்து வருகிறேன்? கண்ணைத் தேய்த்து விட்டுக் கொண்டு, இருளில் அவள் முகத்தை உரித்து, விழுங்கி விடப் பார்க்கிறேன். ம்ஹூம்! லேசில் பிடிபடுகிற அமைப்பா அது? இன்னவித அழகு என்று இலக்கணச் சட்டங்களில் அடித்து நிறுத்தி விடக்கூடிய சௌந்தர்யமா அது?

பின்புறம் சலசலத்து, யாரோ வருகிறார்கள். ஒருகணம்தான். திரும்பிப் பார்த்து, உடனே குழலியைப் பார்க்கத் திரும்பினால், காணோம். சடாரென்று நீரில் குதித்து, நினைவைக் கலைக்கிற உருவத்தைச் சபிக்கிறேன்.

பல் தேய்க்கிறபோது ஆச்சர்யமாக இருந்தது. வண்டார்குழலி. எத்தனையோ வருடங்களாக இல்லாத ஞாபகம் எங்கிருந்து வந்தது?

உடையவர் சந்நிதியில் அதிகாலை சந்தை நடக்கும். வேதம் தமிழ் செய்த மாறனின் பாசுரங்களை வாத்தியார்

சொல்லச் சொல்ல, வரி வரியாக மூன்று தரம் பின்னால் சொல்லுவோம். ஏழு மணி ஆனால், வாத்தியாருக்கு வீட்டிலிருந்து காப்பி வரும். வண்டார்குழலி, அவள் அளவில் பாதி இருக்கும் அந்தப் பித்தளை கூஜாவைத் தூக்கி வருவாள். ரெட்டைப் பின்னலும் சீட்டிப் பாவாடையும்தான் அவளிடத்தில் எத்தனை ஒளி பெற்று விடுகின்றன?

அத்தனை காப்பியையும் வாத்தியார் தம்ளரில் கொட்டி ஊதி ஊதிக் குடித்து முடிக்கும் வரை, வகுப்பு ஓய்வெடுக்கும். பையன்கள் தமக்குள் ஏதாவது ரகசியம் இருந்தால் பேசிக் கொள்வார்கள். அல்லது சீரார் திருவேங்கடமே, திருக்கோவலூரே, மதிற்கச்சி ஊரகமே பேரகமே என்று நெட்டுரு போட்டுக் கொண்டிருப்பார்கள். நான் வண்டார்குழலியைப் பார்த்துக் கொண்டே இருப்பேன். சந்தை கிளாஸில் இருந்துகொண்டு அவளை இப்படிப் பார்ப்பதே பாவம் என்று தோன்றும். ஆனால் பார்க்காமல் இருக்க முடியாது. ஓர் அணில் குஞ்சை சட்டைக்குள் விட்டுக் கொண்டாற்போலக் குறுகுறுக்கும் நினைவுகள். அழகான, சின்னதொரு கள்ளத்தை அப்போதிலிருந்து பொத்தி வளர்க்க ஆரம்பித்தேன்.

**ஊ**ருக்கு, திரிதண்டியிலிருந்து ஜீயர் வந்திருந்தார். உடையவர் சந்நிதியின் விஸ்தாரமான முன் தளத்தில் பித்தளைப் பூண் போட்ட மணை போட்டு, அருகே பிரசாதத் தட்டை ஏகாங்கி கொண்டு வைத்தார். ஜீயர் உட்கார்ந்ததும் வாத்தியார் எங்களை நோக்கி விரலசைக்க, இருபது குரல்களில் பல்லாண்டு ஒலிக்கத் தொடங்கியது. ஜீயர் கண்களை மூடிக் கொண்டார். ஒரு மாறுதலுக்கு, வாத்தியார் உட்காராமல், ஜீயருக்கு இடதுபுறம், அவரை அணைத்தாற்போல நின்று கொண்டார். கைகட்டி, சற்றே முதுகு வளைத்து அவர் நின்ற தோரணை எங்களுக்குப் புதிதாக இருந்தது.

வாத்தியாரையும் ஜீயரையும் மாறி மாறிப் பார்த்தபடி, பாஞ்சசன்னியத்துக்குப் பல்லாண்டு சொன்ன நேரத்தில் வண்டார்குழலி, வழக்கமான ஏழு மணிக் காப்பியுடன் பிரவேசித்தாள். என் உதடுகள் சட்டென்று அசைய மறுத்து நின்றுவிட, எப்பவும் போல் வண்டார் குழலியைப் பார்த்துக் கொண்டே இருக்கத் தொடங்கினேன். அவள் என்னைப் பார்க்க வில்லைதான். நான் பார்க்கிறேன் என்கிற உணர்வு கூட, அத்தனை பேர் நடுவில் எழுவது சாத்தியமில்லைதான். அதனால் என்ன? என் பிரத்தியட்சங்கள் அனைத்தையும் சில கணங்களுக்குக் காணாமல் போக்கி விடும் நிலைக்கு அல்லவா கொண்டு போய் விடுகிறாள்? சந்தை வகுப்பில், சந்தி பண்ணுகிற நேரத்தில், காயத்ரீ சொல்லும் போது கூட கிட்டாத ஒருமுக முனைப்பல்லவா இது? ஆனால் இது கள்ளத்தனம்தான். சந்தேகமில்லை. யாருக்கும் தெரிந்து விடுமோ என்று பதைக்கிற வேகம் எனக்கு மட்டும்தான் தெரியும். வண்டார்குழலி. நிச்சலனக் குளத்தில் கல் மாதிரி ஏதோ ஒன்றை விட்டெறிந்த விண்மீன்.

என் தொடையில் ஒருகரம் அழுத்தியது. 'வாழாட்பட்டு நின்றீர்' என்று விட்ட இடத்தை உதட்டில் அனிச்சையாகப் பற்றிக் கொண்டு, இயல்புக்குத் திரும்பப் பார்த்தேன். அதற்கு முன் பார்வையை ஒருதரம் சுழல விட்டதில், வாத்தியார் என்னையே பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்டேன்.

**கு**ளத்துக்குப் போனவர்கள், கோவிலுக்குப் போனவர்கள், மாடு ஓட்டிப் போனவர்கள், பஞ்சாயத்துக்காரர், மளிகைக் கடைக்காரர் மற்றும் பலர் பார்க்க, அன்று சந்தை முடிந்து ஒரு மணி நேரம் நான் உடையவர் சந்நிதிக்கு வெளியே, வீதியில் கை கட்டி நின்று கொண்டிருந்தேன். வாத்தியார், குரலை உயர்த்திக் கூடப்



''அவார்டு படம்னு சொன்னீங்க. கொஞ்சம் கூட போரடிக்காம ஜாலியா போகுதே?''

'' 'அவார்டு படம்'ங்கறது படத்தோட டைட்டில்! அதைத்தான் சொன்னேன்!''

— அம்பை தேவா

பையன்களை மிரட்டிய தில்லை. என் விதியின் கோர விளையாட்டை அன்று நான் கண்டேன். முகமெங்கும் ஒழுகிப் படர்ந்த அவமானச் சீழ். என்ன நடந்தது என்று, பார்த்துப் போன யாருக்கும் தெரியாதுதான். ஆனால் எனக்குத் தெரியுமே? வாத்தியாருக்குத் தெரிந்து விட்டதே? கடவுளே, என் பாவத்தை எப்படி அலம்பப் போகிறேன்? வாத்தியார் உத்தமர். என் அப்பாவிடமோ, அம்மாவிடமோ ஒரு புகார் சொல்லவில்லை. என்னைக் குதறி எடுத்த அவமானமே என் தண்டனை.

மறுநாள் வகுப்புக்கு அரைமணி முன்னதாகப் போயிருந்தேன். பையன்கள் யாரும் வந்திருக்கவில்லை. வாத்தியார் மட்டும் வந்துவிட்டிருந்தார். ஒரு ரிஷி போலக் கண்மூடி அவர் அமர்ந்திருந்த காட்சியே என்னைக் கலக்கமுறச் செய்தது.

அத்தனை சீக்கிரம் வந்திருக்க வேண்டாம். என்னமோ தவிப்பு. இருப்புக் கொள்ளாத சங்கடம். சந்தை வகுப்பில் என் கடைசி தினம். ஒரு கறையுடன் விடைபெறுகிற துக்கப் புயல் வீச்சு. என் அப்பாவுக்கு ஹெட்மாஸ்டர் பிரமோஷனுடன் கள்ளக்குறிச்சிக்கு மாறுதல் வந்திருந்தது. இனி அவர் கண்ணபுரத்திலிருந்து முடிகொண்டானுக்கு சைக்கிள் மிதிக்க அவசியம் இல்லை.

வாத்தியார் கண் திறந்த போது நான் விழுந்து சேவித்தேன்.

"இங்க வா."

கிட்டே போனேன். படபடக்கிற நெஞ்சம். எந்த க்ஷணமும் உடையத் தயாராக விழிமதகு. பிராயச்சித்தமே இல்லாத பழி.

"நீ நல்ல குழந்தை. குழந்தையாவே இருக்க முடியாது தான். ஆனா, நல்லவனா இருக்க முடியும்."

காற்று கூடக் கலைக்க முடியாத சன்ன தொனியில் வாத்தியார் பேசினார். நான் உயிரற்று இருந்தேன்.

"எட்டாங்கிளாஸ்தானே இப்போ படிக்கறே? இன்னும் நிறையப் படிக்கணும். பள்ளிக் கூடப் பாடமும் படிக்கணும். வேதமும் படிக்கணும். படிப்புதான் நம்மளை மாதிரியான வாளுக்கு ஒரே கவசம். மனசுல இப்போ எதை ஏத்திக்கறியோ, அதுதான் நாளைக்கு வயித்தை நிரப்ப உதவும். புரியறதா நான் சொல்றது?"

நான் தலைகவிழ்ந்து இருந்தேன்.

"போ. போய் உட்கார். மத்த பசங்கள் வரா பார்."

அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டு, என் இடத்தில் போய் உட்கார்ந்தேன். மணி ஏழான போது வாத்தியாருக்குக் காப்பி வந்தது. வாத்தியார் வீட்டு மாமிதான் கூஜாவைக் கொண்டு வந்திருந்தாள்.

**வ**குப்பு முடிந்ததும் வாத்தியாரிடம் விவரம் சொல்லி விடைபெற்றேன். பையன்களிடமும் சொல்லிக் கொண்டேன். நேரே வீட்டுக்குப் போகாமல் தேரடிக்குப் போய்



**இ**ந்த சொகுசு நாற்காலியில் சாய்ந்து கொண்டு, எதிரே குஷனில் கால்களை நீட்டிக் கொண்டால் படுசுகமாகத்தான் இருக்கும். அதற்கான விளம்பரம் தான் இது. ஆனால் ஒரு கால்பந்து தெரிகிறதே, அதற்கு அங்கே என்ன வேலை? வேறொன்றுமில்லை; விரைவில் பிரான்சு நாட்டில் நடக்கவிருக்கும் உலக கால்பந்து போட்டியை டி.வி.யில் பார்த்து ரசிக்க இந்த சொகுசு நாற்காலியையும் குஷனையும் பயன்படுத்துங்கள் என்கிறது விளம்பரம்! இந்த விளம்பரத்தைப் பார்த்துவிட்டு ஏற்கெனவே ஒரு லட்சம் நாற்காலிகளுக்கு ஆர்டர் வந்து விட்டதாம்!

- பாரீஸ் பார்த்தசாரதி.

சக்கர நிழலில் சாய்ந்து உட்கார்ந்து நீண்ட நேரம் அழுது கொண்டே இருந்தேன். என் பாவம் கரைகிற மாதிரி அழுது தீர்த்தேன்.

ஆனாலும் வண்டார்குழலியின் ஞாபகத்தை விரட்டி விட முடியவில்லை. நான் அவளை நினைத்தது, பார்த்தது, தவித்தது, அவமானப்பட்டது எதுவுமே அவளுக்குத் தெரியாது. அவள் அளவில், அவள் அப்பாவின் எத்தனையோ மாணவர்களுள் நானும் ஒருவன். பெயர் கூடத் தெரியுமோ என்னவோ?

மண்ணில் விரல்களால் அளாவிக் கொண்டிருந்தேன். மனம் முழுக்க வண்டார் குழலி. தற்செயலாகக் கையில் அகப்பட்ட ஆணியால், என் பிரக்ஞையே இல்லாமல் என் பெயரையும் அவள் பெயரையும் ரதத்தின் வலது சக்கரத்தின் உள்புறம் செதுக்கி இருந்தேன். இனி ஒன்றுமில்லை. நான் இறந்த பின்பும் அவள் இறந்த பின்பும் பெருமாள் இருப்பார். கோவில் இருக்கும். தேர் இருக்கும். சக்கரத்தில் எங்கள் பெயர்கள் இருந்து கொண்டேயிருக்கும்.

வெயில் உச்சிக்கு ஏறி, மேற்கில் விழுந்தபோது ரதம் நிலைக்கு வந்தது. நான் சத்திரத்துக்குப் போய், கொஞ்ச நேரம் உறங்கி எழுந்து, முகம் கழுவி வீதிக்கு வந்த போது இருட்டி இருந்தது. மெல்ல நடக்க ஆரம்பித்தேன்.

நாங்கள் வசித்த வீடு, படித்துறை, பாடசாலை, உடையவர் சந்நிதி என்று ஒவ்வொரு இடமாகப் பார்த்துக் கொண்டே வந்து, கிழக்கு மாட வீதியில் வாத்தியார் வீட்டு முன் நின்றேன். உள்ளே போகலாமா? காரணமில்லை தான். ஆனால், வாத்தியாரைப் பார்க்க வேண்டும்போலிருந்தது. அவருக்கு ஞாபகமிருக்குமோ, என்னவோ?

என் கண்களுக்குப் புலப்படாவிட்டாலும் அன்றைக்கு அவர் கரத்தில் சக்கரம் சுழன்றிருக்க வேண்டும். மறு கரத்தில் பாஞ்சசன்யம் உதித்திருக்க வேண்டும். நான் அர்ஜுனனாக இல்லாவிட்டாலும் சந்தேகமின்றி அவர் பரமாத்மாதான். அவர் சொற்கள்தானே என்னைச் சமைத்தன? என் பௌருஷத்தைத் தேடித் தந்த கல்வி, அவர் தந்த வரம் அல்லவா?

கதவைத் தட்டி விட்டுக் காத்திருந்தேன். மாமிதான் வந்து, யாரென்று கேட்டாள். என் பெயர், அப்பா பெயர், இருந்த காலம், நடந்த சம்பவங்களை நினைவுகூர்ந்தபின், "உள்ள வா குழந்தே!" என்றாள் மாமி.

வழியும் அறுபது வாட்ஸ் வெளிச்சத்தில் வீட்டின் புராதனம் பழுப்பாகத் தெரிந்தது. கன்னிப்பெட்டி, கோட் ஸ்டாண்ட் துணிகள், வெண்கலப் பாத்திரங்கள் என்று வாத்தியார் வீடு அன்று போலவே இருந்தது. ஒரே ஒரு மாறுதல். ரேடியோ ஸ்டாண்டில் ரேடியோ இல்லை. மாறாக அங்கே பிளாஸ்டிக் மல்லிகை மாலையுடன் ஓரம் பழுப்பேறிய வாத்தியாரின் போட்டோ. ஆறு வருஷங்கள் முன்பு போய்விட்டார் என்று மாமி சொன்னபோது கஷ்டமாக இருந்தது.

"அப்பவும் சரி. இப்பவும் சரி, கஷ்ட ஜீவனம்தான்னு பகவான் எழுதி வெச்சுட்டான். அவர் வேதம் சொல்லிக் குடுத்து என்னமோ கொண்டு வந்தார். இவ, நர்சரி ஸ்கூல்லே இப்போ பாடம் சொல்லிக் குடுத்து வண்டியை ஓட்டிண்டிருக்கோம். பொம்மனாட்டி குழந்தை சம்பாதிச்சு எத்தனை நாளைக்கு சாப்பிட முடியும்? அடுத்த வாரம் திட்டச்சேரிலேருந்து இவளைப் பொண் பார்க்க வரா."

மாமி கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

எனக்குப் புழுக்கம் தாங்க முடியாமல் எழுந்து கொண்டேன்.

"இருடாப்பா. ஒரு காப்பியானா சாப்டுட்டுப் போவே."

"சிரமப்படாதீங்கோ மாமி. நான் சாப்பிட்டுட்டுத்தான் வரேன்."

"வந்தவரெல்லாம் தங்கி விட்டால் இந்த மண்ணில் நமக்கு இடம் ஏதுங்கிற பாட்டு எந்தப் படத்தில் கமலா வருது?"

"அந்த எழவெல்லாம் எனக்குத் தெரியாது. ஊரிலிருந்து வந்த என் அப்பா அம்மா தம்பி தங்கையை இன்னிக்கே ஊருக்குத் திருப்பி அனுப்பிடறேன்! போதுமா?"

– உ. ராஜாஜி



மாமி கேட்கிறவளில்லை. "எல்லாம் பரவாயில்லை. உட்கார், ரெண்டு நிமிஷம். அவ கூட வர நேரம்தான். பக்கத்துத் தெருவிலே ரெண்டு பசங்களுக்கு ட்யூஷன் சொல்லிக் குடுத்துண்டிருக்கா. வந்துடுவா."

மாமி சமையலறையில் மறைந்து விட்டாள். நான் ஹாலில் உட்கார்ந்தேன். வண்டார்குழலி. அவளைப் பற்றிய கதகதப்பான நினைவுகள் எதுவும் இப்போது இல்லை. வருஷங்களில், அவள் தோற்றம், குணம், இயல்பு எல்லாம் மாறியிருக்கலாம். எத்தனையோ பல வருஷங்களுக்கு முன் நான் உன்னை இடைவிடாமல் நினைத்துக் கொண்டிருந்தேன் என்று சொல்ல முடியுமா? 'ரியலி?' என வியந்து, 'ஸோ ஃபன்னி!' என்று என்னைப் பொடிப்பொடியாக்கி விடலாம். எனக்கே கூட ஒரு பக்கம் யோசித்தால் இதெல்லாம் அபத்தமாகத்தான் இருந்தது. அதற்குப் பின்னால் யாரையும் எப்போதும் நான் எண்ணி உருகியதில்லை. வேக வாழ்க்கையில் மென் உணர்வுகளின் இடம் பொருட்படுத்தக்கூடியதாக இருந்ததே இல்லை. எங்கோ மனமூலையில் ஒட்டிக்கிடந்த ஞாபகத் தூசி, கனவில் கிளர்ந்து எழுந்து, கழுத்தைப் பிடித்து இங்கே தள்ளி விட்டது.

**வா**சலில் சப்தம் கேட்டது. செருப்பு அவிழ்க்கிற சப்தம். உள்ளிருந்து, காப்பியுடன் மாமி வந்தாள். "வந்துட்டாளே! இவ தான், என் பொண்ணு!"

யாரென்று புரியாத யோசனையுடன் கை கூப்பும் வண்டார்குழலியைக் கண்டதும் எழுந்து கொண்டேன். என் ஞாபகத்தில் வருடங்கள் உதிர உதிர, பாவாடை அணிந்து, இரட்டைப் பின்னல் ஆட, கூஜாவைத் தூக்கி வரும் பதின்மூன்று வயதுச் சிறுமியைத் தேடி ஓடிக் கொண்டிருந்தேன். ம்ஹூம்! பிடிபடவில்லை. எப்போது தான் பிடிபட்டிருக்கிறது அந்த முகப் பூ?

மாமி என்னை, என் பூர்வ கதையையெல்லாம் அவளுக்குச் சொல்லிக் கொண்டிருந்தாள். பாவம் ஏதுமற்று, என்னை உற்றுப் பார்த்தபடியே அவள் கேட்டுக் கொண்டிருந்தாள்.

பழைய நூல் புடைவையும் ஆபரணங்கள் இல்லாத கழுத்தும் கண்ணாடி வளையலும் காற்றில் கலைந்த, எண்ணெய் காணாத கூந்தலும் தூசி பட்டுப் பழுப்பான பாத மேற்புறமும் விசேஷமாக ஏதுமற்று, சாதாரணமாக இருந்த மாநிற முகமாக வண்டார்குழலி, ஏனைய கண்ணபுரப் பெண்கள் போலவே இருந்தாள். பழைய ஞாபகங்களை மீட்டிப் பார்க்க, ஒரு சின்ன அதிர்வைக் கூட அவள் எனக்குத் தரவில்லை. எனக்குள் எழுந்த உணர்வை ஏமாற்றம் என்று நினைத்துக் கொள்ள முடியவில்லை. ஒருவாறு இதை எதிர்பார்த்திருந்தேனோ என்னவோ? எதற்காக ரயிலேறி இருநூறு கிலோ மீட்டர் பயணம் செய்து, வந்தேன் என்பதுதான் கடைசி வரை புரியவில்லை.

**ம**ரியாதைக்குச் சில நிமிஷங்கள் பேசிக் கொண்டு இருந்துவிட்டு விடை பெற்று வெளியே வந்தேன். 'தள்ளலை' என்று மாமி அங்கேயே படுத்து விட, வண்டார்குழலி மட்டும் வாசல் வரை உடன் வந்தாள்.

"அம்மா எதிரே ஒண்ணும் பேச முடியலை. உங்களை எனக்கு நன்னா ஞாபகம் இருக்கு! அப்போ குடுமி வெச்சுண்டு இருப்பேள். சந்தை கிளாஸிலே, ரெண்டாவது ரோ. வலது கோடியிலே உட்கார்ந்து இருப்பேள்."

எனக்கு அது ஞாபகமில்லை. ஆனால் அவள் சொன்னபோது ஆச்சர்யமாக இருந்தது. என்னை இவள் கவனிக்காமல் இல்லை.

அவளுக்கு ஞாபகம் இருந்த என் உறவினர்கள் பற்றியெல்லாம் விசாரித்தாள். என் படிப்பு, உத்தியோகம் பற்றிக் கேட்டுவிட்டு, சைதாப்பேட்டை டீச்சர்ஸ் ட்ரெயினிங் காலேஜில் இடம் கிடைக்க என்ன வழி என்று விசாரித்தாள்.

இயந்திரம் போல பதில் சொல்லி விட்டுப் புறப்பட்டேன். வடக்கு வீதி கடந்து, குளத்தைச் சுற்றி, தேரடியை நெருங்கும் போது கொஞ்சம் நின்றேன். கூட்டம் இல்லை. ஊர் அடங்கிய நிசப்தம். பெருமாளும் உள்ளே போய்விட, வெறும் கயிறுகள் மொத்தமாகக் கிடக்க, சப்பரங்களை மடித்துச் சுருட்டிக் கட்டித் தொங்க விட்டிருந்தார்கள்.

ஒருதரம் வீதியைக் கவனித்து விட்டு, சட்டென்று சக்கரத்தின் அடியில் குனிந்து அவசரமாகப் பார்த்தேன்.


ஆணி, சாக்பீஸ், கரி, இங்க் என்று பல உபகரணங்களைக் கொண்டு பல பெயர்கள் அங்கே எழுதப்பட்டிருந்தன. என்னுடையதைத் தேடிக் கண்டுபிடிக்க முயன்று, தோற்றுப் போய், எழுந்து நடந்தேன். ●

# KALKI SHOPPING PAGE


உங்கள் இல்லத்தை சிறப்பாக அலங்கரிக்க

**CURTAINS SOFA CLOTHS**

Rs. 48 PER METRE ONWARDS



**AT THE LOWEST PRICE**

- Major Credit cards Accepted
- Providing channels & Drapery Rods with fittings

* Offer for limited period only.

**SURENDRA'S**

73, PURASAWALKAM HIGH ROAD, 1ST FLOOR, CHENNAI - 7. (OPP. VIVEK & CO.)

TAILORING ATTACHED PH : 6428302

உ

ஓம் திருமுருகன் துணை

11 & 12.4.98 திருவண்ணாமலை கிரிவலம் மற்றும் பல.

22.4.98 (5 நாள்) அகோபிலம், மந்திராலயம், மகாநந்தி, ஸ்ரீசைலம்.

1.5.98 (3 நாள்) நடுநாட்டு சிவத் தலங்கள் 22.

15.5.98 (8 நாள்) கர்நாடகா யாத்திரை – தர்மஸ்தலா, மூகாம்பிகை, சிருங்கேரி, கட்டில், உடுப்பி, பெங்களூர், மைசூர், கலசா, அனுபேடு, பேளூர், சரவணபெலகுலா.

ஞாயிறுதோறும் 1 நாள் சுற்றுலா. அனைத்து சுற்றுலாக்களுக்கும் உணவு வசதி உண்டு.


**சிந்தாமணி டிராவல்ஸ்**

12, ஆற்காடு சாலை,
சென்னை – 24.
Ph. 4860543, 4831806

தண்ணீரிலிருந்து பரவும் நோய்களை தவிர்க்க

**Sintex Silverline**

**Water Filter cum Purifier**



Best Results... Lowest Price

• Compact and sturdy • Lower in cost and maintenance • Better in performance • Easy to install • Incorporates UV technology • Designed for Indian working conditions • Portable • Ideal for every application-home, offices, hospitals, clinics, public places etc.

**WATER EQUIPMENTS**

No.143, Angappa Naicken Street,
Chennai - 600 001. ✆ : 5223260, 5221160

CREDIT CARDS ACCEPTED

**தர்ம சாஸ்திரம்**

S.V. ராதாகிருஷ்ண சாஸ்திரி

தமிழில் வர்ணாசிரமதர்மம், ஆந்ஹிக தர்மம், சிராத்தமுறை முதலியவற்றை இன்றைய சூழ்நிலைக்கேற்ப சுருக்கியும், தெளிவாகவும் தமிழில் பல நூல்களிலிருந்து திரட்டி, தொகுத்தளித்துள்ள அருமையான புத்தகம். விலை ரூ. 35/-

**துளஸீ சரிதமும் பூஜையும்**

பெண் மக்கள் தீர்க்கசுமங்கலிகளாக வாழவும் செல்வன் புத்ரன் முதலிய பாக்யங்களைப் பெற ப்ரதிதினம் துளஸீ பூஜை செய்ய வேண்டும். துளஸீ சரிதத்தையும், பூஜை முறையையும் விளக்கும் அரிய புத்தகம். விலை ரூ.5/-

கிடைக்குமிடம்

**பவானி புக் சென்டர்,**

19-20, ஸ்டேஷன் ரோடு,
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033

# நீங்கள் கேட்டவை – தராசு

● எம். மும்தாஜ், எலந்தங்குடி.

*? நம்பிக்கை வாக்கெடுப்பு விவாதத்தின் போது எதிர்க்கட்சிகளின் அத்தனை கணைகளையும் பதற்றப்படாமல் புன்முறுவலுடன் ரசித்துக் கொண்டிருந்த பிரதமர் வாஜ்பேயின் நிலைகுலையாத் தன்மை எதைக் காட்டுகிறது?*

! விவாதத்தின்போது பதற்றப்படாவிட்டாலும் நம்பிக்கை வாக்கெடுப்பின்போது கலகலத்துப் போய்விட்டாரே! 'visibly tense' என்று பத்திரிகைகள் வர்ணித்தன. பாவம்!

● முத்துநிலா, பெரமங்கலம்.

*? அறிமுக எழுத்தாளர்களைக் கல்கி அரவணைத்துக் கொள்ளுமா...?*

! எத்தனையோ எழுத்தாளர்களை 'அரங்கேற்றிய' பெருமை கல்கிக்கு உண்டு. இந்த வாரம் தொடர்கதை எழுத்தாளராக அறிமுகமாகும் பாரதிபாலன் கூட, கல்கியில் வளர்ந்தவர்தான்.

● புளியரை கு. கணேசன், சென்னை - 30.

*? பெங்களூர் மூன்றாவது கிரிக்கெட் டெஸ்ட் தோல்விக்கு யார் சார் பொறுப்பு...?*

! இருவாளர் தலைக்கனம்!

● ஏ. காதர், நாகூர்.

*? ஜீன்ஸ் படத் தயாரிப்புச் செலவு 24 கோடி ரூபாயாமே...? அந்த செலவில் பத்து தமிழ்ப்படங்கள் எடுத்து விடலாமே?*

! எடுக்கலாம்தான்; அல்லது 24 கோடி செலவழித்து, கலையுணர்வுடன், காலத்தை வென்று நிற்கக்கூடிய படமும் எடுக்கலாம். பத்து எடுத்தாலும், ஒன்று எடுத்தாலும் பண விரயமே என்னும்போது சினிமா துறையின் unproductive expenditure-ஐ எண்ணி வேதனை உண்டாகிறது.

● வி. மோகன், நெல்லிக்குப்பம்.

*? 'பூட்டிய கதவுகளுக்குப் பின்னால் என்ன நடந்தது என்பது எங்களுக்கு தெரியாது' என்று நாடாளுமன்றத்தில் சோம்நாத் சாட்டர்ஜி பேசியது சரியா?*

! 'Behind closed doors' என்ற சொற்றொடரை அவர் நேரடியான அர்த்தத்தில் தான் பயன்படுத்தினார். ஆங்கில சொற்பிரயோகங்கள் அறியாத சிலர், அதை விபரீதமாய் அர்த்தம் பண்ணிக் கொண்டு வெறியர்களாகிவிட்டார்கள்.



• வாளுக்கு வேலை...?

## வாழப்பாடிக்கு வீரவாள் கொடுத்திருக்கிறார்களே...?

● மு. இரவிச்சந்திரன், சேலம் - 9.

*? 'ஐக்கிய முன்னணி என்னை அவமானப் படுத்தி விட்டது' என்கிறாரே சந்திரபாபு நாயுடு?*

! பாவம்! அவருக்கு 'ஜெ' தோஷம் போலிருக்கிறது. அதான் 'பி.ஜே.பி' தலைவர்கள் என்னை அவமானப்படுத்தி விட்டனர் என்ற பல்லவியைச் சற்றே மாற்றிப் பாடுகிறார்.

● சி.தெ. ரஜினி அருள், மணக்காடு.

*? மனச்சாட்சி பற்றி சுப்ரமண்ய சுவாமி சமீபத்தில் பேசியதை கவனித்தீர்களா?*

! மனச்சாட்சி உள்ளவர் கள் மனச்சாட்சி பற்றிப் பேசினால் கவனிக்கலாம். 'தேர்தல் கணக்கு பார்க்க வேண்டியிருந்தது; அதனால் நம்பிக்கைத் தீர்மானத்தின்போது



• கோடானு கோடி கொடுப்பினும்...

நாடாளுமன்றத்தில் இல்லை...' என்று சமீபத்தில் கூறிய சு. சுவாமிக்கு மனசாட்சி இன்றும் இல்லை; என்றும் இருந்ததில்லை.

● நா. பாலசுப்பிரமணியன்,
சென்னை - 101.

*? சந்திரபாபு நாயுடு ஐ. மு.விலிருந்து விலகி, பி.ஜே.பி பக்கம் சாய்ந்தது பற்றி...?*

! சட்டப்படி குற்றமில்லை. எனினும் அதர்மப் போக்கு என்பதில் சந்தேகமில்லை. ஒரு பெரிய நன்மைக்காக ஒரு சிறிய அதர்மம் புரியலாம் என்று பாபு நினைத்திருக்கக் கூடும். இந்தச் செயல் பி.ஜே.பி. வழங்கும் நிலையான நல்லாட்சி மலர உதவுமானால் நாடு சந்திரபாபு நாயுடுவுக்குக் கடமைப்பட்டுப் போகும். போற்றும். வருவது மோசமான ஆட்சி எனில் பாபுவைத் தூற்றும்.

● எஸ். விஜய் ஆனந்த், கூறைநாடு. ❑

*? வாஜ்பாய் சிறப்பானவர், நல்லவர் என்று எல்லோரும் சொல்லும்போது, அவரை எதிர்க்காமல் ஆட்சி செய்யவிட்டால் என்ன...?*

! வல்லவர்களும் நல்லவர்களும் தவறு செய்ய மாட்டார்கள் என்ற உத்தரவாதம் கிடையாது. அப்படிச் செய்யும்போது சுட்டிக்காட்டத்தான் எதிர்க்கட்சியும் பத்திரிகைகளும். ஜனநாயகத்தின் அடிப்படையே இதுதானே!

● அ. முஸ்தபா, தக்கோலம்.

*? சந்திரபாபு நாயுடு இப்படிப் பண்ணுவார் என்று எதிர்பார்த்தீர்களா?*

! கல்கி 15.3.98 இதழ் கார்ட்டூன் காண்க.

● க. எத்திராஜ், பவித்திரமாணிக்கம்.

*? இனி யாரையும் சுட மாட்டேன் என்று சந்தன வீரப்பன் கூறியிருப்பது பற்றி?*

! கடத்த மாட்டேன் என்று சொல்லவில்லையே!

● எஸ். கந்தசாமி, திருநெல்வேலி - 1.

*? இக்காலகட்டங்களில் வெளிவரும் திரைப்படப் பாடல்கள் நீடித்து நிற்க முடியவில்லையே? ஏன்?*

! 'லீவு லீவு லீவு; திவு திவு திவு' - இப்படி ஒரு பல்லவியுடன் பாடல் எழுதினால் 'மாவு மாவு மாவு' என்று இன்னொரு பல்லவி வரும் வரைதான் அது நீடிக்கும்! பாடல் மனத்தில் நிலைக்க வேண்டுமானால் நிரந்தர உண்மைகளை நயமாகச் சொல்ல வேண்டும்; மெட்டுகளும் அயல்நாட்டு சி.டி.க்களிலிருந்து பண்ணிய அவியலாய் இராமல் ஆத்மாவிலிருந்து புறப்பட்டு வர வேண்டும்.

● கே. ரமேஷ்பாபு,
சேலம் - 1.

*? சங்மா தோற்றுவிட்டாரே....?*

! இல்லை. நம்பிக்கை வாக்கெடுப்பின்போது அற்புதமாகப் பேசினார். முத்தாய்ப்பாக, "1996-ல் நீங்கள் இந்த மன்றத்தின் நம்பிக்கையை இழந்து விட்டீர்கள். ஆனாலும் மக்களின் நம்பிக்கையைப் பெற்றீர்கள். இப்போது, இந்த மன்றத்தின் நம்பிக்கையை நீங்கள் பெற்று விடலாம். ஆனால், மக்களின் நம்பிக்கையைப் பெற முடியாது..." என்று சொன்னது எல்லோரையும் சிந்திக்க வைத்திருக்கும். சூழ்ச்சியின் மூலம் அவரைத் தோற்கடித்தது பி.ஜே.பிக்குத்தான் கேவலம்!

● ஆர். சுப்பராவ், திருக்கோவலூர்.

*? வாழப்பாடிக்கு, தொண்டர்கள் வீரவாள் வழங்கியிருக்கிறார்களே... ஏன்? வாஜ்பாயை வீழ்த்துவதற்காகவா?*

! அம்மாவைக் காப்பதற்காகவும் இருக்கலாம்!

● என். பாலகிருஷ்ணன், மதுரை - 1.


*? 'விதவைகள் மறுமணம் செய்து கொள்ளக் கூடாது' என்ற ஜெயேந்திர சரஸ்வதி சுவாமியின் கருத்தில் தங்களுக்கு உடன்பாடு உண்டா?*

! இல்லை!

● சுப்பு வேதையா சித்திரவேலு, கருப்பம்புலம்.

*? 'சேடப்பட்டி முத்தையா மீதுள்ள வழக்கு, போக்குவரத்து விதிகளை மீறியதற்கு ஒப்பான அற்ப விஷயம்' என்கிறாரே சு. சுவாமி?*

! பெரிய பெரிய சாலை விபத்துகளுக்குப் போக்குவரத்து விதிகள் மீறப்படுவதுதான் முக்கிய காரணம், தெரியுமா!



• புன்முறுவலும் பதற்றமும்!



• 'செவ்வந்தி'...



• 'ஜெ' தோஷம்



• மனமாவது? சாட்சியாவது?

❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
**எஸ். விஜய் ஆனந்த்,**
**80, வடக்கு சாலியத் தெரு,**
**கூறைநாடு, மயிலாடுதுறை - 609 002.**

5 கேசட்டுகள் அடங்கிய பேக்

# சுதந்திரப் பொன்விழா ! பொன் நிகர் தமிழ்த் திரைப்படப் பாடல்கள் !



சுதந்திரத்தின் **50**வது ஆண்டு இந்திய வரலாற்றில் ஒரு பொன்னேடு. குதூகலமான இத்தருணத்தை ஒட்டி, காலத்தால் அழியாத தமிழ்த் திரைப்படப் பாடல்களைக் கொண்ட 5 கேசட் தொகுப்பை HMV நிறுவனம் வெளியிட்டுள்ளது. 50 ஆண்டுகளில் 'நாம் இருவர்' முதல் 'தாயின் மணிக்கொடி'வரை திரைப்படங்களிலிருந்து உங்கள் உள்ளங்களைத் தொட்ட உங்கள் நினைவிலிருந்து நீங்காத பாடல்கள் இந்த 5 கேசட்டுகளில் ஒலிக்கின்றன.

HMV அளிக்கும் இந்த வரலாற்றுச் சிறப்புடைய இசைப் பயணத்தில் பங்குபெற்று மகிழ்ந்திடுங்கள். 50 ஆண்டு கால பின்னணிப் பாடல்களை மீண்டும் மீண்டும் கேட்டு மகிழும் அரிய வாய்ப்பு!

RPG

HMV

*எல்லா HMV கேசட் கடைகளில் கிடைக்கும்.*

# கேசவர்த்தினி ...
# நீண்ட அடர்த்தியான கூந்தலுக்கான பரம்பரை இரகசியம்



ஊட்டமளிக்கும் கேசவர்த்தினி கூந்தல் தைலம்.
நீங்கள் நாள்தோறும் உபயோகிக்கும் தேங்காய்
எண்ணெயில் சிறிதளவு கேசவர்த்தினியை கலந்து
தேய்த்தால், உங்கள் கூந்தல் நீண்டு, ஒளி கொண்டு
திகழுவதைக் காண்பீர்கள். மேலும் உங்கள் கூந்தல்
அடர்த்தியாகவும், கருமையாகவும் காணப்படும்.
இன்றே ஒரு பாட்டில் கேசவர்த்தினியை
வாங்குங்கள். ஆறே மாதங்களில் அழகு மிளிர்ந்த
கூந்தலை பெறுங்கள்.




# கேசவர்த்தினி

கூந்தல் தைலம்.

KV/192



# ஜோஷி: காத்திருக்கும் சங்கடங்கள்!

**பா**ரதிய ஜனதா கட்சியின் மும் மூர்த்திகளில், வாஜ்பாய், அத்வானிக்கு அடுத்தபடியாக இருப்பவர் டாக்டர் முரளி மனோகர் ஜோஷி. 64 வயதான இந்த முன்னாள் பௌதிகப் பேராசிரியர், நன்கு கடைந்தெடுத்த, அக்மார்க் ஆர்.எஸ்.எஸ். காரர்!

சென்ற முறை பதின்மூன்று நாள் வாஜ்பாய் அரசில் உள்துறை அமைச்சராக இருந்தவர், இந்த முறை மனிதவளத் துறைக்கு கேபினட் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார். கல்வித் துறைக்கு நிதி ஒதுக்கீடு, பாடத் திட்டங்கள் என்று அடிப்படையான வழிகாட்டுதல்களைச் சொல்லும் பொறுப்பு மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறையைச் சார்ந்ததுதான்!

"ஆரம்பப் பள்ளிப் படிப்பு எல்லோருக்கும் கட்டாயமாக்கப்படும்!" என்று தேசிய செயல் திட்டத்தில் சொல்லப்பட்டிருப்பதால், ஜோஷியின் பொறுப்பு கூடுதலாகிறது.

''இந்தியாவின் வரலாற்றை 'முறையாக' வெளிப்படுத்தும் பாடத் திட்டங்களைப் பள்ளியில் வைக்க வேண்டும்'' என்று சொல்லி, மனிதர் கலக்கியிருக்கிறார்.

"ஏற்கெனவே மத்திய பிரதேச பா.ஜ.க. அரசு, பள்ளிப் பாடத் திட்டத்தில் செய்த குளறுபடிகள், அந்த மாநிலத்தில் பெரிய சர்ச்சையைத் தோற்றுவித்தது என்பதை டாக்டர் ஜோஷி மறந்திருக்க மாட்டார்" என்று நினைவுகூர்கிறார்கள், காங்கிரஸ்காரர்கள்.

ஜோஷிக்கு ஜூனியர் அமைச்சராக இருப்பவர் உமாபாரதி. இருவரும் ஆர்.எஸ்.எஸ். கொள்கைகளில் தீவிரப் பிடிப்பு கொண்டவர்களாக இருந்தாலும் கொஞ்சம் 'பழைய' மனிதரான ஜோஷியுடன் அதிரடி கருத்துக்களைச் சொல்லக் கூடிய உமாபாரதி இணைந்து செயல்படுவாரா என்ற சந்தேகத்தை எழுப்புகிறார்கள் சிலர்.

**உ**த்தரபிரதேச மாநிலம் குமான் மலைத் தொடர்களில் உள்ள அல்மோராவில் பிறந்த

வர் டாக்டர் ஜோஷி. டெல்லி, பீஜனூர், அல்மோரா ஆகிய இடங்களில் பள்ளிப் படிப்பை முடித்த பின்பு, மீரட்டில் கல்லூரிப் படிப்பைத் தொடர்ந்தார். அதன்பின் பட்டமேற்படிப்பும், டாக்டரேட்டும் அலகாபாத் பல்கலைக்கழகத்தில். தொடர்ந்து அங்கேயே பேராசிரியர் பணி. இந்தக் காலகட்டத்தில் ஜோஷிக்கு அறிமுக மாணவர்தான் ராஜேந்தர் சிங்.

இந்த ராஜேந்தர் சிங்தான் 'ராஜு பைய்யா" என்று அன்புடன் சங் பரிவாரால் அழைக்கப்படும் இன்றைய ஆர்.எஸ்.எஸ். தலைவர்! (பா.ஜ.க. ஆட்சியின் 'ரிமோட்' என்று குறிப்பிடப்படுபவர்.)

பல்கலைக் கழகப் பேராசிரியராக இருந்த ஜோஷியின் மாணவர்களில் வி.பி. சிங்கும் அர்ஜுன்சிங்கும் அடக்கம்!

ஜனசங்கத்தின் மாவட்டச் செயலாளராக இருந்து, படிப்படியாக கட்சியில் உயர்ந்தவர் ஜோஷி. பா.ஜ.க.வில் காந்தியப் பொருளாதாரத்தை அறிமுகப்படுத்திய தீனதயாள் உபாத்யாயாவோடு நெருங்கிய தொடர்பு கொண்டு பணியாற்றியவர். 1960களில் சோஷலிஸ்டுகளும், ஜனசங்கமும் வடக்கே சில இடங்களில் இணைந்து செயல்பட்டார்கள். அந்த நெருக்கத்துக்கு உழைத்தவர்களில் ஜோஷியும் ஒருவர்!

எமர்ஜென்ஸியில் மற்ற பா.ஜ.க. தலைவர்களைப் போலவே ஜோஷியும் ஜெயிலில் இருந்திருக்கிறார். 1980லிருந்து பா.ஜ.க.வின் மத்திய அலுவலகத்தில் பொறுப்பாக இருந்து செயல்பட்டவர். அத்வானி இரண்டு முறை தலைவராக இருந்த பின்னர், 1991-ல் பா.ஜ.க. தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் ஜோஷி.


நெற்றியில் சந்தனம், செந்தூரம், கழுத்தில் சரிகை அங்கவஸ்திரம் என்று காட்சியளிக்கும் ஜோஷி, ஒரு சித்தாந்தவாதி. ஹிந்துத்துவா கொள்கையின் மீது தீராத காதல் கொண்டவர். கட்சியின் தேர்தல் அறிக்கைகளைத் தயாரிக்கும் பொறுப்பு ஜோஷியிடம்தான் கொடுக்கப்படும்! பேராசிரியர் ஆயிற்றே?

"எவனொருவன் தாய்ப்பால் குடித்து வளர்ந்தானோ, அவன் ஸ்ரீநகரில் உள்ள லால் சவுக்கில் வந்து இந்திய தேசியக் கொடியை ஏற்றட்டும்" என்று காஷ்மீர் தீவிரவாதிகள் 1992-ல் சவால் விட்டனர். அந்த சவாலை ஏற்று குமரியில் இருந்து ஸ்ரீநகர் வரை தேசியக் கொடியுடன் 'ஏகதா யாத்திரை' நடத்தினார் ஜோஷி. அப்போது அவர் பா.ஜ.க. தலைவர். அத்வானியின் யாத்திரை அளவுக்கு இல்லாவிடினும், ஏகதா யாத்திரை கொஞ்சம் பரபரப்பு கூட்டிற்று.


1980களில் ராஜ்ய சபா ஸீட் கொடுக்கப்பட்டபோது, "எனக்கு பதவி வேண்டாம், கட்சிப் பணி ஆற்ற வேண்டும்" என்று மறுத்து விட்டவர் ஜோஷி!

இப்போது, பா.ஜ.க.வும் பதவி மற்றும் வோட்டு வங்கி அரசியலில், பல சமரசங்களுக்குத் தயாராகி விட்ட நிலையில், ஜோஷி போன்ற hard core தலைவர்கள் கொஞ்சம் சங்கடப்படுவார்கள் என்பது நிச்சயம்!

— கௌசி




- கு. அருணாச்சலம்



# “கபட நாடகம் ஆடுகிறார் தங்கபாலு!”

## – பொங்கிப் பாய்கிறார் அன்பரசு!


***சென்ற வாரம் வெளிவந்த தங்கபாலுவின் பேட்டி இரா. அன்பரசுவைப் பொங்கிப் பாய வைத்து விட்டது...***

“நான், பிரபு, திண்டிவனம் ராமமூர்த்தி ஆகியோர் சுயநலம் காரணமாக மூப்பனார் மீண்டும் காங்கிரஸில் இணைவதை எதிர்ப்போம்” என்று தங்கபாலு கூறுவது அப்பட்டமான பொய் மட்டுமல்ல; விஷமத்தனமானதும் கூட. கடந்த தேர்தலுக்கு முன் பாராளுமன்றம் கலைக்கப்பட்ட உடனேயே மூப்பனார் மற்றும் த.மா.கா. முக்கியப் பிரமுகர்களைச் சந்தித்து, த.மா.கா., காங்கிரஸோடு இணைந்து மூன்றாவது அணி அமைத்து, தமிழகத்தில் தேர்தலைச் சந்திக்க வேண்டும் என்று வலியுறுத்தியவர்களில் நானும் ஒருவன். டெல்லியில் ஆர்.கே. தவான், ஜிதேந்திரப் பிரஸாத் ஆகியோரையும் சந்தித்து இது சம்பந்தமாக வலியுறுத்தினேன்.

“எனவே த.மா.கா. மீண்டும் காங்கிரஸில் இணைவதை நாங்கள் யாரும் எதிர்க்கவில்லை. அகில இந்தியத் தலைமை ஒரு முடிவு எடுத்து விட்டால் நாங்கள் யாரும் எதிர்க்க மாட்டோம். ஆனால் தங்கபாலு எங்களைக் குற்றம் சாட்டுவது, அவரது சுயநலத்தின் காரணமாகத் தான். அவரது தலைமைப் பதவி ஆட்டத்தில் இருக்கிறது. அவரைத் தவிர வேறு யாரைத் தலைவராகப் போட்டாலும், ‘த.மா.கா. இணைவதை எதிர்ப்பார்கள்’ என்று மேலிடத்துக்கு ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்கித் தமது தலைமைப் பதவியைத் தக்கவைத்துக் கொள்ளும் தந்திரத்தைக் கையாள்கிறார். இவரது கபட நாடகத்தை மேலிடத்திற்கு நாங்கள் வெளிப்படுத்தி விட்டோம்.

அதே போன்று தம்மைத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் என்றும் தங்கபாலு சொல்லிக் கொள்கிறார். கட்சித் தேர்தலே ஒரு தில்லு முல்லுத் தேர்தல். கேசரி என்னை ஐந்நூறு முறை கேட்டுக் கொண்டதாலும், முக்கியமானவர்களுக்குக் கட்சியில் பொறுப்புகள் தருவோம் என்று வாக்குறுதி கொடுக்கப்பட்டதாலும் நாங்கள் யாரும் போட்டியிடாமல் ஒதுங்கவே, இவர் ‘ஏகமனதாக'த் தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்தத் தேர்தலில் நடந்த முறைகேடுகள் ஏராளம். ‘எங்களுக்கு வீட்டிலேயே செல்வாக்கு கிடையாது’ என்று சொல்வது கண்டிக்கத்தக்கது நாங்கள் தனிப்பட்ட முறையில் தாக்கத் துவங்கினால் அவர் தலைதெறிக்க ஓட வேண்டி வரும். இவரது தொண்டர்கள் ‘பலம்’ எங்களுக்குத் தெரியும்! நிர்வாகக் குழு ராஜினாமா செய்யத் தேவையில்லை என்று தீர்மானம் போட்டிருப்பதாகத் தங்கபாலு சொல்கிறார். தற்போது தமிழ்நாடு காங்கிரஸில் செயற்குழுவோ, பொதுக் குழுவோ கிடையாது. இருப்பதாக இவர் சொல்லும் செயற்குழுவும் பொதுக் குழுவும் முறையான மேலிட அங்கீகாரத்தைப் பெற்றவை அல்ல. எல்லோரும் இவர் நியமித்த ஆட்கள்! தேர்தல் நடத்த வந்த ஜெகதீஷ் டைட்லரின் அங்கீகாரம் பெற்றது, விதிமுறைகளின்படி சரியல்ல. மேலிடம் இந்த கமிட்டிகளுக்கு அங்கீகாரம் கொடுக்காமல் நாங்கள் தடுத்து விட்டோம். இந்த நிலையில் தம்முடைய அடிவருடிகளை வைத்துக் கொண்டு தமக்கு ஆதரவு இருக்கிறது என்று சொல்வது நல்ல வேடிக்கை! விரைவில் இவரது தலைமை மாறும். காங்கிரஸ் தமிழ்நாட்டில் புத்துணர்ச்சி பெறும்!”

சந்திப்பு : ப்ரியன்



# ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



16, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
சென்னை- 600 063. தொலைபேசி : 2376129

## ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர்! வணக்கம்

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த ஒன்பது ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, வசதியற்ற, திக்கற்ற 50 மாணவர்களும் 20 மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை, மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன் உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு நல்ல முறையில் வளர்த்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே, தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியை செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

| | | |
|---|---|---|
| காலை சிற்றுண்டி ( 70 பேருக்கு ) | ரூ. | 500/- |
| மதிய உணவு ( இனிப்புடன் ) | ரூ. | 1,000/- |
| இரவு சிற்றுண்டி | ரூ. | 750/- |
| இனிப்பு மற்றும் பால் வழங்குதல் | ரூ. | 300/- |
| ஒரு மாணவனுக்கு ஓரண்டிற்கு கல்வி உதவித் தொகை | ரூ. | 1,000/- |
| ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு ( உணவு, உடை, கல்வி ) | ரூ. | 6,000/- |
| குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு | ரூ. | 40,000/- |

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம்.

உங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு Cheque/DD/MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இறைவன் தொண்டில்
சுவாமி சர்வாத்மானந்தர்.

ADCHOICE

வருமான வரி விலக்கு ( Section 80 G ) உண்டு



# அன்புள்ளம் கொண்டோரே!



இதோ இன்று தமிழ் புத்தாண்டு பூத்துள்ளது!
தீமைகள் நீங்க மேன்மைகள் ஓங்க,
உலக நலம் தாங்கி தமிழ் புத்தாண்டு
புனிதப் பெருநாள் மங்கலம் மங்கலம் என்ற
மாவொலி முழங்க இன்று தோன்றியுள்ளது
நாம் குதுகலமும், பெருமிதமும் கொள்வோம்
ஒன்று படுவோம்.

## தமிழ் புத்தாண்டை வரவேற்று, வாழ்த்தி நல்வாழ்வு வாழ்வோம்!

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அருளால் உங்களுக்கு மங்கலமே நிறைந்திருக்கட்டும்!
தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் கருணையால் நன்மைகள் தழைத் தோங்கட்டும்!
வீரத்துறவி சுவாமி விவேகானந்தரின் அன்பினால் எங்கும் மெய்ஞானம் பெருகட்டும்!

## ஸ்ரீ சாரதா சக்தி பீடத்தின் இலட்சியப் பணிகள்

''இந்தியாவை முன்னேற்றம் அடைய செய்ய விரும்பினால் பாமர மக்களுக்கு, ஆன்மீக கல்வியும், நவீன விஞ்ஞான கல்வியும் அளிக்கப்பட வேண்டும்''

''அவர்களுடைய முன்னேற்றத்தில் தான் இந்தியாவின் உன்னதமான எதிர்காலம் அடங்கியுள்ளது'' என்னும் சுவாமி விவேகானந்தரின் வீர முழக்கத்தை நடைமுறையில் செயல்படுத்தி கொண்டிருக்கிறது நம் ஸ்ரீ சாரதா சக்தி பீடம்.

தாய், தந்தையற்ற, வசதியற்ற, ஏழை மாணாக்கர்களுக்கு குருகுல முறையில் உணவு, உடை, உறைவிடம், ஆன்மீக பயிற்சி, நல்ல கல்வி ஆகியவற்றை அளித்து, பாமர மக்களின் தொண்டிற்காக, தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது நம் ஸ்ரீ சாரதா சக்தி பீடம்.

எதிர் காலத்தில் பெருமளவில் சிறந்த மாணாக்கர்களை உருவாக்குவதற்கு உங்களின் அன்பையும், ஆதரவையும், தொடர்ந்து அளிக்கும்படி இந்த தமிழ் புத்தாண்டில் பணிவன்புடன் கேட்டு கொள்கிறோம்.

*உனக்கு மன அமைதி வேண்டுமானால் பிறரிடம் குற்றம் காணாதே; மாறாக உனது குறைகளை பார்த்து அவற்றை நீக்கி கொள். அன்பினால் உலகம் முழுவதையும் உனக்கு சொந்தமாக்கிக் கொள்.*

*–தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியார்*

இறைவன் தொண்டில்
**சுவாமி சர்வாத்மானந்தர்**
மேனேஜிங் டிரஸ்டி

# மறுபடியும் ஒரு போட்டி!

## கல்கி &

## B.M. SILK SAREES

இணைந்து வழங்கும்

**மறுபடியும் வாரம் ஒரு பட்டுப் புடைவை!**

இப்போட்டியில் வெல்பவர்களுக்கு கல்கியுடன் இணைந்து, வாரம் ரூ. 2000 மதிப்புள்ள பட்டுப் புடைவையைப் பரிசாக வழங்கப் போகிறார்கள், மயிலாப்பூர் **B.M. SILK SAREES** நிறுவனத்தினர்.

### என்ன போட்டி?

எப்போதும் போல் எளிமையும் சுவாரஸ்யமுமான போட்டிகள்தாம்! வாரம்தோறும் கேட்கப்படும் கேள்விகளுக்குச் சரியான விடை எழுதி, பரிசைத் தட்டிச் செல்வது உங்கள் பொறுப்பு!

### விதிகள் உண்டா?

- விடைகளை கூப்பனில் மட்டுமே எழுத வேண்டும்.
- ஒருவரே எத்தனை கூப்பன் வேண்டுமானாலும் அனுப்பலாம். ஆனால் ஜெராக்ஸ் கூப்பன்கள் செல்லாது!
- ஒருவருக்கு மேற்பட்டோர் சரியான விடை எழுதி விட்டால், பரிசு, குலுக்கல் முறையில் வழங்கப்படும். போட்டி முடிவுகளில் ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.
- இது என்ன நியாயம்? சரியான விடை எழுதும் மற்றவர்களெல்லாம் பாவமில்லையா? என்று கேட்பவர்களுக்கு மேலும் ஒரு சான்ஸ்!

பன்னிரண்டு வாரம் இடம்பெறப் போகும் இப்போட்டியில் தொடர்ந்து கலந்து கொண்டு, சரியான விடைகளை எழுதிக் கொண்டே வாருங்கள்!

கூப்பன் இரு பகுதிகளாக உள்ளது அல்லவா? முதல் பாதியில் விடை எழுதி, எங்களுக்கு அனுப்பிவிட்டு, இரண்டாவது பகுதியில் விடையை எழுதி நீங்களே பத்திரமாக வைத்திருங்கள்.

**போட்டிகளின் முடிவில் பம்பர் பரிசு ஒன்றைப் பெறும் வாய்ப்பும் காத்திருக்கிறது!**

அது என்ன? எதற்கு? எப்படிப் பெறுவது?

*வெயிட்! விவரங்கள், விரைவில்!*

*இனி முதல் வாரக் கேள்வி :*

**இந்த இதழில் மொத்தம் எத்தனை இடங்களில் 'செவ்வந்தி' என்ற சொல் இடம்பெறுகிறது?**

விடையை கூப்பனில் எழுதி, **20.4.98**-க்குள் அனுப்புங்கள்.

**பட்டுப்புடைவை பரிசுப் போட்டி – 1**

'செவ்வந்தி' மொத்தம் இடம்பெறும் இடங்கள் :

பெயர்: ..........................................

முகவரி: ..........................................

..........................................

..........................................

**பட்டுப்புடைவை பரிசுப் போட்டி – 1**

'செவ்வந்தி' மொத்தம் இடம்பெறும் இடங்கள் :

பெயர்: ..........................................

முகவரி: ..........................................

..........................................

..........................................


நீங்கள் பத்திரப்படுத்தி வைக்க வேண்டிய பகுதி.

# ஜெ - ஆற்காடு: யார் சொல்லுவது நிஜம்?

பா.ஜ.க.வுக்குப் புதியவர் என்பதால், கட்சிக்காரர்கள் அதிகம் காணப்படவில்லை. நண்பர்களும், நலம் விரும்பிகளும்தான் கணிசம். மாலை, மலர்க் கொத்து என்று ஏகமாய்க் கிடக்கிறது. நுங்கம்பாக்கத்தில் உள்ள தமது சகோதரியின் வீட்டில்தான் தங்கி, அனைவரையும் சந்தித்தார் மத்திய அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலம்.

பிற்பகலில் ரங்கராஜனைச் சந்திக்க வந்திருந்தார் த.நா. மின்துறை அமைச்சரான ஆற்காடு வீராசாமி. மத்திய பவர் அமைச்சரும், மாநில மின்சாரத்துறை அமைச்சரும் பேச ஆரம்பித்த சில நிமிடங்களிலேயே பவர் கட்!

இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து, தர்மசங்கடப்பட்டார்கள். நல்லவேளை. சில நிமிடங்களிலேயே மீண்டும் கரெண்ட் வந்தது! அந்த நேரத்தில் அமைச்சரை நாம் சந்தித்தோம்.



"நீங்கள் பொறுப்பேற்றிருக்கிற பவர் மினிஸ்ட்ரி, இன்றுள்ள சூழ்நிலையில் பெரும் சவால்கள் நிறைந்த ஒரு துறையாயிற்றே! எப்படி சமாளிக்கப் போகிறீர்கள்?"

"எனது துறை சவால்கள் நிறைந்ததுதான் என்பதில் சந்தேகமில்லை. இந்தப் பிரச்னையைத் தீர்க்க நான் மூன்று விதமான நடவடிக்கைகளை எடுக்கப் போகிறேன். முதலாவது குறுகிய கால நடவடிக்கை. மின் சக்தியை சேமிப்பதே, மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு ஈடானது. எனவே, மின்சாரம் வீணாகச் செலவழிக்கப்படுவதைத் தவிர்த்து, சேமிப்புக்கு முக்கியத்துவம் தருவேன். தவிர, ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு மின்சாரம் கொண்டு செல்லப்படும்போது ஏற்படும் இழப்பு நவீன தொழில் நுட்ப முறைகளைக் கையாண்டு, குறைக்கப்படும். இது சுமார் 1000 மெகாவாட் அளவுக்கு இருக்கும். (இன்றைய சூழ்நிலையில் ஒரு 1000 மெ.வா. மின் நிலையம் நிறுவ 4000 கோடி முதலீடும், நான்கு ஆண்டுகளும் தேவை) அடுத்து, இப்போதுள்ள அனல் மின் நிலையங்களை நவீனமாக்கி பத்து முதல் பதினைந்து சதவீதம் வரை மின் உற்பத்தியை அதிகரிக்க முடியும். இதன்மூலம் ஒரு வருடத்துக்குள் மின் உற்பத்தி சுமார் 9000மெ.வாட் வரை அதிகரிக்கும்.

"மத்திய காலத் திட்டமாக (சுமார் மூணரை முதல் நாலு வருடங்கள்) சுமார் 20 ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி செய்யுமளவுக்குப் புதிய, சிறு மின் நிலையங்களை அமைப்பது, நீர் மின் நிலையங்களை நவீனப்படுத்தி, மின் உற்பத்தியை அதிகரிப்பது, மரபு சாரா எரிசக்தி முறைகள் மூலம் செய்யப்படும் மின் உற்பத்தியும் இதில் அடங்கும். நீண்ட காலத்திட்டங்களில் கூடங்குளம் அணுமின் நிலையம் உட்பட சில திட்டங்கள் அடங்கும்."

"விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டங்கள் தொடர அனுமதிக் கப்படுமா?"

"மின்சாரத்தை இலவசமாகவோ, சலுகை விலையிலோ வழங்குவதும், வழங் காததும் மாநில அரசுகளின் இஷ்டம். ஆனால் அதனால் மின்வாரியங்களுக்கு ஏற்படும் நஷ்டத்தை அரசாங்கம் மாநில பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்வதன் மூலம் சரிக்கட்ட வேண்டும் என்பது முக்கியம்."

"தி.மு.க. அரசு, ஜெயலலிதா இருவருமே, தமிழ் நாட்டுக்கு 300 மெகாவாட் மின்சாரம் கிடைக்க ஏற்பாடு செய்தது தாங்கள்தாம் என்று சொல்லிக் கொள்ளுகிறார்களே! யார் கேட்டுக் கொண்டதன் பேரில் நீங்கள் மின்சாரம் வழங்க உத்தரவிட்டீர்கள்?"

"தமிழக மக்களுக்கு மின்பற்றாக்குறை பெரும் அவதி அளித்தது. அதனைத் தீர்ப்ப தற்காக மத்திய அரசு மின்சாரம் கிடைக்க வழி செய்திருக்கிறது. இதற்குமேல் என்ன சொல்வது?"

> **"ஜெயலலிதாதான் முதலில் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு இது பற்றிப் பேசினார். அதனை அடுத்து தமிழக அமைச்சர் ஆற்காடு வீராசாமியிடமிருந்து டெலிபோன் வந்தது."**

"இது நழுவுகிற பதில். உங்களிடம் முதலில் கோரிக் கையை வைத்தது யார்?"

"ஜெயலலிதாதான் முதலில் தொலை பேசி மூலம் தொடர்பு கொண்டு இது பற்றிப் பேசினார். அதனை அடுத்து தமிழக அமைச்சர் ஆற்காடு வீராசாமியிடமிருந்து டெலிபோன் வந்தது. அப்புறம், இருவரிடமிருந்தும் கடிதம் வந்தது. அதன் பேரில் மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது!"

"நீங்கள் வெற்றி பெற்ற தொகுதியான திருச்சிக்கென்று பிரத்யேக மேம்பாட்டுத் திட்டம் ஏதாவது வைத்திருக்கிறீர்களா?"

"இருக்கிறது. அதுபற்றி நான் திருச்சியில் தான் விளக்கமாய்க் கூறுவேன்." ⭘


சந்திப்பு: **மௌலி**
படம்: **யோகா**



"அந்த டைரக்டரை காதலிச்சீங்களே, ஏன் நிறுத்திட்டீங்க?"
"எவ்வளவு காலம்தான் காதலிச்சுக் கிட்டே இருக்கிறது? இவ்வளவு நாள்ல கல்யாணம் கட்டிக்கிட்டு டைவர்ஸே பண்ணியிருக்கணுமே!"
– சீர்காழி வி. ரேவதி

"டீஸனுக்குத் தகுந்த மாதிரி, உங்க காலேஜ்ல, புதுசா ஏதோ 'கோர்ஸ்' ஆரம்பிச்சிருக்கீங்களாமே?"
"ஆமா. 'பாம்' டெக்னாலஜி!"
– பாம்பன் செ. சல்மான்





"சுவாமி... கையில் என்ன 'ஐ.எஸ்.ஐ.' முத்திரை?"
"நாட்டில் போலிச்சாமியார் பெருகிட்டாங்க...! அதனால்தான்!"
– பாண்டமங்கலம் ஜி. குமரேசன்



# சிவராம் அறக்கட்டளை

'பிருந்தாவனம்,' 26, ராமனாதன் தெரு, தியாகராய நகர், சென்னை - 600 017. **Ph: 4343324**

எங்களது அறக்கட்டளை 7.3.97ல் பொதுமக்கள் நல க்ஷேமத்திற்காக நிறுவப்பட்டுள்ளது. எங்கள் அறக்கட்டளையின் சார்பில் ஒரு வேத பாடசாலை நிறுவுவதாக தீர்மானித்து அதற்காக சென்னையிலிருந்து சுமார் 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திருபெரும் புதூரிலிருந்து 1½ கிலோ மீட்டர் தொலைவில் தாம்பரம் சாலையில் திருபுரசுந்தரி நகரில் சிவராம் வேத பாடசாலையில் ஆசிரியர் மாணவர்கள் தங்க இடமும் கட்டப் பட்டுவிட்டது. **காஞ்சி காம கோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளும்** 10.02.98 அன்று பாடசாலைக்கு விஜயம் செய்து ஆசீர்வதித்துள்ளார்கள். 22.02.98 அன்று கிருஷ்ண யஜுர் வேத வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கனபாடிகளும் தேர்ந்து எடுக்கப் பட்டுள்ளார். மேற்படி பாடசாலையில் சேர்ந்து அங்கேயே தங்கி படிக்க விரும்புகிறவர்கள் (7 வயதுக்கு மேல் 10 வயதுக்குள் உள்ளவர்கள்) விரைவில் மேலே கண்ட விலாசத்திலாவது அல்லது சென்னை மகாலிங்கபுரம் நெ.21, முரளி தெரு என்ற விலாசத்தில் (PH: 8270056) **P. ஜெயராமன்** என்பவரை அணுகி பதிந்து வைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

சென்னை-17,
12.2.98.

**A.R. ராஜகோபாலன்,**
டிரஸ்டி



## PRESCRIBE GEMS As per "COSMIC RAYS"



## நவரத்தின மகிமை

மனிதர்களை, கிரகங்கள் ஆட்டி படைக்கின்றன. ஆனால் கிரகங்களையோ, கதிர் வீச்சுகள், ஆட்டிப் படைக்கின்றன. ஆகையால் கிரகங்களை மட்டும் பாராமல், கதிர் வீச்சின் அளவைக் கொண்டு :-

பணக்கஷ்டம், மூடிய தொழிலை திறக்க, நஷ்டம் தவிர்க்க, கொடுத்த கடன் வசூலாக, பழைய வியாபாரம் பெருகிட, புதிய வியாபாரம் தொடங்கிட,

மேலதிகாரிகளின் தொல்லை நீங்க, அரசாங்க தண்டனை வராமல் இருக்க, கோர்ட்டு கேஸ்கள் ஜெயிக்க,

பெண்கள் பிரச்சனைகள், பெண்கள் ஏமாறாமல் இருக்க, பிரிந்தவர்கள் கூடிட, திருமண தடைநீங்க, விவாகம் சீக்கிரம் நடந்திட, புத்திர பாக்கியம் பெற, கடந்த கால கெட்ட சம்பவங்களை மறக்க, திருஷ்டி, தோஷம், செய்வினை, செவ்வாய் தோஷம் நீங்க, தம்பதிகளிடம் பூசல் தீர, அந்நியோன்யம் வளர,

குடியை மறக்க, தீராத தலைவலி, ஹிஸ்டீரியா, நரம்புத் தளர்ச்சி, நீரிழிவு, கான்சர், தூக்கமின்மை, ரத்தக் கொதிப்பு, ரத்த சோகை, பைல்ஸ், அலர்ஜி, கண் உபாதைகள், சைனஸ், காட்ராக்ட், ஆர்த்ரைடிஸ், முகப்பரு, அல்சர், ஆஸ்துமா, எல்லா வியாதிகளும் தீர.

நீரிழிவு நோயை கல் மூலமே தீர்க்கலாம்.

மாணவர்களின் அறிவு, ஒழுக்கம், ஞாபக சக்தி வளர, மேல் படிப்பு தொடர,

கலை, நடிப்புத் துறையில் சந்தர்ப்பம் கிடைக்க, அதில் புகழ்பெற, வேலை வாய்ப்பு கிட்டிட, முகராசி பெற்றிட,

ஆபத்து, வாகன விபத்து, விஷம், ஜலகண்டம் ஏற்படாமல் இருக்க, நேர், மறைமுக எதிரிகள் நீங்க, பணவிரயம் தடுக்க, சேமிப்பு தொடங்க, தடங்கல் நீங்கிட, வருமானம் பெருகிட, விருப்பம் நிறைவேற,

சரியான கல் தேர்வு செய்து, சுத்தி செய்து, கட்டித் தரப்படும்.

என் கணிதம் சொல்வது மட்டும் அல்ல அதற்கு உயிர்சக்தியும் கொடுக்கப்படும்.

1. ஒரே மாதத்தில் புத்திர பாக்கியம் பெறலாம்.
2. Teletherapy will be given.
3. Suitable stones for meditation Intuition - Pranic & Reiki Healers & to tone up seven chakras in the body.

அறிவு, அமைதி, ஆனந்தம், ஆன்மீகம், ஆரோக்கியம், ஐஸ்வர்யம் பெற்றிட, கீழ்க்கண்ட முகவரியை அணுகவும்.

**VENCATESAN**
**44/A First Floor, South West Boag Road (Near T. Nagar Bus Stand) T. Nagar, Chennai - 600 017.**

**Time 11.30 - 8.00 p.m.**
**(Sunday Full Working day)**
**Phone : 4336 629**

திவ்ய வித்யா டிரஸ்டின் புத்தாண்டுப் பரிசு!
காஞ்சி மாமுனிவரின் கருத்தைக் கவர்ந்த ஆன்மீகக் காவியம்!

# ஜய ஜய சங்கர

(ஸ்ரீ ஆதிசங்கரரின் சரிதமும் உபதேசமும்)

## ரா. கணபதி




1961–ல் கல்கியில் தொடராக வந்தபோதும் நூலுருவில் நான்கு பதிப்புகள் கண்டபோதும் ஆயிரமாயிரம் வாசகரை வசீகரித்த படைப்பின் ஆயிரமாயிரம் வாசகரை வசீகரித்த படைப்பின் புதிய பதிப்பு – ஆங்காங்கு சிறு புதுச் சேர்க்கைகளுடனும், சுவையான புதிய முகவுரையுடனும்

பக்கம்: **272 + XVI (பெரிய) டெமி அளவில்**

விலை : **ரூ. 36.00தான்!**

இடைக்குமிடம்:

***ஹிக்கின்பாதம்ஸ், 814. அண்ணாசாலை, சென்னை – 600 002;***
***கிரி டிரேடிங் ஏஜென்ஸிஸ், 10. சந்நிதித் தெரு, மயிலை, சென்னை 600 004;***
***ஸாயி சுதா, 4. அலமேலுமங்காபுரம், மயிலை, சென்னை 600 004.***

**தபாலில் பெற: திவ்ய வித்யா டிரஸ்ட்:** 106/1, ஹபிபுல்லா சாலை, சென்னை 600 017
(தபாற் கட்டணம் தனி சாதா : ரூ. 4.00, பதிவுத் தபாலில் பெற : ரூ. 16/-)

பதிப்பாளர்: திவ்ய வித்யா டிரஸ்ட்.106/1, ஹபிபுல்லா சாலை, சென்னை – 600 017



# ஆதிபகவன் அருட்பணி மன்றம்,

## *பாண்டூர், (வழி) நீடூர் - 609 203*

**ச**க்தி வாய்ந்த வைதீஸ்வரன் கோயிலைச்சுற்றி அமைந்துள்ள ஐந்து வைத்யனாத ஸ்தலங்களுள் பாண்டூரும் ஒன்றாகும்.

இவ்வூரிலுள்ள திருக்கோயில்கள் பல்வேறு காரணங்களினால் சரிவர பராமரிக்கப்படாமல் தினப்படி பூஜையே மிகுந்த கஷ்டத்துடன் நடத்தப்பட வேண்டிய நிலை உள்ளது. இவ்வூரைச் சார்ந்த, தற்பொழுது வெளியூரில் இருந்து வரும் ஒரு சிலரின் பேருள்ளங்களின் உந்துதலினாலும் தற்போது அங்குள்ள மேற்படி சிவாலயம் செப்பனிடப்பட்டு வருகிறது. இது ஒரிருவர் மட்டும் செய்யும் திருப்பணி அல்ல, இதற்கு இப்போது ஆறு லட்சம் வரை செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஆகையால் தற்சமயம் வெளியூர்களில் நல்ல நிலையில் வசித்து வரும் பேருள்ளங்கள் இந்தத் திருப்பணியில் மிகுந்த அளவில் நேரிடையாகப் பங்கு கொண்டோ, அல்லது தங்கள் நன்கொடைகளை இம்மன்றத்தின் மூலம் செயல்படுத்தியோ இத்திருப்பணி வெற்றிகரமாக நடைபெறவும், ஸ்ரீ பாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்யனாதஸ்வாமியின் பூரண அனுக்ரஹத்திற்குப் பாத்திரர்கள் ஆகுமாறு மிகவும் தாழ்மையுடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

காசோலையாகவோ, டிமாண்ட் டிராப்டாகவோ அனுப்புபவர்கள் Aathi Bagavan Arutpani Mandram, Pandur Payable at Mayiladuturai என்று எடுத்து, கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். ரசீது உடன் அனுப்பப்படும்.

V. ராமகிருஷ்ணன், செயலாளர்
S/o (Late) S. வெங்கட்ராமய்யர் (V.H.M.)
வடக்குத்தெரு, பாண்டூர்
(வழி) நீடூர் - 609 203
மயிலாடுதுறை (Tk) தமிழ்நாடு

R. கேதார் பொருளாளர்
S/o (Late) V. ராமகிருஷ்ணய்யர்
தெற்குத்தெரு, பாண்டூர்
(வழி) நீடூர் - 609 203
மயிலாடுதுறை (Tk) தமிழ்நாடு

## பாசுமதி விவகாரம்:

# குட்டையைக் குழப்புகிறதா அமெரிக்கா?

* டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன்



இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் மட்டுமே விளைந்து வரும் பாசுமதி அரிசியை, அமெரிக்கா, ஐரோப்பா போன்ற நாடுகள் எல்லாம் விரும்பி இறக்குமதி செய்து கொண்டிருந்தன. அதன் சுவையும் ருசியும், தனிப்பட்ட மணமும், அதற்கு ஸ்பெஷல் அந்தஸ்தைக் கொடுத்திருக்கின்றன. பாசுமதி அரிசியின் வெளிநாட்டு விலை, கிலோ ஒன்றுக்கு 40 ரூபாய்!

அமெரிக்காவில் உள்ள ரைஸ் டெக் என்ற நிறுவனம், 1997 செப்டம்பர் 2ஆம் தேதி, தாங்கள் உருவாக்கிய ஒட்டு ரக அரிசிக்கு 'பாசுமதி' என்று பெயர் சூட்டி, காப்புரிமை எனப்படும் பேடன்ட் (எண் 5663484) பெற்று விட்டது! டெக்ஸ்மதி, காசுமதி என்ற பெயர்களில் விற்பனை செய்யவும் ஆரம்பித்து விட்டது.

இது இந்தியாவைப் பொறுத்தவரை, எந்த அளவுக்கு பாதிப்பை உண்டாக்கும் என்று விவசாய விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதனைக் கேட்டோம்.

**இந்த அமெரிக்கக் காப்புரிமை காரணமாக, நாம் பாசுமதி அரிசியை ஏற்றுமதி செய்ய முடியாமல் போய் விடுமா?**

அப்படி அல்ல. நமது அரிசியைக் காட்டிலும் அவர்கள் அரிசி விலை குறைவாக இருக்கும். ஏனென்றால் அவர்களது உற்பத்திச் செலவு குறைவு. எனவே உலகச் சந்தையில், விலையில் அவர்களோடு நாம் போட்டி போட முடியாமல் போய்விடும். நாம் சொல்லும் விலை அதிகம். வாங்குகிறவர்கள், 'எனக்கு இந்த விலை உயர்ந்த இந்திய பாசுமதி வேண்டாம். இந்த டெக்ஸ்மதி போதும்!' என்று சொல்லிவிட்டால், நம் பாசுமதி பாதிக்கப்பட்டுவிடும், அல்லவா? அதுதான் ஆபத்து.

**இந்திய அரசு இதற்கு என்ன செய்திருக்கிறது?**

நமது அரசு ஒரு கமிட்டி அமைத்திருக்கிறது. இதன் தலைவர் CSIR அமைப்பின் தலைவரான டாக்டர் ஆர்.ஏ. மஷேல்கர். இவர்தான், அமெரிக்கா மஞ்சளுக்குக் காப்புரிமை கொண்டாடியபோது, தடுத்து நிறுத்தியவர். பாசுமதி அரிசிக்கு அவர்கள் பெற்றிருக்கும் காப்புரிமையை வாபஸ் பெற, இந்த கமிட்டி தக்க நடவடிக்கைகள் எடுக்கும். போதுமான ஆதாரங்களுடன் நமது மறுப்பைத் தெரிவிக்கும்.

**அவர்கள் டெக்ஸ்மதி என்ற பெயரில் விற்பனை செய்தால் நாம் என்ன செய்ய முடியும்?**

ஒன்றும் செய்ய முடியாது! நாம் வாதாடுவது, அவர்கள் 'பாசுமதி' என்ற பெயருக்குக் காப்புரிமை கோரி, அந்தப் பெயரைத் தாங்கள் கண்டுபிடித்த அரிசி வகைக்குச் சூட்டக் கூடாது, அந்தப் பெயரில் அரிசியை விற்கக் கூடாது என்பதுதான். 'டெக்ஸ்மதி' என்ற பெயரில் அவர்கள் அரிசி விற்றால், நாம் ஆட்சேபிக்க முடியாது.

**வேர்ல்ட் டிரேட் அக்ரிமென்ட் எனப்படும் உலகச் சந்தை ஒப்பந்தத்தில்,**

**இதுமாதிரி அடாவடித்தனத்துக்கு எதிராக நமக்கு எதுவும் பாதுகாப்பு இல்லையா?**

இருக்கிறது. டார்ஜிலிங் டீ, அல்ஃபான்ஸோ மாம்பழம் என்று பூகோள ரீதியாகப் பிரபலமாகிவிட்ட பண்டங்களை வேறு யாரும் காப்புரிமை கோரி விட முடியாது என்று, அந்த ஒப்பந்தத்தில் பாதுகாப்பு இருக்கிறது. 'ஷாம்பெய்ன்' என்றால் அது பிரான்சில் தயாரிக்கப்படும் மதுவைத்தான் குறிக்கும். நாம் இங்கே பெங்களூரில் அந்த வகை மதுபானத்தைத் தயாரித்துவிட்டு 'ஷாம்பெய்ன்' என்றால் ஏற்க மாட்டார்கள்! எந்த நாட்டின் பகுதியிலிருந்து, பாரம்பரியமாக ஒரு பொருள் உற்பத்தி ஆகிறதோ, அங்கே தொன்றுதொட்டு வழங்கப்படும் பெயருக்குத் தனி உரிமை இருக்கிறது. அதன் பெயர் காபிரைட் சட்டத்தின் கீழ் பாதுகாப்புப் பெறுகிறது.

**சட்டாம்பிள்ளைத்தனமாக, இந்தியா மீது அமெரிக்கா இந்த விஷயத்தில் நடந்து கொள்ளுவதாகக் குற்றம் சாட்டப்படுகிறதே?**

உணர்ச்சி வசப்பட்டு, இமோஷனலாகக் கையாள வேண்டிய விஷயமல்ல இது. அறிவுரீதியாகச் செயல்பட்டு, தக்க புள்ளி விவரங்களுடன், போதுமான பூகோள- விவசாய ஆதாரங்களுடன் மறுத்து வாதாட வேண்டிய விஷயம். அதனால்தான், விவசாயப் பொருட்கள் ஏற்றுமதி மற்றும் அபிவிருத்தி அமைப்பு (அபீடா), இதன் தலைவர் ராஜகோபால் மூலம், இங்கிலாந்தில் உள்ள பேடன்ட் உரிம அலுவலகத்தில் (யு.கே. டிரேட் மார்க் ரெஜிஸ்டரி) வழக்குப் பதிவு செய்திருக்கிறார்கள். இது டிரேட்மார்க்ஸ் ஆக்ட் 1994 சட்டப்படி எடுக்கப்பட்ட முறையான நடவடிக்கை. பிறகு அமெரிக்காவிலும் நாம் வழக்குப் போடலாம்.

இந்தியா - பாகிஸ்தான் தவிர, வேறு எந்த நாடும் 'பாசுமதி' என்ற பெயரைத் தாங்கள் உற்பத்தி செய்யும் அரிசி ரகத்துக்கு வைக்கக் கூடாது என்று உலகச் சந்தை ஒப்பந்தத்தில் முழுப் பாதுகாப்போடு கொண்டு வர வேண்டும்.

**அதற்கு இந்தியா என்ன செய்ய வேண்டும்?**

நாம், நம் நாடாளுமன்ற அளவில், அதற்கான சட்டங்களை இயற்ற வேண்டும். இனியும் சும்மா இருக்கக் கூடாது. பூகோள ரீதியிலான சட்டபூர்வ உரிமையை நிலைநாட்ட ஆவன செய்ய வேண்டும். ப்ளான்ட் வெரைட்டி பாதுகாப்புச் சட்டங்கள், பயோடைவர்சிடி சட்டங்களை எல்லாம், இனியும் தாமதிக்காமல் இயற்ற வேண்டும்.

அது மட்டுமல்ல. நாம் ஏற்றுமதி செய்யும் பாசுமதி அரிசியின் தரம், முதல் தரமானதாக இருக்க வேண்டும். உடைந்த அரிசியை எல்லாம் ஒதுக்க வேண்டும். ஐரோப்பிய நாடுகளில், இஸ்ரேலியத் தயாரிப்புகளுக்கு 'ஜாஃபா' என்ற தர முத்திரை இருக்கும். இந்த முத்திரை உள்ள திராட்சை, ஆரஞ்சு ரகங்கள் எல்லாம் முதல் தரமாய் இருக்கும். அதுபோல, கிரேடிங், பேக்கிங் எல்லாவற்றிலும் நாம் நெ.1 ஆக இருக்க வேண்டும்.

**ரைஸ்-டெக் நிறுவனம் இப்படி அதிரடியாகச் செய்வதற்கு என்ன காரணம்?**

அதிரடி அல்ல. அவர்களும் ஆராய்ச்சி செய்கிறார்கள். உலக அளவில் வியாபாரம் என்று வந்துவிட்டால், போட்டி சகஜமானது. அந்த நிறுவனத்தில் இருக்கிற ஹென்றி பீச்சல் என்ற நிபுணர் கெட்டிக்காரர். முதல்தரமான ப்ரீடர்.

**பாசுமதிக்கு ஏன் இத்தனை மதிப்பு?**

அது டேராடூன், ஹரியானா, பஞ்சாப் என்று வாரணாசி வரை, இமாலயப் பகுதிகளில் மட்டுமே பயிராகிறது. இந்தச் சுற்றுச்சூழலே அதன் தரத்துக்குக் காரணம். நிறைய சூரிய வெளிச்சம் தேவை. அப்போதுதான் அந்த வாசனை (ப்ளேவர்) வரும். அதுதான் பாசுமதியின் பெருமைக்குக் காரணம்!

சந்திப்பு: **சித்தார்த்**

---

**"உங்க பையனோட போக்கு சரியில்லை. கொஞ்சம் கண்டிச்சி வையுங்க..."**

**"ஏன்? உங்க பெண் பின்னால் சுத்துறானா...?"**

**"என் பெண் பின்னால் சுத்தறது பத்தி கவலையில்ல. ஆனா பக்கத்து வீட்டுப் பெண் பின்னாலும் சுத்துறானே..."**

**— குடந்தை மு. செந்தில்குமார்**



# கண் சிமிட்டும் நேரத்தில் உங்கள் குழந்தை வளர்ந்து விடுவாள்



## அதே வேகத்தில் உங்கள் பணம் வளர்ந்திட




காலங்கள் மாறினாலும் சில கடமைகள் மாறுவதில்லை. உங்கள் செல்ல மகளின் திருமணம்—உங்கள் தலையாய கடமைகளில் ஒன்று. அதற்கு கரூர் வைஸ்யா வங்கியின் திருமகள் திருமண திட்டத்தில் முதலீடு செய்வதே நன்று.

இந்திய தனியார் வங்கிகளுள் முதலாவதாகத் தேறியுள்ள கரூர் வைஸ்யா வங்கியின் நூறு சதவீத பாதுகாப்புடன்!

இன்றே திருமகள் திருமண திட்டத்தில் முதலீடு செய்யுங்கள். உங்கள் மகளின் திருமணத்தை நிறைவாக நடத்துங்கள்.

KVB Since 1916

**தி கரூர் வைஸ்யா பேங்க் லிட்.**

கரூர் – 639 002

A.D.நவநீதன்
சேர்மன்

**நாளும் நம்பிக்கை வளர்க்கும் வங்கி**

Anugrah 2484/98 Tam R

# குறையொன்றுமில்லை

**த**பஸ்வி வேஷத்தில் வந்த யமன், ஸ்ரீராமனின் திருச்செவியிலே சொல்கிறான்:

"சுவாமி! அன்றைய தினம் தேவதைகள் சரணாகதி பண்ணும்போது சங்கல்பம் பண்ணிக்கொண்டீர்களே... பதினோராயிரம் வருஷம்... அந்தப் பதினோராயிரம் வருஷம் முடியப் போகிறது. அதை ஞாபகப்படுத்தத்தான் நான் வந்தேன்..."

– இப்படி அந்த ராமனையே விட்டு வைக்கவில்லையே யமன், நம்மை விட்டு வைப்பானா...?

ஆகையினாலே, பகவானுக்கே காலத்தில் வந்து அவன் ஞாபகப்படுத்துகிறான் என்றால், பகவானுடைய சங்கல்பத்தை, அதற்குரிய காலதேவதை வந்து ஞாபகப்படுத்துகிறது.

இப்படிப்பட்ட நிலைகளையெல்லாம் நாம் ஆராய்ந்து பார்த்தோமானால் எதற்கும் விசனப்படுவதற்கே இங்கே அவகாசமில்லை.

கோபப்படுவதற்கோ, துக்கப்படுவதற்கோ, ஓவென்று அழுவதற்கோ துளிக்கூட அவகாசமில்லை.

விவேகிகள், ஞானிகள், அழமாட்டார்கள். சாமானியர்களாயிருக்கக் கூடியவர்களுக்கு அந்த சிரமத்தினாலே, மரணம் சம்பவிக்கிற காலத்திலே அழுகை வரும். மகான்களுக்கேகூட அப்படி வந்திருக்கிறது.

இந்த லௌகிகம் இருக்கட்டும்... பகவானுக்கு சங்கல்ப பங்கமில்லை என்பதைச் சொல்ல வந்தேன். வைகுண்டத்திலே உட்கார்ந்திருக்கிறான் பரமாத்மா... அங்கே சங்கல்பம் பண்ணுகிறான். என்ன சங்கல்பம்...

உபநிஷத் சொல்கிறது: தனி ஒருவனாக அவனுக்கு ஆனந்தமே கிடையாது. பரமாத்மா எப்போது ஆனந்திக்கிறான் என்றால், பக்தர்களும் பாகவதோத்தமர்களும் அவன் புகழ் பாடித் திளைக்கிற போது! எதிரே நின்று அவன் திருமுற்றத்தைச் சேறு செய்யுமளவுக்கு அவன் தொண்டர்கள் கண்ணீர்ப் பெருக்கி ஆனந்திக்கிறபோது.

நம்மாழ்வார் திருவாய்மொழியிலே இந்த அதி ஆச்சர்யமான பாசுரம் வருகிறது: எம்பெருமான் ரங்கநாதர் எழுந்தருளியிருக்கும் கர்ப்பகிரஹத்தில் போய் நின்று அந்தப் பெரிய பெருமாளை அவர்கள் வழிபடுகிறார்கள்.

அவனை நினைத்து நினைத்து உருகி கண்ணீர் வழிகிறதாம் அவர்களுக்கு. அதைக் கைகளாலே எடுத்தெடுத்து இறைப்பார்களாம் – அர்க்கியம் மாதிரி எடுத்து விடுவார்களாம்! அவ்வளவு கண்ணீர் ஓடி வருகிறது. தாரை தாரையாய் வழிகிறது. 'அவன் திருமுற்றம் சேறு செய்யும் தொண்டர்!'

அவன் கர்ப்பகிரஹத்தைக் கண்ணீரால் நனைத்து மிதித்து மிதித்துச் சேறாக்கக் கூடியவர்கள். அந்த அளவுக்கு உருகுகிறார்கள்.

இவ்வாறு நின்று உருகி உருகிப் பாடி, ஸ்தோத்திரம் பண்ணும் பக்தர்களையெல்லாம் கண்டு பரமானந்தத்தை அடைகிறான் பரமாத்மா.

தனித்து இருக்கும்போது அவனுக்கு ஆனந்தம் ஏற்படுவதில்லை... – உபநிஷத் சொல்கிற விஷயம் இது.

**கை**யில் இருக்கும் ஐந்து விரல்களுக்கும் ஒருமுறை சண்டை வந்துவிட்டது! ஏகமாக சண்டை! (இதை உபநிஷத் நமக்கு எடுத்துக் காட்டுகிறது!) ஐந்து விரல்களும் 'நான் பெரியவன், நான்தான் பெரியவன்' என்று சொல்ல ஆரம்பித்தது...

சற்று பார்த்துவிட்டு, 'வெறுமனே பெரியவன் பெரியவன் என்று சொல்லிக் கொண்டிருந்தால் போதுமா, எதிலே பெரியவன் என்று சொல்ல வேண்டாமா...?' என்று தோன்றிப் போய் விட்டது. மற்ற நான்கு விரல்களும் ஒரு கட்சியாகச் சேர்ந்து கொண்டது. கட்டை விரலைப் பார்த்துக் கேட்டன:

"பெரியவன் பெரியவன்

என்று சொல்கிறாயே! நீ எதிலே பெரியவன்? நாங்களல்லவா மேலே இருக்கிறோம்... நீ எதிலே பெரியவன் என்று சொல்லு..."

"நீங்கள் மேலே இருந்தாலும், நான்தான் பெரியவன்'' என்றது கட்டை விரல்.

"அது என்ன...?"

"இந்த உலகத்திலே தரித்திரனை யாரும் விரும்பமாட்டார்கள். ஐச்வர்யத்தோடு இருக்க வேண்டும். பெரிய பங்களா இருக்க வேண்டும். ஐச்வர்யம் இருக்க வேண்டும். இதையெல்லாம் கொடுப்பவன் நான்தான். தரித்திரத்தைப் போக்குபவன் நான்தான்... அதனால்தான் நான் பெரியவன்..."

"அது எப்படி...?"

"இந்த வீடு, இந்த மனை, இந்த பங்களா, நிலங்களெல்லாம் இவனுடையது... என்பதற்கு அத்தாட்சி என்ன...? நான் தானே..."

"எப்படி...?"

"ரிஜிஸ்தரார், ஆபீஸ் போனால் Thumb impression கேட்கிறார்கள் பாருங்கள்..."

– இது உபநிஷத் சொல்கிற விஷயம்! எது வைதிகத்தில் இருக்கிறதோ, அதெல்லாம்தான் லௌகிகத்திலும் இருக்கிறது. உபநிஷத்தில் இல்லாத எதுவுமே புதிதாக லௌகிகத்திலே கிடையாது!

இப்படி கட்டை விரல் சொன்ன லௌகிக உதாரணம் போல வைதிகத்தில் இன்னொன்றும் வருகிறது:

ஒரு யக்ஞம் நடக்கிறது... அப்போது 'இந்திரா ஆச்ராவாயா...' என்று அழைத்தால் இந்திரனே வந்து ஹவிஸை வாங்கிக் கொண்டு போக வேண்டும். முதல் தடவை கூப்பிட்டு அவன் வரவில்லையானால் இரண்டாம் தடவை கூப்பிடு என்கிறது வேதம். அப்போதும் வரவில்லையானால் பிறகு மூன்றாம் முறையும் கூப்பிடு...

மூன்றாம் முறை கூப்பிட்ட பிறகும் அவன் வரவில்லையானால் அந்த



யக்ஞம் சரியில்லை; தப்பு நடந்திருக்கிறது. அதனாலே பிராயச்சித்தம் பண்ணிக் கொண்டு மறுபடியும் முதலிலேயிருந்து ஆரம்பியுங்கள்... என்று அர்த்தம்.

மூன்று தடவை கூப்பிட்டும் தேவதை வரவில்லையானால் யக்ஞம் கிடையாது என்று யக்ஞப்ரவரணத்திலே சொன்னது... லௌகிகத்திலேயும் அதே வழக்கு இருக்கிறது... எங்கே என்றால், நீதிமன்றத்திலே! அங்கே தான் மூன்றுமுறை கூப்பிடுவதுண்டு.

– இப்படி வைதிகம் எப்படியோ அதுவே லௌகிகமுமாக இருக்கப் பார்க்கிறோம்.

முடியுமா?''

சுட்டு விரல் உடனே தனியாகப் பேசியது:

"பந்துத்வத்தைச் சேர்த்து வைத்து எல்லோரையும் அரவணைத்துச் செல்லக் கூடியவன் நான்தான். நான் இல்லையேல் ஐச்வர்யம் இருந்தும் பிரயோஜனமில்லை..'' என்றது இந்த விரல்.

''அது எப்படி...?'' என்று கேட்டன மற்றவை.

''இவர் என்னுடைய மாமா; இவர்

## அருள்வாக்கு



**யாரோ** ப்ரபு அன்னதானம் செய்யப் போகிறார். அதற்காக மலை மலையாக சாப்பாட்டு வகைகள் கொட்டிக் கிடக்கிறது. ஆனாலும் உனக்கு வேண்டியது ஒரு இலைச் சாப்பாடு தானே? உனக்கு ப்ரபு தெரியாது. வைத் ஆனால் அவருக்கு வேண்டப்பட்ட ஒருவரைத் தெரியும். இவரிடம் கேட்டுக் கொண்டால் இவரே காரியரில் போட்டு எடுத்துக் கொண்டு வந்து நீ இருக்கிற இடத்திலேயே கொடுத்து விடுவார். அப்புறம் ப்ரபுவிடம் போய் நீ எதற்கு நிற்க வேண்டும்? சாப்பாடு அவருடையதாகவே இருக்கட்டும். அதற்காக, அவரைப் போய் நீ தொந்தரவு பண்ண வேண்டியதில்லை. அவர் அதை எதிர்பார்க்கவும் இல்லை. அவர் வருகிறவர்கள் யாரானாலும் 'உன்னிடம் கொடுத்துவிட்டுப் போ' என்று அந்த வேண்டப்பட்ட நபருக்கு அவரே தாராளமாக உரிமை கொடுத்திருக்கிறார். அவரும் (அந்த நபரும்) ப்ரபுவின் சாப்பாட்டைத்தான் தாம் போடுகிறோமே தவிர, தாமாகவே போடுவதாக பாத்யதை கொண்டாடிக் கொள்வதில்லை. ஈச்வரன்தான் ஞானத்தை அநுக்ரஹிக்கும் . சக்தியை

பெரிய மைத்துனர்; இவர் சிறிய மைத்துனர், இவர் மனைவி, இவள் மூத்த குமாரி, இவர் மாப்பிள்ளை, இவர் என்னுடைய அத்தான், இவர் மாமனார்... என்று எல்லோரையும் சேர்த்து வைக்கிறேனே... ஒவ்வொருத்தராக..'' என்றது அந்த விரல்!

**மீ**ண்டும் கைவிரல்களின் போட்டிக்கு வருவோம்...

'ஐச்வர்யத்தைக் கொடுப்பவன் நான் தான்...' என்று சொன்ன கட்டை விரலைப் பார்த்து மற்ற நான்கும் சொல்கிறது:

"தனி ஒருவனாய் ஆனந்தத்தை அனுபவிக்க முடியுமா? பெரிய இந்திர பவனம் போன்ற வீடு இருக்கிறது... நூறு வேலி நிலம் இருக்கிறது. அவன் ஒருத்தனாக வீட்டிலே உட்கார்ந்து என்ன பண்ண முடியும்...? அவனுக்கு நல்ல மனைவி வேண்டாமா? மக்கள் வேண்டாமா? பத்து பேர் வந்து போனால் தானே அந்த வீட்டுக்கு அழகு! தனித்து ஒருவனாய் ஆனந்தத்தை அனுபவிக்க

மூன்றாவது விரலோ... "பிரத்யக்ஷம் பிரமாணம்... நானல்லவா பெரியவன். நீங்களெல்லாம் என்னைக் காட்டிலும் குள்ளம்தானே! நானல்லவோ ஆகிருதியிலே, வடிவிலே பெரியவன்...!'' என்றது.

அடுத்த விரல் சொல்கிறது.... ''ஆயிரம் வேலி நிலம் இருக்கலாம். வீடு இருக்கலாம். மனைவி இருக்கலாம். மக்கள் இருக்கலாம். ஏதாவது ஒன்றுகூட வருமா... போகும் போது...?

"ஒருத்தனோடு கூட வருவது எது என்றால் அவன் பண்ணிய தர்மம்கூட வருமே யொழிய, மற்ற அனைத்தும் ஒவ்வொரு இடத்திலே விட்டுவிட்டுப் போய்விடும். ஸ்மசானத்திலே இஷ்டமித்ர பந்துக்கள் போய் விடுவார்கள். அந்த மாதிரி நிலையிலே நம்கூட வரக் கூடியது ஒன்றுதான்... அது என்ன...? பரலோகத்திலே சகாயம் பண்ணக்கூடியது இந்த

> குருவுக்குக் கொடுத்திருக்கிறான். அவரும் தாமே ஞானம் அளிப்பதாகக் கொஞ்சம்கூட உரிமை பாராட்டுவதில்லை. ஆனாலும் ஈச்வரனே இப்படி ப்ரியப்பட்டு மற்றவர்களுக்கு ஞானம் வழங்கும்படியான சக்தியை இவருக்கு, குரு என்கிறவருக்கு, வழங்கியிருக்கிறானென்றால், தங்களைக் கடைத்தேற்றுவதான பரம லக்ஷ்மத்தை நிறைவேற்றிவிடும் இந்த குருவையே சிஷ்யர்கள் ஸகலமுமாக நினைத்து அவரிடமே அநன்ய பக்தி செலுத்துவதும் அவனுக்கு உகப்பாகத்தானே இருக்க வேண்டும்?
>
> — ஜகத்குரு காஞ்சி காமகோடி
> ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
> சங்கராச்சார்ய சுவாமிகள்.

உலகிலே அனுஷ்டித்த தர்மம்தான்... அது ஒன்றுதான்! அதை அனுஷ்டித்து, தர்மத்தை நிறைய உண்டாக்கிக் கொடுப்பவன் நான்தான்..." என்று அந்த விரல்!

"அது என்ன...?"

"எந்த கர்மா பண்ணும்போதும் 'தர்மத்தைப் பவித்ர விரலிலே போட்டுக்குங்கோ' என்றுதானே சொல்கிறார்கள்... நீ போட்டுக் கொள்ள முடியுமா...?" என்று மற்ற விரல்களைப் பார்த்துக் கேட்டது!

"உனக்குப் பவித்ர விரல் என்று பெயரா...? பிராணாயாமமெல்லாம் பண்ணி, சங்கல்பம் பண்ணிக் கொண்டு, அந்தந்த கர்மாவுக்குண்டான பலனை நானல்லவா உண்டு பண்ணுகிறேன். ஒவ்வொரு கர்மாவிலும் பவித்ரத்தை எடுத்துப் போடுவது என்பது கடைசியிலேதான் வரும்... அதனால்தான் எனக்குப் பவித்ர விரல் என்றே பெயர்... என்னுடைய பெருமை தெரியாமல் பேசுகிறீர்களே...?"

அடுத்தது பாருங்கள்.... சுண்டு விரல் பேசிற்று! அது ரொம்ப அழகாகப் பேசியது: "நீங்கள் ஆயிரம் சொல்லுங்கள். நான்தான் பெரியவன். பெரியோர்களையும் பாகவதோத்தமர்களையும் பகவானையும் சேவித்து, அவர்களுடைய அனுக்கிரஹத்தை முதலில் பெறுபவன் நான். எனக்குப் பின்னால் 'கியூ' வரிசையில்தானே நீங்கள்! யாரை நோக்கிக் கை கூப்பினாலும் முதல் அனுக்கிரஹம் எனக்குத்தான்..." என்றது!

ஆகையினாலே ஒவ்வொரு விரலுக்கும் ஒவ்வொரு ஏற்றம்! அதை நாம் ரசித்துக் கொண்டே வரும்போது, தனி ஒருவனால் ஆனந்திக்க முடியாது என்பது புரிகிறது. எல்லாம் ஒன்றாய் சேருகிறபோதே நிஜமான ஆனந்தம்.

உபநிஷத்தில் சொல்லப்படுவதும் இதுதான். பகவானுக்குத் தனியொருவனாக ஆனந்தமில்லை. அவன் பக்தர்களோடும் பாகவதோத்தமர்களோடும் சேர்ந்திருக்கும் போதுதான் ஆனந்திக்கிறான்.

அப்படிப்பட்ட எம்பெருமான், பரிசாரகர்கள் பக்கத்திலே நின்று கைங்கர்யம் பண்ணும்போது பரமானந்தத்தை அடைகிறான். அந்த வைகுண்டத்திலே அமர்ந்திருப்பவன் சங்கல்பமும் பண்ணிக் கொள்கிறான்: பகுபவன சங்கல்பம் – 'ஒன்றாய் இருக்கக் கூடியவன் பலவாய் இருக்கக் கடவேன்...' அதுதான் பகுபவன சங்கல்பம்.

எத்தனையோ விதமாய் இருக்கும்படியான இந்த உலகத்திலே காரியமாகவும் காரணமாகவும் அவனே நின்று அகாரணமாகவும் அகாரியமாகவும் அவனே நின்று சமஸ்தத்தையும் செயல்படுத்துகிறான். ஆகையினால், ஸ்தூல ரூபமாய் இருக்கக் கூடியது. அவனது பகுபவன சங்கல்பம் சூக்ஷ்ம ரூபமாய் இருப்பது, அவன் உயர்ந்த ஸ்தானத்திலே எழுந்தருளியிருப்பது.

இப்படி பரமாத்மா சகலத்தையும் காத்து வெளியிடுவதனாலே சத்ய சங்கல்பம் என்கிற உத்தமமான குணம் எம்பெருமானிடத்திலே இருக்கிறது.

பகு பவன சங்கல்பத்தினாலே அவனுக்கு விஷ்ணு என்கிற பெயர் ஏற்படுகிறது. எல்லா சராசரங்களிலும் அவனே இருக்கிறான். இதுவே அவனது சத்ய சங்கல்பம் என்கிற குணம்.

(தொடரும்)



நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையிலிருந்து பிரிந்து சாஸ்திரிபவன் நோக்கிச் செல்லும் ஹாடோஸ் ரோடு தொடங்குகிற பிளாட்பாரத்தின் மீது பசுமையாக வளர்ந்து நிற்கும் சீமை வாகை மரத்தின் நிழல். அந்த சாம்ராஜ்யத்தின் எல்லைக்குள், போவோர் வருவோரின் கண்களில் படுமாறு நின்று கொண்டிருப்பான் அந்தப் பிச்சைக்காரன்.

மங்கிய கறுப்பு அல்லது பழுப்பு நிறத்தில் தொள தொளவென்று ஒரு பேண்டும் அநேகமாக எப்பொழுதும் ஸ்லாக்கும் - அதுவும் தொள தொளதான் - அணிந்திருப்பான். குச்சி போன்ற அவனுடைய கைகளில் கிட்டத்தட்ட மணிக்கட்டு வரை ஸ்லாக்கின் கைகள் தொங்கிக் கொண்டிருக்கும்.

நவீன ஓவியர் பாணியில் கருகருவென்ற கிராப்பு தோன்பட்டை வரை தொங்கும். மழித்தலும் நீட்டலும் அல்லாத நெறிப்படி மீசையும் தாடியும் ஒன்றிணைந்த முகபாவம்.

உடம்பு, வாடிய கீரைத் தண்டு போல வற்றிப் போயிருந்தாலும் கண்களில் என்னவோ ஒரு வகையான பிரகாசம் பளிச்சிடும். அது ஆன்மீகப் பிரகாசமா அல்லது அறிவுப் பிரகாசமா? ஏதோ ஒரு பிரகாசம்தான். அதில் சந்தேகம் இல்லை.

பொதுவாக எனக்குப் பிச்சைக்காரர்கள் என்றால் பிடிக்காது. பிச்சைக்காரர்களைத் தூரத்தில் பார்த்தாலே நைசாய் ஒதுங்கிப் போய் விடுவேன். ஆனால் ஏனோ தெரியவில்லை. இந்தப் பிச்சைக்காரன் மீது மட்டும் எனக்கு ஒரு அனுதாபம் தெரிந்தது. ஒருவேளை பிச்சை எடுக்கும் அவனுடைய புதிய பாணியினாலேயோ என்னவோ!

சாதாரண நடைபாதைப் பிச்சைக்காரர்களைப் போல அழுக்குப் படிந்ததும் கிழிசல்கள் நிறைந்ததுமான ஆடை அணிந்து, தலையைப் பரட்டையாகப் போட்டுக் கொண்டு தாடி மீசையில் தூசு மேய விட்டு, ‘ஐயா தரும துரையே, சார், அண்ணாத்தே’, என்று பல குரல் எழுப்பி, ‘சாப்பிட்டு ஒரு வாரம் ஆகுது’ என்று நம்மைத் துரத்திக் கொண்டு வரும் பழைய டைப் இல்லை இவன்.

பிளாட்பாரத்தில் அவன் நிற்கும் அந்த வாகை மரத்து நிழலைத் தாண்டி வந்து யாரிடமும் அவன் பிச்சை கேட்பதில்லை. இதை நான் கவனித்திருக்கிறேன். இந்தப் பிச்சைக்காரன் கையிலே ஒரு தொப்பி இருந்தது.

தொப்பி என்றால் சாதாரணமாக காலரா ஊசி போட வரும் சுகாதார இன்ஸ்பெக்டர் அணியும் காக்கி நிறக் கூடைத் தொப்பி அல்ல. இது ஒரு ஃப்ரெஞ்சு ஃபெல்ட் ஹேட். அழகிய ஆஷ் கலரில், ரிம்மைச் சுற்றி ஆரஞ்சு நிறத்திலான சேட்டின் ரிப்பன். அந்த ரிப்பனின் பக்கவாட்டில் காட்டுச் சிட்டுக் குருவிகளின் இறகுகள் பொருத்தப்பட்டிருந்தன.

ஆனால் சென்னையின் உக்கிரமான வெயிலுக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் தொப்பியின் ஆஷ் கலர் மங்கி கழுதையின்



பெர்னாட்ஷாதாசன்

# திருவாளர் ராமலிங்கம்

நிறம்போல மாறிவிட்டது. சேட்டின் ரிப்பனும் சுய நிறத்தை இழந்து தவிட்டின் நிறமாகி விட்டது. சிட்டுக் குருவியின் இறகுகள் பாதிக்குமேல் உதிர்ந்து விட்டன.

அந்தத் தொப்பியை அவன் தன் இடது கையில் பிடித்திருப்பான். சட்டென்று பார்க்கும் போது வலது கையைவிட இடது கை பருமன் குறைவாக, சூம்பின மாதிரி தெரியும். மாதிரி என்ன, சூம்பின கைதான்.

அந்தச் சூம்பின கையில் தொப்பியை மல்லாத்திப் பிடித்துக் கொண்டு, பிளாட்பாரத்தில் போவோர் வருவோரின் முகத்துக்கு நேராகத் தொப்பியை நீட்டுவான். ஏதோ ஒரு ஸ்ப்ரிங் ஆக்ஷனில் தூரத்திலிருந்து கை நீண்டு வருவது போல ஒரு மாயத் தோற்றத்தை உண்டாக்குவான்.

சாஸ்திரிபவன் சிப்பந்திகள் அந்தத் தொப்பியைப் பார்த்தவுடனே தங்கள் ஜேபியிலிருந்து பத்துப் பைசா, இருபது பைசா நாணயத்தை எடுத்து ரெடியாக வைத்துக் கொண்டு அவனைக் கடந்து செல்லும் பொழுது அவனுடைய தொப்பியில் நழுவ விட்டுச் செல்வர்.

அவனுடைய தொப்பியில் அடிக்கடி காசு போடுபவர்களை அவனுக்குத் தெரியும். அவர்கள் காசு போடும்போது நன்றியுடன் தலையைக் குனிந்து நிமிர்வான். மற்றபடி வாயைத் திறந்து நன்றி கூற மாட்டான்.

**நா**ன் பெங்களூர் ஆபீசிலிருந்து சென்னைக்கு மாற்றலாகி வந்த புதிதில் அவனை ஓர் ஊமை என்றே நினைத்துக் கொண்டேன். ஆனால் ஒரு நாள் அவன் பக்கத்து டீக் கடைக்காரனிடம் மெதுவான குரலில் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்த பின்புதான் அவன் ஊமை அல்லவென்பதைத் தெரிந்து கொண்டேன்.

மத்தியானம் லஞ்ச் அவரில் கேன்டீனில் அவனைப் பற்றிப் பேச்சு அடிபடும்.

பாஸ்போர்ட் ஆபீஸ் பரமானந்தம் அந்தத் தொப்பி பிச்சைக்காரனின் தீவிர ஆதர

வாளர். அவனுடைய ஃபெல்ட் ஹேட்டிற்கு ஏதோ மகத்துவம் இருப்பது போல பிரஸ்தாபிப்பார். அதில் காசு போட்டால் பணக் கஷ்டமே வராதாம்.

பலர் அதை வெகுவாக ஆமோதித்தனர். சென்ட்ரல் எக்சைஸ் ஆபீஸ்காரர் ஒருவர் ஒரு நாள் அவன் தொப்பியில் ஒரு ரூபாய் நோட்டு ஒன்று போட்டாராம். அவருக்கு சிக்கிம் லாட்டரியில் பத்தாயிரம் ரூபாய் அடித்ததாம்.

ஆனால் எங்கள் ஆபீசில் வேலை பார்க்கும் மன்னார்குடி ராஜகோபாலனுக்கு அவனைப் பிடிக்காதோ என்னவோ, எப்போதும் தொப்பியைப் பற்றி கேலியும் கிண்டலுமாகத்தான் பேசுவான்.

அந்தத் தொப்பிப் பிச்சைக்காரனுக்கு எப்படி அந்த ஃபெல்ட் ஹேட் வந்தது என்பதைப் பற்றி சுவையான தகவல் ஒன்றைச் சொல்வான்.

ஒரு தடவை ஒரு வெள்ளைக்காரன் பாஸ்போர்ட் ஆபீசுக்குப் போவதற்காக ஹாடோஸ் ரோட்டுக்குத் திரும்பும்போது, இந்தப் பிச்சைக்காரனைப் பார்த்திருக்கிறான். அப்பொழுதெல்லாம் இந்தப் பிச்சைக்காரன் எல்லா பிச்சைக்காரர்களையும் போலத்தான் கையேந்திப் பிச்சை எடுப்பானாம்.

அந்த வெள்ளைக்காரனைக் கண்டதும் அவனிடம் போய் "ப்ளீஸ் சர்! ஹேவ் மெர்ஸி அப்பான் திஸ் புவர் ஹேண்டி கேப்டு பெர்சன்..." என்று சொல்லி தன் சூம்பல் கையை அவனிடம் நீட்டினானாம்.

அந்த வெள்ளைக்காரனுக்கு, இந்தியாவில் ஒரு பிச்சைக்காரன் இவ்வளவு அழகாக இங்கிலீஷ் பேசுகிறானே என்று ஆச்சரியப்பட்டு நின்று அவனைப் பார்த்து "லுக் ஹியர் மை ஃப்ரெண்ட்! டோன்ட் யூஸ் யுவர் ஹேண்ட் ஃபார் பெக்கிங்!" என்று சொல்லி, தான் அணிந்திருந்த ஃபெல்ட் ஹேட்டைக் கழற்றி அவன் கையில் கொடுத்து "யூஸ் திஸ் ஹேட். திஸ் இஸ் எ லக்கி ஹேட், பை பெக்கிங் ஃப்ரம் திஸ் ஹேட் ஐ யேர்ண்ட் லாட் ஆப் மணி, அண்ட் ஹேவிங் மை வேர்ல்ட் டூர் நவ்!" என்று சொல்லி, தன் பாக்கட்டிலிருந்து ஒரு ஐந்து ரூபாய் நோட்டை எடுத்து அந்த ஹேட்டில் போட்டுவிட்டு, "விஷ் யூ பெஸ்ட் ஆப் லக். குட் பை" என்று சொல்லி விட்டுப் போனானாம்.

"பாத்தீங்களா அந்த ஆளுக்குப் பிச்சை எடுப்பதிலும் ஒரு பிரமோஷன்!"

**"டாக்டர், அவசியம் டிரிப்ஸ் ஏத்தித்தான் ஆகணுமா?"**

**"சரியாப் போச்சு! இப்படியே எல்லாரும் கேட்டா வாங்கி வெச்ச பாட்டில் எல்லாத்தையும் என்ன செய்யறது?"**

**– டி. என். பாலகிருஷ்ணன்**

இதைக் கேட்டு எல்லோரும் சிரித்தார்கள். எனக்கு மட்டும் சிரிப்பு வரவில்லை. நான் சிரிக்கும் மூடில் இல்லை.

அடுத்தவாரம் பிள்ளைகளுக்குப் பள்ளிக் கூடம் திறக்கப் போகிறது. மத்திய தர வர்க்கத்துக்கேயுரிய பந்தாவினால் நான் பிள்ளைகளைக் கொண்டு போய் கான்வென்டில் சேர்த்து விட்டேன்.

இப்போ பள்ளிக் கூடம் திறந்ததும் ஸ்கூல் ஃபீஸ், யூனிஃபார்ம், ஸ்கூல் பஸ் கட்டணம், அது இது என்று பத்தாயிரம் வரை புரட்ட வேண்டியிருக்கிறது. மூழி பிதுங்கும் நிலைமையில் நான் எங்கே சிரிப்பது?

மனைவியின் கழுத்தில் ஒரே ஒரு செயின்தான் மிச்சம். ஒவ்வொரு வருடம் ஜூலை மாசம் பள்ளிக் கூடம் திறந்தால், அந்த செயின் எம்.ஸி.ஸி. பேங்கிற்கு விஜயம் செய்யும். ஆபீஸில் இன்டிபென்டென்ஸ் ஃபெஸ்டிவல் அட்வான்ஸ் போடுபவர்களின் லிஸ்டில் என் பெயர்தான் முதலில் இருக்கும்.


இந்தத் தடவை எல்லாவற்றையும் தாண்டி ஓர் ஆயிரம் ரூபாய் உதைத்தது. யாரிடம் கை மாற்று வாங்குவது என்று மண்டை குழம்பிக் கொண்டிருந்தேன்.

என் பக்கத்து சீட் மல்லிகார்ஜுனராவ் கொஞ்சம் பசையான ஆள்தான். ஆனால் பசை சீக்கிரம் ஒட்டாது. எப்படியும் ராவைத்தான் கேட்டுப் பார்க்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டேன்.

ராவ் ஆபீஸ் விட்டு வீட்டுக்குப் போவதில் ரொம்ப பங்சுவல். டாண்ணு ஐந்தரை அடித்ததும் ஃபைல்களை ஏரக் கட்டி வைத்து விட்டு கிளம்பி விடுவான்.

இன்றைக்கு எப்படியாவது அவனை மடக்கி விட வேண்டும் என்று ஐந்தரை அடித்ததும் அவனைப் பின்தொடர்ந்தேன்.

ஆபீஸ் வாசலில் யாரோ ஒரு தெலுங்கு ஆசாமி, "நமஸ்காரண்டி" என்று



சொல்லிக் கொண்டே ராவின் தோள் மீது கை போட்டுக் கொண்டு மெயின் ரோடு வரை மாட்டுலாடிக் கொண்டு வந்தான். நல்லவேளை மெயின் ரோடு வரும்போதே, "ஒஸ்தானுண்டி" சொல்லி விட்டுத் திரும்பி விட்டான்.

ஹாடோஸ் ரோடு திருப்பத்தை அடையும்போது ராவ் என்னைப் பார்த்து விட்டான்.

"என்ன சார் இன்னைக்கு நேரத்தே கிளம்பிட்டீங்கோ. இல்லைன்னா ஆறு மணி வரை லேட் அவர்ஸ் பாப்பீங்களே" என்று அகச்சுட்டு புறச்சுட்டாகச் சுட்டிக் காட்டினான்.

"இன்னைக்கு உங்ககிட்ட ஒரு விஷயம் பேசணுங்கறதினால உங்க கூடவே கிளம்பிட்டேன்" என்றேன்.

இருவரும் பிளாட்பாரத்தை நெருங்கியதும் பிளாட்பாரத்தில் ஏறி நின்று கொண்டு "என்ன சார் விஷயம்?" என்றான்.

நான் என் கதையை அப்படியே ஆக்ஷன் ரீப்ளே பண்ணினேன்.

ராவ் சற்று நேரம் மௌனத்திற்குப் பின், "நேற்று நம்ம மச்சான் நெல்லூரிலிருந்து வந்தான். ஒரு வி.ஸி.ஆர் வாங்க ரூபாய் குறையுதுன்னு ஒரு ஐயாயிரம் ரூபாய் வாங்கிட்டுப் போயிட்டான். இப்போ கைவசம் ஒண்ணும் இல்லையே சார்" என்று கையை விரித்து விட்டான்.

"சரி பரவாயில்லை. நான் வேறு யாரிடமாவது பார்த்துக் கொள்கிறேன்" என்று அவசரமாய் பஸ்ஸுக்குப் போகிறவனை "பை" சொல்லி விட்டு பிளாட்பாரத்தின் மீது நடந்து சென்றேன். கால்கள் சுரத்து இல்லாமல் நடந்தன.

**நா**ன் ரோட்டின் ஓரமாய் மெதுவாக நடந்து கொண்டிருந்தேன். என்னை யாரோ பின்தொடர்ந்து வருவது போல் ஓர் உணர்வு. சட்டென்று திரும்பிப் பார்த்தேன்.

ஆம். அந்தத் தொப்பிப் பிச்சைக்காரன் தான். தொப்பியைத் தலையில் மாட்டிக் கொண்டிருந்தான். என்னைப் பார்த்ததும் தொப்பியை எடுத்துக் கையில் பிடித்துக் கொண்டான். என் கால்கள் ஸ்தம்பித்து நின்று விட்டன.

இருவரும் ஒருவரையொருவர் முறைத்துப் பார்த்துக் கொண்டு நின்றோம். சில விநாடிகள் சென்றதும், தொப்பிதான் வாய் திறந்தான்.

"சார் உங்ககிட்ட ஒரு விஷயம்...." வாக்கியம் முற்றுப் பெறவில்லை.

"என்ன விஷயம்?" என்று சுரத்து இல்லாமல் கேட்டேன்.

"சார் என்னிடம் ஓர் ஆயிரம் ரூபாய் இருக்குது. தர்றேன். வாங்கிக்கிறேயளா சார்?"

எங்கேயோ நினைவை மேயவிட்டுக் கொண்டு நடக்கையில் திடீரென்று கால் இடறி எதிலோ இடித்து விட்டது போல சடக்கென்று நின்று விட்டேன். அந்த ஆளின் தீட்சண்யமான பார்வை என் மீது குத்திட்டு நின்றது.

நான் சற்று நகர்ந்து ஓரமாய் நின்றேன். அந்த ஆளும் என் அருகில் நெருங்கி வந்து நின்றான்.

"உங்க பேர் என்ன?"

"ராமலிங்கம் சார்."

"மிஸ்டர் ராமலிங்கம், எனக்கு இப்போ ஒண்ணு புரிஞ்சு போச்சு. நான் என் நண்பரோடு வாகை மரத்துப் பக்கத்திலே ஆயிரம் ரூபாய் கைமாத்துக் கேட்டது உங்கள் காதில் விழுந்திருக்கிறது. இல்லையா?"

"ஆமாம் சார்."

அந்த ஆள் ஒருவித குற்ற உணர்வுடன் ஒப்புக் கொள்வது போல இருந்தது.

"சரி பரவாயில்லை. உங்ககிட்ட உண்மையிலே ஆயிரம் ரூபாய் இருக்குதா?"

"இருக்குது சார்."

"இப்போ கைவசம் இருக்குதா?"

அந்த ஆள் சற்று குனிந்து தன் வலது கையால், அவனுடைய ஸ்லாக்குக்கு அடியில் துருத்திக் கொண்டிருந்த பேன்ட் பாக்கெட்டை தப்தப் என்று தட்டிக் காட்டினான். இதோ பாருங்க பத்து ரூபாய் இருபது ரூபாய் நோட்டாகக் கட்டி வெச்சிருக்கேன்.

"சரி திடீரென்று எனக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்து உதவ வேண்டும் என்று எப்படித் தோன்றியது?"

"அதெல்லாம் ஒரு மனிதநேயம்தான் சார்."

அதற்கு மேல் கேள்வி கேட்க மனம்

இடம்தரவில்லை. இப்பொழுது அந்த ஆள் என்னை விடச் சற்று உயரமான இடத்தி லிருந்து பேசுவது போல உணர்ந்தேன்.

"சரி ஆயிரம் ரூபாய் கொடுத்தீர்கள். கண்டிஷன் ஒன்றும் சொல்லவில்லை. என் பெயர் என்னவென்று கூடக் கேட்க வில்லையே?"

அந்த ஆளின் முகத்தில் ஒரு புன்னகை மலர்ந்தது. 'பெயர், விலாசம் இதிலெல்லாம் என்ன இருக்கிறது. இன்று கோபால்சாமி என்ற பெயரை நாளை வீராசாமி என்று மாற்றிக் கொள்ளலாம். மனம்தான் சார் மாறாமல் இருக்க வேண்டும்' என்று அந்தப் புன்னகை கூறுவது போலிருந்தது.

என்றாலும் நான் கடமையுணர்வுடன், "என் பெயர் வரதராஜன். பாஸ்போர்ட் ஆபீஸில் சீனியர் குமாஸ்தா. அடுத்த மாசம் உங்கள் பணத்தைத் தந்து விடுகிறேன்!" என்றேன்.

"சரிங்க சார்" என்று சொல்லிக் கொண்டே பாக்கெட்டிலிருந்து ஸ்தூலமான பிளாஸ்டிக் கவர் ஒன்றை வெளியே எடுத்தான். "இந்தாங்க சார்" என்று அந்தக் கவரை என்னிடம் நீட்டினான்.

நான் அதை வாங்கி என் ப்ரீப் கேசுக்குள் வைத்துக் கொண்டு, "ரொம்ப தேங்க்ஸ் மிஸ்டர் ராமலிங்கம். அடுத்த மாசம் திருப் பித் தந்து விடுகிறேன்."

"சரிங்க சார். அப்ப நான் வரேன்" என்று சொல்லிக் கொண்டே அண்ணா மேம்பாலத்தை நோக்கி நடக்க ஆரம்பித் தான்.

சனி, ஞாயிறு விடுமுறை கழிந்து திங்கட்கிழமை ஆபீஸ் போகும் போது என் பார்வை வாகை மரத்து அடியில் ராம லிங்கத்தைத் தேடியது. தொடர்ந்து இரண்டு மூன்று நாட்களாய் ராமலிங்கத்தைக் காணவே இல்லை.

என் மனத்தில் ஒரு தவிப்பு. எங்கே போயிருப்பான். உடல்நலம் சரியில்லையா? ஆளே சோனிதான். யாரிடம் போய் விசாரிப்பது?

அன்று மாலை எனக்கு ஒரு ஐடியா தோன்றியது. ராமலிங்கம் எதிர் வாடையில் உள்ள ஒரு டீக்கடையில் டீ சாப்பிடுவான்.

டீக்கடையில் கூட்டம் இல்லை.

"அண்ணாச்சி ஒரு டீ ஸ்ட்ராங்கா போடுங்க!" என்று சொல்லிவிட்டு, எதிரே ராமலிங்கம் நிற்கும் வாகை மரத்து அடியை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

அண்ணாச்சி டீயைப் போட்டு விட்டு கிளாஸை என் பக்கமாய் நீட்டினார். டீயைக் குடிப்பதற்கு முன்னால், "அண் ணாச்சி! அந்தப் பக்கமாய் வாகை மரத்து அடியில் ஒரு தொப்பிப் பிச்சைக்காரன் நிற்பானே அவனைக் காணலியே...." என்று நைசாகக் கேட்டேன்.

"சார் உங்களை மாதிரியே ரொம்பப் பேர் வந்து என்னிடம் தொப்பிப் பிச்சைக் காரனைப் பற்றி கேட்டுட்டாங்க. நம்ம ஆளுங்களுக்கு மூடநம்பிக்கை ரொம்ப ஜாஸ்தியாப் போச்சு. அந்த தொப்பிப் பிச்சைக்காரன் தொப்பியிலே காசு போட்டா காசு பணம் சேரும் என்று ஒரு நம்பிக்கை. அதற்காக வேண்டி அவன் தொப்பியிலே நிறைய காசு போடுறாங்க. அந்த ஆளு நான் பார்த்தவரையிலே நேர்மையான ஆளுதான். ஆனா நம்ம ஆளுங்க அவன கூடிய சீக்கிரம் ஒரு சாமி யாராகவோ பாபாவாகவோ ஆக்குறாங்களா இல்லையான்னு பாருங்க!" என்று ஆணித் தரமாகக் கூறினான்.

அந்த டீக்கடைக்காரனின் பேச்சில் உண்மை இருப்பதாகத் தோன்றினாலும், ராமலிங்கத்தைப் பற்றி அந்த டீக்கடைக் காரனுக்கு என்ன தெரியும்? ஒரு நூறு ரூபாய் அவசரமாய் வேணும்; நாளைக்குத் தருகிறேன்' என்று கேட்டால் இவன் கொடுப்பானா? ஆயிரம் ரூபாயையும் மனிதநேயத்தையும் அல்லவா ராமலிங்கம் என்னிடம் கொடுத்துவிட்டுப் போயிருக் கிறான்! ●



● ஐஸ்லாந்து நாட்டில் உள்ள டீ.விக்கு வியாழக்கிழமை ஒரு நாள் விடுமுறை! இந்த நாளில் அந்த நாட்டு மக்கள் டீ.வி. தொல்லையில் லாமல் இருக்கிறார்கள்!

— பழங்கூர். மீரா முருகன்



# உறவின் இழைகளால்
# புதியஉலகம் நெய்வோம் வாருங்கள் !

கல்லும் மண்ணும் தோன்றிய காலம் தொட்டு; கலாச்சாரம், பண்பாடு, நாகரீகம் வளர்ந்து நின்ற காலம் வரை சங்கிலித் தொடராய் இணைந்த சந்தோஷ உறவுகளே மனித இனத்தை வளர்த்து வந்துள்ளது. இந்த உறவுகள் நீடித்த ஆயுளையும், நிறைவான வாழ்வையும், நின்று நிலைக்கும் தலைமுறை களையும் உண்டாக்கித் தந்த நம்பிக்கை விதைகள். இன்று அந்த விதைகள் விருட்சமாகி, கால் நூற்றாண்டு காலமாய் வளமைக்கான பாதையாய், மகத்தான மக்கள் இயக்கமாய் வளர்ந்து 15 லட்சம் சந்தாதாரர்கள் மகிழ்வுடன் பலன் பெறும் கற்பகத் தருவாய் கனிந்து நிற்கிறது. அது மூன்று தலைமுறைகளின் நம்பிக்கையைப் பெற்ற ஸ்ரீராம் சிட்ஸ்.

இந்த உறவுகள் தான் உங்கள் வெற்றிக்குச் சிறகுகள்.

இந்த உறவுச் சங்கிலியில் உங்களுக்குத் தெரிந்தவரை சந்தாதாரராக அறிமுகம் செய்கையில் கிளை மேலாளரிடம் உங்கள் அதிர்ஷ்டத்தை மறைத்து வைத்திருக்கும் கூப்பனொன்றைப் பெற்று, அதை அவர் முன்னிலையிலேயே பிரித்து, கூப்பனுக் கேற்ற ஸ்ரீபெட் வாட்டர் பாட்டில் முதல் தங்க நெக்லஸ் வரை விலான பரிசுகளைப் பெறுங்கள். நீங்கள் அறிமுகப்படுத்தும் நபருக்கும் அவர் சேரும் சீட்டு மதிப்பிற்கேற்ப சந்தாதாரர் பரிசு உண்டு.

இன்பத்தை அனைவருக்கும் பங்கு வைத்து இனிய பரிசுகளைப் பெறுவோம், வாருங்கள்.

SHRIRAM GROUP COMPANIES
MADRAS

ஸ்ரீராமின்
சித்திரை கோலாகலம்
ஏப்ரல் 4 - 14 '1998

# ஸ்ரீராம் சிட்ஸ்

ஸ்ரீராம் சிட்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ் லிமிடெட்.
'சுப்ரமணியன் பில்டிங்', 1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை-600 002.
போன் : 8520700, 8520797, 8522651, 8523932, 8525536.

கூப்பனைக்
கொண்டு வந்து பெட்டியில்
போட்டு அள்ளிச் செல்லுங்கள்,
அரிய
பரிசுகளை.

**இழப்பற்ற அதிக லாபம் தரும் என்றும் ஏற்புடைய முதலீடு.**

| | சீட்டுத் தொகை* | | சந்தாதாரர் பரிசுகள் |
|---|---|---|---|
| 1. | 250 X 40 | 10,000 | செல்லோ கூல் தண்டர் வாட்டர் பாட்டில் |
| 2. | 500 X 30 | 15,000 | எஸ். எஸ். [illegible] மூடியுடன் |
| 3. | 625 X 40 | 25,000 | எஸ். எஸ். [illegible] |
| 4. | 500 X 60 | 30,000 | செல்லோ [illegible] 500 மி.லி. |
| 5. | 1,000 X 50 | 50,000 | எஸ். எஸ். சி.பி. வெண்ணெய் சட்டி மூடியுடன் |
| 6. | 2,500 X 30 | 75,000 | எஸ். எஸ். சி.பி. குக்கிங் பாட் மூடியுடன் |
| 7. | 2,500 X 40 | 1,00,000 | காசி சாண்ட்விச் பாட்டம் எஸ்.எஸ். சாட்பான் (மூடியில்லாமல்) |
| 8. | 5,000 X 30 | 1,50,000 | காசி சாண்ட்விச் பாட்டம் எஸ்.எஸ். சாஸ்பான் (மூடியுடன்) |
| 9. | 5,000 X 40 | 2,00,000 | ஹாக்கின்ஸ் [illegible] சாஸ் பான் (மூடியில்லாமல்) |
| 10. | 10,000 X 30 | 3,00,000 | எஸ். எஸ். [illegible] செட் |
| 11. | 20,000 X 25 | 5,00,000 | 4 கிராம் தங்க காசு |

*[illegible] *[illegible]

நேரடியாக சீட்டில் சேரும் ஒவ்வொரு சந்தாதாரருக்கும் ஒரு சந்தாதாரர் பரிசு உண்டு.

# ஆட்டம் கண்ட சிவசேனைக் கூடாரம்!

கூட்டுக்கோப்புக்குப் பெயர் போன சிவசேனைக் கூடாரம் ஆட்டம் கண்டிருக்கிறது. தலைவர் பால் தாக்கரே, முன்னெப்போதுமில்லாத அளவு உணர்ச்சி வசப்பட்டு மூன்றுமாத அரசியல் துறவறம் மேற்கொண்டிருக்கிறார். தேர்தல் தோல்வி கூடத் தராத அதிர்ச்சியை, தாக்கரேவின் இம்முடிவு தந்திருக்கிறது!

நடந்தது இதுதான் :

ஏற்கெனவே தேர்தல் தோல்விகளால் துவண்டு போயிருந்தார் தாக்கரே. போதாக் குறைக்குக் கட்சியின் அடிமட்டத் தொண்டர்கள் பலர் அவரைச் சந்தித்து, சேனைத் தலைவர்கள் பலர் அடாவடித்தனமாக நடந்து கொள்வதாகவும், தொட்டதற்கெல்லாம் லஞ்சம் கேட்பதாகவும் அத்து மீறிப் பேசுவதாகவும் மாறி மாறிப் புகார் சொல்ல, கொதித்துப் போனார் தாக்கரே.

அதை வெடிக்க வைத்து, புண்ணியம் கட்டிக் கொண்டவர் காங்கிரஸ்காரரான பாட்டீல். சட்டசபையில் அவர், முதல்வர் ஜோஷி, யார் யாருக்கோ, எதெதையோ செய்து தந்து, லட்சக்கணக்கில் பணம் சுருட்டுகிறார்; ராஜ் தாதர்கர் என்பவர்தான் ஜோஷி சார்பில் வசூல் வேட்டை செய்கிறார் என்று குற்றம் சாட்டினார். தீப்பொறிக்காகக் காத்திருந்த தாக்கரேவுக்கு, தீப்பந்தமே கிடைத்து விட, தமது சாம்னா பத்திரிகையில் ''என்னிடமும் இது பற்றிப் புகார்கள் வந்துள்ளன. 40 லட்சம் லஞ்சமாகக் கொடுத்த ஒருவர், 'இன்னும் வேலை முடியவில்லை' என்று என்னிடம் முறையிட்டு, என்னைத் தலையிடச் சொல்கிறார். நான் எதற்குத் தலையிட வேண்டும்? என்மீதும் என் குடும்பத்தார் மீதும் அபாண்டமாகக் குற்றச்சாட்டுகள் அள்ளி வீசப்பட்டபோது, யார் எனக்கு உதவிக்கு வந்தார்கள்? நான் தனி மனிதனாகத்தானே கையில் செருப்புடன் அவர்களுக்கு பதிலடி கொடுத்தேன்? இப்போது ஜோஷியும் பதில் சொல்லட்டும்; அவர் எந்த ஆயுதத்தைக் கையில் எடுக்கிறார் பார்க்கலாம்! அவர், சிவசேனை கட்சிக்கும், எனக்கும் எதிரியான சரத் பவாருடன் ஈஷிக் கொண்டு சொந்தம் கொண்டாடுவது துரோகம்! இதற்கெல்லாம் என்ன அர்த்தம்? சரியான விளக்கமில்லையேல், உரிய தண்டனையைப் பெற்றுதான் ஆக வேண்டும்!'' எனக் கொட்டித் தீர்த்தார்!

உடனே எல்லோரும் ஜோஷியின் ராஜினாமாவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்க, அவர் அடுத்த கோணத்திலிருந்து விஷயத்தைப் பெரிதாக்கினார்!

முனுக்கென்றால் ராஜினாமாவை எடுத்துக் கொண்டு ஓடி வருபவர், இம்முறை எதையும் கண்டு கொள்ளாமல், குளு குளு லோனாவாலாவில் போய் யோகி விஞ்ஞானந்தா ஆசிரமத்தில் தியானத்தில் அமர்ந்து விட்டார்!



• தாக்கரே

ஜோஷி சாதுதான்; எத்தனையோ முறை தாக்கரேவால் அவமானப் படுத்தப்பட்டவர்தான்; இருந்தாலும், குனியக் குனியக் குட்டிக் கொண்டே இருந்தால்...?

தானே ராஜா, ஜோஷி வெறும் மந்திரி என்ற இறுமாப்பில் இருந்தார் தாக்கரே! ஆனால் ஜனநாயகத்தில் ராஜாவுக்கு இடமில்லை; மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரே முக்கியம் என்பதைச் சற்று கால தாமதமாக உணர்ந்தாலும், அழுத்தம் திருத்தமாகவே உணர்ந்து விட்டார் ஜோஷி!

''எனக்குப் பதவிப் பற்று இல்லை; ஆனால் இப்படி அவமானகரமான விதத்தில் ராஜினாமா செய்ய இசைவில்லை'' என்று கூறிவிட்டார்.

நேர்க்கோடாக இருக்க வேண்டிய

சிக்கலில், மூன்றாவது புள்ளியாக, 'இதோ நானும் இருக்கிறேன்' எனத் தன்னை வெளிப்படுத்திக் கொண்டு, முக்கோண வடிவமைத்தவர் உன்மேஷ் ஜோஷி – முதல்வரின் புதல்வர்!

நண்பர்களுடன் 'ரெட் ஸஃபாரி'யில் லோனாவாலா, மஹாபலேஷ்வர் என்று ஜாலியாக சுற்றிக் கொண்டிருந்தவரை, முதல்வரானதும் ஜோஷி, தனது பிஸினஸில் திணித்து விட்டார்.

புனாவிலும், ஏனைய இடங்களிலும் புதுப் புது ஹோட்டல்களைத் திறந்து பிஸினஸைப் பெருக்கினார் உன்மேஷ். பிறகு மெது மெதுவாக அரசியலிலும் மூக்கை நுழைத்தார். முதல்வரை நேரடியாகச் சந்திக்க முடியாதவர்கள், இவர் வாயிலாக அவரைப் பார்க்க ஆரம்பித்தனர்.



• ஜோஷி



• ஷரத் பவார்

ஜோஷியின் எதிரிகள், 'உன்மேஷ், அரசியலைத் தன் சொந்த ஆதாயத்துக்கு உபயோகிக்கிறார்' என்று தாக்கரேயின் காதில் போட்டு வைக்க, அவர் உடனே, 'உன்மேஷ், பில்டர்கள் நலனுக்காக, பள்ளிகளை காலி செய்கிறார்; தாதர்கர் என்ற சுருட்டல் மன்னனை கைக்கூலியாக உபயோகிக்கிறார்' என சாம்னாவில் புலம்பியிருக்கிறார்!

ஆனால் உன்மேஷ் எதற்கும் பதிலளிக்கவில்லை; பத்திரிகையாளர்களையும் சந்திக்க மறுத்து விட்டார்!

அப்பா - பிள்ளை இருவருமே மசியாமல் இருந்தது, தாக்கரேயின் வெறுப்பை உச்சக் கட்டத்துக்குக் கொண்டு சென்று, "நான் நடைமுறை அரசியலிலிருந்து சில காலத்துக்கு ஒதுங்கியிருக்கப் போகிறேன்; மற்ற சிவ சேனைத் தலைவர்கள் கட்சியை நடத்துவார்கள் என அறிவிக்க வைத்தது.

அவ்வளவுதான்! மறுநாளே சேனைத் தொண்டர்கள் அனைவரும் தாக்கரே வீட்டு முன் நின்று, "எங்களுக்கு அரசே வேண்டாம்; எங்கள் பாலா சாஹேப்தான் வேண்டும்" என கோஷமிட்டனர்.

அலறி அடித்துக் கொண்டு, தங்கள் ராஜினாமா கடிதங்களுடன் வந்த பல அமைச்சர்களைக் கூட்டத்தினர் அடித்து, கலாட்டா செய்திருக்கின்றனர். சபாநாயகர் தத்தா நளவாடே கதியே அதோகதியாக, ஒரு சிலர் உன்மேஷ் முகத்தில் கரியைப் பூச, கருப்புப் பெயிண்ட் டப்பாக்களுடன் புறப்பட்டனர். போலீஸ் தலையிட்டதால் உன்மேஷ் முகம் பிழைத்தது!


சரத் பவார் வேறு, "ஜோஷியைப் பகைத்துக் கொண்டு, தாக்கரேவால் தாக்குப் பிடிக்க முடியாது" என்று தூண்டிவிட, சகன் புஜ்பலோ, "ஹூம்.. தேர்தல் தோல்விக்கு யார் தலையில் பழியைப் போடலாம் என்று தாக்கரே பார்த்துக் கொண்டிருந்தார். ஜோஷி மாட்டினார். இது வெறும் கபட நாடகம்" என ஊதி விட்டார்.

கடைசியில் ஜோஷியே தாக்கரேவைக் கண்டு நேரில் உரையாட, கோபம் தணிந்தவராய் வெளியே வந்து தரிசனம் தந்த தலைவர், "ஜோஷி நல்லவர்தான்; அவரே தொடர்ந்து முதல்வராக இருப்பார்; ஆனால், இனி அவர் கவனமாகச் செயல்பட வேண்டும்; நான் கொஞ்ச காலம் ஓய்வெடுத்துக் கொள்ள விரும்புகிறேன்; மீண்டும் வருவேன்" என்பதாக அறிவித்து, இந்த இரண்டு நாள் கூத்துக்குத் திரை இறக்கினார்.

ஆனால் திரை மறைவிலிருந்து இவரை இயக்கியது பி.ஜே.பி மேலிடமாம்! 'ஏற்கெனவே சர்க்கஸ் வித்தை புரிந்து கொண்டிருக்கும் வாஜ்பாயிக்கு இந்தப் புதிய தலைவலி வேறா' என முணுமுணுப்புக் கிளம்ப, வெண்ணெய் திரண்டு வந்துவிட்டது. நாயுடு காரு, பி.ஜே.பி பக்கம் சாய, தாழியைத் தாக்கரே வேறு ஏன் உடைப்பானேன் என்று திட்டவட்டமாக அறிவிப்புகள் அங்கிருந்து வந்து விட்டனவாம். அதனால் தாற்காலிகமாக நாடகத்துக்கு 'சுபம்' போடப்பட்டிருக்கிறது!

இரண்டாம் பாகம் எப்போதும் தொடங்கலாம்!

— ஜெயஸ்ரீராஜ்



வண்ணப்படம் : கோபிநாத்

ஆயிரம் இலவசப் பொருட்கள் தராத மகிழ்ச்சியைக்

# கல்கி விடுமுறை மலர்

கட்டாயம் தரும்!

- தமிழ்நாடு, கேரளம, ஆந்திரம், கர்நாடகம் — நான்கு மாநில சுற்றுலாத் தலங்களுக்கு உங்கள் கையைப் பற்றி அழைத்துப் போகிற சுவாரஸ்யமான கட்டுரைகள்.
- அட்டகாசமான வண்ணப் படங்களின் அணிவகுப்பு.
- முன்னணி எழுத்தாளர்களின் விறுவிறுப்பான சிறுகதைகள், மொழிபெயர்ப்புக் கதைகள், குறுநாவல்....
- பிரபல கவிஞர்களின் கவிதைத் தோரணங்கள்.
- மூட்டை மூட்டையாக ஜோக்ஸ்.

**உடனே உங்கள் உள்ளூர் ஏஜெண்டிடம் பதிவுசெய்து விடுங்கள்.**
**தனிப்பிரதி ஒன்றின் விலை ரூ. 30/-**


Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi

Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.

Telephones : Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621.

Annual Subscription : India : Rs. 250/-; Overseas : Rs. 1600/- (Air Mail)

Half Yearly Subscription : India : Rs. 125/-; Overseas : Rs. 800/- (Air Mail)


கல்கி
12.4.98
இதழுடன்
இலவச
இணைப்பு
கலர்
உலகம்!

# சிம்ரன் இட்ட குத்து!

"இடது தோளில் ஒரு குத்து. வலது தோளில் ஒரு குத்து. முதுகில் ஒரு குத்து. மூணு குத்து விட்டுட்டு, அப்படியே கட்டிப் பிடிச்சுக்கம்மா ஹீரோவை'' என்று சிம்ரனிடம் சொல்லிக் கொண்டிருந்தார் டைரக்டர் கே. எஸ். ரவிகுமார்.

அடடா, குத்து விட சிம்ரனுக்கு சொல்லியா தர வேண்டும்? (ஒரு ப்ரொடக்ஷன் அஸிஸ்டென்டுக்கு அவர் விட்ட குத்தில் மறுபடி பெப்ஸி பிரச்னை கிளம்பும் அபாயத்தில் இருக்கிறது கோடம்பாக்கம்.)

படம் - நட்புக்காக. சிம்ரனின் திருக்கரங்களால் குத்து வாங்கத் தயாராக எழுந்து வந்தார் சரத்குமார். ஆனால் சிம்ரனுக்கோ, சரத்தை விட ரவிகுமாரைக் குத்திப் பார்ப்பதில்தான் ஆர்வம் அதிகமாக இருந்தது. அவரைச் சுற்றிச் சுற்றி 'டைசன்' பண்ண முயற்சிக்க, "தாயே, என்னை விட்ரு. என் உடம்பு தாங்காது!'' என்று நழுவி ஓடினார் ரவிகுமார்.

தேர்தல் தோல்வி சோகம் சரத்துக்கு இன்னும் இருப்பது முகத்தில் தெரிந்தது. படு சைலன்டாக உட்கார்ந்திருந்தவர், ஷாட்டுக்காக எழுந்து வந்து சட்டையைக் கழட்டினார்.

"ஹூம். முன்னல்லாம் கை நரம்பை இறுக்கினா முஷ்டி திரளும். எக்ஸர்ஸைஸ் பண்றது விட்டுப் போச்சு. அதான் துவண்டு போச்சு!'' என்று சற்று உரக்கவே சுய இரக்கப் பட்டுக் கொண்டார்.

ஷாட் இடைவெளி என்றால் சிம்ரன் செல்போனுக்கு வேலை கொடுக்க ஆரம்பித்து விடுகிறார். அப்பாவோடோ, அப்பாஸோடோ மெய்மறந்து பேசிக் கொண்டிருந்தவர், வருங்கால இயக்குநர் ஒருவர் கூப்பிட்டதும் அந்த 'நனையல்' காட்சிக்கு எழுந்து வந்தார்.

"சிம்ரன், தண்ணி கொஞ்சம்தான் இருக்கு. ஒரு தடவைதான் மழை பெய்யும். ரீ டேக் வாங்காதே!'' என்று ரவிகுமார் கவலையோடு குரல் கொடுக்க, ஒத்துழைப்பு வித்தகியான சிம்ரன் அதைப் புரிந்து கொண்டு, 'மழை நீர்' பட்டதும் முகத்தில் ஒரு பரவச சிலிர்ப்பைக் காட்டி டேக்கை ஓகே வாங்கி விட்டார்.

அடுத்த ஷாட்தான் அந்த 'குத்தும்' காட்சி. அதுவும் மழையில்தான்!

டேக் தொடங்கியதும் மழை



பெய்ய, ரவி சொல்லிக் கொடுத்தபடி சிம்ரன், சரத்துக்கு மூன்று குத்து விட ('மெதுவா குத்தும்மா. லேசா வயிறு பிராப்ளம்...') குத்து விட்ட சூட்டோடு இறுக்கி அணைக்க, ஷாட் ஓகே ஆன சந்தோஷத்தில் ரவிகுமார் உதிர்த்த ஒரு முத்து : "இந்த ஒரு அணைப்புக்கே அவனவன் விழுந்தடிச்சி ரிஸர்வ் பண்ணணும்யா!"

வாழ்க தமிழ் சினிமா! ○

— லைட்பாய்

முகம் நிறைய சந்தோஷம். வாய் நிறைய சிரிப்பு. ஒவ்வொரு பதிலிலும் உற்சாகத் துள்ளல் தெரிந்தது ரஞ்சிதாவிடம்.



"கங்கிராட்ஸ். எப்போது?"

"மே இருபத்தி ஏழாம் தேதி."

"எங்கே?"

"சென்னையில்தான். நிச்சயம் வந்துடணும்."

"மாப்பிள்ளையைப் பற்றி?"

"பெயர் ராஜேஷ். ராணுவத்தில் அதிகாரியாக இருக்கிறார்."

"பெற்றோர் பார்த்து வைத்த கல்யாணமா?"

"இல்லே. காதல் கல்யாணம்தான்!"

"எப்படிக் கனிஞ்சதுன்னு தெரிஞ்சுக்கலாமா?"

"கொஞ்ச நாளாவே பழக்கம். நட்பு காதலாச்சு. ரெண்டு வாரங்களுக்கு முன்தான் கல்யாணத்தைப் பற்றி சீரியஸாக முடிவெடுத்தோம். முடிவை உடனே செயல்படுத்தத் தீர்மானிச்சோம்."

"திருமணத்துக்குப் பிறகு நடிப்பு?"

"வேண்டாம்னுதான் இப்போதைக்குத் தீர்மானிச்சிருக்கேன்."

"ஏன்?"

"கணவருக்கு அடிக்கடி மாற்றலாகும் உத்தியோகம். ஜாகையைத் தூக்கிக்கிட்டே இருக்க வேண்டிய கட்டாயம் வரும். படம் கமிட் பண்ணிக்கிட்டால் கஷ்டமாயிடும்.

எதுக்கு அந்த அவஸ்தைன்னு பார்க்கிறேன்!"

"திரையுலகின் ரியாக்ஷன் எப்படி இருக்கு?"

"சந்திச்சவங்களெல்லாம் மனபூர்வமாக ஆல் தி பெஸ்ட் சொன்னாங்க. சரியான நேரத்திலே எடுத்த சரியான முடிவுன்னாங்க. சந்தோஷமா இருந்தது."

"முன்பு பேட்டியிலே கடவுள் நம்பிக்கை கிடையாதுன்னு சொல்லியிருக்கீங்க. உங்க கல்யாணம் எந்த முறையில நடக்கப் போகுது?"

"கடவுள் நம்பிக்கை கிடையாதுன்றதை விட, கடவுள் வழிபாடு தேவையில்லாததுன்றதுதான் என் கருத்தாக எப்போதும் இருந்திருக்கிறது. என்றாலும் கல்யாணம்ன்றது, அடிப்படையிலே, சம்பந்தப்பட்ட இருவர் தொடர்பானதுதான்னாலும் குறிப்பிட்ட அந்த நாள், பல உறவினர்களுக்கும் கூட முக்கியமான தாச்சே. பெரியவங்க எந்தவித ஏற்பாட்டை கல்யாணத்துக்குச் செய்யறாங்களோ, அதை ஏத்துப்பேன்!"

"ஆர்மி டிஸிப்ளின்னு சொல்லுவாங்க ஆர்மிக்காரரின் மனைவியாகப் போற நீங்க, வீட்டிலே எந்த அளவு ஒழுங்குமுறையைக் கடைப்பிடிப்பீங்க?"

"கடந்த சில வருடங்களாக வீட்டில் எதையும் ஒழுங்குபடுத்தக் கூட நேரமிருந்ததில்லே. தொடர்ந்து படப்பிடிப்புகள் நேரம் கிடைச்சா ஓய்வெடுத்துக்கத்தான் தோணும்!"

"கணவருக்கு அடிக்கடி மாற்றலாகும் உத்தியோகம்னு வேறே சொன்னீங்க. ஒண்டியா வீட்டிலே சமாளிக்கணும்னா, முடியும்ங்கிற நம்பிக்கை இருக்கா?"

"வீட்டு வேலை எதையுமே செய்யும்படியான நிலைமை இதுவரை இல்லைன்றதுதான் உண்மை. அதனாலே, தனியா சமாளிக்க வேண்டி வருமோன்னு நினைச்சா மலைப்பா இருக்கு. ஆனாலும் தண்ணியிலே தூக்கிப் போட்டால் தானாக நீச்சல் வரும்னுவாங்களே. அந்த மாதிரி சமையல் உட்பட பல கலைகளிலும் தானாகத் தேறிடுவேன்ற நம்பிக்கையும் எட்டிப் பார்க்குது."

"ஒத்துக்கிட்டிருக்கிற படப்பிடிப்புகளெல்லாம் கல்யாண தேதிக்குள்ளே முடிஞ்சுடுமா?"

"மூணு படங்கள்தானே. சாசனம், உரிமைப் போராட்டம். அப்புறம் மோகன்லாலோடு நடிக்கும் மலையாளப் படமான 'ரக்தசாக்ஷிகள் ஜிந்தாபாத்'. இந்த மூணு படங்களோட ஷூட்டிங்கும் அதுக்குள்ளே முடிஞ்சுடும்!"

"ஆல் தி பெஸ்ட்."

"தேங்க்யூ!" ○

# ஆத்திலே ஆர்மிக்காரி மாப்ளையாமில்லை...?

— அருண்சரண்யா

***சினிமாத்துறையில் உள்ள மிகச்சில 'நகைச்சுவை உணர்வு உள்ள நகைச்சுவை நடிகர்களுள்' விவேக் முக்கியமானவர். தாம் ஒரு நல்ல நகைச்சுவை எழுத்தாளரும் கூட என்பதை இந்த skit மூலம் நிரூபிக்கிறார்.***

என் ஹார்லிக்ஸ் நாட்களில் நடந்த ஒரு சம்பவம் நினைப்புக்கு வருது. இப்ப மாதிரியே அப்பவும் மென்டல் மெச்சூரிட்டி இல்லாத நேரம். அப்ப எங்கப்பாவுக்கு ஒரு முப்பது வயசு இருக்கலாம். எங்கம்மாவுக்கு ஒரு இருபத்தி அஞ்சு வயது இருக்கலாம். அதனால எனக்கு ஒரு நாலு வயசு இருக்கலாம்.

அப்ப நான் எந்த ஊர்ல இருந்தேன் தெரியுமா?.. பாட்டி மாதிரி உடம்பை ஆட்டி ஆட்டி நடுங்க வைக்குமே ஊட்டி, அதுக்குப் பக்கத்தில குன்னூர்ல படிச்சிட்டிருந்தேன்... சாரி... ஸ்கூலுக்கு போய்ட்டு வந்துட்டு இருந்தேன். Pre-K.G யோ U.K.G யோ சரியா நெனைப்பில்லை. எங்கப்பா ஸ்கூல் இன்ஸ்பெக்டர்ங்கிறதால என்னை எந்தப் பள்ளிக்கூடத்தில விட்டாலும் மரியாதையா சேத்துப்பாங்க. நானும் ''அந்த பள்ளிக்கூடம் வேண்டாம்... இந்தப் பள்ளிக்கூடத்திலதான் படிப்பேன்''னு அடம் புடிக்க மாட்டேன்! நமக்கு எதுக்கு அந்த வம்பு...? அதெல்லாம் 'படிக்கிற' பசங்க பண்ற அழும்பு!

ஏதோ ஸ்கூலுக்குப் போனமா... புழுதியிலே விளையாண்டமா, பக்கத்து சீட் பையன் பென்சிலைத் திருடினமா அவனைக் கிள்ளி அழ வைச்சமான்னு, நான் உண்டு என் வேலையுண்டுன்னு இருப்பேன்...

எனக்கு அப்பவே அர்னால்டு ஸ்வாஷ்நேகி மாதிரி உடம்புங்கிறதால...டவுசர் இடுப்பிலே நிக்காம தரையிலே விழுந்து, கவர்ச்சியா நிப்பேன். அதனால எங்கம்மா, தோள்பட்டை வார் வைச்சு அதை டவுசரோட சேத்து தைச்சுப் போட்டு விடுவாங்க. அதையும் பசங்களோட ரயில் விளையாட்டு விளையாடி அறுத்து விட்டுட்டு வார் தொங்கத் தொங்க வந்து நிப்பேன். எங்கம்மா அடிக்கிற அடி



# இந்திராகாந்தி - என் சகோதரி?

யிலே ஒரு முழு அடி ஸ்கேல் இரண்டு அரையடி ஸ்கேலாகும்...

பிளாக்போர்டு காலத்திலேர்ந்தே எனக்கு இ-போர்டு மேல ஆசை உண்டு. எங்க வூட்ல பழைய பிலிப்ஸ் ரேடியோ இருந்துச்சு. அது வால்வ் சிஸ்டம். ரேடியோவைப் போட்டா ஒரு பச்சைக்கலர் திரை வந்து இணையும். அப்புறம்தான் பாட்டுக் கேக்கும்... இத்துனூண்டு பொட்டிக்குள்ள இவ்வளவு சமாசாரமான்னு வியந்து ஒரு வாட்டி... ரேடியோவை பின்பக்கமாக நட்டு ஸ்ருக்களைக் கழட்டி உள்ளே பார்த்தேன்... ஒரே வால்வும் வயருமாக இருந்ததே யொழிய பாடகர்கள் யாரையும் காணவில்லை...

இதையறிந்த என் அப்பா சூப்பர் சுப்பராயன் ஆனார். என் அம்மா விக்ரம்தர்மா ஆனார்.

அதன்பின் எனக்குக் கிடைத்த 'மரியாதை'யை வார்த்தைகளால் வர்ணிப்பது அவ்வளவு எளிதல்ல.

இவ்வாறாக என் மழலைப் பருவம் தவழ்ந்து கொண்டிருந்த காலத்தில்தான் அந்தச் சம்பவம் நடந்தேறியது.

ஒருநாள் திடீரென்று என் அப்பா, "டேய்! நீயும் இந்திராகாந்தியும் ஒரே நாளில் பொறந்திங்க" என்றார்.

நான் உடனே, "யாருப்பா அது? என் கூடவே பொறந்துட்டு... ஏன் எனக்குத் தெரியாம ஒளிச்சு வைச்சிருக்கிங்க? எங்கே அந்தப் பாப்பா?" என்றேன்.

உடனே என் அப்பா தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்ரமனைப் பார்த்து வேதாளம்



சிரிப்பதைப் போல "கலகல"-வென்று சிரித்து எள்ளி நகையாடி "டேய் இந்திராகாந்தி நம்ம பிரைம் மினிஸ்டர்... அவுங்க பெர்த்டேயும் உன் பெர்த்டேயும் ஒரே நாள்டா"-என்று பல் விளக்குவது போல விளக்கினார்.

"அப்படீன்னா நான் ஏன் சின்னவனா இருக்கேன்? அவுங்க ஏன் பெரியவங்களா ஆனாங்க?"-என்று நான் கேள்வியால் மடக்கி நியாயத்துக்குக் குரல் கொடுக்க,

என் அப்பா, "டேய்! ஒரே தேதி... நவம்பர் 19, ஆனா வருஷங்கள் வேறடா" - என்று பேராசிரியர் நன்னன் போல விளக்கியதோடு மட்டுமல்லாது ஒரு பேப்பரை எடுத்து என் கையில் பேனாவைக் கொடுத்து... இந்திராகாந்திக்கு ஒரு பிறந்த நாள் வாழ்த்து எழுதச் சொன்னார்.

நான் முழித்தேன்... என் ஆங்கில அறிவு அந்த வயதில், "A B C D உங்கொப்பன் தாடி வந்தா வாடி; வராட்டிப் போடி."-அளவில்தான் இருந்தது என்பதை இந்த அகிலம் அறிய வாய்ப்பில்

— விவேக்



● சுவாதியை ஒப்பந்தம் செய்வதென்றாலே பல தயாரிப்பாளர்கள் யோசிக்கிறார்கள். ராமராஜனின் 'அண்ணன்', முரளியின் 'கண்டக்டர் மாப்ளே' அர்ஜுனின் 'ஜெய சூர்யா', கார்த்திக்கின் 'சுந்தர பாண்டியன்', நெப்போலியனின் 'சிவன்', மலையாளத்தில் ஜெகதீஷோடு ஜோடி சேர்ந்து நடித்த படம் – இவ்வளவும் வெளிவருவதில் ஏக சிக்கல். ஆகவே, எதிலும் 'ராசி' பார்க்கிற சினி உலகம் இவர் விஷயத்திலும் யோசிக்கிறது!

– மஹேந்த்

லாததால் என் அப்பாவும் அறிய வில்லை...

இருப்பினும் நான் எழுத... என் கையைப் பிடித்து... அவர் எழுதிய கடிதம் பின் வருமாறு அமைந்தது..

Dear Madam,
My birthday and your birthday
on the same day
I wish you happy birthday
you wish me happy birthday

Yours
Vivekanandan
III Std, 'C' Sec.

கடிதம் எழுதப் பட்டதும், போஸ்ட் செய்யப்பட்டதும் கால சக்கரம் வேகமாகச் சுழன்றதால் எனக்கு ஞாபகமில்லை...

ஆனால் ஒரு ஞாயிற்றுக் கிழமை நான் என் நண்பர்களோடு 'கோலி குண்டு' விளையாடிக் கொண்டிருந்தேன். மண்ணில் குழி பறித்து அதில் கட்டை விரல் பதித்து ஆள்காட்டி விரலை மறு கையின் ஆள் காட்டி விரலாலும் கட்டை விரலாலும்

பிடித்து இடையில் கோலி குண்டை வைத்து ஒரு கண்ணை இடுக்கி... மறு கண்ணை விரித்து.. நாக்கைத் துருத்தி குறிபார்த்த போது... என் கண்களுக்கு 'கோலி' தெரியவில்லை. 'கோடா' தெரிந்தது... ஆம், குதிரையின் கால்கள் தெரிந்தன.

மெல்ல முகத்தை டில்ட்-அப் செய்தேன். ஆ! அது ஒரு ராணுவக் குதிரை... அதன் மேல் அமர்ந்து இருந்தது ஒரு ராணுவ வீரன்...

குதிரை கனைத்தது... அவனும் கனைத்தபடி, "இங்கே விவேகானந்தன்ங்கிறது யாரு?..."- என்றான்.

நண்பர்கள் அனைவரும் என்னைப் பார்க்க, நான் பயத்தில் சப்த நாடிகளும் ஒடுங்கி... கார்ப்பரேஷன் வண்டியைப் பார்த்த லைசென்ஸ் இல்லாத நாய் போல அவனைப் பார்த்தேன்.

"விவேகானந்தன் நீங்களா?"- என்றான்.

அவ்வளவுதான். பின்னங்கால் பிருஷ்டத்தில் அடிக்க இரண்டு கால் பாய்ச்சலில் ஓட ஆரம்பித்தேன். அவனும் குதிரையில் விரட்ட ஆரம்பிக்க... ஒரு பதினைஞ்சு நிமிஷம் செம 'சேஸ்'- நடந்தது...

முடிவில் நான் எங்கள் வீட்டுக்குள் புகுந்து கட்டிலுக்கடியில் நிற்கவும் அவன் வாசலுக்கு வரவும் சரியாக இருந்தது. எங்கப்பா போய் பேசினார். என் அம்மா சந்தோஷமாக கட்டிலுக்கு அடியில் இருந்து என்னை வெளியே எடுத்து ஹாலில் போட்டார்.

விஷயம் இதுதான்... நான் போட்ட கடிதத்துக்கு நேரு மாமா பொண்ணு... இந்திராகாந்தியிடம் இருந்து பதில் வாழ்த்துக்கடிதம் வந்திருந்தது!

இந்திராகாந்தி ஆபீஸில் இருந்து வந்த கடிதம் என்பதால் போஸ்ட் ஆபிசில் அனைவரும் மிரண்டு... கடிதத்தை ராணுவத்திடம் ஒப்படைக்க... அன்று ஞாயிற்றுக் கிழமை ஸ்கூல் லீவு என்பதால் ஒரு ஜவான் வீட்டில் கொண்டு வந்து கொடுத்ததால் ஏற்பட்ட குழப்பம் தான் நான் மேற்சொன்னது...

என்னருமைக் குழந்தைகளே! நான் சொன்னதை நீங்கள் நம்பவில்லை என்றால்..... சிரமம் வேண்டாம்.. தற்போதைய பிரதமர் வாஜ்பேயிக்கு ஒரு லெட்டர் போட்டுப் பாருங்களேன்!

● 'அவதாரம்', 'தேவதை' என்று டைரக்ஷனில் இறங்கி தன் கையைச் சுட்டுக் கொண்ட நாசர், மீண்டும் டைரக்ஷனில் குதிக்கப் போகிறார். ஒரு வெற்றிப் படத்தையாவது இயக்கியே ஆகவேண்டும் என்பது அவரின் லட்சியமாகி விட்டது. ஜூலையில் புதுப்பட வேலைகளை ஆரம்பிக்கிறார். படத்தின் பெயர் 'வீரன் வருமாண்டி'.

— மஹந்த்





# “விருதுகளை நான் மதிப்பதில்லை!”

– ஒளிப்பதிவாளர் தங்கர் பச்சானைத் தெரிந்திருக்கும். எழுத்தாளர் பச்சான்? ‘வெள்ளை மாடு’ என்கிற சிறுகதைத் தொகுதிக்கும் ‘ஒன்பது ரூபாய் நோட்டு’ என்கிற நாவலுக்கும் சொந்தக்காரர், இந்த கேமிராக்காரர்! அவருடன் ஒரு சந்திப்பு:

**ஒளிப்பதிவாளரான உங்களுக்கு இலக்கிய ஆர்வம் எப்படி வந்தது?**

செய்தித்தாள்கள் கூட பரிச்சயமாகாத கிராமம் என் கிராமம். சின்ன வயதில் நான் படித்ததெல்லாம் பாடப்புத்தகங்கள்தாம். கூலிக்கு மாரடிக்கிற வாத்தியார்கள். அரதப் பழசாகிப் போன நம் பாடத்திட்டம். இந்தப் பாடத் திட்டம் இருக்கிறவரை நம் சமூகம் உருப்படப் போவதில்லை. அங்கே என்னத்தைக் கிழிக்க முடியும்? புரியாத வயதில் இதுதான் பாடம் என்று நம் மீது திணித்தார்கள். சங்க இலக்கியம் அது, இது என்றால் கும்பிடு போட்டுவிட்டு ஓடற வயது. ஆனால், சங்க இலக்கியங்களை இப்போ படிக்கணும்ங்கற ஆசை. திணிப்பு என்பதே நம் கல்வி முறை. சென்னைக்கு வந்த பின்தான் செய்தித்தாள்களின் அறிமுகம். அதுவும், பிலிம் இன்ஸ்டி

டியூட்டில் சேர்ந்தபின்தான். அங்கே இருக்கும் லைப்ரரி அற்புதமானது. கி. ராஜநாராயணனின் 'பிஞ்சுகள்' படித்ததும் இப்படியும் ஒரு உலகமா என்று வியந்தேன். தேடித் தேடிப் படிக்கும்போது சா. கந்தசாமி, நாஞ்சில் நாடன் - இப்படிப் பலரின் எழுத்து என்னை ஆட்கொண்டது. வாழ்க்கையின் சூட்சுமம், அதன் மீதான நம்பிக்கை இவையெல்லாம் இவர்களின் எழுத்திலிருந்து தான் கிடைத்தது. ஏன்? என்னை ஒளிப் பதிவாளனாக்கியதே இவர்களின் படைப்புகள்தாம்.

**உங்களை எழுத்தாளனாக்கியது எது?**



• படப்பிடிப்பில்...

கி. ரா.வின் 'பிஞ்சுகள்'தான். என்னை விசாலமான, அறிவுபூர்வமான தடத்திற்கு இட்டுச் சென்றது. அதுவே என் கிராமத்து வாழ்க்கையை எழுதச் செய்தது.

**கி.ரா. கரிசல் இலக்கியம் படைத்ததுபோல் - நீங்களும் வட்டார வழக்கைப் பாணியாகக் கொண்டு எழுத ஆரம்பித்தீர்களா?**

கரிசல் இலக்கியம், அந்த இலக்கியம் இந்த இலக்கியம் என்று பிரித்துப் பார்ப்பதே தவறானது. இலக்கியம் என்பதே பொதுவானதுதான். மத்தியிலிருந்து பிராந்தியங்களாகப் பிரிப்பது போல் இலக்கியத்தில் என்ன பிரிவு வேண்டிக் கிடக்கிறது? 'வெள்ளை மாடு' சிறுகதைத் தொகுதிக்கு கிரா. முன்னுரை எழுதும்போது கரிசல் காட்டுக் கதைகள் போல் இது முந்திரிக் காட்டுக்கதைகள் என்று எழுதினார். எனக்குப் பெருமையைவிட கோபம் தான் வந்தது.

**நீங்கள் எழுதுவதின் நோக்கம் என்ன? உங்கள் படைப்பிலக்கியம் யாருக்காக?**

எங்கள் முன்னோர்களின் வாழ்க்கை, பதிவில்லாமல் கிடக்கிறது. அதைப் பதிவு செய்ய வேண்டும். இதையெல்லாம் எழுதவில்லையென்றால் ஒரு வரலாறு தொலைந்து போன மாதிரிதான். என்னுடைய கதைகள் உழைக்கும் மக்களைப் பற்றியதாகவும் இருக்கும். பஸ்ஸில் பயணம் செய்யும்போது என் அருகில் இடம் இருந்தால் அந்த இடத்தை விவசாயிக்குத்தான் விட்டுக் கொடுப்பேன். பேன்ட் போட்டவனுக்கு அல்ல. விவசாயியையே மதிக்கத் தெரியாத நாடு இது. நாட்டின் முதுகெலும்பு விவசாயி என்கிறார்கள். ஆனால், விவ

(தொடர்ச்சி - பக். 26)

**— ஒளிப்பதிவாளர் தங்கர்பச்சான்**

# புதுசு! புதுசு!

● கவலையே படாமல் மாசத்துக்கு ஒரு படம் கமிட் பண்ணிக் கொள்கிற டைரக்டர் கேயார். நாட்டு நடப்புகளைப் பார்த்து, கொஞ்சம் கவலைப்பட்டு, அதன் விளைவாகத் தமது அடுத்தப் படமான 'கவலைப் படாதே சகோதரா'வில் இந்து முஸ்லிம் மத நல்லிணக்கத்தை மெஸேஜாக வைத்திருப்பதாகச் சொல்கிறார். பிஸினஸுக்காக இந்த சப்ஜெக்டின் மேல் ஒரு காமெடி கோட்டிங். ஹீரோ பாண்டிய ராஜன், ஜோடி கவலட்சுமி. (இரு ஜோடி கண்களில் மட்டும்தான் ஜோடிப் பொருத்தம் தெரிகிறது இல்லை?) விஷயம் எத்தனை சீரியஸானாலும் காமெடியுடன் சொன்னால் கட்டாயம் எடுபடும் என்கிறார் கேயார். வாதம் நியாயமே. வரட்டும், பார்க்கலாம்!

கவலைப்படாதே சகோதரா

● உளவுத்துறை அத்தனை சரியாகப் போகாததால் அடுத்த படமான 'தர்மா'வைக் கொஞ்சம் சீரியஸாக உருவாக்கிக் கொண்டிருக்கிறது ராவுத்தர் பிலிம்ஸ். விஜயகாந்த் ஹீரோ என்று சொன்னால் போதும். கதை சொல்ல வேண்டுமா என்ன?

"மகாபாரதத்தில் வரும் கூர்மையான புத்தி படைத்த(!) துரியோதனன், வீராதிவீரனான அர்ஜுனன், கொடை வள்ளலான கர்ணன், தர்மவானான தருமன் இந்த நாலு கேரக்டர்களைப் போட்டுப் பிசைந்து 'தர்மா' கேரக்டரைச்





• விஜய்



• தர்மா

செய்திருக்கிறோம்'' என்கிறார்கள். இதிகாச நாயகர்கள் ஸ்பெஷல் பரோட்டா?

(பி.கு: சென்றவாரம்வரை முடிவாகாமல் இருந்த ஹீரோயின் இப்போது முடிவாகி விட்டார்– ப்ரீதா விஜயகுமார்.)

● 'பெல்லி சேஸி கொந்தாமில்' பிரபு நடிக்கிறார். அதாவது பல்லு படாத இந்த டைட்டில் போலவே மென்மையான கதை கொண்ட சுந்தரத் தெலுங்குப் படம் அங்கே 36 தியேட்டர்களில் 100 நாள் தாண்டி மூச்சிறைக்க ஓடுகிறதாம். விடுவார்களா? 'என் உயிர் நீதானே' என்று தேவயானியைப் பார்த்து, பிரபு சொல்ல, தமிழில் எடுக்கிறார்கள். 'பொன் மனம்' மூலம் இயக்குநரான எஸ்.பி. ராஜ்குமாருக்கு இதில் மீண்டும் வாய்ப்புத் தந்திருக்கிறார் பிரபு. ஒரு விஷயம்.

பிரபுவுடன் தேவயானி இணையும் முதல் படம் இது. (ரஜினியும் கமலும் தான் பாக்கி?)

● உலகத்திலேயே யாருக்கும் இல்லாத ரோஷம் தமிழருக்கு மட்டும் உண்டாம். "ஆனால் தன்மானத்துக்கு இழுக்கு வரும்போதுதான் அது வெளிப்படும்" என்றார் கஸ்தூரிராஜா. என்ன சார் விஷயம் என்று கேட்டால் தனது 'வீரம் வெளஞ்ச மண்ணு' படத்தின் 'நாட்' என்றார். (மண் வாசனை மூக்கைத் துளைக்குது சார்!)

வீரத்துடன் கொஞ்சம் தாய், மனைவி-குடும்ப சென்ட்டிமென்ட் கலந்து சமீபத்தில் உருவாக ஆரம்பித்திருக்கிறது இந்தப் படம். விஜயகாந்துக்கு இதில் அப்பா-மகன் என்று இரட்டை வேஷம். ஒரு வேஷத்துக்கு ஜோடி குஷ்பு. இன்னொன்றுக்குத் தேடுகிறார்கள். மண்டை பிய்ந்து விடும் போலிருக்கிறது. குஷ்பு அம்மாவா? மருமகளா?

● தன் முயற்சியில் சற்றும் தளராத அம்புலிமாமா விக்ரமனாக மறுபடி வண்ணத் திரைக்கு வருகிறார் 'மைக்' மோகன். 'அன்புள்ள காதலுக்கு' - இது இவரே எழுதி, இயக்கி, நடிக்கிற படம். பம்பாயிலிருந்து 'மேகா' என்கிறவரையும் பெங்களூரிலிருந்து 'பாவனா' என்பவரையும் புதுமுக ஹீரோயின்களாகக் களத்தில் இறக்குகிறார் மோகன்.

"காதல், சென்டிமென்ட், சண்டை, காமெடி எல்லாம் படத்தில் இருக்கும். இது ஜெயிக்க வேண் டும். அண்ணனுக்கு இது மறு பிறவியா இருக்கணும்!" என்று உருகிச் சொன்னார் ஒரு யூனிட் ஆள்.

எல்லாம் உண்டு, சரி. மைக் உண்டா?

• மோகன்



● 'பொற்காலம்' சேரனின் அடுத்தப் படம் பாரசிகரோஜா; ஹீரோயின் ஊர்மிளாவோ, மனீஷாவோ என்று பேசிக் கொண்டிருக்க, சேரன் அவசரமாக அடுத்தப் படத்துக்கு பூஜை போட்டு வேலை ஆரம்பித்து விட்டார். டைட்டில்- தேசிய கீதம். தேசபக்திப் படமா, தேசபக்தி ஊறுகாய் தானா என்பதெல்லாம் இன்னும் தெரியவில்லை. தெரிந்த விவரம், மறுபடி முரளிதான் ஹீரோ. ஆனால் இளையராஜா இசை. மே மாதம் ஷூட்டிங் தொடங்கி, ஆகஸ்ட் 15 அன்று ரிலீஸாக்க முடிவு செய்திருப்பதாகச் சொன்னார் சேரன்

ரோஜா

கிடைத்ததும் பாதியில் விட்ட பாரிசுப் பயணம் தொடரும் போல் தெரிகிறது.

(பி.கு: பூஜை போட்ட சூட்டோடு டைரக்டர் உள்ளிட்ட மொத்த யூனிட்டே கதர் வேட்டி, கதர் சட்டைக்கு மாறிவிட்டது. படம் முடிகிறவரை வேறு ரக துணி உடுத்துவதில்லை என்று வீரசபதமாம்! வாழ்க தேசபக்தி!)



• சேரன்

• காதலிலே எத்தனை வகை என்று வைரமுத்து ஒரு பக்கம் ஆராய்ச்சி பண்ணிக் கொண்டிருக்க, புதுப்புது விதமாகக் காதல் காட்சிகள் அமைக்க சிண்டைப் பிய்த்துக் கொண்டிருக்கிறார்கள், இயக்குநர்கள். அப்படிப் பிய்த்துக் கொண்டதில் இயக்குநர் வின்சென்ட் செல்வாவுக்குத் தோன்றிய ஒரு ஐடியா, 'ஹீரோவும் ஹீரோயினும் இன்டர்நெட் மூலம் காதலித்தால் என்ன?'

விஜய்-கௌசல்யா நடிக்கிற 'ப்ரியமுடன்' படத்தில் இப்படியொரு டெக்னாலஜி ஓரியன்டட் காதல் வருகிறது.

(அதுசரி, உலகம் முழுக்க லட்சக்கணக்கானோர் இந்தக் காதல் வரிகளைப் படித்து விட்டு ஈமெயிலில் கிரீட்டிங் வாசகம் அனுப்புவதாக சீன் உள்ளதா படத்தில்? இல்லாவிட்டால் இந்த ஐடியாவை எடுத்துக் கொண்டு, 'நன்றி- கல்கி' என்று டைட்டில் கார்டில் க்ரெடிட் போடவும்.)



• எஸ்.பி. ராஜ்குமார்

— கிச்சா

ஒரு நவீன ரக 'க்ரேனை' கோடம்பாக்கம் இறக்குமதி செய்திருக்கிறது. பெயர் 'அகேலா'. முச்சூடும் கம்ப்யூட்டர் மயமான இந்த க்ரேனை ஆட்கள் மேலே தூக்கவோ, தள்ளவோ வேண்டாம். க்ரேனில் கேமராவை வைத்துவிட்டு, கீழே திரை முன் அமர்ந்து, தேவைப்பட்ட ஆங்கிளில் ரிமோட் கன்ட்ரோல் மூலம், கேமராமேன் இதை நகர்த்திக் கொள்ளலாம். (கேமராமேன் கூட க்ரேனில் ஏற வேண்டாம்!) மேலே போக ஒரு ஸ்விட்ச், இறங்க ஒரு ஸ்விட்ச், முன்னால் நகர, பின்னால் போக என எல்லாமே கீழே உட்கார்ந்து ரிமோட் மூலமே இயக்கலாம். இரண்டே முக்கால் கோடி விலையுள்ள இந்த 'க்ரேனை' வாங்கியிருப்பது 'ஆனந்த் சினி சர்வீஸ்' நிறுவனம். இப்போது இதை உபயோகித்து எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிற படங்கள் ஜீன்ஸ், காதலர் தினம். (ஒரு நாள் வாடகை 25 ஆயிரமாம்!)

# டைடானிக்:

டைடானிக் படத்துக்கு பதினொரு ஆஸ்கார் விருதுகள். அவற்றில் பல தொழில் நுட்பத்துக்கான விருதுகள்.

'டைடானிக்' கப்பல் மூழ்கியிருக்கலாம். ஆனால் அதைப் படமாக்கியதில் ஒரு டஜன் நிறுவனங்கள் இன்று தலை நிமிர்ந்து நிற்கின்றன. அவற்றில் ஒன்று 'பார்க்கர் ஹானி பின் கார்ப்பரேஷன்'. டைடானிக் படத்தில் இடம் பெற்று நம்மை வாய்பிளக்க வைக்கும் விஷுவல் எஃபெக்ட்களில் இந்த நிறுவனத்திற்கும் முக்கியப் பங்குண்டு. அமெரிக்காவில் உள்ள மிச்சிகனைச் சேர்ந்த இந்த நிறுவனத்தின் மார்க்கெட்டிங் மேனேஜர், சசி பருலேகர் - ஆம் இந்தியர்தான்!

"நாஸா, டிஸ்னி வேர்ல்ட் ஆகியவற்றில் உள்ள தொழில் நுட்பங்களில் கணிசமானவை எங்களுடையதுதான். அதனால்தான் டைடானிக் படவாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது" என்கிறார்.

படக்குழுவினரோடு இந்த நிறுவனத்தைச் சேர்ந்த பத்து விஞ்ஞானிகளும் பணிபுரிந்திருக்கிறார்கள். வசூலில் எப்படியோ, தொழில் நுட்பம் என்ற வகையில் இந்தப் படம் சரித்திரம் படைக்கும் என்பதில் அவர்களுக்குத் தொடக்கத்தி லிருந்தே நம்பிக்கையிருந்ததாம்.

முக்கியமாக இந்தக் காட்சி: டைடானிக் மூழ்கத் தொடங்க, அதில் பயணம் செய்தவர்கள் கொத்துக் கொத்தாக ஜில்லிட்ட கடல் நீரில் மிதந்தபடி மரண பயத்துடன் கதறும் ஸீன். அப்போது சில கதாபாத்திரங்கள் பேசிக் கொள்வது போல் அமைத்திருந்தார் இயக்குனர் கேமரூன். அப்படி ஒரு ஜில்லிட்ட சூழலில் பேசும்போது வாயிலிருந்து சூடான காற்று வெளிவர வேண்டியது இயல்பு. ஆனால் படப்பிடிப்பு நடந்ததோ, மெக்ஸிகோவில் உள்ள கதகதப்பான நீர்நிலையில்! அங்கேதான் தொழில் நுட்பம் உதவியது. டிஜிட்டல் முறையில், பேசும்போது வாயிலிருந்து நீராவி வெளிப்படுவதாகக் காட்டியிருக்கிறார்கள்.

இன்னொரு சவால் காட்சி இது: கப்பல் தளத்தில் நடைபெறும் விறுவிறுப்புகள். இரண்டு பெரும் ஹைட்ராலிக் கருவிகளைக் கொண்டு 'கப்பலின்' தளமே கொஞ்சம் கொஞ்சமாக

# உறவுகளின் வெற்றி!

(ஐந்திலிருந்து தொண்ணூறு டிகிரி வரை) சாயும்படி வடிவமைத்தார்கள். "இந்தக் காட்சியைப் படமெடுக்கும்போது எங்கள் மனம் திக்திக் என்று அடித்துக் கொண்டது. காரணம் அந்தக் காட்சியில் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டார்கள். தொழில் நுட்பத்தில் ஒரு சின்னத் தவறு நேர்ந்தாலும் பேரழிவுதான் (நிஜ டைடானிக் போலவே?)"

இத்தனையும் கூறிய சசி இறுதியில் சொன்ன பன்ச் லைன் இது:

"டைடானிக்கில் தொழில் நுட்பத்தின் பங்கு பிரம்மாண்டமானதுதான். ஆனால் படத்தின் பிரம்மாண்டமான வெற்றிக்குக் காரணம் அதில் அழகாக சித்திரிக்கப்பட்டுள்ள மனித உறவுகள்."

— ஜி.எஸ்.எஸ்





• ராமதுரை

**ஒரு சினிமாவைத் தயாரிக்க வேண்டுமானால் பட்ஜெட் போடுவது எப்படி? என்று, நாற்பது வருடத் தயாரிப்பு நிர்வாகியான ராமதுரையிடம் கேட்டோம். கனைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தார் :**

"உதாரணத்துக்கு ஒன்றே முக்கால் கோடி பட்ஜெட்டில் நடுத்தரமாக ஒரு படம் எடுப்பதாக வைத்துக் கொள்வோம். இந்தப் படத்தைத் துவங்கினால் தயாரிப்பாளர் கைவசம் நிச்சயம் 30, 40 லட்சங்கள் வைத்துக் கொள்வது அவசியம். யாராவது இணை தயாரிப்பாளர் என்று வந்தால் கொஞ்சம் சிரமம் குறையும். மீதிப் பணத்தைக் கொஞ்சமும் சுணங்காமல் கடன் வாங்க வேண்டியது தான். சென்னையில் சுமார் 40-க்கும் மேற்பட்ட பைனான்ஸியர்கள் இருக்கிறார்கள். வீடு கட்டுவதற்கு எல்.ஐ.ஸி. கடன் கொடுப்பது போன்று ஒவ்வொரு கட்டமாக கடன் ரிலீஸ் செய்கிறார்கள். வட்டி? ஒரு லட்சம் கடன் வாங்கினால் பத்தாயிரத்தைப் பிடித்துக் கொண்டு கொடுப்பார்கள். மூன்று மாத காலத்துக்குள் ஒரு லட்சமாகத் திருப்பிக் கொடுக்க வேண்டும். இல்லையேல் வட்டியே குட்டி போடும். இந்த பைனான்ஸியர்கள் கடிதம் கொடுத்தால்தான் லேபிலிருந்து தயாரிப்பாளருக்கு முதல் காப்பியைக் கொடுப்பார்கள். அதற்கான முக்கூட்டு ஒப்பந்தம் ஒன்று முதலிலேயே போடப்பட்டு விடும்'' என்கிறார் ராமதுரை.

முன்பு போல விநியோகஸ்தர்கள் out right ஆகப் படத்தை வாங்குவதில்லையாம். ஏனென்றால், 'சாமா சோமா' படங்களைத் தவிர சூப்பர் ஸ்டார், சுப்ரீம் ஸ்டார் படங்கள் கூட சமயத்தில் ஊத்திக் கொண்டு ஓடி விடும். ஆதலால் இப்போதெல்லாம் விநியோகஸ்தர்கள், அட்வான்ஸ்தான் – அதுவும் படம் ஓரளவு முடிந்த பின்பு – திருப்தியாக இருந்தால்தான் கொடுக்கிறார்கள். "இந்தப் படம் இத்தனை வாரங்கள் ஓடினால்தான் அட்வான்ஸைக் கழித்துக் கொண்டு மீதம் பணத்தைக் கொடுக்க முடியும்'' என்று கூட இப்போது ஒப்பந்தம் போடப்படுகிறதாம். படம் குறிப்பிட்டபடி ஓடா விட்டால் வாங்கிய அட்வான்ஸில் பாதித் தொகையைத் தயாரிப்பாளர் விநியோகஸ்தருக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டியிருக்கும்!

"இதுதான் சார் இன்றைய நிலை. இப்பல்லாம் யார் படமெடுக்கிறார்கள்? சுமார் பத்து அல்லது பதினைந்து தயாரிப்பாளர்கள்தான் தொடர்ந்து படம் எடுக்கிறார்கள். பெரிய பெரிய பேனர் எல்லாம் காணாமல் போய்விட்டது. பைனான்ஸியர்களுக்குக் கடனைத்

திருப்பிக் கொடுக்காததால் சுமார் 200 படங்கள் லேபிலேயே முடங்கிக் கிடக்கின்றன. அதாவது சுமார் 200 கோடி ரூபாய் முடக்கப்பட்டிருக்கிறது. திட்டமிட்டபடி தயாரிக்க முடியாமல், படம் முடியத் தாமதம் ஆகும் போது தயாரிப்புச் செலவு கூடுகிறது. என்னதான் இண்டஸ்ட்ரீயில் கொட்டை போட்ட தயாரிப்பாளர் என்றாலும், எல்லாவற்றுக்கும் கடன் வசதி பெற்றுக் காலம் தள்ள முடியாது. ஷூட்டிங் நடக்கும் நாளன்று சுமார் 40-லிருந்து 50 வரை (ஆயிரக்கணக்கில்) வைத்துக் கொள்ள வேண்டும். இப்போது நான் சொல்லிக் கொண்டு வரும் மேட்டருக்கும் ரஜினி படங்களுக்கும் சம்பந்தம் இல்லை. அதோட 'எகனாமிக்ஸ்' தனி விவகாரம். லாபத்தை எல்லோரும் சமமாகப் பங்கு போட்டுக் கொள்ள வேண்டும் என்பது ரஜினி விதி!''

"அது சரி, எல்லா தயாரிப்பாளரும் ரஜினியை வைத்தே படம் எடுக்க முடியாது. ஆனாலும் தமிழகத்தின் தெற்கு, வடக்கு பக்கங்களில் இருந்து புதிய தயாரிப்பாளர்கள் வந்து கொண்டேதானே இருக்கிறார்கள்?''

"ஏதாவது செய்து விட முடியும் என்ற நம்பிக்கைதான். 'இந்தப் படத்தில் விட்டதை அடுத்த படத்தில் மடக்கி விடலாம் என்று செயல்படுகிறார்கள். இண்டி விவகாரம் தான்! அதிர்ஷ்டமும் கைகொடுத்தால் ஃபீல்டில் நின்று விடுவார்கள். ரொம்பவும் ஆர்ப்பாட்டத்துடன் வந்து காணாமல் போவோர் எத்தனை பேர் தெரியுமா?''

# சிக்கலான சினிமா பொருளாதாரம்!

ஏற்கெனவே விநியோகஸ்தர், பைனான்ஸியர் என்று பல திக்குகளில் இருந்து வரும் தாக்குதல்களைச் சமாளிக்க, கேடயத்தோடு நிற்கும் தயாரிப்பாளருக்கு, இன்னொரு மண்டையிடி இந்த ''ஓவர்ஸீஸ்'' விவகாரம். வெளிநாடுகளில் திரையிட மற்றும் வீடியோ உரிமையை நல்ல லாபத்துக்கு விற்று விட்டால் கொஞ்சம் கூட சந்தோஷப்பட முடியாத நிலை. காரணம், ஒரிஜினல் பிரிண்டிலிருந்து, படத்தின் வீடியோ பிரதிகள் எடுக்கப்பட்டு, கேபிள் மூலமாக கும்மாளம்பட்டியில் காட்டப்படும்போது, உள்நாட்டில் படம் சீக்கிரம் டப்பாவுக்குள் ஓடி விடுகிறது. இது கூழுக்கும் ஆசை சமாசாரம்தான்.

இப்படி சகலவிதங்களிலும் சறுக்கல் இருந்தாலும் சினிமா தயாரிப்பாளர் ஆக வேண்டும் என்று கனவுத் தொழிற்சாலைக்கு தினசரி பலர் வந்து கொண்டுதான் இருக்கிறார்கள். சினிமாவின் கவர்ச்சி அப்படி.

எல்லாம் சரி. ஒரு தமிழ்ப் படம் எடுக்க எவ்வளவு ஆகும்? அடுத்தப் பக்கத்தில் ஒரு பட்ஜெட்!

**பெரிய பெரிய நடிகர்கள் - டைரக்டர்கள் என்றில்லாமல் நடுத்தரமாக ஒரு படமெடுக்க விரும்புபவருக்கு ஒரு சின்ன பட்ஜெட் :**

| | |
|---|---|
| நடிகர், நடிகைகள் சம்பளம் | 50,00,000 |
| டெக்னீஷியன்கள் சம்பளம் (டைரக்டர், காமிராமேன் அவர்களின் உதவியாளர்கள் உட்பட) | 20,00,000 |
| பிலிம் செலவு - | 12,00,000 |
| பிரிண்டிங் மற்றும் டெவலப்பிங் செலவு | 5,00,000 |
| இசை (ரீ-ரிக்கார்டிங் உட்பட) | 5,00,000 |
| டான்ஸ் பார்ட்டிகள் (மாஸ்டர் உட்பட எல்லோருக்கும் சம்பளம்) | 3,00,000 |
| ஸ்டண்ட் காட்சிகள் | 2,00,000 |
| காஸ்ட்யூம் | 3,00,000 |
| மேக்-அப் | 50,000 |
| காமிரா வாடகை, வெளிப்புறப் படப்பிடிப்பு வண்டி வாடகை | 4,00,000 |
| செட் (இருந்தால்) | 3,00,000 |
| பாடல்கள் படம்பிடிக்க... மற்றும் லொகேஷன் ஏற்பாடுகள் (போக்குவரத்து செலவு உட்பட) | 10,00,000 |
| 35 நாட்கள் உட்புறப் படப்பிடிப்பு (ஒருநாளைக்கு, சாப்பாட்டுச் செலவு உட்பட சுமார் 40,000 தேவை.) | 14,00,000 |
| 15 நாட்கள் வெளிப்புறப் படப்பிடிப்பு (தமிழ்நாடு, மற்றும் மைசூரைத் தாண்டிச் செல்லக் கூடாது) | 11,25,000 |
| ஷூட்டிங் நடக்கும் போது விளம்பரச் செலவு | 4,00,000 |
| ஸ்டில் போட்டோகிராபர் | 1,00,000 |
| டப்பிங் | 2,50,000 |
| டைட்டில்ஸ் | 2,00,000 |
| வட்டி (வாங்கிய கடனுக்கு) | 15,00,000 |
| மற்றும் இதர செலவுகள் | 7,75,000 |
| ஆக மொத்தம் | 1,75,00,000 |

சென்ஸாருக்கான முதல் பிரிண்டை ரெடி பண்ணத்தான் இந்தப் பணம். அதன்பின் தேவைகளுக்கு ஏற்ப காப்பிகள் பிரிண்ட் போட தனிச் செலவு!

படம் பத்து வாரம் ஓடினால் குறைந்தபட்சம் 30 லட்சம் லாபம் பார்க்கலாம்.

பட்ஜெட் எகிறாமலிருக்க கடைப்பிடிக்க வேண்டியவை :

பூஜை போட்ட நாளிலிருந்து படத்தைக் கண்டிப்பாக மூன்று மாதத்தில் முடித்தாக வேண்டும். இல்லையேல் வட்டியில் மூழ்கிப் போய் விடும் அபாயம் உண்டு!

ஷூட்டிங் நாட்கள் 50க்கு மிகாமல் பார்த்துக் கொள்வது அவசியம்.

— ப்ரியன்

# "சக்ஸஸ் கொடுத்தா சரியாப் போயிடும்!"

— புஷ்பா கந்தசாமி

**தமிழ் சினிமாத் துறையின் முதல் மற்றும் ஒரே பெண் - தயாரிப்பு நிர்வாகி (Production executive) புஷ்பா கந்தசாமி. டைரக்டர் கே. பாலசந்தரின் மகள். கவிதாலயாவின் முக்கியத்தூண். இந்தத் துறையை எப்படிச் சமாளிக்கிறார் புஷ்பா?**

"சின்ன வயசில் சினிமா என்றால் அது ஒரு வேலை என்பது மட்டும்தான் எனக்குத் தெரியும். சினிமாக்காரர்கள் என்றால் படாடோபமான வாழ்க்கை, ஆடம்பரங்கள் என்றாகி விட்டது. ஆனால் இதெல்லாம் எங்கள் குடும்பத்தில் கிடையாது. எப்போதும் சிம்பிளான வீடுதான். எல்லா நடுத்தரக் குடும்பத்து சுகதுக்கங்கள்தான்!

ஸ்கூலுக்குப் பல்லவன் பஸ்ல போய்த்தான் படிச்சேன். ஒரு டைரக்டரோட பொண்ணுன்னு அலட்டிக்க மாட்டேன். க்ளாஸ்ல ப்ரைட்டான ஸ்டூடன்ட்! சினிமா பற்றியெல்லாம் பேசமாட்டேன். லெவன்த் படிக்கிறபோது ஸ்டேட் லெவல்ல இரண்டாவது ரேங்க் எடுத்திருந்தேன். ஏதோ, பொண்ணு நல்லா படிக்கிறாங்கறது மட்டும்தான் அப்பாவுக்குத் தெரியும்!

படிப்பில் முதல் இடத்துல இருந்தாலும் வேலைக்குப் போகணும்ங்கற அவசியம் இல்லாமதான் படிப்பைத் தொடர்ந்தேன். ஸ்டெல்லாவில் பி.எஸ்ஸி முடிச்சுட்டு யுனிவர்சிட்டியில பயோ கெமிஸ்ட்ரி பண்ணினேன். இதை முடிச்சுட்டு வெளிநாடு போனாலும் போயிருந்திருக்கலாம். ஆனா, அதுலயெல்லாம் இஷ்டமே இல்லை!

இருபத்து மூணு வயசுல கல்யாணமாச்சு. அரேன்ஜ்டு மேரேஜ்தான். கணவர் அப்போ அசோக் லேலன்ட்ல வேலையிலிருந்தார்.





• 'முத்து' தொடக்க விழாவில்.

அந்த வேலையை ராஜினாமா செய்துட்டு சிறு தொழில் தொடங்கினார். அதுல சில பிராப்ளங்கள். இப்போ 'Entertainment Industry' ஒன்று தொடங்கி, நிறைய எக்ஸ்போர்ட் பண்ணிக்கிட்டிருக்கார்.

கல்யாணத்துக்கு அப்புறம் மாமியார், கணவர், குழந்தை. இது தான் உலகமா இருந்துச்சு. கவிதாலயா நிறுவனம் ஆரம்பிச்ச ஆறேழு வருடங்களுக்கப்புறம் இந்தத் துறைக்குள்ள காலெடுத்து வைத்தேன். அப்ப, அங்க நிர்வாகியாக இருந்த வேற ஒருத்தர் பின்னாடி நின்று நிறைய கத்துக் கிட்டேன். பெரிய பொறுப்புகள் வர்றப்ப, நிறைய அப்சர்வேஷன் வேண்டும். ஒவ்வொண்ணா கத்துக்க ஆரம்பிச்சேன்.

அப்பா டைரக்டர்ங்கறதால நானும் க்ரியேட்டிவ் சைடுக்கு வந்திருக்கலாமேன்னு கேட்கத் தோணும். கல்யாணத்துக்கு முன்னாடி சிறுகதைகள் எழுதிட்டிருந்தேன். அதையும் அப்புறம் நிறுத்திட்டேன். அதுவுமில்லாம அப்பாவோட பேருக்கு இருக்கற மரியாதையைப் பார்த்து – அவங்களை விட பெரிசா பண்ணணு மேங்கிற பயம்கூட வந்துடுச்சு. அது ஒரு பாஸிடிவான பயம்தான். ஒரு வேளை ஆம்பளையா பொறந்திருந்தா அப்பாகிட்ட சேர்ந்து டைரக்ஷன் கத்துக் கிட்டிருப்பேனோ என்னவோ?

நான் இப்ப ஈடுபட்டிருக்கிற துறையிலயும் க்ரியேட்டிவான ஜாப்ஸ் நிறைய இருக்கு. படத்தோட சப்ஜெக்ட்ல நம்ம கவனம் ரொம்ப முக்கியம். 'துள்ளித் திரிந்த காலம்' படத்துல ஷாட் பை ஷாட் நான் உட்கார்ந்து டைரக்டரோட பேசியிருக்கேன். எந்தத் துறையா னாலும் நம்ம இன்வால்வ்மெண்ட் ரொம்ப முக்கியம்.

அம்மா ஒரு உலகம். அப்பா ஒரு உலகம். கணவர் ஒரு உலகம். குழந்தை ஒரு உலகம் என்கிற மாதிரி இன்னிக்கு இது என்னோட உலகமா ஆயிடுச்சு. டென்ஷனான உலகம் இது.

பெண்களோட சைக்காலஜி என்னன்னா – எந்த பிராப்ளம்னாலும் உடனே ஸால்வ் பண்ணிடணும். இது தவிர யாருடைய ஈகோவும் பாதிக்கப் படாம பார்த்துக்கிடணும். எந்நேரமும் அலெர்ட்டா இருக்கணும். ஒரு விதத்துல நான் எந்த டென்ஷனு மில்லாம ஒர்க் பண்றதுக்கு எனக்கு அமைஞ்ச குடும்பத்தைத்தான் காரணம் சொல்லணும்.

என்னைப் புரிந்து கொண்டு எனக்கு ஈடுகொடுக்கிற கணவர், குழந்தை. கிடைக்கிற நேரத்தை வீட்ல நாங்க மூணு பேரும் என்ஜாய் பண்ணிக்கிறோம். எதுலயும் இதுக்கு மேல இல்லை; இவ்வளவு தான்ங்றத மூணு பேரும் புரிஞ்சிக்கிட்டதால யாரும் யாரையும்


டிமான்ட் பண்றதில்லை. வீட்ல சமையலெல்லாம் நான்தான். ஆபீஸ் விட்டா வீடு. பொண்ணுக்கு பதினோரு வயசாகுது. வீட்ல இருந்தா குழந்தை, அவளோட ஸ்கூல் விவகாரங்கள்தான் டாபிக். பொண்ணுக்கு படிப்பிலயும் விருப்பம். சினிமாலயும் விருப்பம். ரெண்டுல எதுங்கறது, அவளோட விருப்பம்!

அப்பா பெயரைப் பயன்படுத்தி நடிக்கிறவங்களுக்கோ - டெக்னீஷியன்களுக்கோ குறைந்த சம்பளம் தர்றதா இருக்கிற பேச்செல்லாம் வெறும் வதந்திதான். அந்த மாதிரி எதுவுமே இல்லை. ப்ராஜக்டுக்குத் தகுந்த மாதிரிதான் பேமென்ட். பொதுவாவே - சினிமாவில சொல்றது ஒண்ணா இருக்கும். கையில வந்து சேர்றது ஒண்ணா இருக்கும். கவிதாலயாவில் அந்த மாதிரி இல்லை. பேசின தொகை என்னவோ அது பட ரீலிசுக்கு முன்னாடியே அவங்க கைக்குப் போயிடும்.

மக்கள் ரசனை இன்றைக்கு மாறிக்கிட்டே இருக்கு. ரெகுலரான மசாலா படங்களெல்லாம் ஓடறது கிடையாது. புதுசா விஷயத்தைச் சொல்லணும். எனக்கு இன்னும் கொஞ்சம் அலசி, ஆராய்ந்து தீர்மானிக்கிற தகுதி வரும்போது நிறைய புது ஆட்களுக்கு வாய்ப்பளிப்பேன். எல்லா முடிவையும் இப்ப நானே எடுத்திட முடியாது. எல்லாமே அப்பாகிட்ட அப்ரோச் பண்ணிட்டுத் தான் முடிவெடுக்க முடியும்.

பெண்கள் இந்தத் தொழிலுக்கு வர்றது நல்லதுதான். பெண்கள் கிட்ட எந்த distractionம் இல்லை. ரொம்ப ஹானஸ்ட்டா இருப்பாங்க. அப்ரோச் பண்றதும் சுலபமா இருக்கும். ஆனா, இதையெல்லாம் மீறி அலட்சியப் படுத்தத்தான் செய்வாங்க. அதைப் பற்றிக் கவலைப்படவே கூடாது. ஒரு சக்ஸஸ் கொடுத்தா எல்லாமே சரியாப் போயிடும்! ○

தொகுப்பு : **ரவித்தம்பி**





• ஜெமினி கணேசன் வீட்டில் 'டைடானிக்' சைஸில் ஒரு பிரும்மாண்டமான மீன் தொட்டி இருக்கிறது.

• டைரக்டர் கே. பாலசந்தர் வீட்டு டெலிபோன் அவரது மனைவி பேரில்தான் உள்ளது.

• ராஜேஷிடம் விதவிதமான துப்பாக்கிகள் இருக்கின்றன.





• ஒரு தனியார் துப்பறியும் கம்பெனியின் டைரக்டர்களுள் ஒருவராக சாருஹாசன் இருக்கிறார்.

• அசோக் அமிர்தராஜ் 'ஜீன்ஸ்' படம் ரிலீசான பின் இன்னொரு தமிழ்ப் படம் எடுக்கப் போகிறார். டைரக்ஷன் – அகத்தியன்.

• ஜனகராஜின் அப்பா பெயர் வடிவேலு.

• சின்னி ஜெயந்தின் நிஜப் பெயர் நாராயணசாமி.

**– மானஸா**

**வெ**ளிநாட்டு நிறுவனங்களுக்கு நம் நாட்டுத் தொழில் துறையின் கதவுகள் எப்போது திறந்து வைக்கப்பட்டதோ, அப்போதே ஹாலிவுட் தன் பார்வையை இந்தியா பக்கம் திருப்பி விட்டது. காரணம், கிழை நாடுகளில் இந்தியா போல வேறெங்கும் சினிமா அத்தனை செழித்து, தளதளவென்று தழைக்கவில்லை.

மிகப் பெரிய ஹாலிவுட் கம்பெனிகளெல்லாம் இந்தியத் திரைத்துறையில் காலூன்ற முடிவெடுத்து, செயல்படுத்தத் தொடங்கியிருக்கின்றன.

இதன் ஆரம்பம் தான் பிரபல ஹாலிவுட் ஸ்டூடியோவான 'கொலம்பியா ட்ரை ஸ்டார்' நம்மூரில் ஸோனி டீவியை (இந்தி) தொடங்கியிருப்பது. வார்னர் பிரதர்ஸ் நிறுவனம் பெங்களூர் சாந்தி நகரிலும் மும்பையிலும் 'மல்டி ப்ளெக்ஸ்' என்று ஒரே காம்ப்ளக்ஸில் 8–10 தியேட்டர்கள் கட்டத் தொடங்கியிருப்பதும் ஹாலிவுட் ஆதிக்க அறிகுறி.

ஹாலிவுட் தயாரிப்பாளர் அசோக் அமிர்தராஜ் 'ஜீன்ஸை' இந்தி உள்ளிட்ட மூன்று மொழிகளில் எடுப்பதும் இதனால்தான்.

டுவென்டியத் செஞ்சுரி ஃபாக்ஸ் நிறுவனம் ஒரு படி மேலே போய் இங்கே தன் ப்ரொடக்ஷன் ஆபீஸையும் ஸ்டூடியோவையும்கூட நிறுவப் போகிறது.

தாராளமயமாக்கல் கொள்கை ஒரு புறம் இருக்க, திடீரென்று இத்தனை பேர் ஒரு சேரப் படையெடுக்க என்ன காரணம்?

எல்லாம் 'ஹம் ஆப்கே...' படத்தால் விளைந்ததுதான்.

வெற்றிப்படம் என்றால் அது சாதாரண வெற்றியல்ல! சுமார் நாலு கோடி செலவில் அந்தப் படத்தைத் தயாரித்த ராஜஸ்ரீ பிக்சர்ஸ், ஒரே வருடத்தில் 160 கோடி வசூல் செய்ததை உலகமே வியந்து பார்த்தது!

தரமான இந்திப் படம் எடுத்தால் இந்திய மார்க்கெட்டில் மட்டுமல்லாமல், உலக மார்க்கெட்டிலும் கோடி கோடியாகச் சம்பாதிக்க முடியும் என்பதை நம் தயாரிப்பாளர்களைவிட, ஹாலிவுட்காரர்கள் நன்கு புரிந்து கொண்ட



தன் விளைவுதான் இந்த இந்தியப் படையெடுப்பு என்கிறார்கள், நம் ஊரிலுள்ள ஆங்கிலப் பட விநியோகஸ்தர்கள்.

# இனி இங்கே ஹாலிவுட் ஆட்சிதான்!

ஷாருக்கான், சல்மான்கான் போன்ற முன்னணி ஹீரோக்களின் படங்களைக் கண்ணை மூடிக் கொண்டு ஆங்கிலத்தில் 'டப்' செய்து ஏற்றுமதி செய்யும் தொழில் பாலிவுட்டில் இப்போது சூடு பிடித்திருக்கிறது.

அதே சமயம் ஜுராஸிக்பார்க், காமசூத்ரா போன்ற உலக மார்க்கெட் படங்கள் இந்தியிலும் பிற மாநில மொழிகளிலும் 'டப்' செய்யப்பட்டு 'ட்ரையல்' பார்க்கப்பட்டன.

இங்கே ஒரே சமயத்தில் மூன்று மொழிகளில் தயாரிக்கப்படும் படங்களுக்கு ஓவர்ஸீஸ் உரிமை (வெளிநாட்டில் நிரையிடும் உரிமை) பெறுவதற்கும் போட்டா போட்டி இருக்கிறது.

இப்படி, ஹாலிவுட்காரர்கள் கொஞ்சம், கொஞ்சமாக இங்கே வந்து 'சம்பாதிக்க'ப் பார்ப்பதற்கு நம்மவர்களிடையே ரியாக்ஷன் எப்படி?

ரத்தினக் கம்பள வரவேற்புத்தான்!

காரணம், பட்ஜெட் பற்றிக் கவலைப்படாமல் படமெடுக்கலாம். நாலு வட்டி, எட்டு வட்டி என்று கடன் வாங்கிக் கஷ்டப்பட வேண்டாமல்லவா!

மேலும் மும்பையில் குல்ஷன் குமார் கொலை செய்யப்பட்டபின், பாலிவுட்டின் நெடுநாள் 'பைனான்ஷியர்களான அண்டர் வேல்ட் தாதாக்கள் பக்கம் தலை வைத்துப் படுக்கவே பயப்படுகிறது இந்தி சினிமா உலகம்.

பணத்தை அள்ளிக் கொடுக்கும் தாதாக்களுக்கு 'சேவை' செய்து வாழ்ந்து, எப்போது போலீஸ் வருமோ என்று கலங்கி நிற்காமல், ஹாலிவுட் தயாரிப்பாளர்களின் முதலீட்டில் ஹாயாக ஏழுலகங்களையும் சுற்றிப் படமெடுப்பது சுகமும் சுலபமும் அல்லவா?

லேட்டஸ்டாக '+சானல்' என்கிற அமெரிக்க நிறுவனம், நம்மூரில் படமெடுப்பதற்காக பப்ளிக் ஷேர் 'ஆஃபர்' செய்து 75 கோடி வரை முதலீடு திரட்டியிருப்பதாகத் தகவல்!

ஏழு உலக அதிசயங்களில் படம் பிடிக்கப்பட்ட 'ஜீன்ஸ்' ஓர் ஆரம்பம்தான்!

விரைவில் நாஸா உதவியுடன் நிலாவிலும் செவ்வாய் கிரகத்திலும்கூடச் சென்று படம் பிடிக்க ஹாலிவுட் இங்கே ஏற்பாடு செய்தாலும் செய்யும்!

— ஜி.

(11-ம் பக்கத் தொடர்ச்சி...)

சாயிக்கென்று ஒரு விருது இல்லை!

**உங்களின் 'ஒன்பது ரூபாய் நோட்டு' நாவலுக்கு தமிழக அரசு விருது, 'அக்னி' விருது என்று பல விருதுகள். இவை மூலம் ஒரு நாவல் சிறந்த நாவல் என்று அடையாளம் கண்டு கொள்ளப்படுமா?**

விருதுகளின் மீது எனக்கு மதிப்பே இல்லை. அதுவும் அரசு விருதுகள் மீது. அந்த விருதை நான் வாங்க வேண்டுமென்று விரும்பியதே இல்லை. இலக்கியம் எது என்று தெரியாமலே பல குப்பைகளுக்கும் தருவார்கள். இந்த வருடம் சீரியஸ் இலக்கியத்திலிருந்துதான் நிறைய தேர்வாகியிருக்கு என்று மொழி பெயர்ப்புத்துறை நண்பர் ஒருவர் வற்புறுத்தவே – நான் விருது பெற வேண்டிய சூழல் உண்டானது. ஆனால், விருது கொடுக்கிறார்களே, அது பிச்சைபோட்டது மாதிரி இருந்தது. முழுநேர எழுத்தாளன் ஒருவனுக்கு அரசு கொடுக்கும் விருதுத் தொகை சொற்பம்தான். விருது வாங்கும் ஒரு எழுத்தாளனுக்கு அரசு தரும் பயணச் செலவு முப்பது ரூபாய். கேவலமாய் இல்லை? சினிமா விருதுகளுக்கு வாரிக் கொடுக்க முடிகிறது. இலக்கிய விருதுகளுக்கு முடியவில்லை. எழுத்துலகைச் சேர்ந்த கலைஞர் முதல் வராயிருப்பதால் இதைச் சொல்கிறேன்.

**நீங்களே பதிப்பகமும் ஆரம்பித்திருக்கிறீர்கள். உங்கள் பதிப்பகம் செய்யப் போகும் இலக்கிய சேவை என்ன?**

மலையாள எழுத்தாளர் வைக்கம் முகம்மது பஷீரின் அனைத்துப் படைப்புகளின் திரட்டு ஒன்றைக் கொண்டு வரும் முயற்சி நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்குப் பின் இளையராஜாவைப் பற்றிய நூல் ஒன்று. பல விஷயங்களில் மிகவும் மேலான ஆள் இளையராஜா. அவரைப் பற்றி அவரின் தத்துவார்த்தமான இசையைப் பற்றிய நூலாக இருக்கும் அது. ஒரு விரிவான விவாத நூலாக ரமேஷ், பிரேம் என்கிற இருவர் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

**'ஒன்பது ரூபாய் நோட்டு' நாவலுக்கு நல்ல வரவேற்பிருந்ததா?**

இந் நாவலை வெளிக் கொண்டு வந்ததே பெரும் போராட்டமாக இருந்தது. எழுதி, பதினோரு ஆண்டுகளுக்குப் பின்தான் இந்நாவல் வெளியாகியது. ரஜினி படத்திற்கு விளம்பரம் செய்வது மாதிரி போஸ்டர் அடித்து ஒட்டி ஒரு நாவல் வெளியாவதற்கு முன்பே விமர்சனக் கூட்டம் நடத்தி விளம்பரம் தேடிக் கொள்வது இன்றைய ஃபேஷன். அப்படி எதுவும் இல்லாமல் இந்த நாவலுக்கென்று எட்டு விமர்சனக் கூட்டம் நடை பெற்றிருக்கிறது. பிறரின் வரவேற்பால், அரசின் நூலகத்துறையிலிருந்து, அறுநூறு பிரதிகள் வாங்கிப் போனார்கள். அதுவும் போட்ட விலையைவிட மகாமட்டமான விலைக்கு. சரி, அதுதான் அப்படி என்றால், பணமாவது வரணுமே? இது வரைக்கும் பணம் வரலை. தமிழ் வளர்க்கிற விஷயமா இது? இதில் தமிழுக்கு ஆட்சி மொழி அந்தஸ்து வாங்கிக் கொடுக்கப் போகிறார்களாம்!

**பிஸியான காமிராமேன். இருந்தும் எழுதுகிறீர்கள். அடுத்த படைப்பு தயாராகிறதா?**



• பிரபுதேவாவை வைத்து பிரமோத் என்கிற புதியவரின் இயக்கத்தில் 'மழை வரப் போகுது' என்கிற படத்தை ஆரம்பிக்க இருந்தார் ஹென்றி. இடையில் என்ன தோன்றியதோ, 'மறுமலர்ச்சி' படத்தின் வெற்றிக்குப் பின், அப் படத்தின் இயக்குனர் பாரதியையே வைத்து விஜயகாந்த் நடிக்க இருக்கும் படத்தை ஆரம்பிக்க இருக்கிறார்.

அடுத்த நாவல் 'எமன்'. ஏழரை ஆண்டுகளாக எழுதிக் கொண்டிருக்கிறேன். குழந்தை, மனைவி – இவர்களை விட எழுதுவது மிக சந்தோஷம். தினமும் ரெண்டு மூணு மணி நேரமாவது எழுதுகிறேன்.

**'எமன்' எதைப் பற்றிய நாவல்?**

நெய்வேலி அனல் மின் நிலையத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் எங்க ஊர்க்காரர்களைப் பற்றியது. உள் நாட்டு அகதிகளாகக் கிடக்கும் எங்களின் குடும்பம் பற்றியது. தோண்டினா 41 அடியில தண்ணி கிடக்கும். ஆனா, இன்று 440 அடி தோண்டியும் தண்ணி இல்லை. எப்படியிருந்த பூமி அது! இப்ப எப்படி ஆயிடுச்சு? மின்சாரத்திற்காக இவ்வளவும். ஃபிரிட்ஜ் வைத்திருப்பதே எனக்குக் குற்ற உணர்வாகப்படுகிறது. என் ரத்தத்தை நானே சுவைத்துக் கொள்வது போல் இருக்கிறது. 'எமன்' நாவலை ஆங்கிலத்திலும் கொண்டு வரப் போகிறேன். அருந்ததி ராயின் 'God of small things' ஆங்கிலத்தில் வந்ததால்தானே இவ்வளவு கவனத்திற்கு உள்ளாகிறது?

**உங்களின் எழுத்துலக வாழ்க்கைக்கும் பணி புரியும் படங்களுக்கும் சம்பந்தமில்லாமல் இருக்கிறதே?**

இரண்டுக்குமே சம்பந்தமில்லை தான். ஆனால், எழுத்தில் உள்ள சின்ஸிரிடி சினிமாவிலும் உண்டு. ஆனால், இலக்கியத்தில் சுயமாய் 'ரிஸ்க்' எடுக்கலாம். சினிமா, முதலீடு சம்பந்தமான விஷயம். மக்களிடம் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டிய பொறுப்பு இருக்கிறது. முதலில் பணத் தேவைக்காகப் பணிபுரிந்தேன். இப்போது அப்படி இல்லை. நல்ல படங்களாகப் பார்த்துத்தான் செய்கிறேன்.

**இலக்கியம் – சினிமா எதில் நீங்கள் சுதந்திரமாய் உணர்கிறீர்கள்?**

இலக்கியத்தில் உணர்கிற சுதந்திரத்தை சினிமாவில் பெற முடியாது. சினிமாவில் எல்லாம் நேர்மாறாகத்தான் நடக்கும். துரோகங்களைத் தாங்க முடியாது. மரண தண்டனை அனுபவிக்கும் கொலையாளியின் நிலை எனக்கு. எப்படி - சுதந்திரமாய் உணர முடியும்?

பேட்டி : மஹந்த்




# வருகிறார் நிஜ ஹீரோ!

ஹீரோ-98 என்றார்கள். யார், விஜயா, அப்பாஸா, அஜீத்தா என்று கேட்டால், 'இல்லை; அது ஒரு ஸாஃப்ட்வேர். இன்றைய தேதியில் கோடம்பாக்கம் முச்சூடும் பேசப்படுகிற சமாசாரம்' என்பதாக பதில் வந்தது.

ZYLOG System Private Ltd., என்ற கம்ப்யூட்டர் ஸாஃப்ட்வேர் நிறுவனத்துடன் கந்தசாமி இணைந்து உருவாக்கியிருக்கும் இந்த ஸாஃப்ட்வேர், சினிமா கம்பெனி அகவுண்டன்ட்களுக்கும் ப்ரொடக்ஷன் மானேஜர்களுக்கும் சவால் விடுகிற சமாசாரம்.

ஸாஃப்ட்வேரைத் தெரிந்து கொள்வதற்கு முன்னால் ஒரு வரி கந்தசாமி பற்றி: டைரக்டர் கே. பாலசந்தரின் மாப்பிள்ளை இவர். கம்ப்யூ. மென்பொருள் துறை வித்தகர். மிக மிருதுவான குரலில் - நாலாங்கிளாஸ் டீச்சர் போல - தாம் உருவாக்கியிருக்கும் இந்த ஸாஃப்ட்வேர் பற்றி நம்மிடம் விளக்கினார் கந்தசாமி.

சினிமாக்காரர்கள் ப்ரொடக்ஷனில் செலுத்துகிற கவனத்தை, கணக்கு வழக்குகளில் காட்டுவதில்லை. கோடி கோடியாகப் பணம் போட்டுப் படத்தை எடுத்து விட்டு, மார்ச் மாசம் வந்தால் கணக்கு முடிக்க சின்டைப் பிய்த்துக் கொள்வது வழக்கம். எதில், எத்தனை செலவாச்சு என்று புரியாத குழப்பம். ஆடிட்டர், பெஞ்ச் மேல் நிறுத்திக் கேட்கிற கேள்விகளுக்கெல்லாம் 'பதில் தெரியலை' என்று தோப்புக் கரணம் போடாத குறை.

இனி, இப்பிரச்னை இல்லை. ஹீரோ பார்த்துக் கொள்வான்!

"ஏம்பா, படம் ஆரம்பிக்கறியா? வா, வந்து என் முன்னால உட்காரு!"

ப்ரொட்யூசர், கம்ப்யூட்டர் முன்பு உட்கார்ந்தால் போதும்.

"ஓகே. ஸ்டார்ட். பூஜை போடணும். பூ வாங்கணும். கிளாப் போர்டு செஞ்சி, பேர் எழுதணும். ஹீரோ, ஹீரோயினுக்கு அட்வான்ஸ் குடுத்தியா? எவ்ளோ குடுத்தே? கேமரா யூனிட்டுக்கு சொல்லிட்டியா? பிலிம் ரோல் எவ்ளோ வாங்கினே?

டிபனுக்கு சொல்லிட்டியா? இட்லி வடை போதும். மசால் தோசைன்னா செலவு கூடுதல். கூல்டிரிங்ஸ் வாங்கி வேஸ்ட் பண்ணாத! அண்டாவுல ரஸ்னா கரைச்சி வை. இன்விடேஷன் அடிச்சியா? என்ன செலவு? டைரக்டருக்கு எந்த ஓட்டல்ல ரூம் போட்ட? ஹீரோயின் யாரோ பர்ஸனல் மேக்கப்மேன் இட்டாராளாமே? அதெல்லாம் வேணாம்னு சொல்லு. கம்பெனி ஆளுக்குச் சம்பளம் குடுத்து வெச்சிருக்கே இல்லை? அது போதும்..."

கிட்டத்தட்ட இந்த ரேஞ்சில் ப்ரொடக்ஷன் வேலைகள் தொடங்கி, முழுப்படம் முடிவதற்குண்டான செலவு வகையறாக்களைப் (200 வித செலவுகள்!) பட்டியலிடுகிறது இந்த ஸாஃப்ட்வேர்.

"அவுட்டோர் போகணுமே ஹீரோ?"

"சரி. எத்தனை நாள்?"

"அம்பது நாள்."

"ஒரு நாளைக்கு 10,000 செலவுன்னு வையி. அதுக்கு மேல தாண்டாம பார்த்துக்க."

செலவுகளை இப்படி நெறிப்படுத்துவது மட்டுமில்லை. அவ்வப்போது முந்தைய படங்களுக்கு ஆன செலவுகளையும் ஒப்பிட்டுப் பார்த்து, கணக்குப் போட முடியும்.

"போன படத்தப்போ, ஹீரோவுக்கு ஒருநாள் சிகரெட் செலவு அறுபது ரூவாதான் ஆயிருக்கு. இப்ப நூத்திப்பத்துங்கற! அந்தாளை அதிகம் தம்மடிக்க வேணாம்னு சொல்லு. வெலவாசி எங்க போயிட்டிருக்குது தெரியுமில்ல?"

இந்த ஹீரோ '98 ஸாஃப்ட் வேர் சினி ஆசாமிகளுக்குக் கடவுள் மாதிரி தெரிகிறது இப்போது.

கணக்கு வழக்குக் கவலை விட்டது என்று நிம்மதிப் பெரு மூச்சு விடுகிறார்கள்.

ஒரே நிறுவனம், ஒராண்டில் இரண்டு, மூன்று படம் எடுத்தாலும், மொத்த செலவைக் கணக்கிட்டு, டாலி பண்ணிக் கொடுத்து விடும்!

ஆசியாவிலேயே இந்த ரக ஸாஃப்ட்வேர் வந்திருப்பது இதுவே முதல் முறை! ஹாலிவுட்டில் மட்டும் தான் இதுவரை இந்த மாதிரி பட்ஜெட் போட்டு, கணக்கு வழக்கு பார்க்கும் ஸாஃப்ட்வேர்கள் சினிமாத் துறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.



• கந்தசாமி

"கவிதாலயாவுக்காகத்தான் இந்த ஸாஃப்ட்வேரை வடிவமைத்தோம். பிறகு சூப்பர் குட் பிலிம்ஸும் ஒரு மும்பை பட நிறுவனமும் ஆர்டர் தந்துள்ளன!" என்றார் கந்தசாமி.

அது சரி, என்னவாம் விலை?

ஒரு பேக்கேஜ் எழுபதாயிரம் ரூபாய்! கம்ப்யூட்டருடன் சேர்த்து ஒண்ணேகால் லட்சம் என்று சகாய விலைக்குக் கிடைக்கும் என்றார்கள். ●

— ஔரங்கசீப்

# ஆஸ்கார் ஹீரோ!

தொழில்நுட்ப ரீதியில் டைடானிக் எத்தனையோ ஆஸ்கார்களைத் தட்டிப் போனாலும் சிறந்த நடிகர் - நடிகைக்கான விருதுகளை இந்த வருஷம் பிடித்து வைத்துக் கொண்ட படம் - 'As good as it gets.'

சரியான காமெடிப் படம் இது. இந்தப் படத்து ஹீரோவோ, இயல்பில் செமை முசுடு. (நாசூக்காகச் சொல்வதென்றால் ரிஸர்வ்ட் டைப்)

பேட்மேன் படங்களில் வில்லனாக வந்ததுதான் ஜாக் நிக்கல்ஸனின் ஆரம்பம். நடுவயதைத் தாண்டிக் கொண்டிருக்கும் இவருக்கு இப்போது இந்தப் படத்திற்காக விருது கிடைத்திருக்கிறது! (சிறந்த நடிகர்)

'Easy Rider' என்ற படம்தான் 'ஜாக்'கின் வாழ்வில் திருப்புமுனை ஏற்படுத்தியது. கேன்ஸ் பட விழாவில் இந்தப் படம் திரையிடப்பட, பயங்கரப் பாராட்டும் புகழும் புதிய பட வாய்ப்புகளுமாக மனிதர், பிடிக்க முடியாத உயரத்துக்குப் போய் விட்டார்!



''இது திடீர் வெற்றி'' என்று வேண்டாதவர்கள் 'வர்ணிக்க, ஜாக் கூலாகச் சொன்ன பதில் : ''திடீர் வெற்றியின் ஒரு ரகசியம், அப்படி ஒன்று இல்லை என்பதுதான்!''

நடுவயது ஹீரோ என்றாலும் இந்தப் படத்தில் ஜாக், பல இளைஞர்களுடன்தான் இணைந்து பணியாற்ற வேண்டியிருந்தது.

''அவ்வப்போது ஈகோ உதைக்கும்தான். ஆனால் நான் உடைந்து விடாமல் சுமுகமாக நடித்துக் கொடுத்தேன். இளைஞர்களோடு பணிபுரிவது சுவாரஸ்யமான விஷயம்தான்!'' என்று இப்போது சர்ட்டிபிகேட் தருகிறார்.

ஜாக் நிக்கல்சன் நீண்ட நாட்களாகக் கடைபிடித்து வரும் ஒரு வழக்கம் - வாரத்துக்கு நான்கு நாட்கள் மட்டுமே நடிப்பது!

'As good as it gets' படத்தில் ஒரு மாதிரி 'எக்ஸன்ட்ரிக்' பாத்திரத்தில் நடித்து விருது வாங்கியிருக்கும் இவருக்குள் ஓர் இயக்குநரும் ஒளிந்திருக்கிறார்.

ஐரோப்பிய அமர இலக்கியங்களை வரிசையாகப் படமாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் அண்டோனியோ என்கிற டைரக்டர், தம் படங்களுக்கு ஜாக் நிக்கல்ஸனைத்தான் back-up டைரக்டராக நியமித்துள்ளார்.

அதாவது, டைரக்டர் இல்லாத போது ஸப்ஸ்டிடியூட் செய்வது!

''இது உலகளாவிய, பெரிய ப்ராஜெக்ட். ஆகவே இப்படியொரு வாய்ப்பு எனக்குக் கிடைத்திருப்பது பெரிய விஷயம்!'' என்று உ. வசப்படுகிறார் ஜாக் நிக்கல்ஸன். ○

— குல்லூ



ஏவி.எம். சரவணன்

# படம் எடுக்கவே பயமா இருக்கு!

'மின்சாரக் கனவு' படம் வந்து ஒரு வருடத்துக்கு மேல் ஆகிவிட்டதே! ஏவி.எம்மின் அடுத்தப் படம் பற்றிய அறிவிப்பு வரவில்லையே என்று கேஷுவலாய் ஏவி.எம். சரவணனிடம் கேட்டபொழுது, "அடுத்த சினிமா பற்றி நாங்கள் யோசிக்கவே இல்லை; படம் எடுக்கவே பயமா இருக்கு" என்றார்.

"என்ன இப்படிச் சொல்லிவிட்டீர்கள்?"

"ஏவி.எம்.மின் பொன்விழா ஆண்டில் படமெடுக்காமல் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான், பலமாய் யோசித்து, திட்டமிட்டு, மின்சாரக் கனவு எடுத்தோம். தமிழில் 200 நாட்களுக்கும் மேல் ஓடி வெற்றி பெற்றது; ஆனால் தெலுங்கில் எதிர்பார்த்த வெற்றி பெறவில்லை. இந்தியில் ஓரளவுக்கு வெற்றி பெற்றது.

"இன்னும் சொல்லப் போனால், குடும்பக் கதைகளையே பெருமளவில் எடுத்து வந்த ஏவி.எம்., எழுபதுகளுக்குப் பிறகு, அதிலிருந்து மாற வேண்டியதாகி விட்டது. இன்று, குடும்பக் கதை சினிமாக்களுக்கு, ரசிகர்களிடையில் வரவேற்பு இல்லை. குடும்பக்கதைகளை ரசிக்கிறவர்கள் சினிமாவுக்கு வருவதில்லை; அவர்களுக்கு டீ.வி.தான் முக்கியம்.

"இந்தச் சூழ்நிலையில்தான் நாங்கள் டீ.வி. தொடர்கள் எடுக்க முடிவு செய்தோம்.'

அமோக வெற்றி பெற்ற சம்சாரம் அது மின்சாரத்தைக் கூட இப்போது எடுத்தால், டீ.வி. தொடராகத்தான் நாங்கள் எடுத்திருப்போம். அதனால்தான், சினிமாவுக்கு ஏற்ற குடும்பக் கதையான நிம்மதி உங்கள் சாய்ஸைக் கூட சன் டீ.விக்காகத் தொடராய் எடுத்தோம்.

"அந்தத் தொடருக்குக் கிடைத்த உற்சாகமான வரவேற்பில் அடுத்து 'ஆச்சி இன்டர்நேஷனல்' என்று ஒரு தொடரை எடுத்து, அதுவும் சன் டீ.வியில் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கிறது. தொடர்ந்து, நிம்மதி உங்கள் சாய்ஸ் இரண்டாம் பகுதியை எடுக்கப் போகிறோம். அது, வேலைக்குப் போகிற பெண் பற்றிய கதை!

"ஆக, ஏவி.எம்.மில் இப்போதைக்கு சினிமா எடுக்கும் எண்ணம் இல்லை!"

சந்திப்பு : மௌலி

Registered with the Registrar of Newspaper of India under No. 104/57 * Registered No. TN/MS(S) M4392/97 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN/MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka * Supplement to Kalki 12.4.98

# இறைவா, இமைகளை ஏன் படைத்தாய்?



ஏவி.எம் ஸ்டுடியோவில் அந்த ஏஸி அறை திடீரென்று வெப்பமடைய, அறைக்கு வெளியே அன்டார்டிகா குளிர்ச்சி. சொனாலி பாந்த்ரே அந்த அறையிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்தார், காதலர்கள் தினத்திற்காக! ஊஹூம். அன்று ஒன்றும் பிப்ரவரி பதினாலு அல்ல. சென்ற வார சமாசாரம்தான் இது.

''காதலர்கள் தினம்'' - கதிரின் இயக்கத்தில் உருவாகும் படம்.

கண்ணைக் கவரும் விதத்தில், ஏதோ ஐந்து நட்சத்திர ஹோட்டலின் வரவேற்புக் கூடம் போலக் காட்சியளித்தது இதற்கான செட். அசப்பில், ஆங்காங்கே மேஜைகளும் அவற்றின் மேல் தின்பண்டங்களுமாக, உணவகம் போலக் காட்சியளித்தாலும், சற்றுக் கூர்ந்து பார்த்தபோது நிறைய கம்ப்யூட்டர் டெர்மினல்கள் தென்பட்டன. அவற்றின் எதிரே இளைஞர்களும் இளைஞிகளும். பெரும்பாலானோருக்கு முகத்தில் வடக்கத்தி ஜாடை (இந்தியில் டப் பண்ண வசதி!)

ஜீன்ஸ் ட்ரவுசரும், மஞ்சள் நிறம் தூக்கலாகத் தெரிந்த டீ ஷர்ட்டுமாக, தனக்கே உரிய 'மாடல்' சிரிப்பை உதிர்த்தபடி சொனாலி செட்டுக்குள் நுழைய, அத்தனை இள மற்றும் பிற நெஞ்சங்களில் 'ஹம்ம ஹம்ம ஹம்மா'.

உதவி இயக்குனர்களில் ஒருவர் வசனத்தை எடுத்துரைக்க, முகமெல்லாம் புன்னகையோடு சொனாலி அந்தத் தமிழ் வாக்கியத்தைக் கூற, "இறைவா, கண்களை அவ்வப்போது மூடிக் தொலைக்கும் இமைகளை ஏன் படைத்தாய்? காதுகளுக்கு அப்படி ஒரு 'இமைகளைக்' கொடுத்திருக்கக் கூடாதா?" என்ற இரு கேள்விகளும் ஒரே சமயத்தில் எழுந்தன!

"மெட்ராஸ் கிளைமேட்தான் ஒத்துக்கலே" என்றார் சொனாலி. ஆனால் சம்பளம் ஒத்துக் கொண்டிருக்க வேண்டும்.

ஒளிப்பதிவாளர் பி.ஸி. ஸ்ரீராம், "ஒரு சின்ன தெர்மகோல் எடுப்பா. கட்டை வேணும்'' என்றெல்லாம் கூறிக் கொண்டிருந்தபோது, ''உங்களுக்கு நிஜமாகவே கம்ப்யூட்டர் பயிற்சி உண்டா?" என்று கேட்டோம். (ஸ்ரீராமை அல்ல, சொனாலியை) ''அப்படி. நடிப்பதற்குப் பயிற்சி உண்டு'' என்றார். நிர்மா வெளுப்பு பதில்.

தொடர்ந்து சொனாலி சொன்ன பதிலைக் கேட்டால், இளம் வாசகர்கள் இயக்குனர் கதிரை காதல் இல்லாத தேசத்திற்கு நாடு கடத்த உத்தரவிடக்கூடும்!

''பேட்டியெல்லாம் இப்போ வேணாம் சார். அதெல்லாம் கொடுக்கக்கூடாதுன்னு கதிர் சார் சொல்லியிருக்கார்.''

— குல்லூ



# உங்கள் அருமைக் குழந்தையே உங்கள் வாழ்வின் மையம்.

# அவளுடைய இல்லம் பாதுகாப்பாகவும் கவலைக்கிட மின்றியும் இருக்க வேண்டாமா ?

**உங்கள் வீடு வெறும் கற்களாலும், சிமெண்டாலும் மட்டுமே கட்டப்பட்டதல்ல. நம்பிக்கை, ஆசைக் கனவு மற்றும் பந்தபாசங்களினால் கட்டப்பட்டது. எனவே, இது நீண்ட காலம் இருக்க வேண்டுமல்லவா ?**

**உங்கள் வீட்டின் பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை கருதி, சமையல் கேஸை கையாளும் போது கீழ்க்கண்ட சுலபமான முறைகளைப் பின்பற்றுங்கள்.**

**நீங்கள் செய்ய வேண்டியவை** • சமையல் முடிந்த பின்பும், இரவிலும் கேஸ் பர்னர் மற்றும் ரெகுலேட்டர் குமிழ்களை மூடிவிடுங்கள். • ஐ எஸ் ஐ (ISI) முத்திரை தாங்கிய ரப்பர் டியூபை மட்டுமே பயன் படுத்துங்கள். அதை இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கண்டிப்பாக மாற்றுங்கள். • கேஸ் வாசனை அடித்தால் எரிகின்ற எல்லா சுடர்களையும் அணைத்துவிட்டு, பர்னர் மற்றும் ரெகுலேட்டர் குமிழ்களை உடனடியாக மூடுங்கள். • சமைக்கும் போது பருத்தியினால் ஆன மேல் ஆடை (Cotton apron) அணியுங்கள். • சிலிண்டரை மாற்றும் போது எரிகின்ற எல்லா சுடர்களையும் அணையுங்கள். • எப்போதுமே சிலிண்டர் மட்டத்தைவிட உயரமான மேடையிலேயே கேஸ் அடுப்பை வைக்க வேண்டும்.

**தவிர்க்க வேண்டியவை** • கேஸ் பொருத்தப்பட்ட இடத்திற்கு அருகில் எரிகின்ற சுடர்களையோ எரிபொருள்களையோ வைக்காதீர்கள். • எரிகின்ற கேஸ் அடுப்பின் மீது பாத்திரங்களை வைத்துவிட்டு கவனமின்றி இருக்காதீர்கள். • கேஸ் சிலிண்டரை மாற்றும் போது மின்சார சுவிட்சுகளை இயக்காதீர்கள். • மூடிய பகுதிகளுக்குள் கேஸ் சிலிண்டரை வைக்காதீர்கள். • நீங்களே பழுது பார்க்காதீர்கள். விநியோகஸ்தரின் உதவியை நாடுங்கள். • சமையல் அறையில் குழந்தைகளை விளையாட அனுமதிக்காதீர்கள்.

பொதுநலன் கருதி வெளியிடுவோர் :
**இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட்**
இந்தியன்ஆயில் பவன், G-9, அலி யாவர் ஜங் மார்க்
பாந்த்ரா (கி), மும்பை - 400 051.

Indane

பாதுகாப்பின் பிறப்பிடம் உங்கள் இல்லம்

IMAGEADS TAM

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392/98 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka

